# வேரும் விழுதுகளும்

## வளரும் அறிவார்ந்த பயணம்...

திரு. ரெங்கலெ.வள்ளியப்பன்
முனைவர் க. விஜயராகவன்

விஜயா பதிப்பகம்
20, ராஜ வீதி,
கோயம்புத்தூர் - 641 001.
www.vijayapathippagam.com

**வேரும் விழுதுகளும்**

**Verum Vizhuthugalum**

**திரு. ரெங்கலெ.வள்ளியப்பன் - முனைவர் க. விஜயராகவன்**

முதற்பதிப்பு : **ஜூலை 2024**

***விஜயா பதிப்பகம்***

20, ராஜ வீதி, கோயம்புத்தூர் - 641 001.

0422 - 2382614 / 90470 87053

vijayapathippagam2007@gmail.com

ஒளியச்சு/புத்தக வடிவமைப்பு : **ஐரிஸ் கிராபிக்ஸ், கோவை.**

அட்டை வடிவமைப்பு : **ஆர்.சி.மதிராஜ், சென்னை**

அச்சாக்கம் : **பி.வி.கிராபிக்ஸ், கோவை.**

பக்கம் : 184 + 49 **(வண்ணப் படங்களுடன்)**

வாசித்து மகிழுங்கள்!....

வள்ளியப்பா அவர்களின் வாழ்க்கை

வண்ணத்தமிழ் சொற்களாலான

வரலாறு மட்டுமல்ல...



அது,

நாம் ஒவ்வொருவரும்


கற்று இன்புற வேண்டிய

கல்விச்சிந்தனைகளும் தொழில்நுட்பங்களும்

கனிந்து செழித்த

கவிதைகளின் சங்கமம்.

# வாழ்த்துரை



**பெ**ங்களூரு ஸ்ரீராஜராஜேஸ்வரிநகர் ஸ்ரீ கைலாஸ ஆஸ்ரம மகாஸமஸ்தானத்தின் ஸ்தாபகரான விதேஹ கைவல்ய முக்த ப்ரம்மலீனரான பரமபூஜ்ய ஸ்ரீ மத்பரமஹம்ஸ பரிவ்ராஜகாசார்ய ஸச்சிதானந்த ப்ரணவஸ்வரூப பரமாசார்ய **ஜெகத்குரு ஸ்ரீஸ்ரீஸ்ரீ திருச்சி மஹாஸ்வாமிகள்** அவர்களின் பாதசேவகரான ஸ்ரீ கைலாஸ ஆஸ்ரம மஹாஸமஸ்தானத்தின் பீடாதிபதி பரமபூஜ்ய ஸ்ரீ மத்பரமஹம்ஸ பரிவ்ராஜகாசார்ய ஸச்சிதானந்த ப்ரணவஸ்வரூப ஆசார்ய மஹாமண்டேலேஸ்வர **ஜெகத்குரு ஸ்ரீஸ்ரீஸ்ரீ ஜெயேந்திரபுரி மஹாஸ்வாமிகள் அவர்களின் ஆசியுரை**

‘‘நிலத்தில் கிடந்தமை கால்காட்டும் காட்டும் குலத்தில் பிறந்தார்வாய்ச் சொல்’’ என்ற திருக்குறளுக்கேற்ப தம் உழைப்பாலும், உயர் பண்புகளாலும், செல்லும் இடமெல்லாம் தமிழையும் ஆன்மீகத்தையும் வளர்த்து முன்னேறிய நகரத்தார் பெருமக்களின் அருமை பெருமைகள் அளவிடற்கரியது. நகரத்தார்கள் வரலாறு, பெருமை, புகழ் செய்து வந்துள்ளன. இவை தவிர கல்வெட்டுகள், பட்டயங்கள் போன்றனவும் நகரத்தார் பெருமை மற்றும் வரலாற்றைக் காட்டுகின்றன. கிட்டத்தட்ட ஐயாயிரத்து நூறு ஆண்டுகளுக்கு முற்பட்ட ஒரு சமூகம் நகரத்தார்கள் சமூகம் காலத்திற்கேற்ற புதிய பரிமாணமும், எந்தச் சூழ்நிலையிலும் தமது சமூகத்தை வளர்த்துப் பெருமை காத்த இவர்களது பரிணாம வளர்ச்சியும் போற்றுதலுக்குரியது.

‘செயற்கரிய செய்வர் பெரியர் என்பர். நகரத்தார் பலர் தொழிலால், மனித நேயத்தால், அறப்பணியால் பெருமை பெற்றுள்ளார்கள். வரலாற்றுக்கு முந்தைய காலத்திலிருந்து இன்று வரை, நகரத்தார்கள் தங்கள் குலப் பெருமையை காப்பது வாழையடி வாழையாக இன்று வரை தொடர்கிறது.

அந்த வகையில் நமது மதிப்பிற்குரிய திரு. வள்ளியப்பா அவர்களின் கனிவான பேச்சும் வளமான சிந்தனையும் மனிதநேயமும் நம்மை வியக்க வைக்கும்.

உண்மை, அன்பு, வள்ளல் தன்மை, தொண்டு, அறிவொளி மற்றும் இறைபணி பற்றி மகாகவி பாரதியார் பின்வருமாறு பாராட்டியுரைக்கின்றார்.

**‘உண்மையே தாரகமென்று உணர்ந்திட்டார்**
**அன்பொன்றே உறுதி என்பார்**
**வண்மையே குலதர்மம் எனக் கொண்டார்**
**தொண்டொன்றே வழியாக் கண்டார்**
**ஒண்மையுயர் கடவுளிடத்து அன்புடையார்**

**நாடு புகழ வாழும் இனம், நல்லதையே செய்து**
**பழகிய இனம், மன்னர் பின்னோராய் வாழும்**
**மரபுடையார், மன்னருக்கு நிகராக, மார்தட்டி நின்றவர்கள்’’**

என்கிற இப்பெருமை நகரத்தார் சமூகத்திற்கும் நம் மதிப்பிற்குரிய திரு.வள்ளியப்பா அவர்களுக்கு மிகவே பொருத்தமானதாக இருக்கும். வணிக நிறுவனங்களையும் கல்வி நிலையங்களையும் நிறுவி வெற்றிகரமாக நடத்திக் கொண்டிருக்கும் நமது மரியாதைக்குரிய திரு. வள்ளியப்பா அவர்கள் தம் எண்பதாம் அகவையை கொண்டாடிக் கொண்டிருக்கும் இப்பொன்னான வேளையில் அவர் தம் சாதனைகளையும் அறப்பணிகளையும் தோல்விதனை வெற்றியின் அடித்தளமாக மாற்றிக் கொள்ள அவர் காட்டும் பாதையையும் இன்னபிற மறுக்க முடியாத மறக்கவொன்னாத நல்வழி காட்டுதல்களையும் தொகுத்து **''வேரும் விழுதுகளும்''** எனும் தலைப்பில் வெளியிடுதல் அறிந்து மிகவே மகிழ்கிறோம். இந்நூல் அனைவர் கைகளிலும் தவழக்கூடிய நன்னூலாகும். அனைவருக்கும் நல்வழிகாட்டும் ஓர் பொக்கிஷம்.

கல்வித் துறையிலும் தொழில் துறையிலும் மட்டுமின்றி ஆன்மீகத் துறையிலும் தம் அகம் மகிழ்ந்து அவர் ஆற்றிவரும் தொண்டுகள் அளவிடற்கரியது எனில் அது மிகையல்ல. மிகச் சிறந்த கல்வி நிறுவனங்களையும், தொழில் சார்ந்து நிறுவனங்களையும் நடத்தி வரும் அன்னாரது பணி மேலும் மேலும் சிறக்க வேண்டி எல்லாம் வல்ல அன்னை ஸ்ரீ ஞானாக்ஷி ராஜராஜேஸ்வரி தேவியின் அருள் வேண்டிப் பணிந்து திரு. வள்ளியப்பா, அவர்தம் அன்புத் துணைவியார் திருமதி. சீதா ஆச்சி மற்றும் அவர்தம் வெற்றிக்கு மிகவும் உறுதுணையாக ஊக்கத்துடன் தோள் கொடுத்து வரும் திருவாளர்கள் சொக்கு வள்ளியப்பா மற்றும் தியாகு வள்ளியப்பா குடும்பத்தினர் சுற்றம் சூழ நீடு வாழ்கவென ஆசீர்வதிக்கிறோம்.

**- ஸ்ரீ தேவி ஸ்மிருதி**



**SV. பாலசுப்ரமணியம்,**
தலைவர்,
பண்ணாரி அம்மன் குழுமம்.

# அணிந்துரை

**தி**ரு சோனா வள்ளியப்பா அவர்களின் 80 வயது பூர்த்தி அடைந்ததையொட்டி **'வேரும் விழுதுகளும்'** என்கிற நூலை சோனா ஆசிரியர் குழு, எழுத்தாளர் திரு.ரெங்க லெ.வள்ளியப்பனுடன் இணைந்து மிகச்சிறப்பாக வடிவமைத்துள்ளார்கள். 'நல்லதோர் குடும்பம் பல்கலைக்கழகம்' என்கிற கூற்றுக்கு இணங்க மதிப்பிற்குரிய திரு வள்ளியப்பா அவர்களின் சுயசரிதை நூல் சமுதாய வளர்ச்சிக்கு ஒரு தூண்டுகோலாக அமையும் என்பதில் சந்தேகமில்லை.

எனக்கு அவருடன் சுமார் 25 ஆண்டு கால நட்பும் தொடர்பும் உண்டு. இருவரும் தொழில்நுட்ப கல்லூரிகள் நடத்தி வருவதால் அது பற்றிய கருத்துக்களை அடிக்கடி இருவரும் பகிர்ந்து கொள்வோம். தியாகராஜர் பாலிடெக்னிக் கல்லூரி, சோனா தொழில் நுட்பக் கல்லூரி ஆகிய இரண்டு கல்லூரிகளும் தமிழ்நாட்டில் உள்ள மிகச்சிறந்த கல்லூரிகள் என்பது அனைவருக்கும் தெரியும்.

அவர் பழகுவதற்கு இனிமையானவர், பாசமுள்ளவர். மதுரை மதிப்பிற்குரிய கருமுத்து தியாகராஜ செட்டியார் அவர்களின் மகள் வழிப் பேரன். ஆக கருமுத்து தியாகராஜ செட்டியாருடைய அனைத்து குணங்களும் இவருக்கு இருக்கிறது.

அவரது தகப்பானர் திரு சொக்கலிங்கம் அவர்களும் வேளாண்மை தொழிலில் மிக்க அனுபவம் பெற்றவர். ஆயிரக்கணக்கான ஏக்கர் காபி எஸ்டேட்களை வாங்கினவர். அவர் சேலம் ஸ்ரீ ராஜேந்திரா மில்லை தொடர்ந்து கர்நாடகத்திலும் பல பஞ்சாலைகளை தொடங்கினார். திரு வள்ளியப்பா அவர்கள் தந்தையிடம் ‘உயர்வான வாழ்க்கை வாழ்வதற்கான ரகசியம் என்ன’ என்று கேட்டபோது அதற்கு பதில் ‘அது உயர்வான எண்ணங்களைச் சிந்திப்பதில் உள்ளது’ என்றுதிரு சொக்கலிங்கம் கூறினார்.

திரு கருமுத்து தியாகராஜ செட்டியார், திரு சொக்கலிங்கம் செட்டியார் ஆகிய விழுதுகளிருந்து உருவான விருட்சம் தான் திரு சோனா வள்ளியப்பா அவர்கள். அந்த வேர்களின் உழைப்பையும், எண்ணங்களையும் பின்பற்றி வள்ளியப்பா வாழ்ந்து வருவதால் வாழ்க்கையில் ஒரு உயர்ந்த லட்சிய புருசராக உயர்ந்துள்ளார்.

சிறுவயது முதலே அழகான தோற்றம், எப்போதும் சுறுசுறுப்பு. படிப்பில் கெட்டிக்காரர்.

பள்ளிப் படிப்பை முடித்து பச்சையப்பா கல்லூரியில் சேர்ந்து படிக்கையில் மாணவர்கள் மன்ற தலைவராக இருந்தபோது பல பிரச்சனைகளை தனது முற்போக்கு சிந்தனையால் எளிதாக தீர்த்து வைத்தவர். அப்போது அண்ணா அவர்களுக்கு பெரும் கூட்டம் சேர்வதால் கல்லூரிக்கு அவர்களை பின்புற வாயிலாக அழைத்து வந்ததை அண்ணா அவர்களும் சுட்டிக்காட்டி 'I reached this hall stage through the back door, reminding me of the way I went to Rajya Sabha' என்று கூறியது வள்ளியப்பா அவர்கள் சமயோசிதத்துடன் எடுத்த முடிவு என்பதைக் காணலாம்.

அவர் பின்பற்றிய தாரகமந்திரம் : ‘வழியில் எத்தனை புயல்களை நீ சமாளித்தாய் என்பது முக்கியமில்லை. கப்பலை பத்திரமாக கரை சேர்த்தாய்’ என்பதுதான் முக்கியம் என்பதை உணர்ந்த வள்ளியப்பா அவர்கள் கர்நாடகாவில் டெக்ஸ்டைல்ஸ் மில் ஆரம்பித்தபோது கன்னட மொழியைக் கற்றுக் கொண்டு தனியாக எல்லா பிரச்சினைகளையும் சாமர்த்தியமாக சமாளித்ததால் டெக்ஸ்டைல்ஸ் மில்களை நடத்தமுடிந்தது.

மேலும் அங்கு கர்நாடகா சேம்பர் ஆப் காமெர்ஸ், பெங்களூர் மேனேஜ்மெண்ட் அசோசியேசன் ஆகியவற்றின் தலைவராகவும் பணியாற்றும் வாய்ப்பும் கிடைத்தது.

கல்வித்துறையில் பாலிடெக்னிக் கல்லூரி, இன்ஜினியரிங் கல்லூரி, கலைக் கல்லூரி, இயற்கை மருத்துவக் கல்லூரி, மேனேஜ்மெண்ட் கல்லூரி, பள்ளி, வீ டெக்னாலஜி எனும் மருத்துவ காப்பீட்டுக்கான சேவை நிறுவனம், சோனா ஸ்டார் - சேவை நிறுவனம் எனும் பல்வேறு கல்வி ஸ்தாபனங்களை மிகச்சிறப்பாக நடத்தி வருகிறார்கள். அவருக்கு துணையாக அவர்களின் புதல்வர்கள் திரு சொக்கலிங்கம், திரு தியாகு அவர்களும் திறமையாக செயல்பட்டு வருகிறார்கள். அவரது துணைவியார் திருமதி சீதா ஆச்சி அம்மையார் அவர்களும் கணவருக்கு உற்ற துணையாக வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள்.

கொரோனா காலத்தில் திரு வள்ளியப்பா செய்த பணிகள் எண்ணற்றவை. பணியாட்களுக்கு ஊதியக்குறைப்பு கிடையாது. அரசாங்கத்துடன் சேர்ந்து உணவு, மருத்துவ படுக்கைகள் என்று பல உதவிகளை பொதுமக்களுக்கு செய்துள்ளார்கள் என்பது அவருக்கு சமூகத்தின் மேலுள்ள அக்கறையைக் காட்டுகிறது.

மேலும் தமிழ் மீது மிக்க பற்று கொண்டவர். தமிழ் இலக்கண இலக்கியங்களை படித்தவர். மாணவர்கள் சங்கத்தின் தலைவராக இருந்தபோது பல்வேறு தமிழ் தொடர்பான கூட்டங்களையும், நிகழ்ச்சிகளையும் நடத்தியுள்ளார். இது அவரது தலைமைப் பண்புகளை வளர்ப்பதற்கு பெரிதும் உதவியாக இருந்தது.

தோட்டக்கலையில் மிக்க ஆர்வம் கொண்டவர். கல்லூரியில் 1500 வகையான மரங்களையும், பல்வேறு பூக்கள் காய்க்கும் செடி, கொடிகளையும் அதிக பாங்குடனும், பாசத்துடனும் வளர்த்து வருகிறார்கள். அவைகளும் உயிர் உள்ளவை என்பதை அறிந்து நேசித்ததால் அவைகள் பூவும் மணமுகமாக மலர்ந்து அளித்து வரும் தென்றல் மாணவ மாணவிகளுக்கு புதிய ஆற்றலை தோற்றுவிக்கிறது என திடமாக நம்புகிறார்.

அதுபோலவே, ஆன்மீகத்திலும் மிக்க பற்றுதல் உள்ளவர்கள். சேலத்திலுள்ள ஸ்ரீ ராஜ கணபதி ஆலையம், ஸ்ரீ காசி விஸ்வநாதர் ஆலையம்,ஸ்ரீ சுகவனேஸ்வரர் ஆலையம் ஆகியவைகளுக்கு தமிழக அரசு இவரை அறங்காவலர் குழுத் தலைவராக நியமித்தது அவருடைய ஆன்மீக பணிகளுக்கு ஒரு அங்கீகாரம் என கருதுகிறேன்.

உழைப்பு, விடாமுயற்சி, தனிச்சிந்தனை, ஆற்றல், நல் எண்ணம், தொலைநோக்கு பார்வை, தன்னம்பிக்கை ஆகிய தலைமைப் பண்புகள் ஒட்டுமொத்தமாக காணப்படுபவர் இவர். இதிலிருந்தே திரு வள்ளியப்பா அவர்கள் ஒரு பன்முக படைப்பாளர் என்பதை தெளிவாக காட்டுகிறது.

அப்படிப்பட்ட சான்றோன் 80 ஆண்டுகள் வாழ்ந்து பெரிய சகாப்தத்தை படைத்து இருக்கிறார். அவர் இன்னும் பல செயற்கரிய செயல்களை செய்ய இறைவன் துணை இருப்பார் என்பதில் எந்த சந்தேகமுமில்லை. நண்பர் சோனா வள்ளியப்பா அவர்கள் நீழ் ஆயுள், நிறை செல்வம், உயர் புகழ், மெய்ஞானம் பெற்று ஓங்கி வாழ்ந்திட எல்லாம் வல்ல இறைவனை வணங்கி எனது மனமார்ந்த நல்வாழ்த்துக்களையும், வணக்கங்களையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

இவ்வினிய **'வேரும் விழுதுகளும்'** எனும் திரு வள்ளியப்பா அவர்களின் சுயசரிதையை மிக செவ்வனே தயாரித்த ஆசிரிய குழுவினருக்கும், நூலை அச்சிட்ட விஜயா பதிப்பகத்தாருக்கும் எனது வணக்கங்கள்.

## திரு. சோனா வள்ளியப்பா மரபுவழி

**தந்தைவழி**

ராம.ப.ராம.மு.சுப்பிரமணியன் செட்டியார்

சிட்டாளாச்சி

↓

சொக்கலிங்கம் செட்டியார்

**தாய்வழி**

கலைத்தந்தை கருமுத்து தியாகராசன் செட்டியார்

விசாலாட்சி ஆச்சி

↓

மீனாட்சி ஆச்சி
(கலைத்தந்தையின் மூத்த மகள்)

↓

சுந்தரம், தியாகராசன், வள்ளியப்பா

வள்ளியப்பா

சரசுவதி, தனலட்சுமி, கமலா

சீதா

↓

சொக்கு வள்ளியப்பா - விசாலாக்ஷி


↓

வள்ளியப்பா - பழனியப்பா

தியாகு வள்ளியப்பா - சீதா

↓

க்ருஷிதா- சோனாக்ஷி




# அன்பிற்கினிய வள்ளியப்பாவிற்கு...

தென்னாடுடையோன் உங்களுள் இருப்பதால்
நீங்கள் சென்ற இடமெல்லாம்
வென்ற கதை சொல்கிறது
இப்புத்தகம் !...

திருவாசக திருமந்திரப் பொருளெல்லாம்
உங்கள் அருள் வாசகமாய்
மணம் கமழ்ந்த மகத்துவத்தை
உலகறியச் செய்யும்
ஓர் அருமுயற்சி இது!....

மாசாத்துவான், மாநாய்கன்
கொடைக் குணத்தின் நீட்சியாய் நீங்கள்!...
கவியரசரின் இதயத்தில் இடம்கொண்ட
இளவரசே! ...

கனவு காணச் சொன்ன
ஏவுகணை நாயகன் கரம்குலுக்கிக் கொண்டாடி
மகிழ்ந்த
கல்வித் தந்தையே!...




பசிக்கு உண்பார் பலர்,
நீங்களோ பசித்தவரோடு
பகுத்துண்டு வாழ்பவர் !...

ஓய்வெனும் ஒரு வார்த்தை ஓரமாய் ஓய்வெடுக்க
ஒய்யார நடையோடும் சிங்காரச் சிரிப்போடும்
உள்ளத்தில் உற்சாகம் ஊற்றெடுக்க
புன்னகை முகம் காட்டி
உலகை வலம் வரும் 81 வயதுச் சூரியனே!...

சிலரைச் சிலநேரம்
விருதுகள் நினைக்கச் செய்யும்
உங்களால் தான் இங்கு,
பல விருதுகளே நினைக்கப்படுகின்றன!

கல்வியின் முகாந்திரம் அறியாத வீடுகளுக்கும்
அதன் மகத்துவத்தை எடுத்துச் சென்ற
கலைமகளின் தவப்புதல்வன் நீ!

தெளிந்த சிந்தனை, ஆழ்ந்தறிந்த அறிவுநுட்பம்
காலமறியாப் பேருழைப்பு
அன்னையின் தாய்ப்பால் போன்ற
கலப்படமில்லாப் பேரன்பு
என்றும் உங்களிடம் நிர்மலமாய் நிரந்தரமாய்!




காலை, மாலை, இரவு
இவை யாவும் காலத்துக்குத்தான்,
கதிரவனுக்கில்லை!...
நீங்கள் இருக்கும் காலமெல்லாம்
எங்களோடு நிறைவும் மகிழ்ச்சியும்
இருக்கும் என்றென்றும்!

ஏழைகளின் தேவையைக் கண்களில் படிக்கும்
உங்கள் மனிதநேயம்
எல்லையற்று வீசுகிறது
காற்றைப் போல!...

பாணனின் குரல் கேட்டு
குறிப்பறியும் வள்ளல்கள் போல்,
எங்கள் முகக்குறிப்பில்
அகக்குறிப்பை அறிந்துகொள்ளும் அற்புதமே!...
என்றும் நீங்கள் அதிசயமே
ஆம்! அதிசயங்கள் போற்றும் அதிசயமே!!

விதை விட்டு விழுகின்ற விருட்சம் உண்டு.
நீங்களோ ...
விழுதுவிட்டு எழுகின்ற விருட்சம்!...



உங்கள் எண்ணங்கள்
மீண்டும் விதைகளாய் எங்கள் மனதில் ...
இனி நாங்களும் ஆல்போல் தழைத்து
அருகு போல் வேரூன்றக் காத்திருக்கின்றோம்
என்றென்றும் உங்கள் வழியில் !...

உங்களின் பெருங்கனவு
சோனா கல்விக்குழுமம்
சோனா பல்கலைக்கழகமாக
ஒளிர வேண்டும் என்பது...
உலகம் வியக்க
இந்த உயர்நிலை அடைந்திட
எங்கள் எல்லா உழைப்பும்
இனிதே உங்களுக்குச் சமர்ப்பணம்...



# எங்கள் சோனா வள்ளியப்பா

எல்லாம் வல்ல இறைவன் அளித்த வாழ்க்கையை நுட்பமாகப் பார்த்தால் அது அழகானது. அதையே ஆழமாகப் பார்த்தால் அது அதிஅற்புதமானது.

வாழ்க்கையின் பெரும்பகுதியை அன்பு, மகிழ்ச்சி, விட்டுக் கொடுத்தல், சுயநலமின்மை, அரவணைப்பு, கருணை போன்ற ஆகச்சிறந்த பண்புகளால் நிறைக்கிற போது, அந்த வாழ்க்கை முழுமை பெறுகிறது. இப்படித் தன்னுடைய வாழ்வை அறம் சார்ந்ததாகவும், அர்த்தமுள்ளதாகவும் அமைத்துக் கொண்டு உலகத்தவர் யாவர்க்கும் முன்னுதாரணமாக வாழ்ந்து வருபவர் எங்கள் சோனா வள்ளியப்பா.

கல்வி என்பது வாழ்க்கைக்கானது மட்டுமல்ல, கல்வி என்பது வாழ்க்கையே என செயலில் காட்டியவர். ‘கல்வி மட்டுமே சிறந்த சமுதாயத்தையும் நல்ல தலைமுறைகளையும் உருவாக்கும் வல்லமை யுடையது’ என அறிந்து கல்வி நிறுவனங்கள் தந்த கல்வித்தந்தை வள்ளியப்பா.

எந்த ஒரு செயலையும் வெற்றிகரமாக முடிக்க வேண்டுமென்றால், அந்தச் செயலை இப்போதே தொடங்கு என்பதுதான் சோனா வள்ளியப்பாவின் கொள்கை. எதற்காகவும் காத்திருக்க வேண்டாம். இந்த நிமிடமே சரியான நேரம் என்பதுதான் அவர் கொண்டிருக்கும் நெறி.

உங்கள் மனதிற்கு நீங்கள் உண்மையாக இருக்க வேண்டும். அப்படி இல்லையென்றால் நீங்கள் தோல்வி அடைவீர்கள் என்பார் வள்ளியப்பா.

நாம் வாழும் உலகம் புதிய சிந்தனைகளையும், புதிய தரங்களையும், புதிய தலைமைகளையும், புதிய புத்தாக்கப் புனைவுகளையும், புதிய பண்பியல்புகளையும், புதிய பணித்துறைக் கடமைகளையும், புதிய கட்டமைப்புகளையும், புதிய தனித்துவமான வாழ்க்கை முறைகளையும் எல்லா நேரங்களிலும் எதிர்பார்க்கிறது.

அறிவியல் வளர்ச்சியும், முன்னேற்றமும் இணைந்து அனைத்து மக்களையும், மகிழ்ச்சிக்கு இட்டுச் செல்லக்கூடிய உலகிற்காக நாம் போரிடுவோம் என்று சொல்லியே வள்ளியப்பா இன்றைக்குச் செயல்பட்டுக் கொண்டிருக்கிறார்.

இறையுணர்வே மனிதனை மகத்துவம் கொண்டவனாக மாற்றும் என்ற கொள்கையை இறுகப் பற்றிக் கொண்டிருப்பவர். ‘அறிந்து கொள்ளும் ஆர்வமே ஒரு மனிதனை அடுத்த நிலை வளர்ச்சிக்கு உயர்த்தும்’ என்று எப்போதும் ஏதோ ஒன்றைக் கற்றுக் கொள்ளும் ஆர்வம் உடையவர்.

‘இருபது வயதோ, எண்பது வயதோ கற்பதை நிறுத்துபவன் வயோதிகன். கற்றுக்கொண்டே இருப்பவனே இளமையானவன். வாழ்வின் முக்கியக் குறிக்கோள் மனதை இளமையாக வைத்திருப்பதுதான்’

என்ற ஹென்றி ஃபோர்டின் முன்னேற்ற மொழியைத் தன் வாழ்க்கை வழியாகக் கொண்டிருப்பவர். பழமையில் புதுமையின் நுட்பமும், புதுமையில் பழமையின் நுண்ணறிவும் புகுத்தத் தெரிந்த சிந்தனையாளர். பொறுமையுடன் எதையும் எதிர்கொண்டு வெற்றி கொள்ளும் பெருந்திறம் அறிந்த பல்துறை வித்தகர்.

தனக்கான வாய்ப்புகளைப் பற்றிக் கொள்வதிலும் பிறருக்கான வாய்ப்புகளைப் பகிர்ந்து கொடுப்பதிலும் பரந்த சிந்தனை கொண்ட பெருந்தன்மையாளர்.

**நல்லாவின் பால் முழுதும் கன்றுக்கில்லை**
**நறும்பூவின் மணம் முழுதும் சோலைக்கில்லை**
**நெல்லாகும் கதிர் முழுதும் நிலத்துக்கில்லை**
**நிறைகின்றநீர் முழுதும் குளத்துக்கில்லை**
**பல்லாரும் கனிமுழுதும் மரத்துக்கில்லை**
**பண்ணரம்பு இசைமுழுதும் யாழுக்கில்லை**
**எல்லாமே பிறர்க்குழைக்கக் காணுகின்றேன்**
**என் வாழ்வும் பிறர்க்குழைக்க வேண்டும் வேண்டும்.**

என்ற வ.சுப.மாணிக்கனாரின் விருப்பத்தைப் போன்று, தான் பெற்ற பேறு பிறர்க்கானது என வாழ்ந்து வருபவர் வள்ளியப்பா.

சூழலைப் புரிந்து நடக்கும் இளைய தலைமுறையை இங்கே நாம் உருவாக்க வேண்டும் என்பதே அவரின் உயிர்த்துடிப்பாக இப்போது இருக்கிறது. தொடர்ந்து மேற்கொள்ளும் முயற்சியில்தான் வெற்றி அடங்கி உள்ளது என்பார். ‘நடப்பதன் மூலமாகவே பாதைகள் உருவாக்கப் படுகின்றன. நான் தொடர்ந்து நடப்பேன் நீங்களும் வாருங்கள், ஒரு அழகான சமூகத்தை உருவாக்குவோம்’ என்று மிக எளிமையாகச் சொல்லி சோனா குழுமத்தை வழிநடத்திச் செல்லும் தலைமைப் பண்பாளர் வள்ளியப்பா.

இந்த நூலின் சாரம் அற உணர்வே ஆகும் என்பதை நீங்கள் அறிந்து கொள்வீர்கள். அறம் சார்ந்த மன எழுச்சியே பெரும் சாதனைகளை உருவாக்குகிறது. உயர்ந்த எண்ணங்களை நோக்கிச் செல்லக்கூடிய நெஞ்சம்கொண்டவர்களே வாழ்வின் உண்மையான மதிப்பைக் கண்டறிகிறார்கள். அவர்களின் சிந்தனைகளும், பார்வைகளும், மதிப்பீடுகளும் அன்பும் அருளும் இணைந்த இந்நலத் தேடலின் அடிப்படையிலேயே அமைந்திருக்கும். அவர்களையே நாம் பேராளர்கள் என்கிறோம். அந்தப் பேராளர்களின் முன் வரிசையில் வருபவர்தான் நம் வள்ளியப்பா.

‘தினமும் நம் கடமைகளை நிறைவேற்றினால் எதிர்காலத்தைப் பற்றி நாம் ஏன் கவலைப்பட வேண்டும். எல்லோரிடமும் இனிய சொற்களைப் பேசுபவனுக்கு துன்பம் தரும் வறுமை ஏன் வரப்போகிறது?’ என்று கேட்கும் அவரிடமிருந்தே ‘அறத்தின் அடிப்படை, கட்டுப்பாடு’ என்பதை நாம் கற்றுக் கொள்ள வேண்டும்.

வாழ்வில் நல்ல விசயங்களைக் கெட்டியாகப் பிடித்துக் கொள்ள வேண்டும் என்பதும், அதில் ஆழமாக இறங்கி விடவேண்டும் என்பதும் தனது முயற்சி கொண்டு பிறரை முன்னேற வைக்கவேண்டும் என்பதும் இவரின் முதன்மைப் பண்பு. பிறர் உயர தன் உழைப்பைக் கொடுக்கும் உன்னத மனிதர். அனுபவம் என்ற பாடத்தை வாழ்க்கை கற்றுத் தருகிறது. வாழ்க்கை என்ற பாடத்தை அனுபவம் கற்றுத்தருகிறது. வாழும் அனுபவமே வாழ்வின் அனுபவம் என வாழ்வியல் கற்பிப்பவர். தனது முயற்சியில் ஈட்டிய பெருஞ்செல்வத்தைச் சமுதாய நலனுக்காய் திட்டமிட்டுப் பகிர்ந்தளிப்பதில் பேரார்வம் கொண்ட பெருந்தகையாளர்.

இயக்கத்தில் இருக்கிறது வாழ்க்கை. துடிப்பில் இருக்கிறது அதன் உள்ளியல்பு. வாழ்வின் அன்றாடச் செயல்பாடுகளின் மூலம் நாம் பெறும் உள்ளவழிபாடு மெய்யியல் தரும் உயர்தரநிலைகளை விட உன்னதமானது.

நாம் செய்யும் ஒரு செயலை ஒருவர் போற்றக்கூடும் அல்லது போற்றாமல் போகக்கூடும் என்று தெரிந்திருந்துமே அந்தச் செயலைச் செம்மையாகச் செய்வதுதான் நேர்மையான நாணயம் என்பதை எனது இருபத்தேழு வயதிலேயே உணர்ந்து கொண்டதன் விளைவுதான் இன்றைக்கு நான் பார்த்துப் பெருமிதப்படுகிற அத்தனை வளர்ச்சிகளுமே. இதைச் சொல்லுவது எனது கடமை, எனது அறம் என்றே நான் நினைக்கிறேன் என்னும் வள்ளியப்பாவின் வாழ்வை ஆலவிருட்சத்தோடு ஒப்பிட்டுப் பார்த்தால் அற்புத அனுபவம் நிச்சயம் கிடைக்கும். ஆலமரம் மிகப்பழமையான தொன்மைத் தொடர்ச்சி கொண்டது. அதேபோல் நம் தலைமுறையினர் வாழ்வு நம் முன்னோர்களின் செயலை அடிப்படையாகக் கொண்டது. வள்ளியப்பாவின் வாழ்வும் இத்தன்மையதே. ஆலமரத்தடி பேரறிவைப் பெற்றுத் தரும். அவ்வண்ணமே வள்ளியப்பா கல்வித்தந்தையாக பேரறிவை நல்கக் கூடிய கல்விப் பெருந்தொண்டை உலகமே போற்றும்படி செய்து வருகிறார்.

ஒவ்வொரு மனிதனும் எப்போதும் மகிழ்ச்சியுடன் இருப்பதற்கு மிக எளிய வழி, மன நிறைவுடன் வாழ்வதுதான். எப்போதும் அறிவார்ந்த தேடலுடன் நலமார்ந்த வாழ்க்கை நெறியை நோக்கி நடைபோடுவது, எல்லோரையும் அன்போடு அணுகி அரவணைத்துச் செயல்படுவது, ஆழ்ந்த பேரார்வத்துடனும் அதே நேரத்தில் அமைதியாகவும் வெளிப்படையாகவும் இருப்பது, எதையும் அறிவார்ந்த மலர்ச்சியோடு செய்வது போன்ற குணங்களை வளர்த்துக் கொண்டால் மனிதன் மகிழ்ச்சியை ஒவ்வொரு நொடியும் கொண்டாட முடியும் என்ற அடிப்படைக் கூறுகளைத் தனது கொள்கைகளாகக் கொண்ட உலக முன்னோடி வள்ளியப்பா.

அவர் வளர்த்த பல்துறைக் கிளைகளைத் தாங்குவதற்கு விழுதுகளாய் அவரின் தவப்புதல்வர்கள் உழைத்துக் கொண்டிருக்கிறார்கள். கலைத்தந்தை விதைத்த நற்செயல்கள் எனும் ஆலவிதை திரு. சொக்கலிங்கம் செட்டியாராய் அறம் சார்ந்த வேர் விட்டு, நன்நெறிக் கிளைப்பரப்பி

அன்பற விழுதுகள் தாங்கி நிற்க, தனிமனித ஒழுக்கத்தில் தொடங்கி, குடும்பம், சமூகம் என்று பல நிலைகளிலும் சமுதாயம் மேன்மையுற வழிகாட்டும் வள்ளுவரின் வழியில் நடை பயிலும் சோனா வள்ளியப்பாவின் வரலாறு நாம் எல்லோரும் அறிந்து போற்றும் பெருமிதத்திற்குரியது.

வேர் வலுவாக இருக்கும் போதுதான் பழங்கள் இனிமையாக இருக்கும். சோனா குழுமம் என்பது வேர் வலுவாக உள்ள பெருமரம். அறம் செய்ய விரும்பினாலேயே அறம் செய்தல் நிகழும் என்பதற்கு சோனா குழுமம் என்ற ஆலமரம் ஒரு அடையாளம்.

ஒரு வெற்றியாளரின் வலிமையை அவரது ஒரு செயலிலேயே நாம் கண்டறிய முடியும். கல்வியும் செல்வமும் தொழிலும் பெருகி நிற்கும் வளமுள்ள ஒரு குடும்பத்தின் மேன்மையைச் சொல்ல நாவலை விடவும் ஏற்ற வடிவம் எதுவுமில்லை என்ற போதிலும் இந்த **‘வேரும் விழுதுகளும்’** நூலின் மலர்கள் மணம் வீசி எல்லோரையும் மகிழ்ச்சிக் குள்ளாக்கி புத்தொளி வீசும் என்கிற நம்பிக்கை உண்டாகியிருக்கிறது.

இந்நூல் உருவாக்கத்திற்கு எல்லா நிலைகளிலும் துணையிருந்து பல்வேறு ஆலோசனைகளையும் உரிய வழிகாட்டுதல்களையும் வழங்கிய சோனா குடும்பத்தாருக்கும், சோனா கல்விக் குழும பல்துறை சார்ந்த பேராசிரியப் பெருமக்களுக்கும், சோனா குழுமத்தின் அனைத்து உறுப்பினர்களுக்கும், குறிப்பாக தியாகராஜர் பாலிடெக்னிக் கல்லூரி முதல்வர், Dr.V. கார்த்திகேயன் அவர்களுக்கும், சோனா தொழில்நுட்பக் கல்லூரி முதல்வர், Dr.S.R.R.செந்தில்குமார், அவர்களுக்கும், சோனா கலை மற்றும் அறிவியல் கல்லூரி முதல்வர் முனைவர் கு.மை.காதர் நவாஸ் அவர்களுக்கும் எங்களது மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறோம். இந்நூலை அழகுறப் பதிப்பித்து அளித்திருக்கிற விஜயா பதிப்பகத்தாருக்கு எங்களின் அன்பான வணக்கங்கள்.

அன்புடன்

**ஆசிரியர் குழு**

எழுத்தாளர்.

**திரு. ரெங்கலெ.வள்ளியப்பன்**

**முனைவர் க. விஜயராகவன்**
M.A.,M.Phil.,B.Ed.,Ph.D.(NET).,
தலைவர்-தமிழ்த்துறை

**திருமதி சு. வினோதா**
M.A.,M.Phil.,(NET).,(SET).,(Ph.D),
உதவிப்பேராசிரியர்

**முனைவர் வ. கோபாலகிருஷ்ணன்**
M.A.,M.Phil.,Ph.D.,HDCS.,(NET),
உதவிப்பேராசிரியர்

**முனைவர் சி. உமாசாரதா**
M.A.,M.Phil.,Ph.D.,
உதவிப்பேராசிரியர்



# சோனா குழுமம்

## வெற்றியின் படிநிலைகள்

| | | | |
|---|---|---|---|
| 1. | 1922 | - | கருமுத்து தியாகராசர் குழுமம் தொடங்கப்பட்டது. தியாகராசர் நூல் உற்பத்தி ஆலையை மதுரையில் தொடங்கினார். |
| 2. | 1938 | - | சேலத்தில் இயங்கி வந்த ராஜேந்திரா நூற்பாலை வாங்கப்பட்டது. |
| 3. | 1956 | - | ராஜேந்திரா நூற்பாலை பி யூனிட் தொடங்கப் பட்டது. |
| 4. | 1958 | - | தியாகராசர் பாலிடெக்னிக் கல்லூரி சேலத்தில் துவக்கம். |
| 5. | 1960 | - | மீனா நிதி நிறுவனம் செயல்படத் துவங்கியது. |
| 6. | 1964 | - | பெங்களூரு ராம் நகரில் வள்ளியப்பா டெக்ஸ்டைல்ஸ் யூனிட் அமைக்கப்பட்டது. 1967இல் உற்பத்தி தொடங்கப்பட்டது. |

7. 1972 - கூர்க்கில் ஏமகுண்டி தோட்டங்கள் வாங்கப்பட்டது.

8. 1973 - சோனா காப்பர் சல்ஃபேட் நிறுவனம் தொடங்கப் பட்டது.

9. 1976 - தென்னிந்தியாவில் தொழிற்கல்வியில் பெண்கள் முதன்முதலாக அனுமதிக்கப்பட்டனர்.

10. 1978 - லால்பாக் தோட்டங்கள் (Estates) சிக்மகளூர் 1000 ஏக்கர் காப்பித் தோட்டங்கள் (Coffee Estates) வாங்கப்பட்டது.

11. 1980 - சோனா சின்தெடிக்ஸ் மில் தொடங்கப்பட்டது.

12. 1980 - பெங்களூரில் சோனா டவர்ஸ் கட்டப்பட்டது.

13. 1982 - சி-டாட் டெலிமேட்டிக்ஸ் கோல் எண்டர்பிரைசஸ் மேம்பாட்டிற்கான மையம் சோனா வளாகத்தில் தொடங்கப்பட்டது.

14. 1984 - டெக்சாஸ் இன்ஸ்ட்ரூமென்ட் சோனா டவர்ஸில் தொடங்கப்பட்டது. இந்தியாவின் முதல் தகவல் தொழில் நுட்ப நிறுவனமான VSNL (Videsh Sanjar Nigam Lld) இன் தொடக்கவிழா சோனா டவர்ஸில் நிகழ்ந்தது.

15. 1990 - ஸ்பின்வெல் வள்ளியப்பா பிரைவேட் லிமிடெட் நிறுவனம் தொடங்கப்பட்டது.

16. 1991 - கனடா - இந்தியா நிறுவன ஒத்துழைப்புத் திட்டம் (CICP) தியாகராாசர் பாலிடெக்னிக்கில் தொடங்கப் பட்டது.

17. 1991 - சோனா ராஜேந்திரா ஸ்பின்னர்ஸ் பிரைவேட் லிமிடெட், சோனா வள்ளியப்பா டெக்ஸ்டைல்ஸ் பிரைவேட் லிமிடெட் (SVTM பிரைவேட் லிமிடெட்) என பெயர் மாற்றம் செய்யப்பட்டது.

18. 1996 - வள்ளியப்பா சாஃப்ட்வேர் டெக் பார்க் (V.S.T.P) Incubation Centre அமைக்கப்பட்டது. ஆரக்கிள்ஸ் சிஸ்கோ, வெரிஃபோன் மற்றும் சில எம்.என்.சி கம்பெனிகள் இந்தியாவில் தங்கள் முதல் அலுவலகத்தை பெங்களூர் சோனா டவர்ஸில் தொடங்கின.

19. 1997 - சோனா தொழில்நுட்பக் கல்லூரி தொடங்கப் பட்டது.

20. 1998 - சோனா ஸ்கூல் ஆஃப் மேனேஜ்மென்ட் தொடங்கப் பட்டது.

21. 1991 - வள்ளியப்பா டெக்ஸ்டைல்ஸ், சோனா லாஜிஸ்டிக்ஸாக மாற்றப்பட்டது.

22. 2000 - வீ தொழில்நுட்பத்தை நிறுவுதல்.

23. 2000 - வீ பொறியியல் சேவைகளை உருவாக்குதல்.

24. 2001 - வீ இமேஜிங் தீர்வுகள் (V Imaging Solution) தொடங்கப் பட்டது.

25. 2003 - சோனா (ஆர் & டி பிரிவு) அமைக்கப்பட்டது.

26. 2008 - சீதா வணிக வளாகம் தொடங்கப்பட்டது.

27. 2010 - வீ டெக் யு.எஸ் நியூயார்க்கில் தொடங்கப்பட்டது.

28. 2017 - Hiremee வேலைவாய்ப்புத்தளம் தொடங்கப் பட்டது.

29. 2017 - சோனா கலை மற்றும் அறிவியல் கல்லூரி தொடங்கப் பட்டது.

30. 2018 - வள்ளியப்பா அறக்கட்டளை உருவாக்கப்பட்டது.

31. 2019 - சோனா ஹைட்ஸ் ரியல்எஸ்டேட் திட்டம் தொடங்கப் பட்டது.

32. 2019 - சோனா விஸ்டாஸ் குடியிருப்புத் திட்டம் உருவாக்கப் பட்டது.

33. 2020 - வள்ளியப்பா பப்ளிக் பள்ளி ஆரம்பிக்கப்பட்டது.

34. 2020 - அன்னதானத் திட்டம்

35. 2021 - இயற்கை மருத்துவம் யோகா ஆயுர்வேதம் மற்றும் மாற்று சிகிச்சைகளுக்கான சோனா மருத்துவக் கல்லூரி தொடங்கப்பட்டது.

36. 2021 - மைசீலியம் சோனா பயோடெக் பிரைவேட் லிமிடெட் (மஷ்ரூம் இண்டஸ்ட்ரீஸ்) தொடங்கப்பட்டது.

37. 2021 - வீ டெக் மெட்டாய் ஹைடெக்னாலஜிஸ் ஐ.டி.சேவை நிறுவனம் உருவானது.

38. 2022 - சோனா ஆயுஷ் கிளினிக் தொடங்கப்பட்டது.

39. 2022 - சோனா F.M. 107.8 சமூக வானொலி நிலையம் தொடங்கப்பட்டது.

40. 2022 - சோனா ஸ்டார் தொடங்கப்பட்டது.

41. 2023 - வீ ஹெல்த் டெக் பிரைவேட் லிமிடெட் தொடங்கப் பட்டது.

42. 2024 - சோனா டெக்னாலஜி நிறுவனத்தில் தொழிலாளர் களுக்கான தொழில்முறைப் படிப்புகள் ஏற்படுத்தப் பட்டது.

# பொருளடக்கம்


| | | |
|---|---|---|
| 1. | விருட்சத்தின் வரலாறு | 29 |
| 2. | ஒரு விதையின் கதை | 33 |
| 3. | விருட்சத்தின் வேர் சரிதம் | 41 |
| 4. | விருட்சத்தின் தொடக்கம் | 52 |
| 5. | வாழ்க்கைத் துணைநலம் | 60 |
| 6. | விருட்சத்தின் கிளைகள் | 65 |
| 7. | விருட்சத்தின் விழுதுகள் | 75 |
| 8. | விருட்சத்தில் துளிர்த்த ஒளிக்கீற்று | 93 |
| 9. | புகலிடம் தரும் புனிதத்துவம் | 102 |
| 10. | தீராத் தமிழ்க்காதல் | 107 |
| 11. | இயற்கையின் தோழன் | 119 |
| 12. | சரித்திரம் போற்றும் சமூகச் செம்மல் | 125 |

| | | |
|---|---|---|
| 13. | கருமுத்து தியாகராசரும் சோனா வள்ளியப்பாவும் | 131 |
| 14. | ஆன்மீகப் பயணம் | 140 |
| 15. | சோனா கல்லூரி வளாக நூலகம் | 153 |
| 16. | பன்முகப் பண்பாளர் | 158 |
| 17. | விருதுகள் | 180 |
| 18. | சோனா வள்ளியப்பாவின் எதிர்கால இலக்குகள் | 182 |



# விருட்சத்தின் வரலாறு

எல்லாம் வல்ல இறைவன் படைப்புகளில் நோக்கமும் செயலுமின்றி எதுவுமில்லை. பிரபஞ்சம் தோன்றிய நாள் முதல் எத்தனையோ படைப்புகளை இயற்கை வாரி வழங்கியுள்ளது. அந்தப் படைப்புகளில் மகத்தான மனித வாழ்க்கையை ஒரு விருட்சத்துடன் ஒப்பிடலாம். ஏனெனில் பண்பட்ட நிலத்தில் விதைக்கப்பட்ட விதையானது பல தடைகளைத் தாண்டி வேர் பெற்று, முளை விட்டு விருட்சமாய் வளர்ந்து தஞ்சம் அடைந்தோர்க்கு நிழல் கொடுத்து, நம்பி வந்தோர்க்கு புகலிடம் தந்து விழுதுகளைப் பலமாக்கி காலத்தின் சின்னமாகப் பிரம்மாண்டமாய் வளர்ந்து நிற்கும். இது இயற்கை கற்றுத்தரும் வாழ்வியல் பாடம். அதுபோல நம் வள்ளியப்பாவும் தன் முன்னோர்கள் வழிநின்று நம் தலைமுறைக்கு நல்வழிகாட்டி வருவது போற்றுதற்குரியது.

சிலர் பிறப்பில் சிறந்து வாழ்தலில் வென்று காட்டித் தன்னை அடையாளப்படுத்திக் கொள்கிறார்கள். இன்னும் சிலர் தன் வாழ்தலைப் பிறருக்குக் கற்றலுக்குரிய பொருளாக்கிச் சமுதாயத்தின் மனமாக அடையாளப்படுகிறார்கள். அதன்வழி நற்குடியில் பிறந்து அறவாழ்க்கை கொண்ட பெற்றோர்களால் வளர்க்கப்பட்டவர் வள்ளியப்பா.

அந்த விருட்சம் பற்றி அறிந்து கொள்வதும் அவர் பிறந்த பண்பட்ட நிலம் பற்றித் தெரிந்து கொள்வதும் அப்படியோர் ஆனந்தத்தைத் தருவது. 'வாழ்க்கை என்பது கண்மூடி திறப்பதற்குள் முடிந்து விடுகின்ற ஒன்றாக இருப்பதால் சிறிதாகச் சிந்தித்துக் கொண்டிருப்பது வீண். பெரிதாகச் சிந்தித்துச் செயலாற்ற வேண்டுமென்று என் சின்ன வயதிலேயே முடிவு செய்து விட்டேன்' என்று சொல்லும் வள்ளியப்பாவின் வாழ்க்கை எப்படிப் பிறருக்கான வாழ்வியல் முறைமைகளைக் கொண்டதோ அதேபோல் இவரின் பிறந்த ஊரும் வரலாற்றுச் சிறப்புடையது.

ஆம்! சமூகங்கள் பல சேர்ந்து ஒரு சமுதாயமாகப் பின்னிப்பிணைந்து இயங்கும்போது உருவாகும் வாழ்க்கை நெறி, பழக்கவழக்கங்கள், கலையார்வம், ஊரோடு இயைந்த உறவு, சிந்தனைத் தெளிவு ஆகிய அனைத்தும் இணைந்து ஒருவகைச் சமுதாயச் சிந்தனையாக வெளிப்படுவதே பண்பாடு. அந்தப் பண்பாட்டில் உயர்ந்து விளங்கும் செட்டிநாட்டில் பூலாங்குறிச்சி ஓர் அழகிய சிற்றூர்.

வரலாறு ''பூலாங்குறிச்சி'' பற்றி இலக்கிய நயத்தோடு பேசுகிறது. குறிஞ்சி நிலத்திற்கே உரிய நில அமைப்பில் மலையும் மலை சார்ந்த பகுதியாக இது விளங்கி வருகிறது. 'பூலாங்குறிஞ்சி' என்பது மருவி 'பூலாங்குறிச்சி' என்றாகியிருக்கலாம். சுற்றியுள்ள பகுதிகளெல்லாம் வறண்டிருந்த போதிலும் பூலாங்குறிச்சி மட்டும், மலையும் மலை சார்ந்த குறிஞ்சி நிலமாக பசுமையாக இருந்து வருகிறது. மேலும், பூலாங்குறிச்சி ஒரு வரலாற்று நகர் என்கிறது தொல்லியல் துறை.

ஓர் ஊர் உற்று நோக்கப்படுவதற்குக் காரணமாய் அமைவது மக்கள் வளம். வளத்துடன் வாழ வழி வகுப்பது நல்லாட்சி. நல்லாட்சிக்கு வித்தாய் அமைவது இறையருள். இவை அனைத்தும் ஒருங்கே அமைந்த ஊர் தான் பூலாங்குறிச்சி.

பூலாங்குறிச்சியில் உள்ள கல்வெட்டுகள், அடையாளச் சின்னங்கள் குறித்த செய்திகள் சித்தன்னவாசல் உட்பட ஏழு நகரங்களில் மட்டுமே காணப்படுவது பெருஞ்சிறப்பு. தமிழர் வரலாற்றில் பெரும்பாலும் அறியப்படாத சேந்தன், சேந்தன் கூறான் போன்ற மன்னர்கள் பற்றிய கல்வெட்டுச் செய்திகள் இங்குதான் முதன் முதலில் கண்டெடுக்கப்பட்டது. அதேபோன்று களப்பிரர் காலத்தின் ஆட்சி முறை குறித்த கல்வெட்டுப் பதிவுகளும் இங்குதான் உள்ளன.

இங்குள்ள மக்கள் ''கண் புருவப் பாறை'' என்ற அரிய செய்தியினை வரலாற்றுச் சிறப்புடன் எடுத்துக் கூறுகின்றனர். அதனைக் கேட்கும்போது அன்றைய மக்கள் இயற்கையோடு இயைந்து வாழக் கற்றிருந்த விதம் மலைக்க வைக்கிறது.

இந்தக் 'கண்புருவப் பாறை' என்பது மழைக்காலத்தில் சமணர்கள் தங்குவதற்கு ஏற்ற ஓர் இடமாக இருந்திருக்கிறது. கண் வடிவத்தில் படுகை அமைப்பும் படுகைகளுக்குள் மழைநீர் உள்ளே வராமல் வெளியே செல்வது போல் வாட்டமாக, பார்ப்பதற்குக் கண் புருவத்தைப் போன்ற அமைப்பினைக் கொண்ட சமணப்படுகைகள் பூலாங்குறிச்சியில் காணப்படுகிறது. மேலும் சமணத்துறவியான நேமிநாதர் சிலையும் இங்கு காணப்படுகிறது. அதுமட்டுமல்லாமல் இன்றளவும் மெச்சத்தக்க அதிசயமாக இயற்கை அளித்த கருணைக்கொடையாக என்றென்றும் நீர்வற்றிப் போகாத ''ஐயன் கேணி'' பூலாங்குறிச்சியில் உள்ளது.

ஆன்மீகம், அரசாட்சி, நன்மக்கள், சிறந்த தலைமை, இயற்கையின் கொடை என அனைத்து வளங்களும் வழி வழியாகக் கொண்டது இந்தப் பூலாங்குறிச்சி. அதேபோல் இந்தப் பூலாங்குறிச்சி மண்ணின் மைந்தன் வள்ளியப்பாவின் வரலாறும், அறிவை நாம் ஆக்கப்பூர்வமாகப் பயன்படுத்தும்போது அது நம்மை மிகப்பெரிய ஆற்றலாளராக மாற்றுகிறது என்று சொல்லுகிற வரலாறு.

தேடல் தான் புதிய அறிவார்ந்த திறன்களையும், புதிய ஆற்றல் வளங்களையும், புதிய எழுச்சி உணர்வுகளையும், புதிய உறுதியான முடிவுகளையும், புதிய உயிர்ப்பான செயலாட்சி நுட்பங்களையும், புதிய உலகளாவிய வெற்றிகளையும் கொண்டு வந்து சேர்க்கிறது. இந்த அத்தனைத் தேடல்களையும், தேடல்களின் விளைவுகளையும் ஒருங்கிணைக்கிற வரலாறு நம் வள்ளியப்பாவின் வரலாறு.



# ஒரு விதையின் கதை

**நா**ம் நமக்கான வாழ்க்கைப் பாடத்தை இயற்கையிடமிருந்தே கற்றுக் கொள்கிறோம். காலத்தையும் இயற்கையையும் போன்ற நல்லாசான் கற்பிக்கும் பாடங்கள் அனுபவங்களின் வழி நமக்கான பாடமாக உருப்பெறுகிறது. அவ்வழியில் பெற்ற அனுபவப் பாடங்கள் நம்மோடு முடிந்து விடுவதில்லை. இயற்கை எப்படித் தன்னகத்தே உடையவற்றை அனைத்து உயிரினங்களுக்கும் பொல்லாங்கில்லாமல் வழங்கி விடுகிறதோ அதேபோல் நற்குடியில் பிறந்த சான்றோர்கள் தான் கற்ற, பெற்ற வாழ்வியல் பாடங்களை வாழ்தலின் மூலம் தம் தலைமுறையினருக்கு தந்து விடுகின்றனர்.

வேரின் மாட்சிமை அறிந்தவரே விருட்சத்தின் மதிப்பினையும் விழுதுகளின் தன்மையையும் உணர்வார். தாயின் கருவில் உயிரமையும்போது கடந்த ஏழு தலைமுறையினரின் அடிப்படைத் தன்மை (DNA) கலந்திருக்கும் என அறிவியல்

சொல்கிறது. பழமையான மருத்துவ முறைகளும் அதன் மகத்துவம் உணர்த்துகிறது. அதன்வழி வள்ளியப்பா அவர்களின் முன்னோர் பற்றிய வரலாற்றினை அறிவது அவசியம்.

ஒவ்வொரு அழகான விசயத்திற்குப் பின்னும் சில வகையான வலிகள் இருக்கின்றன என்ற தெளிவை நமக்கு உணர்த்தி நம் வாழ்வை மேம்படச் செய்யும் என்பது உண்மை. வள்ளியப்பா அவர்களின் குடும்ப வரலாறு பாரம்பரியமும் பண்பாடும் மிக்கது. இதற்குப் பல வரலாற்று நிகழ்வுகள் இன்றளவும் சான்றுகளாய் உள்ளன.

கல்வி, வணிகம், ஆன்மீகம் என அனைத்துத் துறை சார்ந்த வித்து கருங்குளத்தில் விதைக்கப்பட்டது. கருங்குளத்து முத்துக்கருப்பன் செட்டியாருக்கு பத்துப் பிள்ளைகள். நான்கு மகன்கள் - ஆறு மகள்கள். இளையவரே கருமுத்து தியாகராசர்.

கருங்குளத்து முத்துக்கருப்பன் செட்டியாரின் குடும்பம் தெற்கூருக்குக் குடி பெயர்ந்தது. இவர் வள்ளியப்பாவின் முப்பாட்டனார். வள்ளியப்பாவின் ஆயா வீட்டு ஐயா தியாகராசர். தியாகராசரின் சகோதரர்களும் வணிகம் இலக்கியம் ஆகிய துறைகளில் தனித்துவம் பெற்றிருந்தனர். கருமுத்து தியாகராசரின் மூத்த சகோதரர் அருணாச்சலம் செட்டியார் கட்டிடக்கலையில் வல்லுநராகவும் வைரங்களின் தரம் காண்பதில் நுண்ணறிவு உடையவராகவும் இருந்துள்ளார். நெடுந்தொலைவில் இருந்தே ஒருவர் அணிந்திருக்கும் ஆடையில் பின்னப்பட்டுள்ள நூலின் தரத்தை ஆராயும் நுண்திறன் பெற்றவர். தியாகராசரின் இரண்டாவது சகோதரர் அழகப்ப செட்டியார் இலக்கியத்துறையின் மறுமலர்ச்சிக்கு வித்திட்டவர். தமிழ்ப்புலவர்களை ஆதரித்தவர். ஆன்மீகப் பயணத்தில் நெடுந்தொலைவு கண்டவர். கோவில்களில் விலங்குகளைப் பலி கொடுப்பதைத் தடுக்கக் கடுமையாகப் போராடியவர்.

மூன்றாவது சகோதரர் இராமநாதன் செட்டியாரின் பணியானது புதியதொரு விழிப்புணர்வை ஏற்படுத்தி பெருமை பெற்றுத் தந்தது. நகரத்தார் சமூகத்தில் முதன் முதலில் திரைகடலோடித் திரவியம் தேட இலண்டனுக்குச் சென்ற புகழுக்குரியவர்.

தனது தந்தையின் மறைவிற்குப்பின் தியாகராாசரின் மூத்த சகோதரர் குடும்பப் பொறுப்பினை முழுவதுமாக ஏற்றுக்கொண்டார். தந்தையின் நிலையிலிருந்து தியாகராசரை வளர்த்தெடுத்தார். தியாகராசரின் 9 வயதில் இலங்கைக்கு அழைத்துச் சென்று தன் கவனிப்பில் வளர்த்து வந்தார். பள்ளிக்கல்வியின் போது தமிழ் மீது ஆர்வம் கொண்டு பெரும்புலவர் சிற்கைலாசம் பிள்ளையிடம் தமிழ் இலக்கியங்களைக் கற்றுத் தேர்ந்தார் தியாகராசர். அப்போது கல்வியறிவே உண்மையான உயர் அழகு என்பதை உணர்ந்து கொண்டார். தியாகராசர் கல்லூரிப் படிப்பினை கொழும்பு செயின்ட் தாமஸ் கல்லூரியில் திறம்பட கற்றார்.

கூட்டுக்குடும்பங்களில் வாழ்ந்த மனிதர்கள் மிக மிக உற்சாகமாகவும், அன்பாகவும், பாச உணர்வுகளோடும் வாழ்ந்திருக்கிறார்கள் என்பதற்கு கருமுத்து தியாகராசரின் இல்லமே ஒரு சான்றாக விளங்கியிருக்கிறது என்பது இன்று நாம் அறிந்து நெஞ்சில் பதித்துக் கொள்ள வேண்டிய மிக முக்கியமான செய்தி.

மிதமான அன்பு, மிகப்பெரிய அன்பு, அரைகுறை அன்பு என்றெல்லாம் கிடையாது. அன்பென்றால் அன்புதான். இது அந்தக் காலத்துப் பண்பட்ட குடும்பங்களிலிருந்து நாம் எடுத்துக் கொள்ள வேண்டிய வாழ்க்கைப் பாடம்.

17-ஆவது வயதில் தியாகராசர் விசாலாட்சி ஆச்சியுடன் திருமண பந்தத்தில் இணைந்த நிகழ்வு சிறப்பாக நடந்தேறியது.

அதில் ஒரு சிறப்பான செய்தி. அந்தக் காலத்தில் பெண்கள் ஊரின் நடுவில் உள்ள நன்னீர்த் திருக்குளத்திற்குச் சென்றுதான் வீட்டிற்கு தண்ணீர் எடுத்து வருவார்கள். அப்படி விசாலாட்சி ஆச்சி சில பெண்களுடன் குளத்திற்குச் சென்று தண்ணீர் எடுத்து நிறைகுடத்துடன் திரும்பி வரும்போதுதான் தனக்கு வரப்போகும் வாழ்க்கை துணைவியைப் பார்த்தாராம் தியாகராசர். பெண் பிடித்துப் போய்விட்டதாம். விசாலாட்சி ஆச்சி அவர்கள் வீட்டில் எட்டாவது பிள்ளையாம். பொதுவாக எட்டு ராசியில்லை என்ற கருத்து உண்டு. ஆனால், தியாகராசர் எட்டாவது பிள்ளையாகிய விசாலாட்சியையே கரம் பிடிப்பேன் என்றும் எட்டிய பக்கமெல்லாம் நூற்பாலைகள் அமைப்பேன் என்றும் சொன்னாராம்.

அப்படி, தான் எண்ணிய யாவற்றையும் செயற்படுத்திக் காட்டிய பன்முகத் தன்மை கொண்ட உயிர்ப்பான மனிதராக விளங்கித் தமிழகத்திற்கே பெருமை சேர்த்தார் தியாகராசர் என்பதை நாம் ஒவ்வொருவரும் அறிந்து கொள்கிறபோது அறிவார்ந்த பட்டறிவைப் பெறுகிறோம் என்பதுதான் உண்மை.

முதலாம் உலகப்போர் நடைபெற்றுக் கொண்டிருந்த பதற்றமான சூழல் நிலவிய காலம் அது. நம் முன்னோர்கள் ஆங்கிலேயர் ஆட்சியில் கட்டுண்டு இருந்த கொடிய பொழுது அது. உணர்வுகள் ஒடுக்கப்பட்டு உரிமைகள் மறுக்கப்பட்டுக் கொண்டிருந்த போதிலும் ஆங்காங்கே சுதந்திர உணர்வு கொண்ட பெரியோர்கள் இருக்கத்தான் செய்தார்கள். அவ்வழி வாழ்ந்து காட்டியவர்தான் கருமுத்து தியாகராசர்.

தனி மனிதன் ஆங்கில அரசை எதிர்த்து நின்றால் மரணம் நிச்சயம் என்ற அவல நிலை இருந்த சூழலில் தனக்கான அதிகாரம் முறையாக வேண்டும் என நாட்டிற்கு உழைத்துக் கொண்டே இருந்த மாமனிதராக தியாகராசர் திகழ்ந்தார்.

அதற்குச் சான்றாக, புரட்சி கண்ட சம்பவம் ஒன்று முதலாம் உலகப்போர் நடைபெற்ற போது அரங்கேறியது. ஆங்கிலேய அரசு போர் நிதி திரட்டியது. அந்த நேரம் தமிழ்நாட்டின் அனைத்துத் தொழிலதிபர்களையும் நிதி கொடுக்கச் சொல்லி ஆங்கிலேய அரசு கட்டாயப்படுத்தியது. ஆனால் தியாகராசர் அதனைக் கடுமையாக எதிர்த்தார். உரிமைக்காகக் குரல் கொடுக்கும் மன உறுதியும் துணிவும் நல்ல தலைமை பண்புக்குரியது. அப்பண்பு அவருக்கு இயல்பாகவே அமைந்திருந்தது.

தியாகராசரின் செயல்பாடுகளைப் பெருமைப்படுத்தும் வகையில் அகில இந்திய காங்கிரஸ், 1917-ஆம் ஆண்டு தமிழ்நாட்டு காங்கிரஸ் கட்சியின் செயலாளராக தியாகராசரை நியமித்தது. பொறுப்புகள் வந்த போதிலும் ஆங்கிலேயருக்கு எதிரான புரட்சிகளில் தொடர்ந்து தன்னை ஈடுபடுத்தி வந்தார் தியாகராசர். வணிகத்தின் போர்வையைப் போர்த்தி வந்த வெள்ளைப்புலிகள் மெல்ல மெல்ல இந்தியாவின் தொழில்களை வேட்டையாடத் தொடங்கி இருந்தன. இந்தியாவில் பஞ்சாலைகளை இயக்க விடாமல் முடக்கிய ஆங்கிலேயரை எதிர்த்துப் போராடினார் தியாகராசர்.

ஆங்கிலேய அரசு ஆடை சம்மந்தப்பட்ட அனைத்து மூலப் பொருட்களையும் இறக்குமதி செய்து தன் வணிகச் சந்தையாக இந்தியாவைச் சுரண்டிக் கொண்டிருந்தது. இதற்கு எதிராக இந்தியர்களுக்குத் தேவையான பொருட்கள் இந்தியாவிலேயே கிடைக்க வேண்டும் என சிந்தித்தார் தியாகராசர். சிந்தனையோடு அதனை நிறுத்தாமல் ஆலைத் தொழிலைத் தானே ஏற்று நடத்தி அந்தப் புரட்சிச் சிந்தனையை வெளிப்படுத்திச் செயலில் காட்டினார். அந்தக் காலத்தில் இது சாதாரணமான ஒன்றல்ல. எண்ணிப் பார்க்கவே முடியாத பெருஞ்சாதனை. தமிழர்கள் ஒவ்வொருவரும் பெருமைப்பட வேண்டிய விடயம்.

அதில் பெற்ற தெளிவினைக் கொண்டு தாமே ஆலையை ஏற்று நடத்துவதாக முடிவு செய்தார் தியாகராசர். அது கூட்டு நிறுவனமாக நடத்தப்பட வேண்டும் எனவும் அறிவித்தார். அந்தக் கூட்டு நிறுவனத்தில் இயக்குநராக நியமிக்கப்பட்டவர்களில் கருமுத்து தியாகராச செட்டியாரும் ஒருவர். அதனைத் தொடர்ந்து கல்யாண்ஜி என்ற ஆலை மீனாட்சி ஆலை என்ற பெயர் மாற்றத்துடன் நால்வரால் நடத்தப்பட்டது. பின்னர் அந்த ஆலையில் கடன் சிக்கல்கள் ஏற்படவே அதன் முழு பொறுப்பையும் தியாகராசரே ஏற்றுக் கொண்டார். அல்லும் பகலுமாய் பாடுபட்டு அயராது உழைத்து, ஊர் ஊராகச் சென்று ரூபாய் 15 லட்சத்தைத் திரட்டினார். இந்தியா முழுவதும் சுற்றுப்பயணம் செய்து ஆலைகளின் அமைப்பையும் இயந்திரங்களின் உற்பத்தியையும் ஆராய்ந்தார். புதிய இயந்திரங்களை ஆலையில் இயக்கினார். இந்தியா முழுதும் பயணித்து உயர்தர பஞ்சுகள் கிடைக்கும் இடங்களை எல்லாம் கண்டறிந்தார்.

ஆலை குறித்து ஆராய்தல், பயணித்தல் என்று தொழில் மீது தனது ஈடுபாட்டைக் காட்டி அறவழியில் ஆலைகளை மேம்படுத்தினார். இதன் மூலம் இந்தியப் பஞ்சாலைகளின் தன்னிகரற்ற தலைவராக தியாகராசர் உருவெடுத்தார்.

பஞ்சு வாங்கும்போது நிதானத்துடன் தேர்ந்தெடுக்கும் கலை அறிந்தவர். எந்தப் பஞ்சை எங்கு வாங்கினால் என்ன என்று அவர் இருந்ததில்லை. நுட்பம் தெரிந்து கொள்முதல் செய்யக்கூடியவர். தென் மாவட்டங்களில் பஞ்சு மேலாண்மை மிகுதியாக வேண்டும் என்று பயிரிடுபவர்களை ஊக்கப்படுத்தினார்.

1939இல் மீனாட்சி ஆலையைப் பார்வையிட இங்கிலாந்தில் இருந்து வந்த ஒரு பெரிய நிறுவனத்தின் மேலாண்மை இயக்குநர், 'இங்கிலாந்தில் கூட மீனாட்சி ஆலைக்கு இணையான ஆலைகள் மிகக் குறைவு' என்று கூறினாராம். அந்த அளவிற்குக் கருமுத்து தியாகராசர் அவர்கள் தனது ஆலையை உலகத் தரத்திற்கு உயர்த்தியிருந்தார்.

அதன்பின் பஞ்சாலைகளைத் தானே இயக்கி மக்கள் மனதில் ஆர்வக் கனலை உண்டாக்கினார். இச்செயலைக் கவனித்து வந்த காங்கிரஸ் தலைமை இவர் பணியை மெச்சியது. மகாத்மாவால் பாராட்டப்பட்டதும் பெரும் வரலாற்றுப் பதிவாகும். தன் நாட்டுப்பற்றை தான் உயர மட்டுமே பயன்படுத்தாமல், தன்னையும் வளர்த்து நாடும் நாட்டு மக்களின் பொருளாதாரமும் வளர வேண்டும் என்று கருதிப் பாடுபட்டவர் கருமுத்து தியாகராசன் செட்டியார்.

தாதாபாய் நவுரோஜி, நேதாஜி, பெரியார், ராஜாஜி ஆகியோருடனான இவரின் அனுபவப் பயணம் எல்லையில்லாதது.

வரலாற்றுப் பக்கங்களைத் திருப்பும்போது என்றென்றும் அழிக்க முடியாத பதிவு ஒன்று உள்ளது. ஒரு மிகப்பெரிய அரசியல் தலைவரின் மனமாற்றம் ஏற்பட்ட இடம் தியாகராசரைச் சார்ந்துள்ள இடம் என்ற அற்புதம்தான் அது. புராணக் கதைகளிலும், தத்துவம், மெஞ்ஞானம் பேசப்படும் இடங்களிலுமே நாம் ஞானம் அடைந்த கதைகளைக் கேட்டிருப்போம். அப்படியொரு ஞான நிகழ்வு மீனாட்சி ஆலையின் பதிவு அலுவலகத்தில் நிகழ்ந்தது.

தியாகராசர் என்ற தூய ஆத்மாவின் அரசியல் பயணத்தை மகாத்மா காந்தி வணிக அமைப்புகள் மூலம் அறிந்து வைத்திருந்தார். ஆலைத் தொழிலில் பெரும் புரட்சி ஏற்படுத்தி ஆங்கிலேயரை எதிர்த்து வந்த தியாகராசரின் தேசியப் பற்றினையும் மகாத்மா அறிந்திருந்தார். அவரின் நன்முயற்சியைப் பாராட்டவும் செய்தார். அதனைப் பெருமைப்படுத்தும் வகையில் மகாத்மா தன் அரசியல் சுற்றுப்பயணத்தின் போது கருமுத்து தியாகராசன் செட்டியார் அவர்களின் விருந்தினராகத் தங்க முடிவு செய்தார்.

அந்த மகத்தான நிகழ்வு 1921-ஆம் ஆண்டு செப்டம்பர் திங்கள் இறுதியில் நடந்தது. காந்தியடிகள் மதுரைக்கு முதன்முதலாக வருகை புரிந்த சமயம் அது. ஆங்கிலேயருக்கு எதிராகப் புரட்சி முழக்கமிட்டு ஆலைத் தொழிலில் வளர்ந்திருந்த தியாகராாசர் அவர்களை மகாத்மா சிறப்பிக்கும் விதமாக மீனாட்சி ஆலையின் பதிவு அலுவலகத்தில் தங்கினார். அங்கிருந்தே ஊர் மக்களின் நிலை அறிய, பலப்பல இடங்களுக்கும் பயணித்தார் காந்தியடிகள்.

அப்போது பருவமழை தவறி மக்கள் இன்னல்களில் சிக்கித் தவித்த காலகட்டம். அவ்வூரில் ஆண்கள் மேலாடை அணியும் வழக்கம் இல்லை. மீனாட்சி ஆலைக்குத் திரும்பி வந்த காந்தியடிகள் மக்களின் அரை ஆடைத் தோற்றத்தினை எண்ணி ஒரு முக்கிய முடிவினை மேற்கொண்டார். மறுநாள் காலை அவரிடம் தெரிந்த மாற்றம் அனைவரையும் வியப்பிற்குள்ளாக்கியது. 'மக்கள் முழு ஆடை உடுத்தும் வரை, இனி நான் அரையாடை மட்டுமே உடுத்தப் போவதாக அறிவித்தார்' காந்தியடிகள். அவரது வாழ்வில் ஏற்பட்ட பெரிய மாறுதல் விருந்தினராக அவர் மீனாட்சி ஆலையில் தங்கியிருந்த போது நேர்ந்ததை அக்காலத்து இதழ்கள் வெளியிட்டன. தன்னலமற்ற தியாகத்தினை வரலாறு ஒருபோதும் மறப்பது இல்லை.

ஆய கலைகளில் ஒன்றான ஆடைத்தொழிலில் மாபெரும் பேரரசை கருமுத்து தியாகராாசன் செட்டியார் உருவாக்கினார். 'கலைத்தந்தை' என அனைவராலும் போற்றப்பட்டார். அதன் பின் 'கலைத்தந்தை' என்ற பெயருக்கு உகந்தாற் போல வணிகம், கல்வி, தொழில்நுட்பம் என அனைத்துத் துறைகளிலும் தடம் பதித்தார்.

கலைத்தந்தை, இல்லறத்தில் தன்னோடு 37 ஆண்டுகள் பயணித்து மறைந்த மனைவி விசாலாட்சி ஆச்சியின் நினைவாக ஆ.தெக்கூரில் விசாலாட்சி கலாசாலையைத் தொடங்கினார். அப்பள்ளி அன்றைய பிரதமர் ஜவஹர்லால் நேரு அவர்களால் தொடங்கிவைக்கப்பட்டது. கோலாகலமான திருவிழாவாக அந்தப் பள்ளித் தொடக்க விழா அமைந்தது. இன்றளவும் செட்டிநாட்டில் பெருமையோடு பேசப்படுகிற

விழா அது. மேலும் தியாகராசர் பாலர் பள்ளி ஒன்றையும், தன்னிடம் பணியாற்றும் தொழிலாளர்களின் குழந்தைகளுக்காகப் பரவையில் மீனாட்சி தொடக்கப்பள்ளியையும் தொடங்கினார். மடப்புரம், மதுரை போன்று தனது ஆலைகள் உள்ள அனைத்து இடங்களிலும் பள்ளிகளைச் செயற்படுத்தினார். அதன் உறுப்பாக நன்முறை மேல்நிலைப் பள்ளியையும் தொடங்கி வைத்துக் கல்வித் தொண்டாற்றினர். அனைத்துத் துறைகளிலும் கோலோச்சிய கலைத்தந்தை வேருக்கு வழிவிடும் காலம் வந்தது. அதன்பின் பண்பட்ட நிலத்தில் நல்வழியாக விதைக்கப்பட்ட கலைத்தந்தையின் வேர்கள் வலிமை பெறும் காலம் தொடங்கியது.

எண்ணங்கள்தான் உலகை ஆளுகின்றன என்பதை அறிந்திராமல் நாம் எதைச் சாதித்து விட முடியும்? நல்லவை என்றோ மோசமானவை என்றோ எதுவுமில்லை. சிந்தனைதான் ஒன்றை நல்லதாக ஆக்குகிறது என்ற தெளிவு தோன்றி விட்டால் போதும். அந்தத் தெளிவு கொண்டிருந்த மேதை கருமுத்து தியாகராசர். அவர் போட்ட பாதையில் நடைபோட்டு வருகிறவர் நம் வள்ளியப்பா.



# விருட்சத்தின் வேர் சரிதம்

மண் உயிர்களுக்கு வேர் மூலம். மனித உயிர்களுக்கு மூலம் முன்னோர்களே. அதன்படி கலைத்தந்தை உருவாக்கிய மாபெரும் தொழில் ஆளுகை அவர் காலத்திற்குப் பிறகு அவரது தலைமுறையினரிடம் வந்தபோது அதில் ஒருவராக தியாகராாசரின் மாப்பிள்ளை சொக்கலிங்கம் செட்டியாரும் இருந்தார். சமுதாயத்தின் நன்மைகளைக் கருத்தில் கொண்டு திட்டமிட்டுச் செயலாற்றிய கலைத்தந்தையின் நம்பிக்கைக்குரியவராக சொக்கலிங்கம் செட்டியார் உருவானார். நல்ல ஆசான் எப்படி மாணவனைக் கண்டறிந்து உலகிற்கு அறிமுகப்படுத்துவாரோ, ஒரு நல்ல தலைவன் அடுத்த தலைமுறைக்கான தலைவனை எப்படி வளர்த்து வழிநடத்திச் செல்வாரோ அதேபோல் சொக்கலிங்கம் அவர்களை உருவாக்கி விட்டுச் சென்றார் கலைத்தந்தை.

பூலாங்குறிச்சியில் வாழ்ந்த ராம.ப.ராம.மு.சுப்பிரமணியன் செட்டியார் அவர்களுக்கும் மற்றும் நெற்குப்பையைச் சேர்ந்த சிட்டாளாச்சி அவர்களுக்கும் பிறந்த தவப்புதல்வர் சொக்கலிங்கம். இவரின் தந்தையைச் சின்னசுப்பையா செட்டியார் என அனைவரும் அழைக்கும் வழக்கம் உண்டு. அவர் செல்வந்தர் குடும்பத்தில் வாழ்ந்த எளிய பண்பாளர். எடுத்த செயல் யாவிலும் அதீத சுறுசுறுப்பும் தீராத ஆர்வமும் உடையவர் சின்னசுப்பையா செட்டியார். அக்காலத்திலேயே லண்டனில் நடைபெற்ற ஒரு வழக்கில் வென்று காட்டியவர். உச்ச நீதிமன்றத்தின் இன்றைய வழக்கறிஞருக்கு இணையாக இவரின் வழக்கறியும் தன்மை இருக்கும். சிறந்த நிர்வாகத்திறன் உடையவர். எத்தனையோ வழக்குகளையும் அதைத் தீர்க்கும் நுட்பங்களையும் நன்கு அறிந்து மிகச் சிறந்த வழக்கறிஞர்களைக் கொண்டு வழக்குகளை நடத்தி வென்று காட்டி அதன் மூலம் பொருளீட்டிய அறிவார்ந்த திறன் மிக்க சட்ட நுணுக்கவாதியாக அந்தக் காலத்திலேயே சின்னசுப்பையா செட்டியார் விளங்கினார் என்பதை நாம் இன்று அறிகிறபோது அவரது ஆளுமைத்திறன் நமக்கு பெரும்வியப்பை உண்டாக்கவே செய்கிறது.

அன்றைய காலங்களில் பணி நிமித்தமாகப் பூலாங்குறிச்சி யிலிருந்து புதுக்கோட்டைக்கு ஜோடி மாட்டுவண்டிகளைக் கட்டிச் செல்வது வழக்கம். ஆனால் இவர் இரண்டு ஊர்களுக்கு இடையில் மற்றொரு ஜோடி மாட்டுவண்டிகளை நிறுத்தி வைத்துப் பயணம் செய்பவர். அவருடைய காலத்தில் பிள்ளையார்பட்டி கோவில் சிலருடைய ஆதிக்கத்தில் இருந்தது. தனது நண்பர்கள் மற்றும் சில முக்கியமானவர்களுடன் சேர்ந்து பெரும் துணிவுடன் பிள்ளையார்பட்டிக் கோவிலினை மீட்டார். அவ்வழியில் ஆரம்பிக்கப்பட்டதுதான் பி.க.ந.க. என்னும் பிள்ளையார்பட்டி நகரத்தார் ட்ரஸ்ட்.

**‘‘யாவரும் மகிழப் பாடம் சொல்வோய்**
**யாவரும் வாழ்ந்திட நல்லருள் புரிக**
**அபயம் அபயம் அபயம் கேட்டோம்**
**சபையில் வெல்லும் சமர்த்தெனக் கருள்க**

**காத்தருள் செய்வாய் கற்பக மூர்த்தி**
**காத்தருள் செய்வாய் கடவுளே எம்மை**
**எதையும் முடிக்கும் திறமெனக் கருள்க**
**முயற்சியைத் தொடரும் மனமெனக் கருள்க!''**

என்பது கற்பக விநாயகக் கவசப் பாடல்.

இன்று 'பிள்ளையார்பட்டிக் கோவில் நகரத்தார் அறநிலையம்' நூற்றாண்டு விழா கொண்டாடி பெருமை கொண்டு விளங்கிக் கொண்டிருக்கிறது. அத்தகு பெருந்தகையாளரின் புதல்வர் சொக்கலிங்கம். இவர் கலைத்தந்தையின் நம்பிக்கையைப் பெற்று தேவைப்படும் நேரத்தில் ஆலோசனைகளையும் வழங்கி நல்மதிப்புப் பெற்று வேரூன்றினார்.

வாழ்க்கையில் முழுமையாக ஈடுபட வேண்டும். வாழ்க்கையை அனுபவித்து ரசிக்க வேண்டும். வாழ்க்கையை ஆழ்ந்து உணர வேண்டும். அப்போதுதான் வாழ்க்கை என்றால் என்ன என்ற பொருள் புரிய வரும். வெறும் வறட்டுப் பேச்சில் எந்தப் பயனும் விளைந்து விடப் போவதில்லை என்பதை ஆழ்ந்து உணர்ந்தவராக விளங்கினார் சொக்கலிங்கம். அவரின் திருமகனார் நம் வள்ளியப்பா.

1929-இல் சொக்கலிங்கம் கலைத்தந்தை கருமுத்து தியாகராசரின் மகள் மீனாட்சி ஆச்சியை மணந்து இல்லற வாழ்க்கையைத் தொடங்கினார். அன்றிலிருந்து தொழிலோ குடும்பமோ இல்லத்தரசியின் யோசனையைக் கேட்டே செயல்களைச் செய்து முடிப்பார். பின்னாளில் அவர் ஆற்றிய ஆன்மீகப் பணியின் மூல காரணமாக இருந்தவர் அவர் மனைவி மீனாட்சி ஆச்சி என நினைவுகூர்வதில் அவர் தம் குடும்பம் பெருமை கொள்கிறது.

**பொன்பூத்த திருமகளுங் கலைமகளுந்**
**தினம்வளரும் புகழ்பெற் றோங்கி**
**மின்பூத்த மடமயிலா ரணிதிகழ்பூ**
**லாங்குறிச்சி மேவி வாழ்வோன்**

இன்பூத்த மொழியுடையான் எனக்கினிய
நட்பாளன் இசையின் மேலான்
தென்பூத்த தொடைமார்பன் மிக்கபெருந்
தனவணிகன் சீர்த்தி பெற்றோன்

தேன்பூத்த குழல்மடவார் மடலெழுதும்
வடிவழகன் செஞ்சாந் தீனுங்
கான்பூத்த களபமெய்யன் மறுக்காத
கொடைக்காத்தான் கருணை மிக்கான்
மீன்பூத்த கதிர்வீசும் பணியணியுஞ்
சுப்பையப்பேர் மேலோன் இன்பாய்த்
தான்பூத்த நன்மகரில் நடுவுள்ளான்
சொக்கலிங்கந் தனத னுக்கே

சீர்பூத்த தெற்கூரான் மீனாட்சி
மில்லியற்றித் தேயம் போற்றும்
பேர்பூத்த பேரறிஞன் தியாகரா
சப்பெயரோன் பெரிய செல்வன்
நார்பூத்த போகத்தான் நல்லோர்கள்
நட்புடையான் நன்மை மிக்கான்
ஏர்பூத்த வடிவழகன் தவப்புதல்வி
மீனாட்சி யெனும்பெண் ணாளை

இந்த மங்கல வாழ்த்துப் பாடல் - சொக்கலிங்கனார் மீனாட்சி ஆச்சி திருமணத்தில் கல்லல் திரு.குக.மணிவாசக சரணாலய சுவாமிகளால் இயற்றப்பட்டு பாடப்பட்டது. இப்படி வாழ்த்துப் பாடல்களைப் பாடுபவர்கள் செட்டிநாட்டிலிருந்திருக்கிறார்கள் என்பதை நினைக்கிறபோது பெருமிதமாய் இருக்கிறது. இதைக் காட்டிலும் இதில் என்ன சிறப்பு என்றால், இப்படிப்பட்ட ஒளி பொங்கக் கூடிய பாடல்களை இயற்றக்கூடியவர்களை அறிந்து வைத்திருக்கக்கூடிய கலை

வல்லமையாளர்களும் செட்டிநாட்டில் இருந்து இருக்கிறார்கள் என்பது தான். இத்தகைய பொன்னழகு மிளிரக்கூடிய பாடலை வள்ளியப்பா இத்தனை ஆண்டுகளாக பத்திரப்படுத்தி வைத்திருக்கிறார் என்பதற்காகவே அவரைப் பாராட்டலாம்.

கலைத் தந்தைக்கு மாப்பிள்ளையாக அமைந்த திரு.சொக்கலிங்கம் செட்டியார் உயர் குலப் பண்பும் சுற்றத்தாரிடம் அன்பும் கொண்டவர். சுறுசுறுப்பு, கற்றலில் ஆர்வம், கல்வியின் மேன்மை என அனைத்தையுமே தனதாக்கிக் கொண்டவர். சிறுவயதிலேயே வணிகம் மற்றும் தொழில் நுட்பம் சார்ந்தவைகளில் அதிக ஈடுபாடு கொண்டு, அதனை முறைப்படி கற்றுத் தேர்ந்தவர். அன்பின் திருவுருவானவர். ஆன்மீகம் அருளும் மெய்ஞானம் உணர்ந்தவர்.

திருமணத்திற்குப் பிறகும் அவர் கற்றல் தொடர்ந்தது. 1931-இல் அமெரிக்கன் கல்லூரியில் BA., முடித்தார். தான் கல்வி கற்கும் காலத்திலேயே ஜவுளித்துறை நிறுவனத்தை நடத்துவதில் ஆர்வமாய் இருந்தார். வேலைக்காக விண்ணப்பிப்பதை விட தொழில்நுட்பங்களைப் படிக்கவே அவர் பல நிறுவனங்களுக்கு ஆர்வத்துடன் பயணித்தார். முதல் படியாக தியாகராஜர் நடத்தி வந்த கோவை சரோஜா மில்லில் ஜவுளித்துறை பற்றி முழுவதும் அறியும் பொருட்டு நேரடிப் பயிற்சியில் இறங்கினார்.

அறிவியல், ஆன்மீகம் இவை இரண்டும் ஒன்றுதான் எனக் கற்று உணர்ந்த மெய்ஞானி திரு. சொக்கலிங்கம். எவ்வளவோ அறிவியல் முன்னேற்றத்தினை அவர் கண்ணுறக் கண்டபோதும் தொழில்நுட்பத்தின் மறுகரையை அடைந்தபோதும் இயற்கையோடு இணைந்து வாழும் எளிமையான வாழ்க்கையை வாழ்ந்து காட்டினார்.

‘ஒருமுறை உயர்வான வாழ்க்கை வாழ்வதற்கான ரகசியம் என்ன?’ என்று வள்ளியப்பா தந்தையிடம் கேட்டபோது, ‘அது உயர்வான எண்ணங்களைச் சிந்திப்பதில் உள்ளது வள்ளியப்பா’ என பளிச்சென பதில் தந்தாராம் சொக்கலிங்கம்.

மனிதனை உயிரோட்டமாகவும் உணர்வு நிறைந்தவனாகவும் வைத்துக் கொள்வது இயற்கைக்கு மட்டுமே சாத்தியம் என்ற வாழ்வியல் நுட்பம் அறிந்தவர். இயற்கை முறை வேளாண்மை பற்றியும் கால்நடைகளின் பராமரிப்புக் குறித்தும் தனிக்கவனம் எடுத்துக் கொள்பவர் சொக்கலிங்கம். இவர் தனது சொந்த வீட்டில் பசுக்களைப் பராமரித்து வளர்த்து வந்தார். அவைகளுக்கு ஊட்டச்சத்து நிறைந்த உணவினை ஆராய்ந்து வழங்குவதைக் குடும்பத்தாரும் சுற்றத்தாரும் வியந்து வியந்து சொல்லுவார்கள். அதோடு மட்டுமல்லாமல் அவர் மாடுகளைச் சுழி பார்த்து வாங்கும் வித்தையையும் நன்கு அறிந்தவராக விளங்கினார். பசுக்களை மட்டுமல்லாமல் காளைமாடுகள், மான்கள், குதிரைகள், நாய்களையும் ஆர்வத்தோடு வளர்த்து வந்தார்.

1870களில் தென்னிந்திய விவசாயிகளுக்கு வேளாண்மை குறித்து எத்தகைய பயிற்சி அளிக்க வேண்டும் என்று அகஸ்டஸ் தலைமையில் ஒரு குழு அமைக்கப்பட்டது. அந்தக் குழுவின் அறிக்கை என்ன சொன்னது தெரியுமா? இவர்களுக்கு எதையும் புதிதாக சொல்லித் தர தேவையில்லை. அவர்களிடமிருந்து நாம்தான் கற்றுக் கொள்ள வேண்டும் போலிருக்கிறது என்றது. அந்த அளவிற்கு பாரம்பரிய அறிவு பெற்றவர்கள் நம் முன்னோர்கள். அந்த முன்னோர் சொன்ன வழிமுறைகளைப் பாடப்புத்தகம் இல்லாமலேயே பயின்று கொண்டவர் ஐயா சொக்கலிங்கம்.

மனிதன் எதனை விரும்பி முழு மனதுடன் திறம்படச் செயல் படுகின்றானோ அவனுக்குப் பிரபஞ்சம் தன்னை வளைத்து வாழ்வில் வெற்றி பெற வழி கொடுக்கும் என்பது இயற்கையின் விதிப்பாடு. அதன்வழி பன்முகத்திறன் கொண்ட ஒரு முழு மனிதனாய் இருந்த சொக்கலிங்கம் தொழில் பேரரசைப் பாங்குடன் செயல்படுத்தத் தொடங்கினார். கலைத் தந்தை 1936-ஆம் ஆண்டு சேலத்தில் இயங்கி வந்த ஸ்ரீ ராஜேந்திரா மில்லின் நிர்வாகத்தைச் சொக்கலிங்கத்திடம் ஒப்படைக்கும் போது அவருக்கு வயது 26. அந்த இளமைக்கே உரிய உள்ளுயிர்ப்புடன் கடின உழைப்பையும் காட்டி அவர் பணிபுரிந்த விதம் வணிக உலகில் நீங்காத இடத்தினை அவருக்குப் பெற்றுத் தந்தது.

ஸ்ரீ ராஜேந்திரா மில்லைத் தொடர்ந்து தமிழகத்திலும் கர்நாடகத்திலும் பல பஞ்சாலைகளைத் தொடங்கினார். ஏராளமான புதிய தொழில் நுட்பங்களை அவர் பல பஞ்சாலைகளில் அறிமுகம் செய்தார். தொழிலாளர் களுடன் நல்லுறவு கொண்டிருந்தார். விடுப்பு எடுக்காது வேலைக்கு வருபவர்களுக்கு பாராட்டும் பத்திரமும் பரிசுகளும் வழங்கி அவர்களை ஊக்கப்படுத்தினார். மேற்கொண்ட தொழிலில் தன் ஈடுபாடு காரணமாகப் பல வெற்றிகளை அடைந்தார். தமிழகத் தொழில் வரலாற்றில் உச்சம் தொட்டார்.

பஞ்சாலையில் தரப்பரிசோதனை என்பது முக்கியத் தகுதியாகும். ஸ்ரீ ராஜேந்திரா மில்லை ராஜாங்கமாக மாற்ற பெரும் முயற்சி மேற்கொண்டு, தீவிரமாய் செயல்படத் தொடங்கினார். ஆலையை நவீனமயமாக்க தொழில் திறன்கள் பலவற்றைக் கற்று திட்டங்கள் வகுத்து அதிக உற்பத்திக்கு வழிவகை செய்தார். திறமையானவர்களை இனம் கண்டு தன்னோடு இணைத்துக்கொண்டு கடின உழைப்பை மூலதனமாக வைத்து ஆலை அரசரின் வாரிசாய் உயர்ந்து நின்றார். அதோடு நின்று விடவில்லை அவரது வெற்றிப் பயணம். அடுத்தடுத்துத் துறைகளில் புதுமைகள் புகுத்தித் தன்னை இன்னும் முழு வேகத்துடன் வளர்த்துக் கொண்டது அந்த ஆணிவேர்.

அதன்பின் சேலத்தின் பெருமைமிகு அடையாளமாகத் திகழும் தியாகராஜர் பல்தொழில்நுட்பக் கல்லூரி 1958இல் தொடங்கப்பட்டது. சொக்கலிங்கம் தான் பெற்ற செறிவான அனுபவங்களையும் கல்வி மற்றும் தொழில்நுட்பம் சார்ந்த நுணுக்கங்களையும் தன் குழுமங்கள் மற்றும் கல்லூரிகளில் நடைமுறைப்படுத்தி பல வெற்றிகள் கண்டார்.

இவற்றோடு ஆயிரக்கணக்கான ஏக்கர் எஸ்டேட்டுகளை உருவாக்கிப் புதிய வகை காபி ரகங்களைப் பரிசோதித்து அறிமுகம் செய்ததோடு அவற்றை அங்கு பயிரிடவும் செய்தார். இவ்வாறாக இயற்கை வேளாண்மை, காபி எஸ்டேட், ஜவுளி ஆலைத்தொழில், வணிகம் எனப் பணி புரிந்து தன் வேர்களை உறுதியாக்கினார். சமுதாய முன்னேற்றத்தில் அக்கறை கொண்டு எழுபிறப்பும் தொடரக்கூடிய பெரும்பணியாம் கல்வித் துறையிலும் வேரூன்றினார்.

திரு. வள்ளியப்பாவிடம் உங்கள் தந்தையோடு உங்களுக்கு எத்தனையோ சிறப்பான அனுபவங்கள் கிடைத்திருக்கும். அதில் சிறப்பான மறக்க முடியாத அனுபவம் என்ன என்று கேட்டபோது வள்ளியப்பா சொன்னார், ‘நானும் எனது அப்பாவும் வெள்ளைக்காரர்களுக்கு சொந்தமாய் இருந்த சிக்மகளூரில் உள்ள ஆயிரம் ஏக்கர் எஸ்டேட்டை கண்ணால் பார்க்காமலேயே வாங்குவதற்கு ஒப்பந்தம் செய்ததுதான்’ என்று கூறினார். வெள்ளைக்கார முதலாளிகளும், தரகராக செயல்பட்ட வெள்ளைக்காரர்களும் மதுவகைகளை உறிஞ்சிக் கொண்டே பேச, நானும் எனது அப்பாவும் ஃபாண்டா, லிம்காவை சாப்பிட்டுக் கொண்டே ஆயிரம் ஏக்கர் எஸ்டேட்டை வாங்குவதற்கான ஒப்பந்தத்தில் நடுராத்திரியில் கையெழுத்துச் செய்ததை மறக்கவே முடியாது என்கிறார். ஒரு இடத்தை வாங்க வேண்டும் என்று முடிவு செய்து அந்த இடத்தைப் பார்க்கப் போகும்போது அந்த இடத்திற்கு மேலே கருடன் வட்டமிட்டுப் பறந்தால் என்ன விலை கொடுத்தும் அந்த இடத்தை என் அப்பா வாங்கி விடுவார். அப்படி ஒரு நம்பிக்கை அவருக்கு இருந்தது என்கிறார் வள்ளியப்பா.

எல்லாவற்றுக்கும் அருள் பாலித்த இறைவனுக்கான ஆன்மீகப் பணியிலும் தனக்கென தனி முத்திரை பதித்தவர் சொக்கலிங்கம். ஐயா அவர்களின் பக்தித் திறத்தை நம் வள்ளியப்பாவின் விழி வழி தரிசிப்பது ஒரு மறக்க முடியாத ஆன்மிகப் பரவச அனுபவமாகவே இருக்கிறது.

பொதுவாழ்வில் அயராது தன்னை ஈடுபடுத்தி வந்த சொக்கலிங்கம் அவர்களுக்குப் பணிச்சுமை காரணமாக நாட்பட்ட முதுகு வலி ஏற்பட்டது. மருத்துவ சிகிச்சை பெற மருத்துவரைச் சந்தித்து அறிவுரை பெற்றார். மருத்துவரும் பெல்ட் அணிந்து கொள்ளும்படி அறிவுறுத்தி யிருந்தார். அதை அணிந்து கொள்வது தனக்கு சுகக்குறைவாகப் பட்டதால் தவிர்த்து விட்டார் சொக்கலிங்கம். வலி தொடரவே மீண்டும் மருத்துவரைச் சந்திக்கச் சென்றார்.

சொக்கலிங்கம் மருத்துவம் பார்த்துக் கொண்ட மருத்துவர் மிகவும் புகழ்பெற்றவர். தன் சிகிச்சை முறைகளைச் சரியாகப் பின்பற்றுபவர்களை நோயிலிருந்து விடுபடச் செய்யும் நுட்பம் அறிந்தவர். அதே சமயத்தில்

தன் மருத்துவ சிகிச்சை முறைகளைச் சரியாகப் பின்பற்றாதவர்கள் மீது உரிமை கொண்டு அவர்களின் நலன் காரணமாகச் சற்று கோபமாகவே கடிந்து கொள்வது அவரது வழக்கம். இப்படி இருக்க சொக்கலிங்கம் அவர்களும் மருத்துவரின் அறிவுரைப்படி பெல்ட் வாங்கி இருந்தாலும் அதை அணிந்து கொள்ளாமல் இருந்தார்.

சொக்கலிங்கம் மருத்துவரைச் சந்தித்தபோது அவர் பெல்ட் அணிந்து கொள்ளாத விவரம் மருத்துவருக்குத் தெரிய வந்தது. சொக்கலிங்கம் அவர்களின் நலனில் பெரும் அக்கறை கொண்ட மருத்துவர் கடிந்து கொண்டார். ‘அறிவுறுத்தலைப் புறக்கணித்தால் எப்படி மருத்துவம் பார்ப்பது என்று கேட்டார். அதன் பயன்பாட்டு முறை குறித்து என் அறிவுரையை ஏன் புறக்கணிக்கிறீர்கள். பின் எப்படி வலி குறையும்’ என கோபமாகக் கேட்டார். அப்போதுதான் மனம் திறந்தார் சொக்கலிங்கம்.

‘தான் சபரிமலைக்குத் தொடர்ந்து செல்லும் வழக்கத்தினை உடையவன். மலைக்குச் செல்லும் நாள் நெருங்கியது. முதுகு வலியின் தீவிரம் என்னை வாட்டியது. மேலும் அது தன் பயணத்திற்கு இடையூறுகளை ஏற்படுத்தி விடுமோ என்ற அச்சத்தில் அணிவதை நிறுத்திவிட்டேன் மன்னிக்கவும்’ என்றார். தான் மலைக்குச் செல்லும் வழக்கம் தடைப்பட்டு விடக்கூடாது என்ற எண்ணத்தினையும் அதனால் உண்டான பதட்டத்தையும் மருத்துவருக்குப் பதிய வைத்த சொக்கலிங்கத்தின் பக்தித் திறத்தைக் கண்ணுற்றார் மருத்துவர். தனக்கான வேலையைச் செய்வதற்கே அற்ப காரணங்களைச் சொல்லி சோம்பித் திரியும் இவ்வுலகில் இறை தரிசனத்திற்கு இடையூறு ஏற்படக்கூடாது என்ற அச்சத்தில் தவறு செய்திருந்தாலும் அவரது பக்தித் திறம் கண்டு பூரித்துப் போனார்.

சொக்கலிங்கம் அவர்களின் உள்ளம் உணர்ந்த மருத்துவர் திருவுளம் மலர்ந்து ‘இறையருள் இருந்தால் சபரிமலை தரிசனம் சேர்ந்தே பெறுவோம்’ என்றார். பின் சிகிச்சை அளித்து வழி அனுப்பி வைத்தார். வலியில் சிக்காமலிருக்க சிகிச்சை அளித்த மருத்துவருக்கு வழிதோறும் மனதார நன்றி சொல்லியபடியே சொக்கலிங்கம் சபரிமலைப் பயணத்தைத் தொடர்ந்தார்.

எத்தனை இடர்கள் நேரிட்டப் போதிலும் வலியால் மெய் துடிதுடித்த போதிலும் இறை தரிசனம் கண்டு நெஞ்சுருகி நின்ற அந்த நேரத்தில், அப்போது அவரது தோளைத் தொட்டன ஆறுதல் கரங்கள். தொடுதலின் அரவணைப்பையும் அனுசரணையையும் உணர்ந்த சொக்கலிங்கம் நெக்குருகிய உணர்வுடன் திரும்பிப் பார்த்தார். தன் முன்னே மனித உருவில் ஐயப்பனைக் கண்டார். சபரிநாதனுக்குரிய ஆகம உடையில் கருப்புச் சட்டை அணிந்து திருநீறு பூசி உடலெங்கும் ஒளி ஓங்கிப் பிரகாசிக்கும் முகத்தினை உற்று நோக்கினார். அந்த உருவம் தனக்கு நோய் தீர்த்த மருத்துவருடையது என்பதை உணர்ந்து, நிகழ்ந்ததை எண்ணி எண்ணி உயிருருகிப் போனார். அன்று மருத்துவர் உரைத்ததை அசரீரி வாக்கெனவும் கொண்டார் சொக்கலிங்கம்.

மருத்துவரைக் கண்ட ஒரு சில விநாடிகள் கழித்து, மீண்டும் அந்த இடத்தில் மருத்துவரைக் காண சொக்கலிங்கம் முயன்றும் மருத்துவரைக் காண இயலாது போகவே, தான் மருத்துவர் வடிவில் கண்டதும், தன் தோளைத் தொட்டதும், அரவணைத்துக் கொண்டதும் சுவாமி ஐயப்பன் என்றே எண்ணத் தொடங்கினார். தன் தந்தையின் இந்த ஆன்மீக அனுபவத்தை, தன் ஆன்மீகப் பயணத்தில் தனக்கான பாடமாகக் கொண்டு இன்று வாழ்ந்து வருபவர் வள்ளியப்பா.

ஆப்பிள் நிறுவனர் மற்றும் கணினி உலகப் பெருந்தலைவரான ஸ்டீவ் ஜாப்ஸ், தன்னுடைய இளம் வயதில் இந்தியா வந்தார். அப்போதுதான் மிகப்பெரிய அகத்தூண்டுதல் பெற்றார் என ஆப்பிள் தலைமைச் செயல் அதிகாரி டிம்.குக் அப்போது கூறியது இந்தியர்களை நெகிழ வைத்தது. அதுபோல வள்ளியப்பா தன் தந்தையின் ஆன்மீக அனுபவத்தை உணர்ந்து உணர்ந்து சொல்லுவது உண்மையிலேயே நம்மை இப்போது நெகிழ வைக்கவே செய்கிறது.

‘மனம் அன்பு வயமானால், உலகம் ஆனந்தமயமாகும். நம்பிக்கை இழப்பு என்பது உங்கள் அடையாளத்தை இழப்பது. நீங்கள் வெற்றிகரமான மனிதராக இருக்க வேண்டும் என்றால் உங்களுடைய வெற்றி எது என்பதைத் தீர்மானம் செய்யுங்கள். வெற்றி என்ற ஒன்றே இல்லை

என்று சொல்கிறவன் வாழ்க்கை மிகச்சாதாரணமாகவே இருக்கும்.' என்று தன்னைச் சுற்றி இருப்பவர்களிடம் எப்போதும் சொல்லி சமூக விழிப்புணர்வை உண்டாக்கி, சேலத்தில் புதியதொரு சமூகக் கட்டுமானத்தையே உருவாக்கிய சொக்கலிங்கனாரை கலைத்தந்தையின் வாரிசாகவே இனம் கண்டனர் சுற்றத்தாரும் அவரின் திறன் கண்ட வணிக உலகத்தாரும். மேலும் சொக்கலிங்கத்தைச் ''சேலத்துச் செம்மல்'' என அழைத்துப் பெருமையோடு கொண்டாடினார்கள். தான், தனது என்று பாராது அயராது உழைத்த சொக்கலிங்கம் மீது அவரது நகரத்தார் சமூகமும் சுற்றமும் நீங்காத மரியாதையும் மதிப்பும் கொண்டிருந்தனர். அதற்குக் காரணம் தொழில் துறை மட்டுமல்லாமல் சமுதாய வளர்ச்சியிலும் அவர் கொண்ட அக்கறையே.

மேன்மக்களுக்கு இயல்பாகவே அமைந்திருந்த குணம் அது. நகரத்தார் சங்கம் நடத்தும் இலவச திருமணங்களுக்குப் பெரும் நிதி உதவிகளை வாரி வழங்கிய வள்ளல் சொக்கலிங்கம். நகரத்தார் சமூகத்தில் பெயருக்கு பதிலாகப் பெயரின் முதல் எழுத்தை மட்டும் சுட்டி அழைப்பது மரியாதைக்குரிய பண்பாக இருந்தது. அந்த வகையில் சொக்கலிங்கம் என்பதன் முதல் எழுத்தாக 'சொ'வை 'னா' விகுதி சேர்த்து சோனா (சொனா) என்றே அழைத்தனர். அன்றிலிருந்து அவரது உறவினர்களும் நண்பர்களும் தொழில் முறை சார்ந்தவர்களும் 'சோனா' என்றே அழைக்கத் தொடங்கினர். அவரது தொழில் சார்ந்த அடையாளமாகச் சோனா உருவாகியது.

வேரின் வலிமை அறிந்த நாம், அதன் தொடர்ச்சியாய்ப் பல ஆயிரம் பறவைகள் தங்குவதற்கும், பல ஆயிரம் பேர் நிழல் பெறவும் காரணமாய் அமைந்த விருட்சத்தின் வரலாறு அறிந்தால் இன்னும் இன்னும் மகிழ்வோம் தானே!



# விருட்சத்தின் தொடக்கம்

அன்றாட வாழ்வில் தான் பெற்ற, கற்ற அனுபவங்களைக் கொண்டு வாழ்வைப் பயனுறும் அறவழியில் அமைத்துக் கொள்பவர் அனைவருமே இறையருள் பெற்றவர்கள் தான்.

அப்படி இறையருள் பெற்றவர்களைத்தான் 'மாமனிதர்' என்கிறோம். அத்தகு மாமனிதர்களின் வாழ்வு சுயநலமற்றது. தன்னலம் பாராது பிறர்நலம் போற்றும் இயல்புக்குரியது. எப்படி ஒரு விருட்சம் தன்னை நாடி வருபவர்க்கு நிழல் தந்து புகலிடம் கொடுக்கிறதோ அதுபோல தன்னைத் தேடி வருபவருக்கு நல்லது செய்யும் இயல்புடைய ஓர் உன்னத மனிதராம் வள்ளியப்பா உருவான வரலாற்றைப் படிப்பது ஓவியமானது.

வள்ளியப்பாவைப் பற்றிப் பிறர் சொல்லிய நிகழ்வுகள் பலாவின் சுவை என்றால், இவர் தரும்

குறிப்புகள் தேனில் ஊறிய பலா! ‘‘என் கடன் பணி செய்து கிடப்பதே’’ என ஆங்காங்கே அவர் தரும் ‘தன் வாழ்க்கைச் செய்திகள்’ படிப்போருக்கு ஆற்றல் நல்கும் அறிவுக்குறிப்புகள்.

சொக்கலிங்கம் செட்டியார் மீனாட்சி ஆச்சி தம்பதியருக்கு ஆறாவது பிள்ளையாக 19.7.1943இல் பிறந்தவர் வள்ளியப்பா. ‘பதினாறு செல்வங்களும் பெற்று வாழுங்கள்’ என்ற வாழ்த்து இத்தம்பதியினருக்கு உண்மையாகிப் போனது. தன் மகன் பதினாறு செல்வங்களையும் பெற்று பெருவாழ்வு வாழ்வதை வள்ளியப்பா வளர வளர அவர்கள் கண்ணுற்று மகிழ்ந்து கடவுளுக்கு நன்றி சொல்லினர்.

வள்ளியப்பா தன் ஆரம்பக் கல்வியைச் சேலத்தில் பாரதி வித்யாலயாவிலும் உயர்கல்வியைச் சிறுமலர் மேல்நிலைப் பள்ளியிலும் படித்தார். சிறு வயது முதலே எழில் பொங்கும் தோற்றமும் ஒப்பற்ற புன்னகையும் கொண்டவர். வீட்டில் இளையவர் என்பதால் கவனிப்பும் அக்கறையும் சற்று அதிகம். அதற்கேற்ற சுறுசுறுப்பும் குறும்புத்தனமும் உடையவர் வள்ளியப்பா. இதை அவர் நினைவு கூரும் வேளை தன் பால்யத்திற்கே திரும்பி விடுகிறார்.

தன் மீது தனது ஆயா கொண்டிருந்த அன்பை மகிழ்ச்சியோடு நினைவுகூர்கிறார் வள்ளியப்பா.

> **‘‘குழந்தைப் பருவத்தில் நான் ரொம்ப அழகா இருந்ததா அம்மா சொல்லுவாங்க. ரொம்ப சுட்டித் தனமும் சுறுசுறுப்பும் அதிகமா இருந்ததால, எந்த நேரமும் துரு துருனு இருப்பனாம். அதனால எங்க ஆயா என் மேல யார் கண்களும் பட்டு விடக்கூடாது’’ என சொல்லிப் பல முறை சுற்றிப் போட்டுக்கிட்டே திருஷ்டி கழிப்பாங்கனு அம்மா அடிக்கடி சொல்லிக் கேட்டிருக்கேன், எனக்கும் கூட கொஞ்சம் நினைவிருக்கு. ஆயாவுக்கு என் மேல் அவ்வளவு பிரியம்’’**

குடும்பத்தின் செல்லப் பிள்ளையாக வளர்க்கப்பட்டவர். இதனாலே வீட்டை விட்டுப் பெரும்பாலும் வெளியே விடாமல் தான் வளர்க்கப்பட்டதாக அவரிடையேயான உரையாடலின் போது அறிந்து கொள்ள முடிந்தது.

அன்புடன் கூடிய பண்பான வார்த்தைகளைப் பேசுபவர் அவர். ''அழகிய முகங்களை நாம் பார்வையில் தெரிந்து கொள்கிறோம், அழகிய அகங்களை நாம் பழகும் போது புரிந்து கொள்கிறோம்'' அல்லவா, அதுபோல அவருடன் இருக்கையில் உற்சாகம் நம்மைத் தொற்றிக் கொள்ளும்.

பள்ளிப் படிப்பைச் சேலத்தில் முடித்த வள்ளியப்பா கல்லூரி படிப்பிற்காகச் சென்னை சென்றார். 'படியெல்லாம் பச்சைத் தமிழ் மணக்கும் பச்சையப்பன் கல்லூரி'யில் சேர்ந்தார். 1970-க்கு முன்பெல்லாம் பச்சையப்பன் கல்லூரியில் பலமுறை மாணவர்களின் உள்ளிருப்புப் போராட்டம், வெளிநடப்பு போன்றவை அடிக்கடி நடந்து கொண்டே இருக்கும் காலகட்டம் அது. இத்தகு கடின சூழலில் தான் வள்ளியப்பாவின் கல்லூரிக் காலம் தொடங்கியது.

'தெளிவான குறிக்கோளே வெற்றியின் முதல் ஆரம்பம்'. அதன்படி வள்ளியப்பாவின் கல்லூரிக் காலம் தொடங்கிற்று. வாய்ப்பு வருவதற்கு முன் நாம் அதற்குத் தயாராக இருப்பதே வெற்றியின் ரகசியம் என்பார் பெஞ்சமின். தன்னுள் இருக்கும் ஆற்றலின் முழு வீச்சினையும் கண்டெடுத்து, வள்ளியப்பா அனைத்திற்கும் தயாரானது கல்லூரிக் காலத்தில் தான். எந்தத் துறையிலும் ஆக்கப்பூர்வமாக இருக்க தன்னைத் தயார்ப்படுத்தி வைத்திருந்தார். உலக விசயங்களை அறிந்து கொள்வதை விட சிறந்தது ஒரு மனிதன் தன்னைப் பற்றி முழுவதுமாக அறிந்து கொள்வது. அவ்வகையில் வள்ளியப்பா ''தன்னை அறிதல்'' என்பதில் முழுவீச்சைச் செலுத்தி மனநிறைவு பெற்றிருந்தார்.

தனி மனிதனுக்கென அமைய வேண்டிய அனைத்து நற்பண்புகளும் இயல்பாகவே வள்ளியப்பாவிடம் அமைந்திருந்தது. சிறு வயது முதலே பின்பற்றி வந்த வாழ்வியல் ஒழுக்கங்கள் அவரை மென்மேலும் பக்குவப்படுத்தின. தான் உணர்ந்ததைப் பிறருக்கும் உணர்த்தும் முயற்சியை வள்ளியப்பா தொடங்கினார். தான் கற்ற வாழ்வியல் அனுபவம் கொண்டு வள்ளியப்பா என்ற அந்த விருட்சம் வலுப்பெற தொடங்கியது. தான் பயின்ற பச்சையப்பா கல்லூரியை அதற்கான களமாக்கினார் வள்ளியப்பா.

கல்லூரியில், மாணவர் சங்கத்தில், பல்வேறு செயல்பாடுகள் நடத்தப்பட்டு வந்தன. சங்கங்கள் இருந்தும் அதற்கான செயல்பாடுகளில் நிறைவின்மை காரணமாகத் தொடர்ந்து சிக்கல்கள் தோன்றிய வண்ணம் இருந்தன. மகத்தான தலைமை முகிழ்க்க வேண்டும் என்பதற்கான தொடக்கமாகக் கூட அது இருந்திருக்கலாம்! ஏனெனில் தலைமை சரியெனில் அனைத்தும் சரியே. அடிமைப்படுத்துவதும் அவமானப் படுத்துவதும் தான் தலைமை என்ற சூழல் இருந்தால் அமைதி இருக்காது. அதிகாரம் கொண்டு உரிமைகள் காக்கப்பட வேண்டிய காலத்தில் மறுக்கப்பட்டால் பிளவுகளே தோன்றும். அதை நன்கு உணர்ந்தவர் வள்ளியப்பா. அன்பு கொண்டு செலுத்தப்படும் அதிகாரம் வெற்றியை ஈட்டித் தரும் என்பதை நிரூபித்துக் காட்டினார். தன் கல்லூரிக் காலத்தில் அவர்தம் பண்பை வெளிப்படுத்துவதற்கு வாய்ப்புகள் தேடி வந்தன. கல்லூரி மாணவர் மன்றத் தலைவராக, பொறுப்புகளை வகிக்கத் தேர்ந்தெடுக்கப்பட்டார் வள்ளியப்பா.

தமிழ் மீது வள்ளியப்பா கொண்ட பற்றின் பின்புலம் நாம் அறியத்தான் வேண்டும். வள்ளியப்பா பள்ளி விடுமுறை நாட்களில் ஆயா வீட்டு அய்யா தியாகராசருடன் குற்றாலம் செல்லும் வழக்கத்தினை உடையவராய் இருந்தார். அப்போது எழுத்தாளர்கள், கவிஞர்கள் என பன்முகம் கொண்டோரைத் தன் அய்யா சந்திக்கும்போதெல்லாம் தன்னுள் இருந்த தமிழ் ஆர்வத்தைப் பெருக்கிக் கொண்டார் வள்ளியப்பா.

‘கற்றலிற் கேட்டலே நன்று’ என்பது இளந்தளிர் பருவத்திலேயே தொடங்கிற்று. தமிழ் அறிஞர்கள், ஆர்வலர்கள், கலைஞர்கள் என எண்ணற்றோர் வந்து செல்லும் தனிச்சிறப்பு வாய்ந்த இடமாக அவரது குடும்பப் பின்னணி இருந்ததால் அவர் கண்ணுற்ற சான்றோர் ஏராளம்.

திரு.ஏ.எல் பிள்ளை, மு.வ, கி.ஆ.பெ, கவியரசு கண்ணதாசன், மொழி ஞாயிறு தேவநேயப் பாவாணர், அ.கி.பரந்தாமனார், வ.சுப.மாணிக்கனார், நாவலர் நெடுஞ்செழியன் போன்ற தமிழறிஞர் களோடும் வீணை வித்துவான்கள், இசைக் கலைஞர்கள், தேவார, திருவாசக ஓதுவார்களுடனும் கலைத்தந்தைக்கு அறிமுகம் இருந்தது.

அம்முன்னோர்வழி, அந்த ஆன்றோர்களின் அறிமுகம் கிடைக்கப் பெற்றார் வள்ளியப்பா. மொழி ஆளுமையும் துறை சார்ந்த அறிவும் வள்ளியப்பாவின் தமிழ் ஆர்வத்தை மேலும் செப்பனிட்டது. ‘கற்ற வித்தையை உற்ற நேரத்தில் பயன்படுத்தி வெற்றிக் காண்பவரே உயர்ந்த மனிதர்’. அதன்படி, தமிழ் உலகில் தனக்கான பயணத்திற்கு முதல் அடி பதித்தார் வள்ளியப்ப மாமணி.

தான் பச்சையப்பன் கல்லூரி மாணவர் தலைவராக இருந்தபோது, கல்லூரி நிகழ்வுகளுக்குச் சிறப்பு விருந்தினர்களை ஏற்பாடு செய்வது, அவர்களை அழைத்து வருவது, வரவேற்புரை நன்றியுரை பேசுவது என தயக்கமின்றித் தனது தனித் திறன்களை வெளிக்காட்டினார். ஒரு சமயம் பச்சையப்பன் கல்லூரியில் நடைபெறும் நிகழ்ச்சிக்குப் பேரறிஞர் அண்ணா வருகை புரிந்திருந்தார். அப்போது அண்ணா வந்து போகிற இடமெல்லாம் பெரும் கூட்டம் நிரம்பி வழிந்தது. அதனால் கல்லூரி வளாகத்தில் பாதுகாப்பை இன்னும் பலப்படுத்த வேண்டி இருந்தது. இந்த இக்கட்டான சூழ்நிலையில் வள்ளியப்பா நிலைமையைக் கட்டுக்குள் கொண்டு வர வேண்டும். அதே சமயம் நிகழ்வும் இடையூறுகள் இன்றிச் சிறப்புடன் நடைபெற வேண்டும் என கருத்தைக் கொண்டு அதற்கான சரியான திட்டமிடல்களைச் செய்தார். அந்நிகழ்வை ஒரு அறிவுநிகழ்வாக அதி ஆற்றலோடு முடித்துக் காட்டினார்.

அறிஞர் அண்ணாவைக் கல்லூரியின் பின்புற வாசல் வழியாகத் தருவித்து நெரிசலால் ஏற்படும் சிக்கலைத் தவிர்த்தார். அப்போது அறிஞர் அண்ணா அவர்கள் 'I reached this hall stage through the back door, reminding me of the way I went to the Rajya Sabha' என அவருக்கே உண்டான நயத்துடன் உதிர்த்த வரிகள் காலம் பல கடந்தும் இன்றும் வள்ளியப்பாவின் மனதில் பசுமரத்தாணிப்போல் பதிந்துள்ளது. வள்ளியப்பாவின் இந்தத் தலைமைப் பண்பைக் கல்லூரியில் இருக்கும் அனைவரும் வியந்து பாராட்டினர். இந்தப் பக்குவமும் மன உறுதியும் எவருக்கும் எளிதில் வந்து விடாது. ஆனால் இந்தப் பணியைச் சிறப்பாக செய்து முடித்து மாணவர் சமூகத்தின் மத்தியில் பெரும் பாராட்டைப் பெற்று மேலும் வலுச் சேர்த்துக்கொண்டது நம் விருட்சம்.

நகரத்தார் மாணவர் சங்கத் தலைவராகவும் வள்ளியப்பா செயல்பட்டிருக்கிறார். 28.11.1963ஆம் தேதி சென்னை நகரத்தார் மாணவர் சங்கத்தில் கலைத்தந்தை கருமுத்து தியாகராாசர் கலந்து கொண்டு தலைமை உரை ஆற்றியபோது, இப்படிச் சொன்னார்.

'முன் இருமுறை உங்கள் ஆணையை வருத்தத்தோடு மீறினேன். இந்த ஆண்டு என் பேரனின் கட்டளையை கடக்க இயலாது அஞ்சி ஏற்றுள்ளேன்'.

இந்த அழகிய நிகழ்வைச் சொல்லுகிறபோது உண்மையிலேயே வள்ளியப்பா உள்ளம் பூரித்துப் போகிறார். இப்படி ஒரு மகிழ்ச்சி கிடைப்பது என்பது நற்பேறு தானே!

ஒருமுறை நகரத்தார் மாணவர் சங்கத்திற்கென நன்கொடை திரட்ட உறுப்பினர்கள் உள்ளிட்ட பலரோடு கலந்து பேசி முடிவெடுக்கப் பட்டது. அவரவர் ஆற்றலுக்கேற்ப சமூகப்பெரியவர்களிடம் குறிப்பிட்ட தொகையைத் திரட்ட ஆரம்பித்தனர். அன்று வள்ளியப்பா சிந்தித்துச் செயல்பட்ட விதம் அனைவரையும் ஆச்சரியத்திற்கு உள்ளாக்கியது. ஏனெனில் 'நன்கொடை பெறுவது என்பது பணம் திரட்டுவது மட்டுமல்ல, அதன்மூலம் சங்கம் வலுப்பெறவும் நிலைபெறவும் வேண்டும். அதோடு புகழ்பெறவும் வேண்டும். நிதி கொடுக்கும் பெரியோர் எல்லோராலும் அறியப்பட்டவராக இருந்தால் சங்கத்தின் வளர்ச்சிக்கு பலம் சேர்க்கும்' என வள்ளியப்பா சிந்தித்துச் செயல்பட்டார். அப்படி அவர் தேடிச்சென்றது கவியரசு கண்ணதாசனிடம். கவிதையால் மக்கள் மனதை ஆளும் கவியரசர் திரைஇசைப்பாட்டின் புகழின் உச்சியில் இருக்கக்கூடியவர். அவரை அவ்வளவு எளிதாகச் சந்திப்பதோ அவருடன் அமர்ந்து பேசுவதோ இயலாத காரியம்.

அந்தச் செயலைத் தன்னால் செய்து காட்ட முடியும் என்றும், நகரத்தார் மாணவர் சங்கத்திற்காக அவரிடம் நிதி பெற முடியும் என தன்னம்பிக்கை கொண்டு விடாமுயற்சி கொண்டு கண்ணதாசன் அவர்களிடமிருந்து ரூபாய் 300-ஐ நிதியாகப் பெற்று அனைவரையும் அதிசயக்க வைத்தார் வள்ளியப்பா. ''கடமையைச் செய்தால் வெற்றி,

கடமைக்குச் செய்தால் தோல்வி'' என்ற பொன்வரிகளை உண்மை யாக்கியவர் வள்ளியப்பா. இப்படி எடுத்த செயலில் முழு முயற்சியும், தன்னம்பிக்கையும், எப்போதும் துவண்டு போகாத மனதிடமும்தான் இன்றும் அவரைப் பார்த்து நம்மை வியக்க வைக்கிறது.

முதல் வெற்றிக்கு எடுத்துக் கொண்ட அதே முயற்சிகளை ஒவ்வொரு முறை வெற்றியடைவதற்கும் எடுத்துக் கொள்ளப் பழகிக் கொண்டேன் என்று மிகுந்த உற்சாகத்தோடு சொல்கிறார் வள்ளியப்பா.

வள்ளியப்பா பச்சையப்பன் கல்லூரி மாணவர் சங்கத்தின் தலைவரான பிறகு கல்லூரியில் பெருமளவு போராட்டங்கள் அனைத்தும் ஒடுக்கப்பட்டு மாணவர்களின் தேவைகள் ஒவ்வொன்றாய் நிறைவு செய்யப்பட்டன. குறிப்பிட்ட காலங்களில் போராட்டம் என்பதே இல்லாத அளவிற்குக் கல்லூரி வளாகம் தலை நிமிரத் தொடங்கியது.

பச்சையப்பன் கல்லூரியில் வள்ளியப்பாவின் தலைமைப் பண்பு ஒளி பெற்றது. கல்லூரிப் பருவத்தில் இவர் பெற்ற தலைமைப் பண்பு என்னும் அனுபவம் பின்னாளில் பல நிறுவனங்களை உருவாக்குவதற்கான அடித்தளமாக அமைந்தது. சான்றோர்களிடத்துக் கிடைத்த தொடர்பு அவரை அடுத்தடுத்த வளர்ச்சி நிலைக்குக் கொண்டு சென்றது.

எவ்வளவு பெரிய நிகழ்வானாலும் சரி, ஒருபோதும் யாரிடமும் கோபத்துடன் அதிர்ந்து பேசும் தன்மையை இவரிடம் பார்க்கவே முடியாது. அன்புடனேயே பேசிப் பழக்கப்பட்டவர். எளிமை, அடக்கத்தை வாழ்வில் இன்றளவும் கடைப்பிடித்து வருகிறார். அவரது நடை, உடை, பாவனை என அனைத்திலும் தனித்துவமான நேர்த்தியைப் பார்க்க முடியும்.

சில சூழல்களில் சிக்கல்கள் வந்தாலும் மனதில் சமநிலையைப் போற்றுவதன் காரணமாக எவ்வித மனக்கலக்கமும் இன்றி முடிவெடுக்கும் ஆற்றலை இளமைப் பருவத்திலேயே பெற்றிருந்தார். மிகப்பெரும் தலைவர்கள் படித்த கல்லூரியான பச்சையப்பன் கல்லூரியின் செயல்பாடுகளில் தன்னை முழுமையாக ஈடுபடுத்திக் கொண்ட தன்மை பின்னாளில் அவர் தன்னைச் சமூகத்தில் தனித்துவம் கொண்டவராக உருவாக்கிக் கொள்வதற்கும் நிலை நிறுத்திக் கொள்வதற்கும் உறுதுணையாக இருந்தது.

நீங்கள் என்னவெல்லாம் ஆக வேண்டும் என்று நினைக்கிறீர்களோ, எவற்றையெல்லாம் அடைய வேண்டும் என்று திட்டமிடுகிறீர்களோ, எதையெல்லாம் பெற வேண்டும் என்று உழைக்கிறீர்களோ அவை அனைத்துமே அன்பிலிருந்துதான் வருகின்றன. அமைதி என்னும் பூரணத்துவத்தை அறிந்தவர்கள் எதன் பொருட்டும் அடிமையாவதில்லை என்பதற்கு நம் வள்ளியப்பாவே உயர்சான்று.



# வாழ்க்கைத் துணைநலம்

ஒவ்வொரு நல்ல உணர்வும் அன்பின் ஆற்றலோடு நம்மை இணைக்கிறது. ஏனெனில் அன்பு தான் அனைத்து நல்ல உணர்வுகளுக்குமான மூலம்.

வாழ்தலே எல்லாவற்றிலும் சிறந்தது. வாழ்க்கை என்றாலே அன்புதான். நல்ல பண்புகளுடன் வாழ்க்கைத் துணைநலம் அமைய வேண்டும் என்பதுதான் எல்லோருடைய பெரு விருப்பமும். முன்னேறத் துடிக்கும் ஒவ்வொரு இளைஞனும் தனக்கான வாழ்க்கைத் துணையைத் தேர்வு செய்வதில் தெளிவு உடையவராகவே இருப்பர்.

சிறு வயது முதலே நிகழ்வுகளைப் பகுத்தறியும் ஆற்றல் கொண்ட வள்ளியப்பா விட்டுக்கொடுத்தலும், அகந்தையற்று வாழ்தலும் தான் குடும்ப வாழ்வின் அடித்தளம் என்பதை உணர்ந்தவர். அவ்வாறே தன் துணைநலம் குறித்து முன்கூட்டியே முடிவு செய்திருந்தார்.

**மனைத்தக்க மாண்புடையள் ஆகித்தன் கொண்டான்**
**வளத்தக்காள் வாழ்க்கைத் துணை**

என்றான் வள்ளுவப்பேராசான்.

உங்கள் வாழ்க்கைத் துணையை கவனமாகத் தேர்வு செய்யுங்கள். இந்த ஒரு முடிவிலிருந்தே உங்களுக்கான 90 சதவிகித மகிழ்ச்சி அல்லது துயரம் வருகிறது என்று பெரியோர்கள் சொல்லுவார்கள்.

துணைநலம் என்பவர் தன்னையும் காத்துத் தன் குடும்பம், சுற்றத்தார் என அனைவரையும் பேணிக் காக்க வேண்டிய பெருமதிப்புடையவராக இருக்க வேண்டும் என்பதில் வள்ளியப்பா நம்பிக்கை கொண்டிருந்தார். அதுமட்டுமில்லை, நம் வாழ்க்கைத் துணைநலத்தை எந்த அளவுக்குப் பாராட்டுகிறோமோ, கொண்டாடுகிறமோ அந்த அளவுக்கு வாழ்க்கையில் கொண்டாட்டங்கள் இருக்கும் என்பதிலும் தெளிந்த புரிதலோடு இருந்தார்.

கல்விக்கு அதிக முக்கியத்துவம் கொடுக்கப்படாத சூழலில் வாழ்ந்த போதிலும் பெண்கல்வி அவசியம் என்பதில் நெஞ்சுறுதி கொண்டிருந்தார்.

**பெண்ணுக்கு ஞானத்தை வைத்தான் - புவி**
**பேணி வளர்த்திடும் ஈசன்.**

**மண்ணுக்குள்ளே சிலர் மூடர் - நல்ல**
**மாதர் அறிவைக் கெடுத்தார்**

என்ற பாரதியின் பாடல் வரிகளை உள்வாங்கிக் கொண்டு செயல்படுகிறவராகத் திகழ்ந்தார் வள்ளியப்பா.

அந்த உயரியச் சிந்தனைக்காகத்தான் காலம் அவரைக் ‘கல்வித் தந்தை’ என்று இன்று சிறப்பித்துப் பெருமைப்படுத்திக் கொண்டிருக்கிறது.

இறை அருளுடனும் பெற்றோர் ஆசியுடனும் அவருக்கு மனம் நிறைந்த வாழ்க்கைத் துணை அமைந்தது. தான் பெண் பார்த்த படலத்தை அவர் மொழி கொண்டு கேட்கும்போது பாங்கான பந்தத்தின் தொடக்கம் நம் கண்முன்னே காட்சியாக விரிகிறது.

வள்ளியப்பா பெண் பார்க்கச் சென்றதையும் அப்போது நடந்த சில உரையாடல்களையும் மகிழ்ச்சி பொங்கச் சொல்லும்போது அவரவது முகம் பொன்னென மின்னிப் பிரகாசிக்கும்.

சீதா ஆச்சி கண்டவராயன்பட்டி திரு.ஆர்.எம்.டி தியாகராசன் அவர்களின் தவப்புதல்வி. அன்பும் அறனும் சிறக்க இறையருளால் 1966 ஜனவரி 27-ஆம் நாள் வள்ளியப்பா சீதா ஆச்சி ஆகியோரின் திருமணம் பெரியோர்களால் ஆறு மாத இடைவெளியுடன் நிச்சயிக்கப் பட்டது. அந்த அழகிய இடைவெளியில் கடிதங்களின் வழி இருவரின் அன்பும் தொடர்ந்து வளர்ந்து கனிந்து பெருகிக் கல்யாணமாகியது.

சீதா ஆச்சியின் சொந்த ஊரான கண்டவராயன்பட்டியில் திருமண நிகழ்வு இனிதே நடந்தது. அன்று தொடங்கிய இல்லறம் என்னும் நல்லறத்தில் இன்று வரை செவ்வனே பயணித்துக் கொண்டிருக்கிறார்கள். மௌனத்தில் வார்த்தைகளையும் கோபத்தில் அன்பையும் உணர்ந்து கொள்ளும் உன்னத உறவு தான் இவர்களின் உறவு. ‘புரிந்து நடக்க ஒரு துணை இருந்தால் சரிந்து விழாமல் வாழ்ந்திடலாம்’ என்ற கூற்றை மெய்ப்பித்து வாழ்ந்து காட்டிக் கொண்டிருக்கிறார்கள்.

கல்விக்கரையில் மதுரை பாத்திமா கல்லூரியில் பி.எஸ்.சி ஹோம் சயின்ஸ் பட்டம் பெற்றுப் பின் திருமண வாழ்க்கைக்குள் நுழைந்தவர் சீதா ஆச்சி. வள்ளியப்பாவிடம் உள்ள உயரிய பண்புகளைப் போலவே சீதா ஆச்சியும் இன்முகத்தோடு கனிவாகப் பேசுபவர்.

‘நிதானமும் பொறுமையும் வாழ்வை அழகுடன் எடுத்துச் செல்லும்’ என்ற உண்மையை அறிந்தவர். அன்பிலும் படிப்பிலும் சிறந்தவர். பொது வாழ்க்கையிலும் தன்னை இணைத்துக் கொண்ட சிறப்பு உடையவர். பெங்களூர் ரோட்டரி இன்னர் வீல் சங்கத்தில் 1988-ஆம் ஆண்டு தலைவியாகச் செயல்பட்டு மிகச்சிறந்த ஆளுமையாகத் திகழ்ந்தவர். தொண்டு செய்வதை ஒரு கொண்டாட்டமாக நினைப்பவர். அப்படியொரு அன்பு, அப்படியொரு வாஞ்சை.

மேலும் பொதுப்பணியில் ஓர் சிறப்புக்கூறாக விளங்கும் சமூகத் தொண்டின் வெளிப்பாடாக பெங்களூர் அருகே உள்ள தவரகெரே கிராமத்தைத் தத்தெடுத்து, அந்த கிராமத்தினர் வாழ்வு சிறக்க ஓய்வின்றிப் பாடுபட்டவர்.

கிராமவாசிகளின் மனோபாவத்தில், நடத்தையில், வாழ்க்கை முறையில், செயல்பாடுகளில் மாற்றங்களைக் கொண்டு வருதலே நாட்டின் வளர்ச்சிக்கு உறுதுணையாக இருக்கும் என்ற வள்ளியப்பாவின் மனப்பாங்கையே ஆச்சி அவர்களும் கொண்டு விளங்குகிறார்கள் என்பதே அவர்களின் இல்லறத்திற்கு பெருஞ்சிறப்புச் சேர்ப்பது.

தனக்கான பொறுப்பினை உணர்ந்து, தன் அரவணைப்பில் இருக்கும் மக்களுக்காகத் தன்னைச் செதுக்கிக் கொண்டு வாழ்ந்தமையை ஒரு செய்தி மூலம் அறியலாம்.

தத்தெடுத்த மக்களின் உடல்நலம் மட்டுமல்லாது மனநலமும் பேணப்படவேண்டும் என தியானப் பயிற்சி பெற்று தன்னலமின்றி அங்குள்ள நோய் வாய்ப்பட்ட பெண்களுக்கு மனவளக்கலையைப் பயிற்றுவித்து மருத்துவ சிகிச்சை அளித்துள்ளார் என்பதே அந்தச் செய்தி.

இத்தகு சிறப்புகளைத் தன்னகத்தே கொண்டிருந்தாலும் துளியும் அதனால் இறுமாப்புக் கொள்ளாத, பழகுவதற்கு எளிமையான குணம் கொண்ட சீதா ஆச்சி தனது மென்மையான சொல், கனிவான பார்வை, அன்புள்ள புன்னகை, ஆகியவற்றால் அதிசயங்களையும், அற்புதங்களையும் நிகழ்த்தக் கூடியவர்.

நாம் செய்யும் வேலை நமக்கு மகிழ்ச்சியைத் தரவேண்டும் என்பதைத் தங்கள் வாழ்க்கைத் தத்துவமாகக் கொண்டவர்கள் வள்ளியப்பா தம்பதியர். தீர்க்கமான கூரறிவும் கட்டுப்பாடான சுறுசுறுப்பும் இருந்து விட்டால், எதிர்காலம் நம் காலடியில் மண்டியிடும் என்பதையும் புரிந்து வைத்திருப்பவர்கள்.

அன்பின் பேரொளியை வள்ளியப்பா அவர்களும், அவர்களின் துணைவியாரும் தங்கள் சொல்லில், பார்வையில் நிறைத்து வைத்திருப்பதால் என்றும் என்றும் அன்பும் மகிழ்வும் பெருக அவர்களின் இல்லறம் சிறந்து விளங்கக் காண்கிறோம்.

அதிர்ந்து பேசாத பண்பும் இருவருக்கும் இடையிலான புரிதலும் ஒருவருக்கொருவர் விட்டுக் கொடுக்கும் மனப்பான்மையும் இவர்கள் இருவரின் வாழ்வைப் பெரும் மதிப்பிற்குள்ளதாக மாற்றியது, மாற்றிக் கொண்டிருக்கிறது.



# விருட்சத்தின் கிளைகள்

ஒரு முயற்சியாளன் பிறக்கும்போது முயற்சியாளன் மட்டுமல்ல, கூடவே ஒரு புதிய காலமும் பிறக்கிறது. அந்த காலம் எப்போதும் நிகழ்காலமாகவே இருக்கிறது.

வாழ்க்கை என்பது வாய்ப்புகளால் நிரம்பியது. நாம் பயன்படுத்தும் வாய்ப்பைப் பொறுத்தே நம் வாழ்க்கை அமையும். அதேபோல் காலத்தை மதிப்பிடத் தெரிந்தவருக்கு வாழ்வின் மதிப்பும் தெரியும். ஏனெனில், நாம் நமது நேரத்தைச் செலவிடும் விதம்தான் ‘நாம் யார்?’ என்பதை வரையறுக்கிறது. ‘‘நேரம் என்பது ஒரு சிறந்த எழுத்தாளர். அது எப்போதும் சரியான முடிவை எழுதுகிறது’’ என்பார் சார்லி சாப்ளின். அப்படித்தான் வள்ளியப்பாவின் வாழ்க்கையைக் கல்லூரிப் பருவம் முடிந்து தொழில் துறைக்குச் செலுத்தியது காலம். அதுமுதல் வலுவான விருட்சம் கிளைவிடத் தொடங்கியது.

கல்வி மூலம் இளைஞர்களின் ஆற்றல்களை வளர்த்து நாட்டை வல்லரசாகவும், நல்லரசாகவும், மாற்றமுடியும். எது தேங்கி நிற்காதோ, எது எப்பொழுதும் ஓடிக்கொண்டே இருக்குமோ அதன்பெயர்தான் ஆற்றல்.

பரந்துபட்ட சிந்தனை உடையவர் வள்ளியப்பா. சந்தேகம், தெளிவின்மை, உறுதியின்மை, தான் தோற்றுப் போய்விடுவோம் என்று ஆழ்மனதில் பதிந்து போய்விட்ட நம்பிக்கை, தான் வெற்றி பெற வேண்டும் என்ற உள்ளார்ந்த ஆர்வமில்லாமை ஆகியவைதான் பெரும்பாலான தோல்விகளுக்கு முக்கியமான காரணங்களாகின்றன என்பதைப் பச்சையப்பன் கல்லூரியில் படிக்கிற காலத்திலே நான் அறிந்து கொண்டுவிட்டேன். நாம் வெற்றி பெற நினைத்தால் நிச்சயமாக வெற்றி பெறுவோம் என்பதை பச்சையப்பன் கல்லூரியில் மாணவர் தலைவராக இருந்தபோது மேற்கொண்ட பல்வேறு அணுகுமுறை வாயிலாகத் தெளிவாக அறிந்து புரிந்தேன் என்கிறார் வள்ளியப்பா.

குறுகிய காலத்திட்டத்தை வள்ளியப்பா என்றுமே விரும்பியதில்லை. இரண்டாந்தர மனப்போக்கைத் தங்களுக்குள் வளர்த்துக் கொள்பவர்களின் செயல்பாடுகள் எப்படி இருக்கும்? எப்போதுமே இரண்டாந்தரமானவையாகத் தானே இருக்கும். நீங்கள் உங்கள் மீது நம்பிக்கை கொள்ளும்போதுதான் நல்ல விசயங்கள் நிகழத் தொடங்குகின்றன. வெற்றிக்கு இட்டுச் செல்லும் நடவடிக்கைகளை ஒரு பழக்கமாக ஆக்கிக் கொள்வதுதான் என் குறிக்கோளாகும். இதை நான் என் ஐயா திரு.கருமுத்து தியாகராசரிடம் இருந்து கற்றுக் கொண்டேன். என் மகன்களுக்கும் இந்த வழியையே கற்றுக் கொடுத்திருக்கிறேன் என்கிறார் 81 வயது இளைஞர் சோனா வள்ளியப்பா.

'நம் மூளைத்திறனின் அளவை விட நம் அறிவை வழிநடத்துகிற சிந்தனை அதிமுக்கியமானது தானே! என்ன நான் சொல்வது சரிதானே!!' என்று புன்னகைக்கிறபோது அவரிடம் ஞானத்தின் ஒளி வீசுகிறது.

தொலைநோக்குப் பார்வையுடன் பெரியதாகச் சாதிக்க வேண்டும் என்ற கனவோடு பயணத்தைத் தொடங்கினார். தொழில்துறையில் தனது முயற்சியின் தொடக்கமாக, தான் முதன் முதலில் மேற்கொண்ட முயற்சி குறித்து மனம் திறக்கிறார் வள்ளியப்பா.

''நான் கல்லூரிக் கல்வி முடித்த கையோடு சேலத்தில் எனது சொந்த முயற்சியில் பைனான்ஸ் தொழில் ஒன்று நடத்தத் தொடங்கினேன். தாத்தா மற்றும் தந்தை இருவரின் மேற்பார்வையோடு என் முயற்சி கொண்டு தொடங்கியதால் தொழிலைக் கண்ணும் கருத்துமாய் அக்கறையோடு கவனமாய் செய்து வந்தேன். ஐந்து லட்சம் வரை முதலீடாகக் கொண்டு தொடங்கிய முயற்சி எவ்வித இழப்புகளையும் எதிர்கொள்ளாமல் வெற்றி கண்டது''.

இதுவே தனது தொழில்துறை முயற்சியின் தொடக்கமாக இருந்தது என்கிறார் வள்ளியப்பா.

நம்பிக்கை வெற்றியோடு வரும். ஆனால் வெற்றி, நம்பிக்கை உள்ளவரிடம் மட்டுமே வரும் என்ற பொறிநுட்பம் அறிந்தவர் வள்ளியப்பா. காலத்தின் மதிப்பையும் வாய்ப்பின் அருமையையும் உணர்ந்தவர். அதனால் வெற்றி அவரை இறுகப்பற்றிக் கொண்டது. வெற்றிச் சுவையைக் கடின உழைப்பினாலும் நேர்மையாலும் பெற்றுவிடலாம். ஆனால் பெற்ற வெற்றியைத் தக்க வைத்துக் கொள்ள இன்னும் அதிகமாக உழைக்கத் தயாரானார். ஏனெனில் வாழ்க்கை இரண்டு விசயங்களால் ஆனது. ஒன்று செய்திருக்கலாம் என்பது, இன்னொன்று செய்யாமல் இருந்திருக்கலாம் என்பது. இந்த இரண்டு குதிரைகளையும் ஒரு தேரில் பூட்ட முடியாது. ஆகவே செய்யும் தொழிலில் திட்டமிடுதல் முக்கியம் என்பதை அறிந்து அதன்படி திட்டமிட்டுச் செய்த தொழிலில் வெற்றி பெற்றார்.

ஒரு தலைவர் திறந்த காதுகளுடனும், திறந்த மனதுடனும் இருக்க வேண்டும். எந்தச் சூழ்நிலையிலும் நேர்மறையாகவே சிந்திக்க வேண்டும். முடிவு எடுப்பதை ஒத்திப் போடுபவர்கள் பலவீனமான திறனற்ற தலைவர்களாகத்தான் நினைவுகூரப்படுவார்கள்.

இலக்குகள் இல்லாத மக்கள் விரைவில் தங்கள் வாழ்க்கையை வீணடித்து மடிந்து விடுகின்றனர். இது பெரிய அறிவியல் உண்மை. தீவிரமான இலக்குகளைக் காட்டிலும் ஒருவரை உயிரோடு வைத்திருக்கக் கூடியது வேறு எதுவும் இல்லை. இதை இப்போது நான் சொல்கிறபோது, எல்லாருமே ''ஆமாம் ஆமாம் உண்மை உண்மை'' என்று ஒப்புக் கொள்கிறார்கள். ஏனென்றால் கடந்த 5 ஆண்டுகளில் இதை அனுபவித்துத் தெளிந்து உணர்ந்துவிட்டார்கள் என்கிறார் வள்ளியப்பா.

'உங்களால் பறக்க முடியவில்லையே என்று நினைக்கிறீர்களா? அதனால் என்ன? ஓடுங்கள். ஓட்டமாக ஓடிப்போய் உங்கள் இலக்கை அடையுங்கள். உங்களால் ஓட முடியவில்லையே என்று நினைக்கிறீர்களா? அதனால் என்ன? கால்நடையாகவே நடந்துபோய் உங்களின் இலக்கை அடையுங்கள். உங்களால் நடக்கவும் முடியவில்லை என்று நினைக்கிறீர்களா? அதனால் என்ன? தவழுங்கள். தவழ்ந்து தவழ்ந்து போய்க்கூட உங்களின் இலக்கை அடையுங்கள்.

என்ன வேண்டுமானாலும் செய்து கொள்ளுங்கள். எப்பாடு பட்டாவது நீங்கள் முன்னேற்றத்தை நோக்கி முன்னேறிப் போய் கொண்டே இருக்கவேண்டும்'.

இது மார்ட்டின் லூதர் கிங் மக்களுக்குச் சொன்னது. இதே கருத்தாக்கத்தைதான் நம் வள்ளியப்பா சோனா குழும மாணவர்களிடத்தில் சொல்லிக் கொண்டே இருக்கிறார்.

எந்தவொரு குறிக்கோளையும் அடைவதற்குப் படிப்படியான வழிமுறைதான் ஒரே அறிவார்ந்த வழிமுறையாகும். இதை நிலைத்த வெற்றி பெற்ற ஒவ்வொருமே ஏற்றுகொள்வார்கள் என்பதில் ஐயமில்லை.

நீங்கள் அறிந்து தெளிந்த ஒரு துறையில் முயற்சியோடு ஈடுபடுவது எப்போதும் உங்களை முன்னேற்றப் பாதையில் வைத்திருக்கும். உங்களை இளமையாகவும் விழிப்போடும் வைத்திருக்கும். உங்களுக்கு விருப்பமான விசயங்கள் தகவல்களை அது உங்களுக்குக்

கொடுத்துக் கொண்டே இருக்கும் என்று அறிவுப்பூர்வமாக வள்ளியப்பா சொல்லுவதை நாம் முழுமையாக உள்வாங்கிக் கொண்டால் அது நமக்கு பலப்பல வழிகளில் அருந்துணையாக இருக்கும்.

தொழிற்புரட்சிக்குப் பின்னர், கடந்த முப்பதாண்டுகளில்தான் முன்னெப்போதையும் விட மாற்றங்கள் ஏற்பட்டுள்ளன. ஒரு தொலைபேசி அழைப்பு அஞ்சலட்டையை விட மலிவானதாக ஆகிவிட்டது.

இப்போது நாம் வங்கிக்கே செல்லாமலும், பயணச்சீட்டு அலுவலகத்திற்கே செல்லாமலும், பொருட்களை வாங்குவதற்குக் கடைகளுக்கே செல்லாமலும், கையில் பணமே எடுத்துச் செல்லாமலும் தினசரி வாழ்க்கையை நடத்த முடியும்.

மாற்றத்தை மறுப்பவன் சிதைவைச் செதுக்குகிறான். மாற்றங்களை ஏற்றுக் கொள்ளாவிட்டால் நாம் பழமைவாதிகள் ஆவோம். புறக்கணிக்கப் படுவோம். பல நூற்றாண்டுகள் பின்னுக்குள் தள்ளப்படுவோம். ‘நம்மால் முடியும்’ என்ற மனோபாவம் கொண்ட மனிதர்கள் போதுமான அளவில் இருந்தால் மாற்றம் பன்மடங்காகப் பெருகும்.

எல்லாவற்றைக் காட்டிலும், பெருஞ் சிறப்பிற்குரிய ஒன்று என்ன தெரியுமா? ‘முன்னேறிக் கொண்டிருக்கிற மற்றவர்கள் நம்மைச் சூழ்ந்திருக்கும் படி பார்த்துக் கொள்வது என்று அவர் சொல்லுவது ஒவ்வொருவரையும் செயல்படத் தூண்டும் வெற்றிச்சொல்.

அற்ப மனிதர்களை எதிர்த்துச் சண்டையிட நான் மறுக்கும்போது நான் வெற்றி பெறுகிறேன். இது எனது அனுபவப்பாடம். மாற்றங்கள் நிகழும் என்றே செயல்படுவேன். அது நிகழும். எதிர்மறை எண்ணங்களைத் தூக்கி எறிந்து விடுவேன்.

ஒவ்வொரு சூழ்நிலையிலும் ஒரு நல்ல பக்கம் இருக்கிறது. அந்த நல்ல பக்கத்தை நான் கண்டு பிடித்து விடுவேன். என் பார்வை என் இலக்கின் மீது தான் எப்போதும் குவிந்திருக்கும். அதிலிருந்து இம்மியளவு கூடப் பிசக மாட்டேன். என் சிந்தனையில் நச்சைக் கலக்கிற

விசயங்களை என் சூழலிலிருந்து தூக்கி எறிந்து விட்டேன். எதுவெல்லாம் நமது கவனத்தைத் திசை திருப்புகிறதோ அதுவெல்லாம் தீமை என்பது சோனா வள்ளியப்பா கண்டுபிடித்திருக்கிற வெற்றிக்கான இலக்கணம்.

தனது இலக்கினை அடைவதற்குச் சரியான அணுகுமுறை கொண்ட ஒருவனை எதுவும் தடுத்து நிறுத்தமுடியாது. தவறான அணுகுமுறை கொண்ட ஒருவனுக்கு இந்தப் பூமியில் எதுவும் உதவ முடியாது.

அடிப்படையில் நேர்மை இல்லாத எவரும் எந்த அதிரடி நடவடிக்கைகள் மூலமாகவும் தங்களை நீண்ட காலம் நிலைநிறுத்திக் கொள்ள முடியாது என்ற உண்மையின் உறுதிப்பாடு உணர்ந்தவர்.

‘தொடர்ந்து செயலில் இறங்குவது அச்சத்தை நீக்குகிறது. செயலில் இறங்குவதன் மூலம் அச்சமே இல்லாமல் வாழலாம் என்பதுதான் இதுவரை செயலில் இறங்கி நான் கண்டு கொண்டது. நம்முடைய புறத்தோற்றம் நம்முடைய அகத்தோற்றத்தின் மீது தாக்கத்தை ஏற்படுத்துகிறது என்பதை உண்மையிலேயே நான் பெரிதும் நம்புகிறேன். எதுவொன்றும் சாத்தியம் என்றே நம்புகிறேன். படைப்பாற்றல் மிக்க சிந்தனைக்கான அடித்தளம் இதுதான் என்றே எப்போதும் நான் சொல்லி வருகிறேன். சிந்தனைதான் நடவடிக்கைகளை ஒழுங்கு படுத்துகிறது என்பதில் தெளிவாக உள்ளேன் என்கிறார் வள்ளியப்பா.

நான் நினைப்பதை விட நான் சிறந்தவன் என்பதை ஒரு போதும் மறப்பதில்லை. அது படிக்கிற காலம் தொட்டே என்னுள் எழுந்த ஒரு பழக்கம். கர்வம் பிடித்தவன், திமிர் பிடித்தவன் என்றாலும் அதுபற்றி எனக்குக் கவலையில்லை. நாம் விரும்பும் விளைவுகளை நம் மனம் நிச்சயமாகப் பெற்றுக் கொடுக்கும். அதற்கு முதலில் அதைச் சரியான பாதையில் நாம் இயக்க வேண்டும்.

‘செயலில் இறங்காத ஒருவர் மீது மக்கள் ஒருபோதும் நம்பிக்கை கொள்ளவே மாட்டார்கள். நடவடிக்கை எடுக்கத் தயாராவதில் நேரத்தை வீணாக்குபவர்களைப் பார்த்து எனக்குச் சிரிப்புத்தான் வருகிறது.’ என்று வள்ளியப்பா சொல்லுவது நம் சிந்தனைக்குப் பாடமாக அமைகிறது.

உற்சாகமிக்க உயிர்ப்பான வாழ்க்கை வாழ்வதே உண்மையான வாழ்வாகும்.

வாழ்க்கை எனும் ஓட்டப்பந்தயத்தில் வேண்டாவெறுப்பாகத் துன்பத்தோடு ஓடுகிறவன் பின் வாங்குகிறான். இன்பத்தோடு உற்சாகமாக ஓடுகிறவன் வெற்றியாளன் ஆகிறான்.

உங்கள் எண்ணத்தில் உங்களுக்கு வேண்டியது குறித்து கருத்துத் தெளிவும், சிறந்த உயிர்ப்பூட்டலும் இருந்தால் அது உங்களிடம் உறுதியாக வந்து தான் தீர வேண்டும் என்கிறார்கள் விபரம் அறிந்தவர்கள்.

கனவு நிறைவேறி விட்டால் நாம் காண வேண்டியது இன்னொரு கனவு என்பார்கள். அதன்படி வள்ளியப்பாவின் கனவுப்பயணம் தொடர்கிறது தொடர்கிறது தொடர்ந்து கொண்டே இருக்கிறது. அவருக்கு உலகளாவிய அளவில் தொழில் துறையில் சாதனை செய்யத் துடிக்கும் ஆழ்ந்த பேரார்வம் எப்போதும் குறையாமல் பெருகிக் கொண்டே இருக்கிறது. காலமாற்றத்திற்கு ஏற்றாற் போல் தொழில் துறையின் நுணுக்கங்களைக் கற்றுக் கொண்டே இருக்கிறார். கற்ற நுணுக்கங்களை உற்ற நேரத்தில் பயன்படுத்தும் வாய்ப்பைக் காலம் அவருக்கு வழங்கிக் கொண்டே இருக்கிறது என்பது தான் திருவருள்.

தந்தை சொக்கலிங்கம் செட்டியார் பெங்களூரில் தோற்றுவித்த ஸ்ரீ வள்ளியப்பா டெக்ஸ்டைல்ஸ் ஆலையைக் கவனித்துக் கொள்ளும் பொறுப்பு வள்ளியப்பாவிடம் வந்தது. ஆலையைக் கவனிக்க வேண்டி கர்நாடகா மாநிலம் செல்ல வேண்டியிருந்தது. வெற்றிகரமாக நடந்து கொண்டிருக்கும் தொழிலைக் கைவிட்டு அதிலிருந்து வேறொன்றுக்குப் புதிதாக ஒன்றை உருவாக்குவதற்குத் தீர்க்கமான தொலைநோக்குப் பார்வையும் துணிவும் தேவை. அந்தத் தன்மை வள்ளியப்பாவிற்கு இயல்பாகவே அமைந்திருந்தது. செய்யும் தொழிலில் காட்டிய முனைப்பும் ஆர்வமும் கவனமும் அவரது சொந்த முயற்சிக்குப் பொன்முடி சூட்டி அழகு பார்த்தது.

‘வழியில் எத்தனைப் புயல்களை நீ சமாளித்தாய் என்பது முக்கியமில்லை. கப்பலைப் பத்திரமாகக் கரைச் சேர்த்தாயா என்பது தான் முக்கியம்’ என்பார்கள். வணிகக் கப்பலைப் பத்திரமாகக் கரைசேர்க்க கர்நாடகாவில் கன்னட மொழி அவசியம் என்பதை உணர்ந்தார் வள்ளியப்பா.

தன் தொழிலின் பெரும்பகுதியைப் பெங்களூரில் நடத்த வேண்டி வந்ததால் கன்னட மொழி பேசும் மக்களோடு இரண்டறக் கலந்து கன்னடமொழியில் ஆழங்கால்பட்டார் வள்ளியப்பா. வணிக மொழி அறிந்த பின் வளரத் தடையேது. நுணுக்கங்களையும் நுட்பங்களையும் ஆய்ந்தறிந்து அதன் பலனாகக் கர்நாடகா முழுவதும் பல ஜவுளி ஆலைகளை நிறுவினார் வள்ளியப்பா.

**‘முடியாது என்பது முயலாதவை**
**தெரியாது என்பது தேடாதவை’**

என்பது அவரது தொழில் முறை இலக்கணமாகியது. அறிவு ‘ஒரு புதையல் போன்றது. ஆனால் பயிற்சி அதற்கான சாவி’ என்ற பொன்மொழிக்கு அடையாளமாகத் தொழில்துறையில் தன் விடாமுயற்சியால் வெற்றிக்கொடி ஏற்றினார்.

அதற்கான வாய்ப்பைக் காலம் மீண்டும் அவருக்கு வழங்கியது. உறுதியான விருட்சத்திற்கு இயற்கையின் துணை நிச்சயம் உண்டு என்பது மீண்டும் நிரூபிக்கப்பட்டது. தலைமைப் பொறுப்பில் சிறந்த தொண்டாற்ற உத்வேகத்துடன் பயணப்பட்டார் வள்ளியப்பா. பெங்களூர் கர்நாடகா சேம்பர் ஆஃப் காமர்ஸ் மற்றும் இண்டஸ்ட்ரி, பெங்களூர் மேனேஜ்மென்ட் அசோசியேஷன் ஆகியவற்றின் தலைவராக அவரைத் தேர்ந்தெடுக்கும் அளவிற்கு ஆற்றலை வளர்த்துக் கொண்டார்.

அந்தப் பாடசாலையில் ஒருநாள், ஆசிரியர் ஒரு பானையைக் கவிழ்த்து, ‘இதற்குள் என்ன இருக்கிறது?’ என்று கேட்டார். முதல் மாணவன் ‘ஒன்றுமில்லை’ என்றான். இரண்டாவது மாணவன் பானைக்குள்

கையை விட்டுப் பார்த்து, ‘ஒன்றுமில்லை’ என்றான். மூன்றாவது மாணவன், ‘பானைக்குள் காற்று இருக்கிறது’ என்றான். ஆசிரியர், ‘சரி. இந்தக் காற்றை எப்படிப் பிரித்தெடுப்பது?’ என்றார்.

முதல் இருவரும் கொஞ்சம் சிந்தித்துப் பார்த்து, ‘சாத்தியமில்லை’ என்றார்கள். மூன்றாவது மாணவன் ‘பானையில் தண்ணீர் நிரப்பினால் காற்று வெளியே போய்விடும்’ என்றான்.

ஆசிரியர் சொன்னார், - ‘இப்படித்தான் மனதில் உள்ள தீய எண்ணங்களைப் போக்க நல்ல எண்ணங்களைப் புகுத்த வேண்டும். நல்லதையே நினைக்க நினைக்க அவை மனதில் நிரம்பி கெட்ட எண்ணங்கள் வெளியேறிவிடும்’ என்றார்.

இந்த மூன்றாவது மாணவனை ஒத்த அறிவாற்றல் திறனுடையவர் நம் வள்ளியப்பா. வெற்றி பெற வேண்டும் என்ற பதட்டமில்லாமல் இருப்பது தான் வெற்றி பெறுவதற்கான சிறந்த வழி என்ற சிந்தனை உடையவர். முயற்சியும் ஆர்வமும் இருந்தால் எந்தச் சவால்களையும் சமாளிக்க முடியும் என்று உறுதியாக நம்புகின்ற உள்ளம் கொண்டவர். எனவேதான் அவர் தலைமை நிலைக்கு வந்தார்.

குறிக்கோளுடன் முயற்சி செய்பவர்களுக்கே வெற்றி. தலைமைப் பொறுப்பில் நல்லது சொல்வதோடு மட்டுமல்ல செய்து காட்ட வேண்டும் என செய்தும் காட்டினார். பல தொழில் முனைவோர்களுக்கு அறவழியில் வென்று காட்டும் வணிகப் பாடத்தை வள்ளியப்பாவின் தலைமைப் பண்பு கற்றுக் கொடுத்தது.

தொழிற் கூட்டமைப்பின் தலைவரைக் கர்நாடாக மாநில முதல்வரே அடையாளம் கண்டு போற்றும் அளவிற்கு உயர்ந்திருந்தது அவரது வளர்ச்சி. வள்ளியப்பா என்ற பெயரைக் கேட்ட உடனேயே ‘‘டெக்ஸ்டைல்ஸ் வள்ளியப்பா’’ என்று அடையாளம் சொல்லும் அளவிற்கு மாநில முதலமைச்சர் பசவராஜ் பொம்மை வரை பிரபலமானார். அரசியல்வாதிகள் முதல் அரசு அதிகாரிகள் வரையில் வள்ளியப்பாவின் செல்வாக்கு நீடித்தது.

செயலை விதையுங்கள், பழக்கம் உருவாகும். பழக்கத்தை விதையுங்கள், பண்பு உருவாகும். பண்பை விதையுங்கள், எதிர்காலம் உருவாகும் என்ற கருத்தியலுக்கு ஏற்ப, வள்ளியப்பா செயலால், உழைப்பால் எல்லோராலும் ஏற்றுக்கொள்ளப்படும் தொழில் ஆளுமையாக உருவானார். விருட்சத்தின் கிளைகள் செழுமை பெற்றுக் கொண்டிருக்கும் அதே நேரத்தில் விருட்சத்தினைத் தாங்கிப் பிடிக்க விழுதுகளும் உருவாகின. அதனால் தற்போது சோனா வள்ளியப்பா குழுமம் வேளாண்மை, நூற்பாலை ரியல் எஸ்டேட், தகவல் தொழில் நுட்பம், கல்வி மற்றும் ஆராய்ச்சி ஆகிய துறைகளில் இந்தியாவின் வளர்ச்சிக்கு முன்னோடியாக இருந்து வருகிறது.



# விருட்சத்தின் விழுதுகள்

**வே**ரின் தன்மை கொண்டே விருட்சம் வலிமை பெறுகிறது. அதே போல் விருட்சத்தின் வலிமை கொண்டே விழுதுகள் உறுதியாகின்றன.

நாம் வாழும் வாழ்க்கை நம்மோடு முடிந்து விடுவதில்லை. நம் குழந்தைகளின் மூலம் தலைமுறை தலைமுறையாகத் தொடரக்கூடியது. மரபுகளை கற்றுத்தர நம் முன்னோர்கள் எப்படி முக்கியமோ அதே அளவு கற்ற பண்பாட்டைக் காத்து வளர்ப்பது பிள்ளைகளின் கடமையாகும். நாம் வாழ்ந்த வாழ்விற்கு ஆதாரமாக இருப்பது நம் பிள்ளைகளே. குழந்தைச் செல்வத்துக்கு நிகரானது எதுவுமில்லை.

அந்தச் சீதாராமன் புகழ் பாட லவா, குசா பிறப்பெடுத்தது போல் சீதாஆச்சி-வள்ளியப்பா புகழ் சிறக்க பிறந்த புதல்வர் இருவர். செல்வாக்கு நிறைந்த குடும்பத்தில் பிறந்த போதும் எளிய வாழ்க்கை முறைகளைச் சொல்லியே புதல்வர்களை வளர்த்து

எடுத்தார் வள்ளியப்பா. அதில் மூத்தவர் பெயர் சொக்கலிங்கம் என்னும் சொக்கு வள்ளியப்பா, இளையவர் தியாகராசன் என்னும் தியாகு வள்ளியப்பா. இருவரும் பி.காம் பட்டதாரிகள். ஆயிரம் சொற்களில் அறிவுரை சொல்வதை விட முன் உதாரணமாக நாமே வாழ்ந்து காட்டுவதுதான் மிகச்சிறந்த அறிவுரை. அறவாழ்வை வாழ்ந்து காட்டிக் கொண்டிருக்கும் வள்ளியப்பா தன் புதல்வர்களுக்கான வாழ்க்கைப் பாதையைப் பாடமாக வாழ்ந்து காட்டி வருகிறார். தங்கள் குடும்பப் பின்னணி அதற்கான பாரம்பரியம் என அனைத்தையும் உணர்ந்து வளர்ந்து வந்தவர்கள் அவர்தம் இரு புதல்வர்களும்.

இதில் மூத்தவரான சொக்கு வள்ளியப்பா இந்தியா மற்றும் அமெரிக்காவில் தொழில் பயிற்சி பெற்றவர். இவரது மனைவி, விசாலாட்சி கோவை அவிநாசிலிங்கம் கல்லூரியில் பயின்று தங்கப் பதக்கம் பெற்றவர். இவர்களுக்கு வள்ளியப்பா, பழனியப்பா என இரு புதல்வர்கள்.

'Outlook Magazine' என்னும் இதழ் 75-வது வருட சுதந்திர இந்தியாவின், விரைவான வளர்ச்சிக்குக் காரணமான 75 நபர்களின் பெயர்ப்பட்டியலை வெளியிட்டது. இந்தியாவின் தலைசிறந்த பிரபலங்களின் வரிசையில் (ரத்தன் டாட்டா, அம்பானி, அமிதாப்பச்சன், கபில்தேவ் என) சொக்கு வள்ளியப்பாவின் பெயரை வெளியிட்டுச் சிறப்பித்துள்ளது. சொக்கு வள்ளியப்பா அவர்கள், ‘‘கல்வி சார்ந்த தொழில் முனைவோர் தான் எதிர்கால இந்தியாவை வழிநடத்தப் போகிறார்கள்’’ என்று அவ்விதழில் பேட்டி கொடுத்துள்ளார். அவரது தொழில் சார்ந்த சிந்தனைகளை அடையாளம் கண்டு அரசு சார்ந்த மற்றும் சாராத நிறுவனங்கள் பல்வேறு விருதுகள் வழங்கிக் கௌரவித்து வருகின்றன. புகழ்பெற்ற இதழ்கள் தங்களது பக்கங்களில் அவரது அரிய முயற்சிகளைப் பாராட்டிக் கட்டுரைகள் வெளியிடுகின்றன.

வீ டெக்னாலஜியின் ஆற்றல்மிகு பேராளராக சொக்கு வள்ளியப்பா செயல்பட்டு வருகிறார். தொழில்நுட்பத்தை கையாளுவதிலும் மேம்படுத்துவதிலும் சோக்கோ பரந்த அனுபவத்தைக் குவித்து

வருகிறார். சோனா வள்ளியப்பா குழுமத்தின் ஒருங்கிணைந்த முன்னேற்றத்திலும் வெற்றியிலும் சொக்கு முக்கியப் பங்காற்றி வருகிறார்.

கார்ப்பரேட் கொள்கைகளைத் திட்டமிடுவதில் முக்கியப் பதவிகளை வகித்துள்ளார். நிர்வாகம், சர்வதேச வணிக நடவடிக்கைகள் மற்றும் பெரு நிறுவன விவகாரங்களில் நிபுணத்துவம் பெற்றவர். சொக்கு, ஐரோப்பிய ஆசிய மற்றும் அமெரிக்கச் சந்தைகள் பற்றிய ஆழமான அறிவையும் கூட்டு முயற்சியில் மற்றும் செயல்திட்ட முக்கியத்துவம் வாய்ந்த பெரு முயற்சியில் விரிவான நிபுணத்துவத்தையும் பெற்றுள்ளார். YEO பெங்களூர் பிரிவின் நிறுவன உறுப்பினர்களில் ஒருவரான சொக்கு, முன்பு தெற்காசியாவிற்கான அதன் மண்டல இயக்குநராக இருந்தவர். சமூகத்தை மேம்படுத்துவதில் மிகுந்த ஆர்வத்துடன் அவர் வள்ளியப்பா அறக்கட்டளையை நடத்தி வருகிறார். சோனா யுக்தி பிரைவேட் லிமிடெட்டை மிகச் சிறப்பாக செயல்படுத்தி வருகிறார். இந்நிறுவனம் வலுவான தொழில் மையத்துடன் திறன் அடிப்படையிலான பயிற்சியை வழங்குகிறது. சமூக நிறுவனமான Hiremee மூலம் சொக்கு மூன்று மில்லியன் வேலைகளைச் செயற் படுத்துவதற்கான ஆட்சேர்ப்புத் தளத்தை உருவாக்கியுள்ளார்.

கல்வி தொழில் சார்ந்த திறன் மேம்பாடு மற்றும் தொழில்நுட்பம் ஆகியவற்றில் தனது மாறுபட்ட அனுபவத்துடன் உலக அளவில் வெற்றியின் புதிய உயரங்களை எட்டுவதற்கு சொக்குவின் வீ டெக்னாலஜிஸ் மிகச் சிறந்த வழிகாட்டியாக செயல்பட்டு வருகிறது.

சவால்களை ஏற்றுக் கொள்ளுங்கள். அப்போதுதான் வெற்றியின் மகிழ்ச்சியை உணர முடியும் என்று சொல்லுகிற சொக்கு வள்ளியப்பா தொழில்நுட்பத்தைச் சரியாகக் கையாண்டால் மிகப் பெரும் பிரச்சனை களுக்குக் கூட எளிய தீர்வுகளை எட்டி விட முடியும் என்ற எண்ணம் கொண்டவர்.

சோனா வள்ளியப்பாவின் மகன் சொக்கு வள்ளியப்பா பல ஆண்டுகளுக்குப் பிறகு தன் தந்தையைப் பின்பற்றி பெங்களூர் கிறித்துவக் கல்லூரியில் மாணவர் சங்கத் தலைவராக ஆனார். ‘என் தந்தை சென்னை பச்சையப்பா கல்லூரியில் குடியரசுத்தலைவர் ராதா கிருஷ்ணன், கர்ம வீரர் காமராசர் ஆகியோருடன் இருக்கும் படங்களைப் பார்த்து என்னுள் ஒரு பொறி பற்றிக் கொண்டது. அதன் காரணமாகவே நானும் மாணவர் சங்கச் செயற்பாட்டில் என்னை ஈடுபடுத்திக் கொண்டேன்’ என்கிறார்.

முதலாம் ஆண்டிலேயே மாணவர் சங்கச் செயலாளர் பதவிக்குப் போட்டியிட்டு வெற்றி பெற்று வீட்டிற்கு வந்தேன். அப்போது என் தந்தை சொன்ன அறிவுரை மிக முக்கியமானது. நான் மாணவர் தலைவராக இருப்பதற்கான முழுப்பாடத்தையும் என் தந்தையிடமிருந்தே கற்றுக் கொண்டேன். ‘மாணவர்களைச் சரியான வழியில் நடத்துவதே அவர்களைத் தவறான வழியில் நடத்தாமல் இருக்கும்’ என்று கூறினார். வேலை நிறுத்தம் செய்வது எளிது. நீங்கள் விரும்பியதைப் பெறுவது உங்கள் அடிப்படை. ஆனால் நோக்கம் உங்கள் கிறித்துவக் கல்லூரியை இன்னும் சிறந்த கல்லூரியாக மாற்றிக் காட்ட வேண்டும் என்பதாகவே இருக்க வேண்டும்’ என்றார். என் தந்தையின் படிப்பினையைக் கேட்டு கல்லூரியைத் தலைசிறந்த நிறுவனமாக உயர்த்திட உழைத்தது எனக்கு இன்னும் மகிழ்ச்சியைத் தந்து கொண்டே தான் இருக்கிறது என்கிறார் சொக்கு வள்ளியப்பா.

இலக்கை மட்டும் கற்பிக்காமல் அதை எட்டிப் பிடிப்பதற்குத் தடையாய் நிற்பதையும் கற்றுக் கொடுங்கள் என்று சோனாக் குழும ஆசிரியர்களிடத்தில் சொல்லி வருகிற சொக்கு வள்ளியப்பா, கல்வி என்ற சிறு வெளிச்சம், ஒன்றிலிருந்து ஒன்றாக அடுத்தடுத்த இருட்டுகளைத் துடைத்து எரியும் வல்லமை உடையது. போட்டி நிறைந்த உலகில் வாழ்வில் உயர்வடைய வேண்டுமெனில் கிடைக்கும் நல் வாய்ப்புகளைச் சரியாகப் பயன்படுத்திக் கொள்ள வேண்டும் என்று மாணவர் களிடத்திலும் சொல்லி வருகிறவர்.

இளையவர் தியாகு வள்ளியப்பாவின் மனைவி சீதா. இவர் கோவை கிருஷ்ணம்மாள் கல்லூரியில் MBA பயின்றவர். இவர்களுக்குச் செல்வி க்ருஷிதா, சோனாக்ஷி என இரு பெண் குழந்தைகள். இளம்

தொழிலதிபரில் ஒருவரான தியாகு வள்ளியப்பா அவர்கள் சோனா வள்ளியப்பா குழுமத்தின் கிரீடத்தில் இரு வைரங்களைச் சேர்த்துள்ளார். அவர் தேசிய ஆராய்ச்சி மேம்பாட்டுக் கழகம் மூலம் காப்புரிமை பெற்றுள்ளார். இந்தியாவில் முதல் முறையாக டூபியன் மற்றும் சுழற்றப்பட்ட நூல்களைக் கொண்டு பட்டு நீட்சியை நிறுவுவதற்காகப் பெங்களூரில் உள்ள மத்திய பட்டு வாரியத்துடன் கூட்டு முயற்சியில் ஈடுபட்டுள்ளார். இம்முயற்சி அறிவியல் முறையில் உருவாக்கப்பட்டுள்ளமை இதன் சிறப்பம்சமாகும்.

சோனா கல்விக் குழுமத்தின் துணைத் தலைவர் தியாகு வள்ளியப்பா, இந்திய பாரம்பரிய மருத்துவ முறையின் ஆரோக்கிய நலன்களை மக்களிடம் கொண்டு செல்ல இயற்கை மருத்துவம் மற்றும் யோகா மருத்துவக் கல்லூரியை நிறுவி உள்ளார். அதுமட்டுமல்லாது BCIC, EFSI போன்ற பல தொழிற்சங்கங்களை வழிநடத்தி வருகிறவர். அவரது தந்தையிடம் காணப்படும் அதே சுறுசுறுப்பு, முற்போக்குச் சிந்தனை ஆகியவற்றால், தான் நடத்தி வரும் அனைத்துத் துறைகளிலும் வெற்றித் தடம் பதித்து வருகின்றார்.

மாறுபட்ட முயற்சியின் வெற்றியிலும் சாதனையின் உற்சாகத்திலும் மகிழ்ச்சி பொங்குகிறது என்று உரைக்கும் தியாகு வள்ளியப்பா, ‘அறிவை விட முக்கியமானது கற்பனைத் திறனே’ என்ற ஐன்ஸ்டைனின் கொள்கையை அப்படியே பின்பற்றுகிறவர்.

தேசிய ஆராய்ச்சி மேம்பாட்டுக் கழகம் (NRDC) மூலம் ‘‘பட்டு நீட்சி’’ காப்புரிமை பெற்றுள்ளோம். மேலும் இந்தியாவில் முதன் முறையாக பட்டு நூல், டூபியன் மற்றும் சுழற்றப்பட்ட பட்டு நூல்கள் மூலம் பட்டு நூல்கள் மேம்பட்டு நீட்சியை நிறுவுவதற்காக பெங்களூரு மத்திய பட்டு வாரியத்துடன் கூட்டு முயற்சியில் ஈடுபட்டுள்ளோம். அனைத்து முரண்பாடுகளுக்கும், எதிராக அறிவியல் சூத்திரத்தில் இதை உருவாக்கினோம். பல்வேறு ஆராய்ச்சி நிறுவனங்கள் எங்களுடன் இணைந்து செயல்படுகின்றன என்கிறார் தியாகு வள்ளியப்பா.

இவர் சோனா கல்விக்குழுமத்தின் துணைத்தலைவராகவும், சோனா இன்ஸ்டிடியூட் ஆஃப் ரோபாட்டிக்ஸின் நிறுவனராகவும் அதன்

தலைமைச் செயல் அதிகாரியாகவும் சோனா ஸ்டார் இன்னோவேஷன் பிரைவேட் லிமிடெட்டின் தலைமைச் செயல் அதிகாரியாகவும், சோனா மெடிக்கல் காலேஜ் ஆஃப் நேச்சுரோபதி மற்றும் யோகா மையத்தின் நிர்வாக அறங்காவலராகவும், Sona accelerator & Incubation Centerன் தலைமைச் செயல் அதிகாரியாகவும் செயல்பட்டு வருகிறார்.

சிக்மகளூரில் உள்ள பாபாபுடான் மலைத் தொடரில் எங்கள் சோனா குழுமத்தின் லால் பாக் எஸ்டேட் உள்ளது. இந்தக் காபி தோட்டங்கள் பல ஏக்கர் பரப்பளவில் அமைந்துள்ளன. புகழ்பெற்ற 17 ஆம் நூற்றாண்டின் சூஃபி துறவியான பாபு புடான் தனது மெக்கா யாத்திரையிலிருந்து முதல் காபி விதைகளைக் கொண்டு வந்து, காபியை இந்தியாவிற்கு அறிமுகப்படுத்தியதற்குக் காரணமாக இருந்தார். அவரைப் போற்றும் வகையில் இந்த மலைத் தொடருக்கும் அவர் பெயரிடப்பட்டது. இங்கு தான் அவர் முதல் காபி விதைகளை விதைத்தார். இங்குள்ள இந்தியாவின் மிகச் சிறந்த காபித் தோட்டங்கள் அந்தப் பாரம்பரியத்தை முன்னெடுத்துச் செல்கின்றன. இதில் எங்களது பெரும் பங்களிப்பு இன்றுவரை தொடர்ந்து முன்னேற்றப் பாதையில் இயங்கி வருகிறது என்று பெருமிதம் பொங்கச் சொல்லுகிறார் தியாகு வள்ளியப்பா.

சோனா தொழில்நுட்பக் கல்லூரியில் 23 புதிய மேம்பட்ட ஆராய்ச்சி மையங்களை முன்னாள் இந்தியக் குடியரசுத் தலைவர் டாக்டர் ஏ.பி.ஜே அப்துல் கலாம் திறந்து வைத்தார். இதனை அடிப்படையாகக் கொண்டு சோனாவின் மேம்பட்ட ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டு மையங்களில் ஒன்றான சோனா ஸ்பீட், இஸ்ரோவின் விண்வெளிப் பணிகளுக்காக முழு ஈடுபாட்டுடன் செயல்பட்டு வருகிறது. இந்தியாவின் GSLV MKII ராக்கெட் சோனா ஸ்பீடின் ஸ்டெப்பர் மோட்டார்கள் மூலம் விண்ணில் செலுத்தப்பட்டது. இது குறித்த பணிகள் தியாகு வள்ளியப்பா அவர்களின் மேற்பார்வையில் இன்றளவும் வெற்றிகரமாக நடைபெற்று வருகிறது.

சோனா தொழில்நுட்பக் கல்லூரியின் ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டுப் பணியின் மூலம் இஸ்ரோவின் நிலவுப் பயணத்தில் பங்களிப்பதில் நாங்கள் பாக்கியம் பெற்றுள்ளோம். இஸ்ரோவின்

எதிர்கால விண்வெளிப் பயணங்களுக்கும் ஆதரவு அளிக்க எங்கள் ஆராய்ச்சிக் குழு உறுதி பூண்டுள்ளது என்கிறார் சோனா ஸ்பீடின் தலைவர் பேராசிரியர் என்.கண்ணன்.

சந்திராயன் - 3 ஏவுகணை வாகனத்தில் சோனா ஸ்பீடின் சிம்ப்ளக்ஸ் ஸ்டெப்பர் மோட்டாரை வெற்றிகரமாக ஒருங்கிணைத்ததும், இஸ்ரோவின் பணிகளை உள்நாட்டில் சோனா ஸ்பீட் மூலம் மாற்றியமைத்ததும் இந்தியாவின் பொறியியல் திறமையின் மேன்மைக்குச் சிறப்புச் சேர்ப்பதாகும் என்று கூறுகிறார் வீ டெக்னாலஜிஸ் தலைமை நிர்வாக அதிகாரி திரு. சொக்கு வள்ளியப்பா. சோனா தொழில்நுட்பக் கல்லூரி மாணவர்கள், மற்ற கல்லூரிகளைச் சேர்ந்த மாணவர்களுடன் சேர்ந்து 2017 செப்டம்பரில் இஸ்ரோவின் பேருதவியுடன் மாணவர் PICO செயற்கைக் கோளை விண்ணில் செலுத்தியதெல்லாம் மிகவும் பெருமைக்குரிய விசயங்களாகப் பேசப்படுகின்றன.

ஸ்ரீஹரிகோட்டாவில் உள்ள சதீஷ் தவான் விண்வெளி மையத்தில், இந்திய விண்வெளி ஆராய்ச்சி அமைப்பின் (இஸ்ரோ) உள்நாட்டு விண்கலமான சந்திராயன் - 3, நிலவுக்கு ஏவப்பட்ட போது அது உலகத்தின் கண்களை எல்லாம் கவர்ந்தது எந்த அளவுக்கு உண்மையோ அந்த அளவிற்கு அந்த நிகழ்வைச் சேலத்தில் உள்ள சோனா தொழில்நுட்பக் கல்லூரியின் ஆராய்ச்சியாளர்களும் முனைப்புடன் தொடர்ந்து வெற்றியாக்கினார்கள் என்பதும் உண்மை.

Sona Speed இன் சிம்ப்ளக்ஸ் நிரந்தர காந்த ஸ்டெப்பர் மோட்டார், ராக்கெட் இயந்திரத்தின் திரவ எரிபொருள் மற்றும் ஆக்சிஜனேற்ற கலவை விகிதத்தைக் கட்டுப்படுத்த LVM3 இன் ஆச்சுவேட்டர் அசெம்பிளியில் பயன்படுத்தப்படுகிறது என்பது சோனா ஸ்பீடின் தொழில்நுட்பத் திறனுக்கு பெரும் பெருமை சேர்ப்பதாகும்.

''தொழில்நுட்பக் கல்வி (Tech Edu) இந்தியா விருதுகள் 24''இல் சோனா தொழில்நுட்பக் கல்லூரி மதிப்புமிக்க வெள்ளி மற்றும் வெண்கல விருதுகளைப் பெற்றிருக்கிறது என்பது சேலத்திற்குப் பெருமை சேர்க்கும் விசயமாகும்.

ஒரு வாரத்திற்கு 168 மணிநேரம். அனைவருக்கும் அதேநேரம்தான். 56 மணிநேரம் தூங்கும் நேரம். 40 மணிநேரம் வகுப்புகள் என்று எடுத்துக் கொண்டால் மீதமுள்ள 72 மணிநேரத்தை எப்படிச் செலவழிக்கிறோம் என்பதே யார் சிறந்த மாணவன் என்பதை முடிவு செய்கிறது.

நேரத்தை வீணடிப்பது வாழ்வை வீணடிப்பதற்குச் சமம். நொடிகளின் தொகுப்பே வாழ்க்கை என்று கருதும் சோனா குழுமம் தொழில்நுட்பம், R&D மற்றும் மேலாண்மை நிபுணத்துவம் ஆகியவற்றை ஒன்றின்கீழ் இணைத்து, அனைத்து வகையான வணிகங்களும் பயனடையும் வகையில் சோனா ஸ்டார் டெக்னாலஜி நிறுவப்பட்டது. சோனா ஸ்டார் அனைத்துத்துறைச் செயல்பாடுகளுக்கும் தீர்வுகளை வழங்குகிறது.

சோனா ஸ்கூல் ஆஃப் மேனேஜ்மென்ட், கார்ப்பரேட்டுகள், MSME, குடும்ப வணிக நிறுவனங்கள் (FBES) மற்றும் ஸ்டார்ட்- அப்களுக்கான தீர்வுக்களமாக விளங்குகிறது.

‘சோனா ஸ்டார் இன்னோவேஷன்’ வாடிக்கையாளர்களின் குறைகளைத் தீர்க்க வழி செய்கிறது. மேலும் தொழில் காரணமாக ஏற்படும் சிக்கல்களைத் தொலை நோக்குப் பார்வை கொண்டு சமன் செய்கிறது. வாடிக்கையாளர்களுக்கு உலகின் தலைசிறந்த தொழில் வல்லுநர்களின் பரிந்துரைகளையும் ஆகச்சிறந்த நிபுணர்களின் வழிகாட்டுதலையும் வழங்கி வருகிறது.

வள்ளியப்பாவின் கல்விக் கடலில், அடுத்த பயணம் தொடங்கியது. அவரின் கல்வித் தொண்டு, தொழில்நுட்பம் மற்றும் கலை அறிவியல் துறையோடு நின்றுவிடாமல் ஆகச்சிறந்த மருத்துவத்துறையை நோக்கிச் சென்றது. அதன்வழி அவரது இளைய மகன் தியாகு வள்ளியப்பா அக்கனவினை மெய்யாக்கினார். இயற்கை மருத்துவத்தினால் மட்டுமே மனிதம் தழைக்கும், உயிர்கள் காக்கப்படும் என்பதைத் தான் உணர்ந்ததோடு மட்டுமல்லாமல் மாணவ சமுதாயமும் அதன் ஆழம் அறிய நல்வாய்ப்பினை உருவாக்கினார்.

2021ஆம் ஆண்டு சேலத்தில் சோனா இயற்கை மருத்துவக் கல்லூரி தொடங்கப்பட்டது. இக்கல்லூரியில் வருடந்தோறும் உலக

யோகா தினம் வெகு விமரிசையாகக் கொண்டாடப்படுகிறது. முதல் வருட யோகா தினத்தின் தொடக்கமாக மாண்புமிகு சுகாதாரத் துறை அமைச்சர் திரு.மா.சுப்பிரமணியன் அவர்கள் கலந்து கொண்டு சிறப்பித்தார். இக்கல்லூரியைத் தொடங்கியதன் மூலம் எண்ணற்ற மருத்துவ முகாம்கள் நடத்தப்பட்டு வருகின்றன. இதன்மூலம் அரசுப் பள்ளிகள் மற்றும் பொதுமக்கள் பெருமளவில் மருத்துவ உதவிகள் பெற்றுப் பயனடைந்து வருகின்றனர்.

இருபுதல்வர்களும் தொழிலில் தந்தைக்கு ஈட்டிக்கொடுத்தப் பெருமையைப் போல் தன் வீட்டுப் பெரியோர்களின் பெயர்களை அவர்தம் குழந்தைகளுக்குச் சூட்டிய பெரும்பண்பு போற்றுதலுக்குரியது. முன்னோர்களை மதிக்கும் பண்பு அவர்வழி மரபுத் தொடர்ச்சியாகப் புதல்வர்களிடமும் இருப்பது சிறப்பான ஒன்று.

வள்ளியப்பா தனது கடின உழைப்பினால் ஓய்வின்றி உழைத்துக் கொண்டே இருக்கிறார். ஒரு காலகட்டம் வரை தனித்த முயற்சியில் முன்னேறி வந்த வள்ளியப்பாவிற்குப் பக்கபலமாக அவரது பிள்ளைகள் உருவாகத் தொடங்கினர். அவரது பிள்ளைகள் தந்தையைப் போலவே துடிப்பும் எதையும் சாதிக்கத் துடிக்கும் முயற்சியும் கொண்டவர்களாக இருக்கின்றனர். தந்தையின் அறிவு முதிர்ச்சியும் அனுபவத் திறனும் பிள்ளைகளின் முன்னோக்கிய சிந்தனைக்குத் துணை நிற்கிறது. வெற்றிப் பாதையில் கனவுத் திட்டம் நோக்கிய பயணத்தைத் தொடங்கி இருக்கிறார்கள் வள்ளியப்பா குடும்பத்தினர்.

உங்கள் வெற்றிப் பயணத்தைத் தடுக்க நினைப்பதைத் தகர்த்து எறியுங்கள். நம்பிக்கையும் திறமையும் இருந்தால் எவரும் எப்படியும் வெற்றி பெறலாம். முயற்சிகள் என்றும் தோற்பதில்லை. இந்த உலகம் உள்ளவரை ஒருவரது சாதனையை இன்னொருவர் முறியடித்துக் கொண்டே இருப்பர். சாதனை செய்ய நினைப்பவர்களுக்குத் தடையாக எதுவுமே இருக்க முடியாது என்பதுதான் உண்மை. ஏனென்றால் தடைகளை உடைத்தெறிந்து முன்னேறுபவன்தான் சாதனைத் தலைவன்.

வள்ளியப்பா எப்போதும் குறுங்கால திட்டங்களை விரும்பாதவர். அவர் உருவாக்கிய அனைத்தும் தொலைநோக்குப் பார்வை கொண்டதாகவும்

புதுமையானதாகவும் சமுதாயத்தின் எதிர்காலத்திற்கு மாபெரும் பலனளிப்பதாகவும் இருக்கும் திட்டங்களாக மட்டுமே இருக்கும். அத்தகைய பல கனவுத் திட்டங்களைத் திட்டமிட்டுச் சீரிய முறையில் செயல்படுத்தி அதில் வெற்றியும் கண்டுள்ளார். அதில் ஒன்றுதான் வீ டெக்னாலஜி. இத்திட்டம் வள்ளியப்பா தனது மூத்த மகனான சொக்கு வள்ளியப்பா அவர்களோடு கரம் கோர்த்து ஆரம்பிக்கப்பட்ட கனவுத் திட்டம். தற்போது வெற்றிப் படியில் செல்வது மட்டுமின்றி மாணவ சமுதாயத்திற்கு வேலை வாய்ப்பு அளிக்கும் மகத்தான திட்டமாகவும் விளங்குகின்றது.

கல்வி ஒரு மனிதனை வாழ்க்கைக்குத் தயாராக வளர்த்து அனுப்ப வேண்டும். அவன் கல்விச்சாலையை விட்டு வெளியே வரும் போது இனிமேல் தான் நிறைய கற்க வேண்டும் என்ற வேட்கையை அவனுக்குள் விதைத்து அனுப்ப வேண்டும் என்றும் எப்போதும் சொல்லி வருபவர் சொக்கு வள்ளியப்பா.

நோபல் பரிசு பெற்ற தமிழர் சர்.சி.வி.ராமன் அறிவார்ந்த மனிதர். நோபல் பரிசு அறிவிக்கப்படுவதற்கு முன்னரே, நோபல் பரிசு கிடைக்குமென உறுதியாக நம்பினார். நம்பியது மட்டுமல்லாமல் நோபல் பரிசு விழாவில் கலந்து கொள்வதற்காக தனக்கும் தன் மனைவிக்கும் கப்பலில் பயணச் சீட்டுக்கூட வாங்கி வைத்திருந்தார் ராமன். கப்பலில் பயணித்து ஸ்டாக் ஹோம் நகரத்திற்குச் சென்ற பிறகு தான், அவருக்கு நோபல் பரிசே அறிவிக்கப்பட்டது. அப்படிப்பட்ட நம்பிக்கை கொண்டவர்கள் வள்ளியப்பாவும் அவர்தம் புதல்வர்களும்.

அந்த நம்பிக்கையின் அடிப்படையில்தான் வீ டெக்னாலஜி இளைஞர்களுக்கான புதிய பாதையை அமைத்து வருகின்றது. மாணவ சமுதாயம் ஒளி பெற்றால்தான் நாட்டின் எதிர்காலம் ஒளிபெறும் என்ற வள்ளியப்பாவின் முனைப்பு வெற்றி பெற்றுக் கொண்டிருக்கிறது.

சேலத்தில் நிறுவப்பட்டுள்ள முதல் பன்னாட்டு நிறுவனம் ‘வீ டெக்னாலஜி’. இந்தியாவின் நான்கு முக்கிய நகரங்களான பெங்களூர், சென்னை, சேலம், திருச்சியில் இயங்கி வருகின்றது. சேலத்தில் மட்டும்

3000-க்கும் மேற்பட்டோர் பணியாற்றிக் கொண்டிருக்கிறார்கள். பலதரப்பட்ட துறையினரும் பயனடையும் வகையில் பலதுறை சார்ந்த பணிகளுக்கான வேலை வாய்ப்புக் களமாக உள்ளது. வீ டெக்னாலஜி என்பது மருத்துவ காப்பீட்டுக்கான சேவை நிறுவனம்.

வீ டெக்னாலஜி உருவாக்கிய நம்பிக்கை, வீ டெக்னாலஜியோடு பல காப்பீட்டு நிறுவனங்கள் கைகோர்த்துச் சேவையாற்ற காரணமாகி உள்ளது. மருத்துவமனை வட்டத்திலும் வீ டெக்னாலஜி மீது மிகுந்த மதிப்பும் நம்பிக்கையும் உள்ளது. அதனால் பல காப்பீட்டு நிறுவனங்களுக்கு வீ டெக்னாலஜியைப் பரிந்துரைக்கிறார்கள். சோனா கலை மற்றும் அறிவியல் கல்லூரியில் வீ டெக்னாலஜி கைகோர்த்துள்ள திட்டத்தை வள்ளியப்பாவின் தொலைநோக்கு பார்வைக்கு மேலும் ஒரு சான்றாய்ச் சொல்லலாம். சோனா கலை அறிவியல் கல்லூரியில் வீ டெக்னாலஜி மெடிக்கல் கோடிங்கின் உருவாக்கத்திற்காக அயல் மாநிலங்களில் பயிலும் உயிரி இயல் மாணவர்களைத் தேர்ந்தெடுத்து அவர்களுக்கு வேலை வாய்ப்பு வழங்கலாம் என்ற எண்ணம் அவருக்குள் தோன்றியதன் வெளிப்பாடு தான் 2018-ம் ஆண்டு சோனா கலை அறிவியல் கல்லூரியில் உயிர் தொழில்நுட்பவியல் படிப்பைக் கொண்டுவரக் காரணமாகியது.

கல்வியின் மிகமுக்கியமான நோக்கம், தானே சொந்தமாக சிந்திக்கும் மாணவக் கண்மணிகளை உருவாக்குவதுதான். சொந்தச் சிந்தனைக்குப் பண்பாட்டு வேர் வேண்டும். இந்த வேர்தான் சிந்தனைக் கனிக்குத் தனிப்பட்ட இனிப்பைக் கொடுக்கும் என்பதில் ஆழ்ந்த புரிதல் கொண்டவர்களாக விளங்குகிறார்கள் போற்றுதலுக்குரிய பண்பாட்டு மரபில் வந்த வள்ளியப்பாவின் புதல்வர்கள் இருவரும். இந்தச் சிந்தனையின் அடிப்படையில்தான் உயிர் தொழில்நுட்பவியல் துறையில் முதலாம் ஆண்டு மாணவர்களுக்கு இலவசமாக மெடிக்கல் கோடிங் பயிற்சி வழங்கப்படுகிறது. இரண்டாம் ஆண்டில் அவர்களை முழுமையாகத் தயார் செய்து மூன்றாம் ஆண்டின் இறுதியில் பகுதி நேரப் பணியாளராகப் பணிவாய்ப்பு வழங்குகிறது. பயிற்சி பெறும் காலத்தில் முதல் மூன்று மாதத்திற்கு ரூபாய் 10,000 ஈட்டுகின்றனர். பிறகு 35 ஆயிரம் முதல் 60 ஆயிரம் வரை சம்பளம் கிடைக்கப்

பெறுகின்றனர். ஆறு மாதத்திற்கு ஒரு முறை சம்பள உயர்வு பெறுகின்றனர். இவ்வாறு வேலை வாய்ப்பை உருவாக்கி வைத்துக் கொண்டு அதற்கு ஏற்ப மாணவர் சமுதாயத்தை உருவாக்கிய பெருமை வள்ளியப்பாவையும் அவர்தம் புதல்வர்களையுமே சேரும்.

வீ டெக்னாலஜியில் வாய்ஸ் காலிங், நான் வாய்ஸ் காலிங், போன்றவை பிற துறைப் பணிகளாக அமைந்துள்ளன. மெடிக்கல் கோடிங்கிற்குத் தேவையான மென்பொருள் தயாரித்துத் தருகின்றனர். இன்னதுறை தான் என்று இல்லாமல் அனைத்துத் துறைகளிலும் பயிற்சி எடுத்துக்கொண்டு தங்களுக்கான வேலைவாய்ப்பை உருவாக்கிக் கொள்ள வீ டெக்னாலஜி களம் விரித்துக் காத்திருக்கிறது. இது வேலை வாய்ப்பு குறித்த நம்பிக்கையை இளைஞர்கள் மத்தியில் விதைத்துள்ளது.

வீ டெக்னாலஜி சமுதாயத்திற்கு உதவும் வகையில் மென்பொருள் சாதனங்கள் உருவாக்கம் உள்ளிட்ட நலத்திட்டங்களைச் செயல்படுத்தி வருகின்றது. உலகத்தை உலுக்கிப்போட்ட கொரோனா பெருந்தொற்றுக் காலத்தில் நம்மைச் சுற்றி எத்தனை மீட்டர் தொலைவில் கொரோனா பாதித்தோர் இருக்கின்றனர் என கண்டறிய உதவிய வீ டிரேஸ் எனப்படும் அப்ளிகேஷன், கொரோனா தொற்றிலிருந்து நம்மைக் காப்பாற்றும் உடையான பேஸ் ஆப் கவர் ஆல் மற்றும் பயோ சாம்பர், இதில் நாம் வெளியில் சென்று வந்தபின் நம்மிடம் உள்ள மொபைல், பர்ஸ் ஆகியவற்றை இந்த பயோ சாம்பரில் ஒரு ஐந்து நிமிடங்கள் வைத்து எடுத்தால் கொரோனா கிருமி இருந்தாலும் இது அழித்துவிடும். இந்தக் கண்டுபிடிப்புகளை ஊக்குவித்த மனப்பான்மை வள்ளியப்பாவின் உயர்பண்பாகும்.

‘உண்டி கொடுத்தோர் உயிர் கொடுத்தோர்’ என்ற வரிகளுக்கு உகந்தவராய் வாழ்ந்து கொண்டிருப்பவர் வள்ளியப்பா. இன்றளவும் சோனா வளாகத்திற்கு வந்தவர்கள் பசியோடு செல்ல அவர் அனுமதிப்பதில்லை. கல்லூரிப் பணி ஆயினும் சரி பொதுப் பணி ஆயினும் சரி வந்தோர்க்கு உணவளிக்கும் வழக்கத்தினைக் கட்டமைத்துள்ளார். அந்தச் சிந்தனையை எளிமையாகவும் பரவலாகவும் செயல்படுத்தும் நோக்கில் உருவாக்கப்

பட்டது தான் அன்னதானம் என்ற அப்ளிகேஷன். இதன்மூலம் உணவின்றிக் கஷ்டப்படுபவர்களுக்கு அருகாமையில் அன்னதானம் வழங்கப்படும் இடங்கள் பற்றிய விவரம் தெரிவிக்கப்படும். அது மட்டுமின்றி அரசு சார்ந்த மற்றும் அரசு சாராத நிறுவனங்களில் வீணாகும் உணவுகள் இருக்கும் இடங்கள் குறித்த தகவலும் இதன்மூலம் தெரிவிக்கப்படும்.

நாம் ஒவ்வொருவரும் ஒவ்வொரு வகையான ஏதோ ஒரு செயலில் அதி ஆற்றலுடையவராக இருப்போம். ஆனாலும் அந்தத் திறமை ஆற்றலைகளைத் தேடிக் கண்டுபிடிக்காமல், சாய்ந்த பக்கமே சாய்ந்து கொண்டிருப்போம். புதிய தடங்களை அமைத்து புத்தாக்கங்களைக் கண்டடையாமல் எல்லோரும் சென்ற வழியிலேயே சென்று, செய்ததையே செய்து கொண்டிருப்போம். அது ஏன்? தகுதியும், தரமும், திறமையும் இருந்தாலும் ஆழ்ந்த பார்வை என்ற முக்கியக் காரணி இல்லாதபோது எல்லாமே வீணாகிறது. இதற்கு மாற்றான 'திறன் மேம்பாட்டுத் தேவை' என்ற சிந்தனையில் பிறந்ததுதான் "Hiremee App'.

"Hiremee App' வேலை வாய்ப்பிற்காகத் தன்னைப் பற்றிப் பதிவு செய்து கொள்வதற்கானது. இதுவும் வீ டெக்னாலஜியின் உருவாக்கமே. இதில் வேலை வாய்ப்பு மட்டுமின்றி பணி நியமனம் குறித்தும் பதிவு செய்து கொள்ளலாம். நிறுவனத்தைப் பணியாளர் தேர்ந்தெடுத்தல் பணியாளரை நிறுவனம் தேர்ந்தெடுத்தல் போன்ற வசதிகளும் இதில் உள்ளது.

Ministry of Industrial CWompany, Hiremee-ஐ அங்கீகரிக்கிறார்கள். மேலும் வேலைவாய்ப்பு அலுவலகத்தில் 'HiremeeApp'-ஐப் பரிந்துரை செய்கிறார்கள். நான் முதல்வன் திட்டத்தில் 'Hiremee App' முக்கிய பங்கு வகிக்கிறது. சோனா கல்லூரி வளாகத்தில், சேலம் மாவட்டத்தில் உள்ள கல்லூரிகளுக்கு நான் முதல்வன் திட்டத்தின் செயல்பாடுகளைத் தமிழ்நாடு அரசு அறிமுகப்படுத்திய நிகழ்விற்கு, அரசு - வள்ளியப்பா மீது கொண்ட நன்மதிப்பே காரணம்.

ஹெல்த் கேர் என்ற நிறுவனம் 2020-ஆம் ஆண்டு வீ டெக்னாலஜிக்கு THE BEST WORK PLACE என்ற விருது வழங்கிச் சிறப்பித்துள்ளது.

'சோனா யுக்தி' வேலை சார்ந்த திறன் மேம்பாடு மற்றும் தொழில் முனைவோர் பயிற்சி மூலம் இளைஞர் மேம்பாட்டிற்கு ஆதரவை வழங்கிவருகிறது. வேலை வாய்ப்புத் தேவைகளை நிறைவு செய்ய எங்களிடம் பல தொழில் நுட்ப மையங்கள் உள்ளன என பெருமிதத்தோடு சொல்கிறது சோனா யுக்தி.

பெரிதாக மாறுவதற்கு வாய்ப்பில்லாதது நம்மில் பெரும்பாலானோரின் அன்றாட நடைமுறை. அவர்களிடம் நாம் எப்படி அற்புதங்களை எதிர்பார்க்க முடியும்? சிறப்பு வெளிப்பாடுகளை எப்படிக் காண முடியும்? தன்னிலை அறியும் திறனையோ, தனித்துவமான வாழ்க்கை முறையையோ எதிர்பார்த்தால் ஏமாற்றம்தான். காலங்காலமாக இப்படித்தான் இருந்து கொண்டிருக்கிறது. இந்த அலுப்பான நடைமுறையிலிருந்து தப்பிப்பதற்குத்தான் நம் தொலைநோக்குப் பார்வையும் அது குறித்த சிறப்புக்கூறுகளும் தேவைப்படுகிறது.

வள்ளியப்பாவின் தொலைநோக்குப் பார்வையும் சிந்தனையும் செயலும் அடுத்த தலைமுறைக்கு ஒரு நல்ல எதிர்காலத்தை உருவாக்கி வைத்திருக்கின்றன. அதுமட்டுமின்றி அவரின் பிள்ளைகள் இருவரும் அவரது பெயர் சொல்லும்படி உருவாகி உள்ளார்கள். தந்தையின் தொலைநோக்குச் சிந்தனையைப் புரிந்து கொண்டு உடனிருந்து செயல்படுத்தி வருகிறார்கள்.

நமக்கு அருகில்தான் இந்தப்பிரபஞ்சத்தின் - பேரண்டத்தின் ஆற்றல் இருக்கிறது. நாம் விரும்பி அழைத்தால் போதும் அது உதவுகிறது. இதுதான் உண்மை.

'இது எப்படி இயலும்?' என்று கேட்கலாம். இது சாத்தியம்தான் என்ற மறைநிலை மெய்மையை விளக்கியவருக்கு நோபல் விருதே கொடுத்தார்கள். அவர் பெயர் டேவிட்பாம். இங்கிலாந்தில் இலண்டன் பல்கலைக்கழகப் பேராசிரியராக இருந்தவர். அவர் கண்டுபிடித்த பேருண்மை இப்பேருலகத்தில் உள்ள எல்லாப் பொருட்களும் - எல்லாம் எல்லாம் ஒன்றுடன் ஒன்று இணைக்கப்பட்டிருக்கின்றன. ஒன்றோடு ஒன்று தொடர்பு கொண்டிருக்கின்றன. இணைந்து இயங்குகின்றன. உறவு கொண்டு பிணைந்து செயல்படுகின்றன என்பதுதான்.

இதை நன்கு புரிந்து கொண்டவர்களாக வள்ளியப்பாவும் அவர்தம் புதல்வர்களும் விளங்கிக் கொண்டிருக்கிறார்கள் என்பதுதான் முக்கியமான செய்தி.

''ஒரு நிமிடம் கூட வேலை இன்றி இருப்பவராகவோ, ஒரு நாள் கூட ஓய்வு எடுப்பவராகவோ இருப்பதற்கு வள்ளியப்பா விரும்பியதேயில்லை. ஞாயிற்றுக்கிழமையைக் கூட பணி நாளாகவே கருதும் இயல்புடையவர். கிடைக்கும் நேரமெல்லாம் பணி செய்யும் நேரமாகவே மாற்றிக் கொண்டார். அவர் செய்த தொழில்களும் அதனால் பெற்ற வெற்றிகளும் ஏராளம்''. செய்யும் தொழிலை தெய்வமாகக் காண்பவர்களுக்குக் காலம் தன்னகத்தே மிகப்பெரிய மதிப்பளிக்கும்.

வள்ளியப்பாவின் மூத்த புதல்வர் சொக்கு வள்ளியப்பாவின் மூத்த செல்வர் வள்ளியப்பா சொக்கலிங்கம் அதி நவீனத் தொழில்நுட்பக் கல்வியில் பெருநாட்டம் கொண்டவர். ஆரம்பகால அமெரிக்க ஆராய்ச்சிப் பல்கலைக்கழகமான மிச்சிகன் பல்கலைக் கழகத்தில் கணினி அறிவியல் படித்தார். அங்குக் கல்வி கற்கும் காலத்தில் கற்பித்தல் உதவியாளராகச் செயற்பட்டு தமிழர் பெருமையை நிறுவிக் காட்டினார் நம் வள்ளியப்பா சொக்கலிங்கம். தொடர்ந்து வள்ளியப்பா சொக்கலிங்கம் கனடாவின் புகழ்பெற்ற பல்கலைக்கழகமான ஆல்பர்ட்டா பல்லைக்கழகத்தில் கணினி அறிவியலில் முதுநிலைக்கல்வி (Master in Computer Science) பயின்றார்.

ஆல்பர்ட்டா பல்கலைக் கழகத்தில் உள்ள அறிவியல் கழகம் உலகின் சில சிறந்த செயற்கை நுண்ணறிவு (A1) மற்றும் இயந்திரக் கற்றல் (ML) ஆராய்ச்சிகளுக்குத் தாயகமாக விளங்குவதால் வள்ளியப்பா சொக்கலிங்கத்திற்குச் செயற்கை நுண்ணறிவுக் கல்வியில் அதிக ஆர்வம் உண்டானது. நுண்ணறிவின் கணக்கீட்டுக் கோட்பாடுகளின் வளர்ச்சிக்கு வழிவகுக்கும் அடிப்படைகளையும் மற்றும் பயன்பாட்டுச் சிறப்புகளையும் கொண்ட செயற்கை நுண்ணறிவில் ஆராய்ச்சி மேற்கொள்ள வேண்டும் என்ற விருப்பம் வள்ளியப்பா சொக்கலிங்கத்திற்கு ஆல்பெர்ட்டாவில் உண்டானது. வள்ளியப்பா சொக்கலிங்கத்தின் அறிவாற்றல் திறனை அறிந்த ஆல்பர்ட்டா பேராசிரியர்கள் அங்கும் அவரை கற்பித்தல்

உதவியாளராக நியமிக்க, அப்பணியையும் கற்கும் காலத்திலேயே மேற்கொண்டு தனது நுண்ணறிவைக் கூர் தீட்டிக் கொண்டார் வள்ளியப்பா சொக்கலிங்கம்.

மிச்சிகன் பல்கலைக் கழகத்தில் படிக்கும் பொழுதே ஜப்பான் மொழியைக் கற்றுக் கொண்ட வள்ளியப்பா சொக்கலிங்கம் இப்போது ஜப்பானில் டோக்கியோ பல்கலைக்கழகத்தில் செயற்கை நுண்ணறிவில் ஆராய்ச்சி மேற்படிப்பைத் தொடர்ந்து கொண்டிருக்கிறார்.

'செர்ரி பூக்கள் நிலத்தில் ஒரு நிறைவான பயணம்' என்ற ஒரு கட்டுரையை இவ்வாண்டு டைம்ஸ் ஆஃப் இந்தியா வெளியிட்ட 'வெளிநாட்டு படிப்பு' என்ற இதழில் வள்ளியப்பா சொக்கலிங்கம் மிகச் சிறப்பாக எழுதியிருக்கிறார். 'வழக்கமான விருப்பங்களைத் தாண்டி ஆராய்ச்சிப் பரப்பை மேற்கொள்ள விரும்பும் நிபுணத்துவம் மிக்கவர்களுக்கு ஜப்பான் ஒரு கவர்ச்சிகரமான இடமாகத் திகழ்கிறது' என்கிறார் சொக்கலிங்கம்.

ஐயா சோனா வள்ளியப்பா வார்த்தைகளால் சொல்ல முடியாத அளவிற்கு வளர்ந்து நிற்கும் மாமனிதர் என்று போற்றுகிற வள்ளியப்பா சொக்கலிங்கம், தான் கற்ற அறிவு நுட்பங்களைச் சோனா தொழில்நுட்பக் கல்லூரியிலும் விளக்கி உரைக்கும் காலம் விரைவில் வரும் என்கிறார்.

அமெரிக்காவின் பாஸ்டனில் வணிக மேலாண்மை பயின்று வரும் பழனியப்பா சொக்கலிங்கம், சோனா வள்ளியப்பாவின் மூத்தசெல்வர் சொக்கு வள்ளியப்பாவின் இளைய செல்வர்.

வணிக மேலாண்மையின் கோட்பாடுகளைச் சிறப்பாகப் பயின்று கொண்டிருக்கிற பழனியப்பா சொக்கலிங்கம் ஐயா சோனா வள்ளியப்பாவின் மீது அளவுகடந்த அன்பைப் பொழிகிறார். 'ஐயாவின் அமைதி எனக்கு ரொம்ப ரொம்பப் பிடிக்கும்' என்கிறார். அது மட்டுமல்லாமல் 'வள்ளியப்பா ஐயா சாப்பிடும்போது சொல்லுகிற கதைகள் எனக்கு ரொம்பப் பிடிக்கும்! நிறைய நீதிகளை அந்தக் கதைகள் மூலமாகக் கற்றுக் கொண்டேன். ஐயாவின் மாணவப் பருவ வாழ்க்கையையும் நன்றாகத் தெரிந்து கொண்டேன்' என்கிறார்.

‘ஐயாவெல்லாம் ரொம்பப் பெரியவங்க. அவங்களப் பத்தி நான் என்ன சொல்ல முடியும்’! நான் படித்து முடித்து இந்தியா வந்த பிறகு ஐயாவுடன் இருந்து அவருடைய பணிகளைத் தொடர விரும்புகிறேன்’ என்று அவரது ஆசையை உள்ளத்தில் உற்சாகமும், மகிழ்ச்சியும் பொங்கச் சொல்கிறார் பழனியப்பா சொக்கலிங்கம்.

எனக்கு ஐயாவின் விடாமுயற்சி பிடிக்கும். நம்பிக்கை உணர்வும் நேர்மையும் ரொம்ப ரொம்பப் பிடிக்கும். அவர் பல சவால்களை நேருக்கு நேர் எதிர் கொண்டவர். அதன் காரணமாகவே அவரை நான் பெரிதும் நேசிக்கிறேன். அவரது எல்லையற்ற ஆர்வம், எப்போதும் கேள்விகளைக் கேட்பது, மேலும் மேலும் அறிய ஆர்வமாக இருப்பது இவையெல்லாமே அவரை மிகுந்த ஈடுபாட்டுடன் இந்த உலகத்துடன் இணைக்கிறது என்று நான் அறிகிறேன். இந்தக் குணங்கள் தான் அவரை ஒரு குறிப்பிடத்தக்க முன்மாதிரியாகவும், நான் உண்மையிலேயே எதிர்பார்க்கும் சிறந்த மனிதராகவும் ஆக்கியிருக்கின்றன.

என் ஐயாவிடமிருந்துதான் நான் தன்னம்பிக்கை மற்றும் உறுதியின் ஆற்றலைக் கற்றுக் கொண்டேன். அசைக்க முடியாத உறுதி படைத்த அவரது திறனைப் பின்பற்ற விரும்புகிறேன் என்கிறார் சோனா வள்ளியப்பாவின் இளைய மகன் தியாகு வள்ளியப்பாவின் மூத்த புதல்வி க்ருஷிதா. இவர் பெங்களூரு Green Wood High என்ற பள்ளியில் பதினொன்றாம் வகுப்புப் படித்துக் கொண்டிருக்கிறார்.

நான் எங்கள் ஐயாவை ‘ஐயா’ என்று மிகுந்த பாசத்தோடு அழைப்பேன். அவர் ‘கேப்டன்’ என்று என்னை அன்போடு அழைப்பார். எங்கள் ஐயாவிடம் எனக்கு பிடித்த விசயங்கள் நிறைய இருக்கின்றன. அவர் அன்பானவர். அறிவானவர். அக்கறையுள்ளவர். அவருக்கு எவ்வளவோ வேலைகள் இருந்தாலும் எங்களுடன் நேரத்தைச் செலவிடுவதைப் பெரிதும் விரும்புவார். ஐயா சாப்பாட்டு மேசையில் எங்களுடன் இருந்தால் நேரம் போவதே தெரியாது. அவரது குழந்தைப் பருவத்துக் கதைகளை எங்களுடன் பகிர்ந்து கொள்வார். அவர் கதை சொல்லும்போது அந்தக் கதைகளில் நான் குட்டி தேவதைகளைப் பார்த்திருக்கிறேன்.

ஐயா எனக்கு எப்போதுமே ஆர்வமாக இருக்கக் கற்றுக் கொடுத்திருக்கிறார். எந்தக் கேள்வியும் நீ கேட்கலாம். கேள்வி கேட்க நீ பயப்படவே கூடாது என்று சொல்லித் தந்திருக்கிறார். எங்கள் ஐயா எங்கள் செல்வம். நாங்கள் அவர்களுக்குச் செல்லம் என்கிறார் தியாகு வள்ளியப்பாவின் இளைய மகள் சோனாக்ஷி. இவர் பெங்களூரு Green Wood High பள்ளியில் ஐந்தாம் வகுப்புப் படித்துக் கொண்டிருக்கிறார்.



# விருட்சத்தில் துளிர்த்த ஒளிக்கீற்று

அனைவரின் வாழ்விலும் எதிர்காலம் குறித்த திட்டமிடல்கள் நிச்சயம் இருக்கும். திட்டமிடுதல் என்பது நிகழ்காலம் பற்றியதல்ல எதிர்காலம் பற்றியது என்பதை நன்கு உணர்ந்திருந்தார் வள்ளியப்பா.

அவர், எதிர்காலம் இதுதான் என தீர்மானிக்க முயலவில்லை. ஏனெனில் நடக்கவிருப்பதைக் கணிக்க இயலும், ஆனால் உருவாக்க இறைவனால் மட்டுமே முடியும் என்பதை அவர் நன்கு அறிவார். அதே சமயம் நிகழ்காலம் பற்றிய விழிப்புணர்வையும் அவர் பெற்றிருந்தார்.

நம் மனதில் எது நிரம்பியிருக்கிறதோ அதுதான் நம் சொர்க்கத்தையும் நரகத்தையும் தீர்மானிக்கிறது. எனவே நாம் நம் மனதில் முயற்சியை நிரப்புவோம். முன்னேற்றத்தை நிரப்புவோம். அன்பை நிரப்புவோம். அளப்பரிய ஆற்றலை நிரப்புவோம் என்ற நெறி உடையவராகத் திகழ்கிறார்.

முடிவு என்னவாக வேண்டுமானாலும் இருக்கலாம். அதைப் பற்றிச் சிந்திப்பதை விட்டுவிட்டுத் தான் வகுத்த திட்டத்தைச் செயல் படுத்தத் தொடங்கினார். அப்படிச் செயல்படுத்திய போது நிறைய அனுபவங்களைப் பெற்றார். தொழில்திறமை என்பது தொழிலை நீங்கள் எப்படிப் பற்றிக் கொள்கிறீர்கள் என்பதைப் பொறுத்திருக்கிறது. அதைவிட அந்தத் தொழில் உங்களைப் பற்றிக் கொண்டு நீங்கள் அதில் கரைந்து போக முடிந்தால், நீங்கள் மிகச் சிறந்த தொழில் முனைவோராக விளங்குவீர்கள். உண்மையில் சொல்லப் போனால் அதுதான் என்னுள் நிகழ்ந்தது என்கிறார் வள்ளியப்பா.

அந்தக் காலத்து மாணவர்கள் தன் சொந்த வாழ்க்கையைப் பற்றி மட்டுமே கவலைப்பட்டுக் கொண்டிருந்தார்கள். ஆனால் இன்றைய மாணவர்களும் மாணவிகளும் அப்படி இருக்க முடியாது. அவர்கள் நாட்டின் எதிர்காலத்தைப் பற்றியும், தன்னைச் சுற்றி இருப்பவர்களைப் பற்றியும் கவலைப்பட வேண்டி இருக்கிறது. கவலைப்பட வேண்டும். அப்படிச் சிந்தித்தால் தான் அவன் சிறந்த மாணவன் ஆவான். தன்னுடைய எதிர்காலம் தன் படிப்பைச் சார்ந்திருக்கிறது. அதோடு மட்டுமல்லாமல் நாட்டின் பொருளாதாரத்தையும் அதன் கோடிக்கணக்கான மக்களின் வாழ்க்கைத் தரத்தையும் பொறுத்ததாக இருக்கிறது என்பதையும் புரிந்து கொள்ள வேண்டியிருக்கிறது. புரிந்து கொள்ள வேண்டும். அப்படி எண்ணம் கொண்டவர்களாக மாணவ மாணவிகளை உருவாக்குவதுதான் எங்கள் கல்விக் குழுமத்தின் இலக்கு என்கிறார் வள்ளியப்பா.

கல்வியை விட, பணத்தை விட, சூழ்நிலைகளை விட, சொல் மற்றும் செயலை விட வெற்றிக்கு அணுகுமுறையானது அதிக முக்கியத்துவம் வாய்ந்தது என்பதை சோனா வள்ளியப்பாவிடமிருந்தே நாங்கள் கற்றுக் கொண்டோம் என்று பலர் சொல்லக் கேட்டிருப்பதில் ஒன்றும் வியப்பில்லை.

அனுபவமே சிறந்த ஆசான், இறைவனை உணர்ந்து மனம் தெளிந்தவர்க்கே அது வாய்க்கப்பெறும் என்பார் கண்ணதாசன். அதன்வழி கடந்தகாலம், நிகழ்காலம், எதிர்காலம் ஆகிய மூன்றையும்

குறித்த புரிதல்கள் அவரிடம் இருந்தது. இந்த நிலையைத்தான் ஆங்கிலத்தில் ‘விஷன்’ என்று அழைப்பார்கள். இது திட்டமிடுதல் அல்ல. அதன்வழியே தோன்ற வேண்டிய தொலைநோக்குப் பார்வை. அந்த வாழ்வியல் இரகசியத்தை வெகு சீக்கிரமாகக் காலம் அவருக்குக் கற்றுத்தந்தது. அதனைக் கொண்டு அவர் கடின உழைப்பாலும் அவர்தம் பண்பாலும் பல பொறுப்புகளை வகித்துக் கொண்டிருக்கிறார். எந்தப் பதவியையும் அவர் தேடிச்செல்லவில்லை. எல்லாம் அவரைத் தேடி வந்தன.

**தியாகராாசர் பாலிடெக்னிக் கல்லூரி**

தியாகராசர் பாலிடெக்னிக் கல்லூரி துவக்கப்பட்ட காரணம் வரலாற்றுச்சிறப்பு மிக்கது. இந்தியா குடியரசு பெற்ற பிறகு மக்களின் நலனுக்காகத் தொழில் நிறுவனங்கள் பல தொடங்க வேண்டும் என அரசு முடிவெடுத்தது. அப்போதைய பிரதமர் ஜவஹர்லால் நேரு அவர்களின் முன்னெடுப்பில் பல தொழில் நிறுவனங்கள் ஏற்படுத்தப் பட்டன. அங்குப் பணிபுரிய தகுதி வாய்ந்த தொழில் வல்லுநர்கள், நிபுணர்கள் நிரம்பத் தேவைப்பட்டனர்.

அச்சமயம் அங்குப் பணியமர்த்தப்பட பணியாட்கள் வெளிநாடு களிலிருந்து தருவிக்க வேண்டிய சூழல் ஏற்பட்டது. அதைத் தவிர்த்து நம் நாட்டு மக்களைப் பணியமர்த்தலாம் என்ற யோசனையை அதிகாரிகள் முன்வைத்தனர். அதிலுள்ள நடைமுறைச்சிக்கல் குறித்தும் அரசின் கவனத்திற்குக் கொண்டு வந்தனர். அது என்னவெனில் நம் நாட்டு மக்கள் தொழில் மற்றும் தொழில் சார்ந்த நுட்பங்களை முழுவதுமாக அறிந்து கொள்ளும் வாய்ப்பு கிடைக்கப் பெறாமல் உள்ளனர் என்ற நிலை தெரிய வந்தது. அந்நிலையைப் போக்க மாணவர் சமுதாயத்தினரைத் தொழில்நுட்பம் சார்ந்த கல்வியைக் கற்கச் செய்வதால் மட்டுமே முடியும் என்பதை உணர்ந்த நேரு அவர்கள் ஓர் உன்னத முடிவெடுக்கிறார்.

நாடெங்கும் பல தொழில்நுட்பக் கல்லூரிகளைத் தொடங்க உத்தரவிட்டார். அவ்வண்ணமே உதயமானது தான் தியாகராசர் பல்தொழில்நுட்பக் கல்லூரி. நேரு அவர்கள் மாநில அரசுக்கு அறிவுறுத்த

காமராஜர் மூலம் கலைத்தந்தையின் கல்விச்சேவையைக் கருத்தில் கொண்டு முதன்முதலாகச் சேலம் மாநகரில் இராஜாஜி அவர்களின் இல்லத்தில் வைத்துத் தியாகராசர் பல்தொழில்நுட்பக் கல்லூரி நிறுவப்பட்டது.

**சோனா தொழில்நுட்பக் கல்லூரி**

பொறியியல் படிக்கும் கனவுகளோடு சேலத்திலிருந்து பெரும்பாலான மாணவர்கள் பெங்களூரு, சென்னை, கோவை திருச்சிக்குச் சென்று கொண்டிருந்தனர். இதில் பெரும் இடைவெளி இருந்தது என்கிறார் சோனா தொழில்நுட்பக் கல்லூரியின் முதல்வர் பேராசிரியர் செந்தில்குமார்.

சொக்கலிங்கம் செட்டியார் அந்த இடைவெளியை நிரப்ப முடிவு செய்து 1997ஆம் ஆண்டு சோனா வளாகத்தில் சோனா தொழில்நுட்பக் கல்லூரியை நிறுவினார். இது மூன்று துறைகள் மற்றும் 180 மாணவர்களுடன் தொடங்கப்பட்டது.

இந்தச் சிந்தனையின் முதல் கரு உருவானதிலிருந்து வள்ளியப்பா பொறியியல் கல்லூரித் திட்டத்தில் தனது தந்தையுடன் கை கோர்த்து வேலைசெய்தார். 1997 இல் சோனா காலேஜ் ஆஃப் டெக்னாலஜி உருவாக்கப்பட்டபோது அது சுயநிதி நிறுவனமா அல்லது உதவி பெறும் நிறுவனமா என்று வள்ளியப்பாவுக்கும் அவரது தந்தைக்கும் இடையே பெரிய விவாதம் நடந்தது.

கல்வியை வழங்குவதன் மூலம் பணப்பலன்கள் எதுவும் இருக்கக்கூடாது. ஆனால் அறிவை விதைப்பதன் மூலம் தேசத்தின் வளர்ச்சியில் பங்கு கொள்ள வேண்டும் என்ற உணர்வு வள்ளியப்பாவுக்கு நீண்ட காலமாக இருந்து வந்தது. இளைஞர்கள் தரமான உயர் கல்விக்காக பெரு நகரங்களுக்குச் செல்ல வேண்டியிருந்தது என்கிறார் வள்ளியப்பா. சோனா தொழில் நுட்பக் கல்லூரி மூலமாக அதை அவர்களின் வீட்டு வாசலில் கொண்டு வந்து தரவேண்டும் என்பது எங்கள் கனவு. அறிவியல், பொறியியல், தொழில்நுட்பம் மற்றும் மேலாண்மை படிப்புகளில் நகரங்களிலிருந்து மாணவர்கள் இங்கு வந்து

படிக்கும் வகையில் பெரும் புகழ் பெற்ற நிறுவனமாக இதை உருவாக்க வேண்டும் என்பதே முதன்மை நோக்கமாக இருந்தது என்கிறார் சோனா வள்ளியப்பா.

ஆராய்ச்சி மனப்பான்மை இல்லாதது இந்தியாவில் கல்வித் துறை வட்டாரங்களில் ஒரு நிலையான கவலையாக உள்ளது என்றும் உரைக்கிறார்.

**சோனா கலை மற்றும் அறிவியல் கல்லூரி**

2017 ஆம் ஆண்டில் ஒரு மனித நேயக் கல்வி நிறுவனத்தைத் தொடங்க வேண்டும் என்ற மக்களின் கோரிக்கைக்குச் செவி சாய்த்து, வள்ளியப்பா சோனா கலை மற்றும் அறிவியல் கல்லூரியை நிறுவினார்.

ஒளிக்கீற்றின் பிரதிபலிப்பில் ஒளிர்ந்த உணர்வுப்பூர்வமான செய்தி ஒன்றைத் தெரிந்து கொண்டு தொடர்ந்து பயணிப்போம். நம் வாழ்வில் பிறர் பேசும் ஒலி நம்மைப் பெருமகிழ்ச்சியில் ஆழ்த்துகிறது. அதனால் மனதில் ஒளி பொருந்தி வாழத்தொடங்குகிறோம்.

எதிர்காலம் சிறப்படைய ஆசீர்வதிக்கும் பெரியோர்கள் அனைவரும் ‘உமது வாழ்வு ஒளி உடையதாகட்டும்’ என ஆசி வழங்கக் கேட்டிருக்கிறோம். மேலும் ஏற்றிய தீப ஒளியால் முக்தி பெற்று அரசாண்ட கதையும் நாமறிவோம். தீமை அழித்து நன்மை தழைத்திட ஒளி நாளைக் கொண்டாடும் தாத்பரியமும் நாம் அறிவோம். அதன் வழி தீப ஒளி கொண்டு இருளை அகற்றி எவ்வாறு ஒளி பெறுகிறோமோ அது போல் அறியாமை என்னும் இருளை அகற்ற பெரு ஒளியாய் வந்தது தான் சோனா கலை மற்றும் அறிவியல் கல்லூரி. அதன் நிமித்தம் கிடைக்கப் பெற்ற நாளும் 2017 தீபத்திருநாள் அன்றுதான். பல்லாயிரம் மாணவர்களுக்கு அறியாமையை அகற்றிக் கல்விக்கண் கொண்டு உலகினைப் பிரகாசமாகக் காண உன்னத நாளில் அனுமதி கைவரப் பெற்ற மகத்துவம் கலை மற்றும் அறிவியல் கல்லூரிக்கு உண்டு.

கல்லூரி வாழ்க்கையின் உயிராகப் போற்றப்படுவது வளாகத்தில் உள்ள சகோதரத்துவம். சோனா கல்லூரி மாணவர்களுக்கு உயிர்ப்புள்ள குடும்பமாகத் திகழ்ந்து, கல்வி தவிர அவர்களுக்குள் மறைந்து கிடக்கும்

திறமைகளை வெளிக் கொண்டுவந்து அவைகளை வளர்க்கவும் ஆராயவும் பெரிதும் துணை நிற்கிறது என்பது இன்று பெரிய அளவில் பேசப்படுவது, பெரிதும் ஊக்கத்தை அளிப்பதாக இங்குள்ள பேராசிரியப் பெருமக்கள் உரைக்கிறார்கள்.

**சோனா பப்ளிக் பள்ளி**

சோனா பப்ளிக் பள்ளி, தியாகராசர் பாலிடெக்னிக் கல்லூரி சோனா தொழில்நுட்பக் கல்லூரி, சோனா கலை மற்றும் அறிவியல் கல்லூரி ஆகியவற்றை உள்ளடக்கிய சோனா கல்விக் குழும நிறுவனங்களின் நற்பண்புமிக்க அறிவார்ந்த குழுவினரால் நிறுவப்பட்டது. அறுபதாண்டு களுக்கு மேலாக கல்வியில் தூய தொண்டாற்றி வரும் நெறியாளர்களால் தோற்றுவிக்கப்பட்ட இப்பள்ளி நல்லொழுக்கங்களோடும் உயர்தர நிலைகளோடும் கல்வியைக் கற்றுத் தருகிறது.

பள்ளி ஒரு மிகச் சிறந்த சூழலை உருவாக்கித் தருகிறது. குழந்தைகள் கற்றலை மகிழ்ச்சியாகவும் ஆக்கப்பூர்வமாகவும் மாற்றுவதற்கு சோனா பப்ளிக் பள்ளி மிகச் சரியான இடமாகத் திகழும். புதிய தேடல்களை உருவாக்கும் மையமாகவும் விளங்கும்.

புதுமையான வழிமுறைகள் மூலம் வளர்ந்துவரும் போக்குகளுக்கு ஏற்ப இளம் குழந்தைகளுக்குத் தரமான மற்றும் முழுமையான கல்வியை வழங்குவதற்காக ‘இளம் மனதை புதுமையுடன் வளர்ப்பது’ என்ற குறிக்கோளுடன் சோனா பள்ளி நிறுவப்பட்டது.

சோனா வள்ளியப்பா பள்ளியில் அர்ப்பணிப்பு உணர்வுடன் கூடிய அறிவுக்கூர்மையுள்ள ஆசிரியர்கள் உள்ளார்கள். அவர்கள் வகுப்பறைகளில் புதுமையான கற்பித்தல் செயல்முறையை ஒழுங்கமைப்பதன் மூலம் மாணவர்களை உருவாக்குவதில் அதிசயங்களைச் செய்து வருகிறார்கள்.

**சோனா இயற்கை மருத்துவம் மற்றும் யோகா கல்லூரி**

இயற்கை மருத்துவம் என்பது உடல், மனம் தார்மீக மற்றும் ஆன்மீக வாழ்க்கை தளங்களின் இயற்கையின் ஆக்கப்பூர்வமான முக்கியத்துவத்துடன் இணக்கமான மனிதனை உருவாக்கும் ஒரு அமைப்பாகும்.

தொழில்நுட்பம், தொழில்நுட்பக் கல்வி மற்றும் ஆராய்ச்சியில் சிறந்து விளங்கும் சோனா, இந்தியப் பாரம்பரிய மருந்துகள் மற்றும் நலமார்ந்த நடைமுறைகளை மேம்படுத்துவதற்கும் நீடித்த உடல், மன வளர்ச்சிக்கான சூழலை உருவாக்குவதற்கான இடமாக சோனா நேச்சுரோபதி மற்றும் யோகா கல்லூரி திகழ்கிறது என்கிறார் தியாகு வள்ளியப்பா.

பெங்களூரு வள்ளியப்பா டெக்ஸ்டைல்ஸ், பெங்களூரு வீ டெக்னாலஜிஸ் பிரைவேட் லிமிடெட், பெங்களூர் கர்நாடகா டெக்ஸ்டைல்ஸ் மில் அசோசியேஷன், ஆகியவற்றின் தலைவராக, கர்நாடக மாநில இண்டஸ்ட்ரியல் இன்வெஸ்ட்மெண்ட், டெவலப்மெண்ட் கார்ப்பரேஷன் லிமிடெட், ஆகியவற்றின் இயக்குநராக, கர்நாடகா நகரத்தார் சங்கத் தலைவராக என வள்ளியப்பா வகித்த பொறுப்புகள் ஏராளம்.

சோனா வள்ளியப்பா டெக்ஸ்டைல்ஸ் தொடங்கி வீ டெக்னாலஜி வரை 35-க்கும் மேற்பட்ட நிறுவனங்களின் வளர்ச்சிக்கு ஓய்வின்றி உழைத்து வருகிறார். வள்ளியப்பாவின் பொது வாழ்க்கை பச்சையப்பன் கல்லூரியில் மாணவர் தலைவராக 1962 இல் துவங்கியது. அதைத் தொடர்ந்து பல அமைப்புகளின் தலைவராக இருந்து செயல்பட்டார், தொடர்ந்து செயல்பட்டு வருகின்றார். அகில இந்திய அமைப்புகளில் செயற்குழு உறுப்பினராக, கர்நாடக மாநிலத் தொழில் மற்றும் வர்த்தக அமைப்பின் தலைவராக இவர் இருந்த போது தொழிலதிபர்கள் அடங்கிய உயர் மட்டக் குழுவிற்குத் தலைமையேற்று 'தான் பெற்ற இன்பம் பெறுக இவ்வையகம்' என அவர்களை ஆஸ்திரேலியா, சிங்கப்பூர், மலேசியா ஆகிய நாடுகளுக்கு வணிகப் பயணம் அழைத்துச் சென்றார்.

திரைகடல் ஓடித் திரவியம் தேட ஏதுவாகப் போக்குவரத்து வசதியின் அவசியம் வலியுறுத்திப் (1988 - 89 ஆம் ஆண்டு) பெங்களூரில் பன்னாட்டு விமான நிலையம் அமைக்க பெருமுயற்சி எடுத்தவர்களில் வள்ளிப்பா அவர்களும் குறிப்பிடத்தக்கவர்.

அமெரிக்க அரசின் விசேட அழைப்பின் பேரில் ஒவ்வொரு ஆண்டும் ஒரு முக்கிய பிரமுகர் அழைக்கப்படும் நடைமுறை பிரகடனப் படுத்தப்பட்டு வருகிறது. திறன்களைக் கண்டு வழங்கப்படும் வாய்ப்பு

பலருக்குக் கிடக்கும். இறைவன் தன் அருள் கொண்டு வழங்கப்படும் வாய்ப்புகள் வெகு சிலருக்கே கிடைக்கும். அப்படி ஒரு வாய்ப்பு வள்ளியப்பாவிற்குக் கிடைத்தது. ஆம். காலம் அவரை மீண்டும் ஒருமுறை உன்னத நிலையின் உச்சத்திற்கு அழைத்துச் சென்றது. முன்னாள் முதல்வர் எம்.ஜி.இராமச்சந்திரன் அவர்களுக்கு என்ன வாய்ப்பு கிடைத்ததோ அதே வாய்ப்பு வள்ளியப்பாவைத் தேடி வந்தது. அத்தகு சிறப்பு நபராக வள்ளியப்பா தேர்ந்தெடுக்கப்பட்டு அந்நாட்டின் முக்கிய நகரங்களுக்கு அழைத்துச் செல்லப்பட்டார். இந்த அரிய வாய்ப்பை அமெரிக்க அரசு வள்ளியப்பாவுக்கு 1990 ஆம் ஆண்டு வழங்கிக் கௌரவித்தது. தொழில் நிமித்தமாகவும் உயர்மட்ட தூதுக் குழு தூதுவர் என்ற முறையிலும் அமெரிக்கா, கனடா, இங்கிலாந்து, பிரான்சு, ஜெர்மனி, ஹாலந்து, ஜப்பான், கொரியா, தாய்லாந்து, பாகிஸ்தான், சீனா என பல வெளிநாடுகளுக்கும் சென்று அனுபவப் பாடம் கற்று வந்து தன் தொழில் வளத்தை மென்மேலும் செப்பனிட்டார் வள்ளியப்பா.

ஆங்கிலேயர் காலத்தில் ஒரு புது ஆளுநருக்கு விருந்து நடந்தது. அங்கே மேதகு சீனிவாச சாஸ்திரியார் மிகச் சிறப்பாக ஆங்கிலம் பேசியதைக் கேட்டு ஆளுநர் மகிழ்ந்து போனார். ‘ஆங்கிலம் உங்கள் தாய்மொழி இல்லையே, அப்படியிருந்தும் அதை இவ்வளவு முதல் தரமாகப் பேசுகிறீர்களே? இது எப்படி? எங்கள் ஆங்கியேலர்களில் சிலர் ஆக்ஸ்போர்டு, கேம்ப்ரிட்ஜ் ஆகிய பல்கலைக் கழகங்களுக்கெல்லாம் போகிறார்கள். அவர்கள் கூட இவ்வளவு அழகாக ஆங்கிலம் பேசவில்லையே’ என்று சாஸ்திரியாரைக் கேட்டார் ஆளுநர்.

சாஸ்திரியார் சிறிது தயங்கிக் கொண்டே ‘இதன் காரணம் என்னவோ எனக்குத் தெரியாது. இரண்டாயிரம் வருடமாய் நிலவி வரும் ஒரு கலைப்பண்பாட்டிலே பிறந்தவன் அல்லவா நான், அதுவே ஒருவேளை காரணமாயிருக்கலாம்’ என்றார். நம் வள்ளியப்பாவும் அழகாக ஆங்கிலம் பேசுகிறவராக இருக்கிறார். எப்படி என்று கேட்டால், சாஸ்திரியார் கூறிய அதே காரணங்களையே வள்ளியப்பாவும் கூறுகிறார். இரண்டு பேருமே நம் தமிழ்ப்பண்பாட்டையே காரணமாகக் கூறுவதை அறிந்து தமிழர்களாகிய நாம் பெருமை கொள்ளலாம்.

வலிமையான நம்பிக்கை நமக்குள் இருக்கும்போது சாத்திய மற்றதாகக் கூறப்படுகின்ற ஒன்றைச் செய்வதற்கான வழிகளைக் கண்டுபிடிப்பதற்கு அது என்னுடைய மனத்தைத் தூண்டுகிறது என்பதை முதல்முயற்சியிலேயே கண்டுபிடித்துவிட்டேன். அதை இன்று வரை நடைமுறைப்படுத்தி வருகிறேன் என்று சொல்வதை மிகப்பெரிய சமூகப் பயனாகவே கருதுகிறேன். அப்படிச் சொல்லுவது எனக்கு மிகப்பெரிய பெருமிதத்தையே அளிக்கிறது.

எப்போதும் உற்சாகத்துடனும் செயல்துடிப்புடனும் இருக்க என்னைப் பழக்கிக் கொண்டேன். ‘நான் முக்கியமானவன்’ என்ற மனப்போக்கை என்னுள்ளேயே நான் வளர்த்துக் கொண்டேன் என்று வள்ளியப்பா சொல்லுவது முன்னேற்றத்தை விரும்புபவர்களின் சிந்தனைக்குரியதே.

இன்றைய சவால்கள் நிறைந்த உலகத்தில் யார் தன்னுடைய முழுமையான திறமைகளைப் பயன்படுத்துகின்றனரோ அவர்களால்தான் வெற்றியடைய முடியும். தன்னிடம் இத்திறமைகள் உள்ளன என்பதை வெளிக்காட்ட வேண்டும்.

நான் கொண்டிருந்த நம்பிக்கைதான் ஒன்றைச் சாதிப்பதற்கான ஆற்றலைத் தூண்டிவிடுகிறது. ஒவ்வொரு பின்னடைவிலிருந்தும் ஏதோ ஒன்றைக் கற்றுக் கொண்டே வந்திருக்கிறேன்.

காலத்திற்குத் தகுந்தாற்போல் தொழில் துறையின் நுணுக்கங்களைக் கற்றுக்கொண்டு சாதித்துக் கொண்டே இருக்கிறார் வள்ளியப்பா. அவரது இடைவிடா முயற்சியால் அவரது தொழில் நிறுவனங்களின் எண்ணிக்கை உயர்ந்து கொண்டே இருக்கிறது. ஒவ்வொரு பெற்றோரும் தங்கள் குழந்தைகளை நாகரீகமும் சிறந்த பண்புகளும் கொண்டவர்களாக குடிமை உணர்வுடன் வளர்ப்பது முதன்மையானது. கடவுளிடம் பக்தியையும், சமூகத்தின் மீது அன்பையும் அவர்ளுக்குக் கற்றுத் தர வேண்டும். அப்போதுதான் மாற்றங்கள் சாத்தியம். அதுவே தீர்வும் ஆகும் என்று உரைக்கிற சம உரிமை ஆர்வலர் நம் வள்ளியப்பா.



# புகலிடம் தரும் புனிதத்துவம்

இறைவன் படைத்தவைகளில் உயர்வு தாழ்வு கிடையாது. எனினும் சக உயிர்களிடத்தும் சக மனிதனிடத்தும் இருந்து ஒருவனை உயர்த்திக் காட்டுவது கல்வியே. மனிதனின் எழுபிறப்பிலும் உடன் வருவது கல்வி. கல்விக்கண் திறந்தவர்களை இந்த உலகம் இறைவனாகக் கண்டுணர்ந்த வரலாற்றை நாம் அறிவோம்.

நன்னிலத்தில் விதைக்கப்பட்ட விதை வேரூன்றி, வலிமையான விருட்சமாய் வளர்ந்து கிளை தந்து விழுதுகள் துணை கொண்டு எண்ணற்றோர்க்கு நிழல் தந்து புகலிடம் கொடுத்துத் தொடர்ந்து பலனளித்து வரும் விருட்சத்தின் பெருமைமிகு வரலாறு உலகத்தால் படிக்கப்பட வேண்டும்.

**''அன்ன சத்திரம் ஆயிரம் வைத்தல்**
**ஆலயம் பதினாயிரம் நாட்டல்**
**பின்னருள்ள தருமங்கள் யாவும்**

**பெயர் விளங்கி ஒளிர நிறுத்தல்**
**அன்னயாவினும் புண்ணியம் கோடி**
**ஆங்கோர் ஏழைக்கு எழுத்தறிவித்தல்''**

என்ற மகாகவி பாரதியின் வரிகளைத் தனது வாழ்வாக்கியவர் வள்ளியப்பா. மாணவர்களுக்கு நவீனக் கல்வி வேண்டிப் புதிய பாதைகளை உருவாக்கித் தந்தவர்.

நமக்குள் நன்மையை, அழகை, இன்பத்தை நிரப்பிக் கொண்டு நாம் வாழும் இந்த உலகத்தைப் பார்க்கிறபோது அந்த உலகமும் நல்லதாக அழகானதாக இன்பமானதாக ஆகிவிடும் என்றொரு நம்பிக்கை எனக்கு உண்டு. இந்த நம்பிக்கையை பல சந்தர்ப்பங்களில் வெளிப்படுத்தி இருக்கிறேன் என்று சொல்லும் வள்ளியப்பா பல்வேறு தொழில் துறைகளில் தன்னை அடையாளப்படுத்திக் கொண்டு சாதித்துக் காட்டி வருகிறவர். 'ஒரு சமூகம் வளர்ச்சிப் பாதையில் செல்ல வேண்டுமானால் அந்த சமூகம் கல்வியில் சிறந்து இருக்க வேண்டியது அவசியம்' என சிந்தித்துச் செயல்படத் தொடங்கியவர்.

**''நான் ஓய்வின்றி எப்போதும் உழைத்துக் கொண்டே இருப்பேன். உழைப்பை முழுமையாகச் செய்யாமல் ஓய்வெடுப்பது மூடத்தனம்'' என்பார் வள்ளியப்பா.**

தனது தாத்தா கலைத்தந்தை, தந்தை சொக்கலிங்கம் செட்டியார் அவர்களை வாழ்த்தியும் வணங்கியும் தனது கல்விச் சிந்தனையை விரிவுப்படுத்தினார் வள்ளியப்பா. அவர்கள் உருவாக்கித் தந்த கல்வி நிறுவனங்களோடு நவீனக் கல்வி குறித்த தனது கனவுகளையும் நனவாக்கிக் கொண்டிருக்கிறார். அதற்கான அவரது உழைப்பு அளப்பரியது.

1958இல் சேலத்தில் ஆரம்பிக்கப்பட்ட தியாகராசர் பாலிடெக்னிக் கல்லூரி வள்ளியப்பா ஆளுமையில் எல்லா துறைகளிலும் சிறந்து விளங்கிக் கொண்டிருக்கிறது. கல்வியையும் அது சார்ந்த தொழில் பயிற்சியையும் மாணவர்களுக்கு வழங்க வேண்டும் என்பதில் தீவிரமான கவனம் செலுத்திக் கொண்டிருக்கிறார்.

- தியாகராஜர் பல்தொழில்நுட்பக் கல்லூரி.
- சோனா தொழில் நுட்பக் கல்லூரி.
- சோனா ஸ்கூல் ஆஃப் மேனேஜ்மென்ட்.
- சோனா கலை மற்றும் அறிவியல் கல்லூரி.
- சோனா வள்ளியப்பா பள்ளி.
- சோனா இயற்கை மருத்துவம் மற்றும் யோகா கல்லூரி என்று சோனா கல்விக் குழுமம் இன்று வளர்ந்தோங்கித் திகழ்ந்து பெரும் அறிவு மலர்ச்சியை உண்டாக்கியிருக்கிறது.

கற்றறிவோடு கூடிய பட்டறிவு, பண்புநலன், ஒழுக்கம், பரந்து பட்ட சிந்தனைத் திறன் ஆகியவற்றைத் தான் முன்நின்று பரிசோதித்த பின்னரே ஆசிரியர்களைத் தன் கல்வி நிறுவனங்களில் வள்ளியப்பா பணியமர்த்துவார். நல்ல மாணவனாக இருக்க விரும்புபவரே நல்ல ஆசிரியராகவும் இருக்க முடியும் என உறுதியாக நம்பக்கூடியவர் வள்ளியப்பா.

தன் பணியாளர்களைத் தன் குடும்பம் போல் பாவிக்கும் மனப்பான்மை கொண்டவர். மாணவர்களின் வளர்ச்சிக்கு உழைக்கும் ஆசிரியர்களுக்குத் தன்னையும் வளர்த்துக் கொள்ள களம் விரித்து ஊக்கப்படுத்துபவர். தன் கல்வி நிறுவனங்களில் பணிபுரியும் அனைவரின் உடல் நலம் மற்றும் மனநலம் குறித்து அக்கறை கொள்பவர்.

எதைப் பற்றியும் எப்போதும் பொய் சொல்லாதீர்கள். எந்தச் சிக்கல்கள் வந்தாலும் எப்போதும் உண்மையையே பேசிப் பழகுங்கள். பொய் நரகத்துக்கு வழி வகுக்கும் என்று வள்ளியப்பா சொன்னது சாதாரண வார்த்தையில்லை. குழுமத்தின் நிலைத்த நீடித்த புகழுக்கு அவர் தூவிய ஆற்றலுள்ள நல்விதை.

இயற்கை அழகு கொஞ்சும் பசுமை போர்த்திய பலவகையான மரங்கள், மூலிகைச் செடிகள், கண்ணைக் கவரும் வண்ணங்களில் பூத்துக் குலுங்கும் பூக்கள் என கல்வி வளாகங்கள் முழுதும் நிறைந்துள்ள

பசுமைச் சூழலே அதற்குச் சாட்சி. கல்லூரி வளாகத்தில் நுழைந்த பின் சுவாசிக்கும் தூய்மையான காற்று அனைவரின் உடல் நலத்திற்கும் உகந்ததாக அமையும். இத்தகு சூழலில் தான் கல்லூரி அமைய வேண்டும் என்பதில் வள்ளியப்பா உறுதியாக இருக்கிறார்.

கட்டுமானப் பணிகள் நடைபெற்ற போது எந்த மரங்களையும் வெட்டக் கூடாது என்றும் எந்தச் செடிவகைகளையும் அழித்துவிடக் கூடாது என்றும் பணியாளர்களுக்கு ஆணையிட்டிருந்தார். கல்விக்கான புகலிடமாக சோனா இருப்பது போல் எண்ணற்ற பறவைகளின் சரணாலயமாக சோனாவின் இயற்கைச் சூழல் அமைந்திருக்கிறது. போக்குவரத்து நெரிசலில் சிக்கித் தவித்துப் போராட்ட மனநிலையோடு உள்நுழையும் போது கல்லூரியின் இயற்கைச் சூழல் நிச்சயம் நம்மை ஆசுவாசப்படுத்தும். வள்ளியப்பா எனும் விருட்சத்தின் நிழலில் கல்விப் பணியாளர்களும் மாணவர்களும் தஞ்சம் அடைந்துள்ளது போல் சோனாவின் இயற்கை தரும் நிழலில் பலபேர் இளைப்பாறிக் கொண்டிருக்கின்றனர்.

கடந்த காலத்திலேயே இருந்து கொண்டு அதிலேயே கனவு கண்டு களிப்பதென்பது வள்ளியப்பாவுக்குப் பிடிக்கவே பிடிக்காது. தங்கள் பணியில் மகிழ்ச்சியைப் கொண்டிருப்பவர்களிடமிருந்தே புதுமை வருகிறது என்பதை வள்ளியப்பாவைப் பார்த்து நீங்கள் தெரிந்து கொள்ளலாம்.

வள்ளியப்பா தன் நிறுவனத்தில் பயிலும் மாணவர்களின் நிகழ்காலம் பற்றிய சிந்தனையோடு மட்டுமல்லாமல் எதிர்காலம் குறித்தும் அக்கறை கொண்டிருக்கிறார். மாணவர்களுடைய தனிப்பட்ட விசயங்களில் பங்கெடுத்துக் கொள்ளுதல், அவர்களுக்கு எல்லா வகையிலும் துணை நிற்றல், தனிப்பட்ட முறையில் மாணவர்கள் மீது அக்கறை செலுத்துதல் ஆகிய மேலான செயல்களை நம் வள்ளியப்பாவிடம் பார்க்க முடியும்.

மாணவர்கள் கல்வி கற்கும் காலத்தில் அவர்களை ஊக்கப் படுத்தும் வகையில் பெற்றோரை இழந்த மாணவர்களுக்கும், ஏழை மாணவர்களுக்கும் இலவசக் கல்வி, முதல் மதிப்பெண் எடுக்கும் மாணவர்களுக்கு ஊக்கத்தொகை, கட்டணச் சலுகைகள் ஆகியவற்றை

வருடந்தோறும் செய்து வருகிறார். தனது கல்லூரிக்குப் படிக்க வரும் முன்பே பன்னிரண்டாம் வகுப்புப் பொதுத் தேர்வில் முதல் மதிப்பெண் பெற்ற மாணவர்களுக்கு ஊக்கத் தொகையை ரொக்கப் பரிசாக வழங்கும் அன்பு உள்ளம் கொண்டவர் வள்ளியப்பா.

இந்நிகழ்வு பரவலான இடங்களில் நடக்கலாம். எங்கும் நடைபெறாத உணர்ச்சிமிகு உண்மை நிகழ்வினை வள்ளியப்பா நிகழ்த்திக் காட்டினார். சோனா கல்விக் குழுமத்தின் பணியாளர்கள் என்றென்றும் வள்ளியப்பாவுக்கு நன்றிபாராட்டும் ஒரு நிகழ்வு அரங்கேறியது.

கொரோனா பெருந்தொற்றுக் காலத்தில் எத்தனையோ நிறுவனங்களில் பணியாட்கள் பணிநீக்கம் செய்யப்பட்டனர். ஆட்குறைப்பு செய்யப்பட்டது, ஊதியக் குறைப்பு, பகுதி ஊதியம், ஊதியமின்மை ஆகியன நடைமுறைப்படுத்தப்பட்டு மக்களின் பொருளாதார நிலை மிகவும் கவலைக்கிடமாகிப் போனது. அதற்கு மாறாகத் தன் நிறுவன மக்களின் நலன் காக்க உயர்ந்த உள்ளத்துடன் பெருமுடிவு எடுத்தார். அதன்படி பெருந்தொற்று முடியும் வரை தன் ஊழியர்களின் ஊதியத்தைப் பிடித்தம் ஏதுமின்றி முழுவதுமாக வழங்கிடச் செய்தார். ஒளிமிகு பிரம்மாண்ட விருட்சம் தன்னை நம்பி வந்தோர்க்குப் புகலிடம் தந்து தன் பண்பில் சிறந்து வானுயர ஓங்கி வளர்ந்து நிற்கிறது.

பயிர்களைச் சுமந்து நிற்கும்போது நிலம் அழகு பெறுகிறது. பாசத்தைச் சுமந்து நிற்கும்போது மனிதர்கள் அழகு பெறுகிறார்கள். அப்படிப்பட்ட பாச மனிதர் தான் சோனா வள்ளியப்பா. ஆகவேதான் அவரை ஆன்மீகப் புனிதத் தன்மையின் சிகரமென ஓங்கி நிற்கும் ஆளுமைத் திறனுடைய பேராளர் என்று உலகம் ஏற்றிக் கொண்டாடுகிறது.



# தீராத் தமிழ்க்காதல்

இறைவனின் படைப்பில் மனிதன் சற்றே சிறப்பு வாய்ந்தவன். மனிதப் படைப்பு மட்டுமே தனக்கான ஒன்றைத் தானே தேர்ந்தெடுத்து அதன்மீது பற்றுதல் கொண்டு உயிர்ப்புடன் வாழும் சாத்தியம் பெற்றது. வாழ்வுக்கான தேடலின் உறுதிதான் மனித வாழ்கையைப் பற்றுதலுடன் வைத்துக் கொள்கிறது.

எதையும் கற்றுக்கொள்ளும் ஆர்வம் இருந்தால் மட்டுமே பற்றானது நிலைக்கும், பின் சிறக்கும். மனிதனை நல்வழிக்கு அழைத்துச் சென்று மகத்தான சாதனைகளை நிதழ்த்துவதற்கு ஆர்வம் தான் மிகச்சிறந்த ஆயுதம். தன் வரலாற்றுப் பாதையைத் தொழில்துறை, கல்விப் பயணம் என தகவமைத்துக் கொண்ட வள்ளியப்பா உள்ளத்து உணர்ச்சியை உணர்த்தும் உன்னத மொழியாம் தமிழ்மொழியின் மீது எல்லையில்லாத ஆர்வம் கொண்டிருந்தார்.

பணம், பொருள், பதவிக்காக ஒரு மொழியையும் பெருமைக்காக ஒரு மொழியையும் நாட்டுப்பற்றிற்காக ஒரு மொழியையும் பற்றிக் கொண்டு ஊசலாடும் மனிதர்கள் மத்தியில் இயற்கை வரைந்த இனிய மொழி, இறைவன் தந்த அமுத மொழியாம் தமிழ் மொழியைத் தன் ஆன்ம மொழியாக்கிக் கொண்டவர் வள்ளியப்பா.

வள்ளியப்பா பள்ளி மற்றும் கல்லூரிக் காலங்களில் தனது தமிழ் மீதான புரிதலை வளர்த்துக் கொள்ள கவிதைகளையும் கருத்துகளையும் படைப்புகளாக இதழ்களில் வெளியிட்டார். பள்ளியின் தமிழாசிரியர் உட்பட பலரும் இவரது தமிழ்த் திறனைப் பாராட்ட அந்த ஊக்கம் பெரும் புத்துணர்ச்சியையும் தமிழ் மீது தீராத ஆர்வத்தையும் உண்டாக்கியது. தனக்குள் இருந்த படைப்பு ஆர்வத்தைச் சொற்களைக் கூட்டியும் வாக்கியத்தைப் பெருக்கியும் கருத்தை மெருகேற்றியும் கதை வடிவில் முழுமைப்படுத்திக் கொண்டார்.

இவ்வாறு பள்ளிப்பருவம் முழுவதும் பல தமிழாசிரியர்கள் மூலமாகத் தமிழ் இலக்கண, இலக்கியங்களை ஆர்வத்துடன் கற்றார். தேவாரம், திருவாசகம், திருமந்திரம், கம்பராமாயணம், திருக்குறள் போன்ற இலக்கியங்களில் மிகுந்த ஈடுபாடு கொண்டு விளங்கினார். பள்ளியின் ஆண்டு மலருக்காக அவர் படைத்த கதையின் கருத்து ஆன்மீகத்திற்கான உள்ளொளித் தேடுதலின் முதற்படி.

அக்கதையில் வரும் ‘நான்’ என்ற சொல்லானது அரசனின் அகம்பாவத்தை வெளிப்படுத்துவதாகவும் அதனால் தன்னுடைய செல்வங்களை அரசன் இழந்ததாகவும் எடுத்துரைக்கிறார். பற்றற்றவனின் மீது வைக்கும் பற்று ‘நான்’ என்று இல்லாமல் இருக்க வேண்டும். அப்பொழுதுதான் இறைநிலையை உணர முடியும் என்ற கருத்தினைக் கோர்த்து பள்ளியின் ஆண்டு மலருக்குப் படைத்தளித்தார். பள்ளிப் பருவத்திலேயே ‘குணக்கேடுகள் ஊறு விளைவிக்கும்’ என்ற பக்குவநிலை குறித்து அறிந்து வைத்திருந்தார்.

இன்றும் அவரது மேடைப்பேச்சுகளின் தொடக்கமாக ‘எல்லோருக்கும் வணக்கம்’ என்னும் தமிழ்ச் சொல்லாடலில் தான் தொடங்குவார். தொழில்துறை சார்ந்த கூட்டமாகவோ சமூகம் சார்ந்த கூட்டமாகவோ

கல்வி நிலையங்கள் சார்ந்த நிகழ்வுகளாகவோ அல்லது வேறு எந்த ஒன்றாக இருப்பினும் சரி, அவரது பேச்சின் தொடக்கம் இப்படித்தான் இருக்கும். அவர் தனக்கு மிகவும் பிடித்த தமிழ் ஆசிரியர் என திரு.வரதநஞ்சையா பிள்ளை அவர்களை அடிக்கடிச் சொல்லி அவரை நினைவுகூர்வதுண்டு. தனக்குள் தனித்தமிழ் மீதான ஆர்வத்தைத் தூண்டியவர்களில் அவரும் ஒருவர் என்பார்.

காரணம் தமிழ்ச் சொல்லின் திறத்தை உரையாடல்கள் மூலம் வெளிப்படுத்தும் திரு.வரதநஞ்சையா பிள்ளையின் தனித்துவம் தனக்குத் தமிழ் ஆர்வத்தைத் தூண்டியது என்பார். அவரிடத்தில் தான் கற்றுக் கொண்டதை இன்றும் பல மேடைகளில் உணர்வுப்பூர்வமாக வெளிப்படுத்தி வரும் இயல்பு நம்மையும் ஈர்க்கும் சிறப்படையது. அவர் சொன்ன கதைகளில் ஒன்று தன்னைத் தமிழ்பால் பற்றுக் கொள்ளச் செய்தது என வள்ளியப்பா பகிர்ந்து கொண்டார்.

புலவர் ஒருவர் அரசரைச் சந்திக்க வருகிறார். அரசரைப் புகழ்ந்து அந்தப் புலவர் பாடிய பாடலின் சிறப்பு அரசரை வெகுவாகக் கவர்ந்திட உம்மை ஏற்கனவே பார்த்தது போல் இருக்கின்றது என அரசன் கேட்க ஆம் நான் முன்னர் ஒருமுறை தங்கள் சிறப்பு குறித்து தங்கள் முன் பாடியிருக்கிறேன் என்றார் புலவர். அப்படியா! என்று சொல்லியபடி புலவருக்கு 100 பொற்காசுகளைப் பரிசாக வழங்கினார் அரசர். பொற்காசுகளைப் பெற்றுக்கொண்ட பின்பும் புலவர் அங்கிருந்து நகராமல் இருக்கவே அரசர் காரணம் கேட்டார். இல்லை அரசே தாங்கள் எனக்குத் தருவதாகச் சொன்ன பொற்காசுகள் இன்னும் எனக்கு முழுமையாகக் கிடைக்கவில்லை என்றார் புலவர். அரசருக்குக் குழப்பம் ஏற்படவே புலவரை நோக்கி, நான் உங்களுக்கு 100 பொற்காசுகள் தருவதாகச் சொன்னேன்.அதை தான் கொடுத்து விட்டேனே என்றார். இல்லை அரசே! தாங்கள் நான் பாடல் பாடி முடித்துக் கிளம்பும் தருவாயில் ‘‘புலவரே இரு நூறு பொற்காசுகளைப் பெற்றுக்கொள்’’ என்றீர்கள். அந்த இரு நூறு பொற்காசுகளை இன்னும் தரவில்லை என்றார். வியந்த அரசன் புலவர் விரும்பியபடி 200 பொற்காசுகளை வழங்கினான்.

பொற்காசுகளைப் பெற்ற பின்னரும் மீண்டும் புலவர் நகராமல் நின்று கொண்டிருந்தார். இப்போது என்ன புலவரே? என அரசன் வினவ, இல்லை அரசே, ''நான் பாடுவதற்கு முன் நூறு பொற்காசுகளைத் தருவதாகச் சொன்னீர்கள். இன்னும் கிடைக்கவில்லை அதுதான்'' என்றார். புலவரின் பேச்சு சாமர்த்தியத்தைக் கண்ட அரசனும் 300 பொற்காசுகளை வழங்க ஆணையிட்டான். இருந்தும் புலவர் நகர்ந்த பாடில்லை. அரசன் இன்னும் என்ன ஐயா? என்று கேட்க ''அரசே நல்ல பாடல்களுக்கு நான் நூறு பொற்காசுகள் தருவேன்'' என்றீர்கள். ஆக எனக்கு இன்னும் நானூறு பொற்காசுகள் வரவேண்டியுள்ளது என்று சொல்ல தமிழின் சிறப்பையும் அதை எடுத்தாண்ட புலவரின் அறிவுத் திறனையும் வியந்து புலவர் விரும்பியது போல அவருக்கு நானூறு பொற்காசுகளை வழங்கினான்.

இந்தக் கதையை திரு.வரதநஞ்சையா பிள்ளை சொல்லக் கேட்ட வள்ளியப்பாவின் மனம் அதன் பொருளிலிருந்து மீளாமல் இலயித்திருந்ததாகச் சொல்லுவார்.

'தமிழைப் பிழையின்றி பேசுவதும் எழுதுவதும் நமது பண்பாட்டைக் காக்கும்' என்பதில் பெரும் நம்பிக்கைக் கொண்டவராக வள்ளியப்பா விளங்குகிறார்.

அவருடைய கல்லூரிக்காலத்தில் பி.காம் பட்டப்படிப்பில் மொழிப்பாடம் கிடையாது. இருப்பினும் அவருடைய மொழித் தாகத்தைத் தணிக்க நற்காலத்தை எதிர்நோக்கி இருந்தார். அப்போது மாணவர் சங்கத் தலைவராக பொறுப்பேற்றவுடன் கல்லூரியில் பல்வேறு தமிழ் தொடர்பான கூட்டங்களும் நிகழ்ச்சிகளும் சொற்பொழிவுகளும் அரங்கேற அதனைத் தனது தமிழ் ஆர்வத்திற்கான களமாகப் பயன்படுத்திக் கொண்டார். நிகழ்வின் போது மாணவர் சங்கத் தலைவர் என்ற முறையில் சிறப்பு விருந்தினர்களை அறிமுகப்படுத்தவும் நன்றி பாராட்டவும் மேடைகளில் இவரது தமிழ் முழக்கம் ஓங்கி ஒலித்தது. அதைத் தொடர்ந்து கல்லூரி நிகழ்வுகளுக்குத் தமிழ் வளர்த்த சான்றோர் பெருமக்களை நேரில் சந்தித்து அழைக்கும் வாய்ப்பு கிடைக்கப் பெற்றவராக வள்ளியப்பா தமிழ்க்களத்தில் பயணிக்கத் தொடங்கினார்.

பேரறிஞர் அண்ணா, கவியரசு கண்ணதாசன், குமுதம் பத்திரிகை நிறுவனர் எஸ்.ஏ.பி.அண்ணாமலை, ராஜாஜி, முதலமைச்சர் பக்தவத்சலம், சென்னைப் பல்கலைக்கழகத்தின் துணைவேந்தர் ஏ.எல். முதலியார் உள்ளிட்ட சான்றோர்களை அழைத்து வந்த பெருமை இவரைச் சாரும். அவர்களைக் கல்லூரி நிகழ்விற்கு அழைத்த சூழல் ஒவ்வொன்றும் ஒவ்வொரு சுவாரசியமான பின்னணியைக் கொண்டது.

குமுதம் இதழ் பிரபலமாக இருந்த காலகட்டம். குமுதம் பத்திரிகையின் ஆசிரியர் SAP அண்ணாமலை பற்றிப் பெரும்பாலானோர் அறிந்திருப்பர். சமுதாயத்தின் ஆழத்தை அறிந்த மாமனிதர். இத்தகைய திறம்பட்ட மனிதரை மாணவர்கள் மத்தியில் மேடையில் பேசுவதற்காக ஒரு முறை வள்ளியப்பா அழைக்கச் சென்று இருந்தார். எங்கேயும் எப்போதும் யாருக்காகவும் திரு.அண்ணாமலை அவர்கள் மேடை ஏறிப் பேசியதேயில்லை. இத்தகைய பழக்கத்தை விரும்பாதவரை மேடையில் பேச வைத்த பெருமை வள்ளியப்பா அவர்களேயே சாரும். இனிமை காட்டும் இன்ப மொழியில் அழைப்பு விடுத்த விதம் அவரின் மொழி ஆளுமையைக் காட்டுகிறது. ‘‘தங்கள் ஊக்க உரைக்காக மாணவர்கள் ஏக்கத்துடன் காத்திருக்கிறார்கள்’’என்று வள்ளியப்பா அழைத்த விதம் அவருக்குப் பிடித்துப்போக உடனே பேசுவதற்குச் சம்மதம் தெரிவித்தார். இவரின் அழைப்பை ஏற்றுக் கல்லூரி வளாகத்திற்கு வந்து மாணவர்களுக்காகப் பேசிய எஸ்.ஏ.பி அண்ணாமலை அவர்களின் குரல் மேடையில் ஒலித்தது.

மற்றொரு சமயம், ‘எங்கள் கல்லூரி நிகழ்வுக்காக சென்னைப் பல்கலைக்கழகத்தின் துணைவேந்தரான A.L. முதலியார் அவர்களை அழைத்து வரும் பொறுப்பினை என்கிட்ட கொடுத்தாங்க. அப்போதெல்லாம் தமிழகத்தில் உள்ள கல்லூரிகள் அனைத்தும் சென்னைப் பல்கலைக்கழகத்தின் கட்டுப்பாட்டில் தான் இருந்தன’. வள்ளியப்பாவின் அனுபவ உரையாடலில் அவர் மொழியில், ‘‘நீ தான் போய் அவரை நேரில் சந்தித்து அழைத்து வரணும் அப்படின்னு சொன்னாங்க எனக்குள் பல கற்பனைகள் ஓடியது. அவர் எப்படி இருப்பாரோ என்று அவரைச் சந்திப்பதற்குள் பற்பல எண்ணங்கள் ஓடிக்கொண்டே இருந்தது. அந்தப் பல்கலைக்கழகத்தின்

துணைவேந்தர் கோட்டும் சூட்டும் பூட்சுமாக இருப்பார் என்ற சிந்தனையிலே நான் அவரைச் சந்திக்கப் போனேன். அங்கு சென்றால், அப்படி ஒரு அடையாளத்தில் யாரும் இல்லாததைக் கண்டு துணைவேந்தர் அறையில் எளிமையாக இருக்கும் மனிதரைப் பார்த்துத் 'துணைவேந்தர் A.L. முதலியார் எங்கே?' என அவரிடமே கேட்க, அது நான் தான் தம்பி! என்றார் அவர். எனக்கு ஆச்சரியமும் ஒரு வித பயமும் தட்டியது. ஓர் உயர்ந்த பதவியில் இருந்து கொண்டு, அவர்கள் எத்தனை எளிமையாக இருக்கிறார்கள் என நான் சற்று வியந்து போனேன். இது போன்ற நிகழ்வுகள் பல இன்றும், எனக்குள் அழகிய நினைவுகளாய் இருந்து மகிழ்ச்சி கொள்ள வைக்கின்றது'' என்கிறார் வள்ளியப்பா.

அன்றைய காலத்தில் கவர்னர் ஜெனரலாக இருந்த திரு.இராஜ கோபாலாச்சாரியர், முதலமைச்சர் காமராசர், முதலமைச்சர் பக்தவத்சலம், பல்கலைக்கழகத் துணைவேந்தர் A.L. முதலியார் போன்ற தலைவர்களுடன் நல்உறவு பாராட்டி அவர்களை வரவேற்றுப் பேசிய பெருமை இவருக்குரிய தனிப்பட்ட ஆளுமையின் பலத்தைக் காட்டுகிறது. கல்லூரிக் காலத்திலேயே மாணவர் சங்கத்திற்கு மூன்று முறை தலைவராக இருந்திருக்கிறார். அதோடு திரு.காமராசர், மூதறிஞர் ராஜாஜி, இந்திரா காந்தி அம்மையார், ஜவஹர்லால் நேரு, டாக்டர் ராதாகிருஷ்ணன் போன்ற எண்ணற்ற தலைவர்களை அவர்கள் வாழும் காலத்திலேயே பார்த்துப் பழகிய பண்பாளர் வள்ளியப்பா.

அவர் பார்த்திடாத மதிப்பு மிகுந்த ஆளுமைகளே இல்லை எனலாம். இப்படி மிகச் சிறந்த தலைவர்களையும் அறிஞர்களையும் பண்பாளர்களையும் உற்ற நேரத்தில் சந்தித்த வள்ளியப்பாவிற்கு அவர்களுடனான பழக்கம் தலைமைப் பண்பு, எளிமை, மொழிஆர்வம் முதலியனவற்றைக் கற்றுத்தந்தது. எல்லாம் தெரிந்துவிட்டது என அவர் எதுவும் செய்யாமல் இருந்ததில்லை, எதையும் கற்றுக் கொள்ளும் ஆர்வத்துடன் சுறுசுறுப்பாய் இயங்கிக் கொண்டிருந்தார். இன்று அவர் இத்தனை உயரத்திற்கு வருவதற்குக் காரணமாக அமைந்தது அன்றைய தலைசிறந்த ஆளுமைகளின் சந்திப்புகளே.

நகரத்தார் மாணவர் சங்கத்திற்காக இதழாக்கப்பணி சோமலெ பார்வையில் உருவாகிக் கொண்டிருந்தது. அது செவ்வனே உருவாக வேண்டும் என அவர் எண்ணிக் கொண்டிருந்தபோது தமிழார்வமும் தலைமைப் பண்பும் ஒருங்கே அமையப்பெற்ற வள்ளியப்பா அவர்கள் சோமலெவுடன் கைகோர்த்து இதழ்ப்பணிக்கு உதவி புரிந்தார். இந்த உதவியானது சோமலெவிற்கு மிகப்பெரிய உதவியாக இருந்தது. ஏனென்றால் மிக நேர்த்தியான முறையில் செம்மையாக இதழில் உள்ள பிழைகளைக் கண்டறிந்து அழகிய வடிவமைப்பிற்கு வித்திட்டார். அப்பெரும் முயற்சியின் பயனாகச் சங்கத்திற்கு 20 ஆயிரம் வரை லாபம் ஈட்ட முடிந்தது. வள்ளியப்பாவின் சீரிய சிந்தனை அதற்கு முக்கியக் காரணமாக இருந்தது.

வள்ளியப்பா தொழில் நிறுவனங்களையும் கல்வி நிறுவனங் களையும் நிறுவுவதற்கு முற்படுகிறார். எண்ணில் அடங்கா பணிச் சுமைகள் அவர் முன்னே வந்தது. ஓய்வின்றி உழைக்கின்றார். இத்தகைய நேரத்திலும் வள்ளியப்பாவின் தமிழ்ப்பற்று தொடர்ந்தது. தன் எண்ணத்திற்கு வடிவம் கொடுக்கும் விதமாக ஞானபீடப் பரிசு பெற்ற அகிலனுடன் நட்பை விரிவாக்கிக்கொண்டார். அகிலன் ஏற்காட்டில் உள்ள வள்ளியப்பாவின் வீட்டிலிருந்தே பல படைப்புகளை உருவாக்கினார்.

அந்த நேரத்தில் அகிலன் வானொலியில் உரையாற்ற வள்ளியப்பாவை அழைக்கிறார். அதற்கு இசைவு தெரிவித்துத் தன்னுடைய தமிழார்வத்தை மேலும் மெருகேற்றிக் கொண்டார். அதன் விளைவாகத் திருச்சிராப்பள்ளி வானொலி நிலையத்தில் ‘திருக்குறள் உரை விளக்கம்’ குறித்துப் பேசினார். இப்படிக் கிடைக்கின்ற நேரத்தையும் கிடைக்கும் வாய்ப்புகளையும் தனதாக்கிக் கொண்டு தனது சிந்தனைக்கும் வடிவம் கொடுத்து தனது தமிழ் ஆர்வத்தை இன்றும் குறையாமல் வளர்த்து வருகிறார் வள்ளியப்பா.

ராஜாஜியின் சொற்பொழிவுகள் வள்ளியப்பாவிற்கு ஆழமான பாதிப்புகளை உண்டாக்கின என்றே சொல்ல வேண்டும். ராஜாஜியின் பொருள் பொதிந்த சொற்பொழிவுகளை ஆர்வத்துடன் கேட்பவரானார்.

ராஜாஜியின் ஒரு குறிப்பிட்ட வரியை அவர் எப்போதும் நினைவு கூர்வார். ''எதிர்க்கட்சி இல்லாத அரசாங்கம் டயர் இல்லாத வாகனம்'' என்பதுதான் அது. இதுபோன்ற ராஜாஜியின் விமர்சனங்களை ரசிப்பவரானார் வள்ளியப்பா.

தமிழ் மரபு என்பது மொழி மட்டுமே என்று வள்ளியப்பா எண்ணியதில்லை. அது பண்பாடும் சார்ந்தது என்று பெருமையோடு சொல்லுவார். எனவே தனக்குள் இருந்த தமிழ்மரபின் ஆர்வத்தைத் தனது கல்விக் குழுமங்களில் செயல்படுத்த விரும்பினார். அதன் காரணமாக தியாகராஜர் பல்தொழில்நுட்ப கல்லூரி மற்றும் சோனா பொறியியல் கல்லூரிகளில் பணியாற்றும் ஆசிரியர்கள், மாணவர்களிடத்தில் இருக்கும் தமிழ் ஆர்வத்தைக் கண்டறிந்து அதனை வளர்க்கும் விதமாக அவர்களை ஒன்றிணைத்துக் கல்லூரியில் 'தமிழ் மன்றம்' ஒன்றினை உருவாக்குமாறு அறிவுறுத்தினார். தொழில்நுட்பங்களை கற்றுக் கொள்ளும் மாணவர்கள் தமிழ் சார்ந்த சிந்தனைகளை வளர்க்க இம்மன்றம் களமாக விளங்கியது. சிறந்த தமிழ் ஆளுமைகளை அழைத்து மாணவர்களுக்குள் இருக்கும் தமிழ்ப் பற்றினைத் தூண்டி வாழ்வியல் சார்ந்த புரிதல்களை அவர்களுக்குப் புகுத்தினார்.

குளிப்பதற்குப் பயன்படும் நீர் நிலையைக் 'குளம்' என்பதாகவும், உண்பதற்குப் பயன்படும் நீர்நிலையை 'ஊருணி' எனவும், ஏர்த் தொழிலுக்குப் பயன்படும் நீர் நிலையை 'ஏரி' எனவும், மழை நீரை மட்டும் ஏந்தி நிற்கும் நிலையினை 'ஏந்தல்' என்றும், கண்ணாறுகளை உடையது 'கண்மாய்' என்றும் தமிழர்கள் பெயரிட்டு அழைத்ததையும் தமிழர்களின் அறிவியல் பார்வையையும் வியந்து வியந்து புகழ்ந்துரைக்கும் வள்ளியப்பா, 'விருந்தினருடன் ஏழு அடிகள் முன் சென்று அவர்களை வழியனுப்பி வைப்பது சங்கத் தமிழரின் பண்பாடுகளுள் ஒன்றாகக் கருதப்பட்டது. தமிழர் பண்பாட்டில் சோறும் நீரும் விற்பனைக்குரியன அல்ல என்ற கருத்து இலக்கியங்களைக் கூர்ந்து நோக்கும்போது தெரிகிறது' என்றெல்லாம் தமிழர் பெருமைகளை விரித்துரைக்கும் செய்தி பலரும் அறியாதது.

இந்தியாவின் சிறந்த அறிவாற்றலையும் அடையாளத்தையும் உலகம் முழுவதும் பிரதிபலிக்கும் வகையில் தமிழ் போற்றப்பட வேண்டும் என்ற தன் ஆசையைத் தெரிவிக்கும் வள்ளியப்பா தமிழர்களுக்குப் பன்மொழிப் புலமை அவசியம் என்ற தன் கருத்தையும் தெளிவுபட எடுத்து வைக்கிறார்.

முன்னோரின் பண்பாட்டுச் செழுமையை உணர்ந்து பெருமிதம் கொள்வது சிறப்புதான். அதே வேளையில் பெருமிதத்திற்கு உரிய சம காலத்தை உருவாக்குவது அதைவிடச் சிறப்பானது என்ற எண்ணம் கொண்டவராக விளங்கும் வள்ளியப்பா 'பிறமொழிகளைத் தெரிந்தாலே தமிழின் பெருமை விளங்கும்' என்று சொல்பவராகத் திகழ்வது அவர் சின்ன வயதில் கொண்டிருந்த தமிழ்க்காதலை எடுத்துக்காட்டுவதாக அமைகிறது.

தமிழ் உலகின் தலைசிறந்த பேச்சாளர்கள் சிந்தனையாளர்கள் சாதனை விருது பெற்ற எழுத்தாளர்கள் கவிஞர்கள் என பல்வேறு தளத்தில் புகழ்பெற்றவர்களைக் கல்லூரிக்கு அழைத்து அவர்களுடைய பேச்சினை ஆர்வத்தோடு கேட்பதில் காதல் கொண்டவர் வள்ளியப்பா. தமிழ் சார்ந்த நிகழ்வுகளுக்காக எப்பொழுதும் பெரும்பொருளினைச் செலவிடுவார். ''இவை எல்லாம் செலவுகள் அல்ல வாழ்க்கைக்கான வரவுகள்'' என்பார். 2017-ல் சோனா கலை மற்றும் அறிவியல் கல்லூரியில் தமிழ்த்துறை தொடங்கப்பட்டது. அவருக்குள் இருந்த தமிழ் ஆர்வம் மேலும் விரியத் தொடங்கியது.''சொல்லில் உயர்வு தமிழ்ச் சொல்லே'' என தமிழ்மொழி சார்ந்த பல நிகழ்வுகளை முன்னெடுக்க அறிவுறுத்தினார்.

பல தமிழ் அறிஞர்களின் பிறந்த தினங்களைக் கொண்டாடுவது அவர்களின் தமிழ்ப்பணியைப் பற்றி மாணவர்களிடத்துப் பகிர்ந்து கொள்வது, தமிழர் மரபுசார்ந்த விழாக்கள் எப்படி கொண்டாடப் பட்டுள்ளது என்பது பற்றி மாணவர்களிடத்தில் எடுத்துரைப்பது அவசியம் என கருதினார். தமிழ்த்துறைத் தலைவரை அழைத்து இதனை எப்படி நெறிப்படுத்துவது, நடைமுறைப்படுத்துவது என்றெல்லாம் அவர் விவாதிக்கும் போது அவருக்குள் இருக்கும் தீராத தமிழார்வம் நம் கண்முன்னே தெரிகிறது. வள்ளியப்பாவின் நெறிகாட்டுதலில் இன்று சோனா கல்விக் குழுமத்தில் தமிழ் உயர்ந்து சிறந்து நிற்கிறது.

தமிழ்விழா, கலைவிழா, பட்டிமன்றங்கள், பேச்சுப்போட்டிகள், சிறப்புச் சொற்பொழிவுகள், பாரம்பரியம் மிக்க தமிழர் நாட்டுப்புறக் கலைகள் என தமிழ்ச் சார்ந்த பல நிகழ்வுகளைச் சோனா தமிழ் மன்றம் முன்னெடுத்து நடத்தி வருகின்றது. இதுபோல பல நிகழ்வுகளில் பின்புலமாக இருந்து வள்ளியப்பா என்றும் தமிழுக்காகத் தனது சிறந்த பணியை இடைவிடாமல் செய்து வருகிறார். கல்லூரிப் பேராசிரியர் பணிக்கு நேர்காணல் நிகழ்கிற சமயத்தில் தமிழ்த்துறைக்கு முக்கியத்துவம் தரவேண்டும் என தனிக் கவனம் கொண்டிருப்பார். நேர்காணலில் தொடக்கம் தமிழ்த்துறையில் இருந்து தான் ஆரம்பிக்க வேண்டும் என்பார். அது மட்டுமில்லாமல் தமிழ்த்துறையின் நேர்காணலில் அவரே அமர்ந்து நேர்காணல் செய்து ஆசிரியர்களின் தமிழ்த்தரத்தைக் கேட்டறிவார். சிறந்த தமிழாசிரியர்களைத் தேர்ந்தெடுப்பதில் அதிக கவனம் செலுத்துவார்.

தமிழ் ஆர்வத்தை மேலும் மேன்மையுறச் செய்ய சோனா கலை மற்றும் அறிவியல் கல்லூரியின் தமிழத்துறை மிகுந்த முனைப்போடு செயல்பட்டு வருகிறது. வள்ளியப்பா தமிழ் மீது எந்த அளவிற்கு ஆழங்கால் கொண்டவராக விளங்குகிறாரோ அந்த அளவிற்குத் தமிழ்த்துறையும் தமிழ்த் தொண்டாற்ற ஆர்வமாக உள்ளது. இதற்குப் பல சான்றுகளை முன் வைக்க முடியும். தமிழ்ச் சார்ந்த அறிஞர் பெருமக்களோடும் நிறுவனங்களில் பணிபுரியும் தமிழ்ப் பேராசிரியர் களுடனும் தமிழ் இலக்கியங்கள், தமிழ் ஆய்வுகள் குறித்து வள்ளியப்பா அளவளாவுதல் உண்டு.

அப்படி அளவளாவிய செய்தி ஒன்று, நகரத்தார் சமூகத்தில் பெருமையாகப் பேசப்படும் சான்றோர்களில் 106 அகவை நிறைவாழ்வு வாழ்ந்த இராயவரம் திரு.பழனியப்பா செட்டியார் அவர்களும் ஒருவராவார். அவருடைய வாழ்க்கை வரலாற்று நூலுக்கு வாழ்த்துரை எழுத முற்படுகிறார். அச்சமயம் ‘குறையொன்றும் இல்லை குறை யுடைய இராமா’ என்ற வரிகள் குறித்துத் தமிழ்த்துறைத் தலைவர் விஜயராகவனிடம் விவாதிக்கிறார். அதாவது ‘இராமபிரான் குறையே இல்லாமல் வாழ்ந்தது ஒன்றுதான் குறை’ என்று இராமபிரானை ஏற்றிப்

போற்றிச் சொல்லுவார்கள் வைணவப் பெரியார்கள். அவ்வரிகளைத் திரு.பழனியப்பச் செட்டியாருக்குப் பொருத்திக்காட்டிய விதமானது வள்ளியப்பாவின் தமிழ் ஆற்றலையும் ஆழத்தையும் புலப்படுத்துவதாக அமைந்திருந்தது. திரு.பழனியப்ப செட்டியார் இராயவரத்தில் ஐந்து தலைமுறையாக ஒரே வீட்டில் வாழ்ந்த பெருமைக்குரியவர். ஈடு இணையற்ற ராமனைப் பற்றிய மரபுத் தொடரைப் பழனியப்ப செட்டியார் அவர்களின் வாழ்க்கையோடு பொருத்திக்காட்டி அவரது கம்பீரத்தைத் தன் எழுத்தாற்றலிலே காட்டியிருப்பது சிறப்பாகும்.

வள்ளியப்பாவின் நெறிகாட்டுதலுடன் சோனா செம்மொழித் தமிழ் மன்றம் உருவாக்கப்பட்டு அதன்வழி மாணவர்களையும் தமிழ்உலகத்தையும் ஒன்றிணைக்கும் பணியைத் தமிழ்த்துறை செய்து வருகின்றது. முத்தமிழ் விழா, கலை விழா, தைத்திருநாள், தமிழறிஞர்களின் பிறந்தநாள் விழா, நினைவுநாள் விழா, பாரம்பரிய உணவுத் திருவிழா என எண்ணற்ற தமிழ் விழாக்களைத் தமிழ்த்துறை நடத்தி வருகிறது.

தமிழ் நூல்களைப் படிக்கும் பழக்கமுடையவர் வள்ளியப்பா. கல்லூரி நூலகம் முதல் தமிழ்த்துறை நூலகம் வரை தமிழ் சார்ந்த நூல்களை மாணவர்கள் கற்று இன்பமும் பயனும் பெறவேண்டும் என்னும் விருப்பமுடையவர். தமிழ்த்துறை சார்பில் ஆண்டுதோறும் வெளியிடப்படும் தமிழ் இதழ்களில் வெளிவரும் மாணவர்களின் படைப்புகளைத் தவறாமல் வாசித்து மகிழ்வார். இப்படித் ''தான் பெற்ற இன்பம் பெறுக இவ்வையகம்'' என தன் நண்பர்களிடம் பெற்ற தமிழ்ச் சேவையை இனிமையாய் மாணவர்களும் பேராசிரியர்களும் பெறும் வண்ணம் செய்துகொண்டிருக்கிறார் வள்ளியப்பா.

தமிழ்ப்பணி தங்கு தடையின்றி நடக்க வேண்டும் என்று எப்போதும் சிந்தித்துக் கொண்டே இருப்பவர். எத்தகைய விதத்திலும் தமிழார்வம் தடைப்பட்டுவிடக்கூடாது என்ற கொள்கையில் உறுதியோடு இருப்பவர். தனது தமிழார்வம் தனக்குள்ளே மட்டும் இருந்துவிடாமல் சேலம் மாநகர மக்களுக்குப் பயன்பட வேண்டும் என்ற உயரிய முனைப்போடு இருப்பவர். தமிழ் உலகளவில் தலைநிமிர்ந்து பயணிக்க

வேண்டும். சோனா எனும் புண்ணிய பூமியில் நிறைய தமிழ்ப்பேராளர்கள் உருவாக வேண்டும் என்பதை மனதில் கொண்டு அதற்கு என்ன செய்யலாம் என விஜயராகவனுடன் கலந்தாலோசிக்க உருவாக்கம் பெற்றதுதான் ‘‘சோனா வள்ளியப்பா தமிழ்ப்பேராயம்’’ என்னும் அமைப்பு. இந்தப் பேராயம் மாணவர்களை மட்டுமின்றிச் சமூகத்தில் தமிழ் ஆர்வம் கொண்ட அனைவரையும் ஒன்றிணைக்கும் பணியை அடித்தளமாகக் கொண்டது. ஆற்றல் மிகுந்த ஆளுமைகளான தமிழ் அறிஞர்கள், எழுத்தாளர்கள், பேச்சாளர்கள், கவிஞர்கள் என்ற பல்துறை வித்தகர்களை அடையாளம் கண்டு அவர்களின் ஒத்துழைப்போடு தமிழின் சிறப்பை நுகர்வதும் அதனைப் பலருக்கும் வழங்குவதும் இதன் நோக்கமாகும்.

**‘‘நினையும் படிப்பெல்லா நின்னைப் படிப்பார்**
**உனையும் படிப்பிப்பார் உண்டோ’’**

என்னும் தமிழ்விடுதூது வரிகள் போல தமிழின் இலக்கிய வளத்தை நேற்று நீங்கள் படித்தீர்கள். ஆனால் இன்று தமிழ் வளத்தை அனைவரும் அறிந்து கொள்கிற நிலைக்கு வானுயர தமிழ்ச்சிறப்பை வளர்த்துக் கொண்டிருப்பவராக வள்ளியப்பா விளங்குகிறார்.



# இயற்கையின் தோழன்

**ஊருணி நிறையவும் உதவும் மாடுயர்
பார்கெழு பயன்மரம் பழுத்தற் றாகவும்
கார்மழை பொழியவும் கழனி பாய்நதி
வார்புனல் பெருகவும் மறுக்கின்றார் யார்?**

என்பது கவிச்சக்கரவர்த்தி கம்பனின் புகழ்பெற்ற பாடல்.

ஊருணி நிறைவதையும் நன்மரங்கள் கனிகளைக் கொடுப்பதையும் மேகம் மழை பொழிவதையும் ஆறு பெருக்கெடுத்து ஓடி வருவதையும் வேண்டாம் என்று சொல்கின்றவர்கள் யாராவது இருப்பார்களா? என்று கம்பன் இயற்கையைப் போற்றிப் போற்றிப் புகழ்ந்து பாடுகிறான்.

இறைவனின் இணையில்லா ஓவியம் இயற்கை. உலகின் அழகியல் சார்ந்த அனைத்துமே இயற்கையின் நகல்களே. எத்தனை எத்தனை காலம் கடந்தாலும் இறைவனின் அழியா வரம் பெற்ற அற்புதப் படைப்பு இயற்கை.

நம் மனம் அமைதியுடன் செயல்பட புறச்சூழலும் ஒரு காரணமாகிறது. உடல் நோய்களுக்கு மருந்துகள் உண்டு. ஆனால் மனநோய்க்கு முறையான மருந்துகள் இல்லை. நவீன காலத்தில் மனிதன் மனப்பிறழ்வுக்கு எளிதில் ஆட்படுகிறான். அதற்கு முக்கியக் காரணம் புறக்காரணிகளே. அவனைச் சுற்றியுள்ள சூழல் அமைதியானதாகவோ, கண்களுக்கு இதமளிக்கும் காட்சிகளைக் கொண்டோ பெரும்பாலும் இருப்பதில்லை. இயற்கைச் சூழல் தவிர்த்து மனிதன் என்று வாழத் தொடங்கினானோ அன்று முதல் தன் மன அமைதியை மெல்ல மெல்ல இழக்கத் தொடங்கினான்.

சொல்லப்போனால் நம்மைச் சுற்றியுள்ள சோலைகளும் நீர் நிலைகளும்தான் நாம் வாழும் ஊரின் வாழ்க்கைத் தரத்துக்கும் நாம் வாழும் காலத்தின் மனப்போக்குக்கும் நேரடிச் சான்றாகத் திகழ்கின்றன.

இயற்கை எப்போதும் யாரையும் சார்ந்திருப்பதில்லை. அதற்கு எது தேவையோ அது நிறைவேற்றிக் கொள்ளும். அப்படித் தனக்கே உரித்தான ஒளிரும் பேரழகுச் சூழலை உருவாக்கிக் கொள்ள இயற்கை தேர்ந்தெடுத்த அன்பு மனிதர்களுள் ஒருவர் தான் வள்ளியப்பா. இயற்கையை நாம் காப்பாற்றவில்லை, இயற்கைதான் நம்மைக் காப்பாற்றிக் கொண்டிருக்கிறது என்பார் வள்ளியப்பா.

இறையின் மகத்துவம் உணர்ந்தவரால் தான் இயற்கையின் மகத்துவம் அறியமுடியும். அப்படி அறிந்தவராதலால் தன் கல்விக் கடலை இயற்கையால் நிறைத்துக்கொண்டார். சோனா வளாகத்தைப் பசுமையால் நிறைத்து மனதிற்கு இதமளிக்கும் இயற்கைக் காட்சிகளைக் காண ஆயிரம் கண்கள் வேண்டும்.

இயற்கைச் சூழல் நம் புலன்கள் மீது ஆற்றல்மிக்க தாக்கத்தை உண்டாக்கும் என்று உணர்ந்த வள்ளியப்பா தான் இருக்கும் இடம், உருவாக்கும் கட்டிடங்கள் என அனைத்திலும் இயற்கைச் சூழல் சூழ்ந்து இருக்க வேண்டும் என விரும்புபவர். அதற்கேற்ற வகையில் அவர் இருக்கும் இடங்களில் இயற்கையும் தனது ஆற்றல் காட்டி அழகுடன் நிற்பதைப் பல இடங்களில் காணலாம். சோனா கல்லூரி வளாகத்தில் அதிகாலையிலும் மாலை நேரங்களிலும் பறவைகளின் ஆரவார ஒலி

கேட்போரின் மனதைக் குதூகலிக்கச் செய்யும். சுற்றுவட்டாரத்தில் எங்கும் இல்லாத அளவிற்கு மரங்கள் பெருகிக் காணப்படுவதால் விதவிதமான பறவைகள் கூடு கட்டிக் குடும்பமாய் வாழ்வதற்கு வசதியாக உள்ளது. அழிந்து வரும் சிட்டுக்குருவி இனங்கள் பல இங்குள்ள மரங்களில் தஞ்சம் புகுந்துள்ளன. இவை தவிர கிளி, மைனா, செம்போத்து, மரங்கொத்தி குயில், காகம் போன்ற பறவை இனங்கள் கூடுகட்டியுள்ளது.

மரங்களையும் பறவைகளையும் மனித வாழ்வோடு கூட்டுவிக்கும் ஊடகமாக விளங்குகிறது சோனா கல்விக்குழுமம்.

நான் இந்தப் பிரபஞ்சத்தில் இல்லை. நானே பிரபஞ்சம் என்று மனப்பூர்வமாக நம்புகிறேன். இந்த நம்பிக்கை இறைவழிபாட்டின் மூலமாக எனக்குள் எழுந்த ஆன்மீக அனுபவம் என்கிறவர் வள்ளியப்பா.

கல்லூரி வளாகம் முழுவதும் பறவை இனங்களின் எண்ணிக்கை கணக்கிட முடியாதபடி பல்கிப் பெருகிக் காணப்படுகின்றன. கல்லூரி வளாகத்தில் எந்த விழாவாக இருந்தாலும் பட்டாசு வெடிப்பதற்கு அனுமதி கிடையாது. பறவைகள் அச்சம் கொண்டு வருகையைத் தவிர்த்துவிடும் என்பதால் சோனா கல்விக் குழுமம் இப்படியொரு ஆணையைப் பிறப்பித்துள்ளது. ‘சேலத்தின் பறவைகள் சரணாலயம் சோனா கல்வி நிறுவனம்’ என்று சொல்லும் அளவிற்கு பல்வகைப் பறவைகள் காட்சியளிக்கின்றன. இத்தகு எழில்மிகு சூழல் உருவாக முழுக்காரணமாக இருப்பவர் நம் வள்ளியப்பா.

ஒரு மரம் பூப்பதைக் கண்டு மற்றொரு மரம் பொறாமை கொள்வதில்லை. எனவே சோனா கல்வி குழுமத்தில் எங்குமே காணக் கிடைக்காத பலதரப்பட்ட மரங்கள் எங்கும் சூழ்ந்து இருக்கின்றன. கல்லூரி வளாகத்தில் சுமார் 1500 வகையான மரவகைகள் உள்ளன. மரங்களைப் பாதுகாப்பதில் வள்ளியப்பா தனிக் கவனம் கொண்டு விளங்கி வருகிறார்.

நமது முன்னோர்கள் ஆறுகளின் குறுக்களவை அளந்து அடையாளத் தூண்களை நட்டு ஆறுகள் சுருங்கிப் போய் விடாமல் பாதுகாத்து வந்தனர். ஆனால் சுதந்திரம் அடைந்தோம் என்ற பெயரில் நாம் அவர்கள்

நட்ட தூண்களைப் பிடுங்கி எறிந்துவிட்டு ஆற்றை ஆக்கிரமித்தோம். இப்போது கட்டுமானப் பணி என்ற பெயரில் சுதந்தரமாக மரங்களை எல்லாம் வெட்டிச் சாய்க்கிறோம். ஆனால் மரங்கள் உள்ள இடத்தில் கட்டிடத்தின் கட்டுமானப் பணி நடைபெற்றால் அதனை வெட்ட வள்ளியப்பா அனுமதிப்பதில்லை. மாறாக அம்மரங்கள் பாதிக்காத வகையில் கட்டிடத்தை உருவாக்கும் முறையையும், மறுநடுதல் (Re-plantation) செய்து கொள்ளவும் பணியாளர்களைப் பணித்திருக்கிறார்.

பூவையும், செடிகளையும், மரங்களையும் தொடும்போது கூட பிரபஞ்சத்தோடு கை குலுக்குவதைப் போலவே உணருகிறேன். எனவே எங்கள் கல்லூரி மற்றும் தொழிற்சாலை வளாகத்தில் மரங்களை வெட்ட அனுமதிப்பதில்லை என்று உறுதியோடு உரைக்கிறவர் வள்ளியப்பா.

மேலும் MBA வளாகத்தில் நேராக நீண்டு வளர்ந்திருக்கும் பனை மரங்கள் அதிகம். அவ்வளாகம் உருவாக்கும் காலத்தில் பனை மரங்களை வெட்ட வேண்டிய சூழல் ஏற்பட்ட போது கூட வள்ளியப்பா அவர்கள் மரங்களுக்கு எந்தவித சேதாரமும் ஆகக்கூடாது என்று கண்டிப்பாகச் சொல்லிவிட்டாராம். இன்று தன்னைப் பாதுகாத்தோரின் வளாகத்திற்குத் தனது நன்றியை தெரிவிக்கும் விதமாக நெடிது நிமிர்ந்து பயன்தந்து நிற்கின்றன அப்பனை மரங்கள்.

சோனா கல்லூரி வளாகம் எங்கும் ஆயிரத்திற்கும் மேற்பட்ட நிழல் தரும் மரங்கள் பல வண்ணத்தில் மலர்களை மலரச் செய்தவாறு அழகுக்கோலம் காட்டும் வித விதமான செடி கொடிகள் என குளிர்ச்சியான பசுஞ்சோலையாகவே கல்லூரிச் சாலைகள் காட்சியளிக்கின்றன. தீப்பட்ட புண்களை ஆற்றும் புங்கைமரம், கண் நோய்களைப் போக்கும் வாகை, இரவிலும் பிராண வாயுவை வெளியிடும் தூங்குமூஞ்சி மரம் எனப்படும் பண்ணி வாகை, பாக்டீரியா மற்றும் பூச்சிகளை எதிர்க்கும் தன்மை கொண்ட பாதாங்கி, தாய்ப்பாலைச் சுரக்க செய்யும் இலுப்பை, முக்கனிகளான மா, பலா, வாழை, மருத்துவ குணமிகு அரிசியைத் தரும் மூங்கில், வேர் முதல் நுனி வரையிலான அனைத்துப் பாகங்களாலும் பயன் தரும் பனை, குளிரான நீரைத் தரும் தென்னை, கருப்பைக்கு பலம்

சேர்க்கும் அசோகு, வாய், பல் நோய்களைக் குணமாக்கும் பாக்கு, குளிர்வித்து நச்சுக்களைப் போக்க வல்ல மகிழம், நேர்மறை எண்ணங்களை உருவாக்கும் மரமல்லி எனப்படும் பன்னீர் மரம், தேன் நிறைந்த மட்டு அரளி, செவ்வரளி, நாவரளி, இரத்த ஓட்டத்தைத் தூண்டி உடலில் வெப்பத்தைப் பரவச் செய்து பனிக்காலத்தில் குளிரைத் தாங்கும் தன்மையை தரும் நிலசம்பங்கி, நீர் நிறைந்த பூக்களைப் பூக்கும் நீரூற்று மரம், தலையில் கோர்க்கும் நீரை வற்றச் செய்து தொண்டை வீக்கங்களைக் குணப்படுத்தும் செண்பகம் என பல மூலிகை மரங்கள் கல்லூரி வளாகத்தில் பயன் தந்து நிற்கின்றன.

உலகம் முழுமையுமே இயற்கையின் பேராற்றலால் ஆகியுள்ளது. அப்பேராற்றலை எவரும் படைக்கவில்லை. அந்த உண்மைப் பேராற்றலை எவராலும் அழிக்கவும் முடியாது. அந்தப் பேராற்றல் இருந்தது. இருக்கிறது. எப்போதும் எப்போதும் இருக்கும். அந்தப் பேராற்றலையே ஆதி சமூகம் தெய்வம் என்று சொன்னது. அந்தப் பேராற்றலே மக்களின் உளவியல் நலவாழ்விற்கும், உன்னத மகிழ்ச்சிக்கும், உலகளாவிய காலநிலை மாற்றத்திற்கும் உயிர்ப்பூட்டும் ஆற்றலாகவும் இருக்கப் போகிறது என்ற உணர்வுசார் அறிவை உறுதியான முடிவாகக் கொண்டு விளங்குகிறவர் வள்ளியப்பா.

ஒருமுறை, ‘இயற்கையின் அழகைக் காணும் திறனைத் தன்னுள் வைத்திருக்கும் எவருக்கும் ஒருபோதும் வயதாகாது’ என்று இயற்கையோடு உள்ளார்ந்த உறவு கொண்டிருக்கும் வள்ளியப்பா கல்லூரியில் நடந்த கூட்டத்தில் சொன்னபோது மாணவ மாணவிகள் உற்சாகமாகக் கரவொலி எழுப்பினார்கள்.

இயற்கை தனக்குத் தேவையான இடத்தைத் தேர்வு செய்து வள்ளியப்பா மூலம் பூர்த்திசெய்து கொண்டது என்றே சொல்லாம். கல்லூரி வளாகத்தில் மூலிகைகளைச் சுவாசித்தவாறு நடந்தாலே நல்ல ஆரோக்கியமான உடல் நிலையையும் உற்சாகமான மனநிலையையும் பெற முடியும். கல்லூரி வளாகம் செடியும் கொடியும் பூவும் காயும் கனியுமாய் குலுங்கும் இயற்கைச் சூழ்நிலையில் அமைந்துள்ளது.

மாணவர்கள் மற்றும் பணியாளர்களுக்கு இது இயற்கை வழி இறைவன் தந்த வரமாகும். மரங்கள் மட்டுமா? இஞ்சி, மஞ்சள், பிரண்டை, செம்பருத்தி. ஆடாதோடா, கற்றாழை, இட்லி பூ எனப்படும் வெட்சி, வெற்றிலை, சுண்டை, அருகு என மருத்துவ குணமிக்க தாவரங்களும் நன்கு பராமரிக்கப்பட்டு வருகின்றன. பயன் தரும் மரங்கள் மட்டுமின்றி அழகு காட்சிகளாகத் திகழும் விசிறி வாழை, கல் வாழை, மகாத்மா, பென்சில் ஃபிட், கொரியன்ஸ் ராயல் ஃபாரம், மணி பிளான்ட், சில்வர் பிளான்ட், விளக்குத் தொட்டி மரம், பாட்டில் பிரஷ், கோல்டன் ஷவர், பிங்க் ஷவர், பைக் ஏசி, அஸ்பேரசி, அரேலியா, குரோட்டன்ஸ்; போன்ற செடிகளும் கல்லூரி வளாகத்திற்கு மேலும் அழகு சேர்க்கிறது.

வள்ளியப்பாவின் தீர்க்க சிந்தனையும் தொலை நோக்குச் சிந்தனையும் இயற்கை குறித்த விஷயத்திலும் பரிணமிப்பதற்குச் சாட்சியாக ஒரு செயலை இங்குமுன் வைக்கலாம். மரத்தை அழித்துத் தான் தாள்கள் தயாரிக்கப்படுகின்றன என்பதால், சோனா கல்லூரி வளாகத்தில் தாள்களின் பயன்பாட்டை குறைப்பது என்ற எழுதப்படாத விதியினை வரையறுத்திருக்கிறார் வள்ளியப்பா.

NO PAPER RULE என்பது இவர்களும் இவரைச் சார்ந்தவர்களும் பின்பற்றும் மிகச்சிறந்த இயற்கைச் சூழல் பாதுகாப்புச் செயலாகும். இவ்வாறு பழுமரம் கண்டு பறவைகளுக்குப் புகலிடம் நல்கி, தான் வாழும் சூழலை இயற்கையோடு இரண்டற கலந்தவாறு அமைத்துக் கொள்ளும் வள்ளியப்பாவின் திறன் பின்பற்றுதலுக்குரியது. இயற்கை தரும் கொடையினால் தன்னையும் காத்துத் தன்னை நாடி வருவோரையும் காத்து கம்பீரமாய் வீற்றிருக்கும் வள்ளியப்பா என்ற விருட்சத்தின் நிழல் நீண்டு விரிந்து நிறைவு தருவது மகிழ்ச்சியைப் பெருக்கிக்கொண்டே இருக்கிறது.



# சரித்திரம் போற்றும் சமூகச் செம்மல்

இறைவன் தன் படைப்பினைக் கண்டு தானே மகிழ்வுறும் நேரம் உண்டென்றால் ஓர் உயிர் சக உயிரிடம் அன்பு பாராட்டும் போதுதான். உலகில் மிக தெய்வீகமானது சக மனிதனிடம் நாம் காட்டும் அன்பும் பரிவும் தான். எல்லா உயிர் களையும் தன் உயிர்போல் பாவித்துச் சமஉரிமை வழங்குவோரின் மனதில் இறைவன் வாழ்கிறான் என்பது வள்ளலாரின் அமுதமொழி.

இதுபோன்று தன்னால் இயலும் தொண்டுகளைத் தவறாமல் காலம் தாழ்த்தாமல் எந்த ஒரு பிரதி பலனும் எதிர்பார்க்காமல் சுய விளம்பரங்களைத் தேடாமல் உதவி செய்து வரும் இனிய பண்பாளர் வள்ளியப்பா.

என்னுடைய இலக்கை எப்போதும் சமூகத்திற்கு பயன்படும் விதத்தில் தீர்மானிக்க வேண்டும் என்று இளமையிலேயே எண்ணம் கொண்டு விட்டேன்

என்று சொல்லும் வள்ளியப்பா உழைப்பில் நம்பிக்கை கொண்டவர்களுக்கு வெற்றி நிச்சயம். வெற்றி பெறுபவர்கள் ஒருபோதும் மனச்சோர்வு அடைவதில்லை. விடாமுயற்சி கொள்வதே அதற்கான காரணமாகும் என்று கூறித் தன்னோடு இணைந்து பயணிப்பவர்களை வெற்றிச் சிகரத்திற்கு அழைத்துச் செல்லும் அறிவார்ந்த வழிகாட்டுதல் களையுடைய கொள்கை நிறைந்த மனிதர்.

ஏனெஸ்ட் ஹெமிங்வே என்ற நாவலாசிரியர் ‘கிழவனும் கடலும்’ (The Old Man and the Sea) என்றொரு நாவல் எழுதினார். கிளர்ச்சிகரமான எழுச்சி தருகிற அந்த நாவல் நோபல் பரிசு பெற்றது.

ஒரு பெரியவர் படகிலே மீன் பிடிக்கப் புறப்படுகிறார். இரண்டு நாட்கள் கழித்து அவரது வலையில் பெரிய விலாங்குமீன் சிக்குகிறது. அவர் அந்த மீனைப் படகுக்குள் கொண்டு வரப் போராடுகிறார். மீனோ அவரைக் கடலுக்குள் இழுக்கப் போராடுகிறது. பல நாட்கள் இந்தப் போராட்டம் நடக்கிறது. கடும் போராட்டத்துக்குப் பிறகு வலையைப் படகுக்குள் கொண்டு வருகிறார் பெரியவர். எண்ணிய பலன் கிடைக்க வில்லையென்றாலும் அந்தப் போராட்டத்தில் வென்றதே மகிழ்ச்சி.

தொழில் பிரச்சினைகள் ஏற்படுகிறபோதெல்லாம் அந்தப் பிரச்சினைகளை நேருக்கு நேர் சந்தித்து அந்தப் பிரச்சினைகளில் வெற்றி பெறுகிறபோது வள்ளியப்பாவுக்கு ஏற்படுகிற மகிழ்ச்சியை, விடாமுயற்சிக்கும், இலட்சியப் பிடிப்புக்கும் உதாரணமாக விளங்கும் ‘ஏனெஸ்ட் ஹெமிங்வேயின் நாவலில் வரும் பெரியவருக்கு ஏற்பட்ட மகிழ்ச்சியோடு ஒப்பிடலாம்.

‘வாடிய பயிரைக் கண்ட போதெல்லாம் வாடிய வள்ளியப்பா’ உணவின்றி வாழும் மக்களுக்கு உதவும் நோக்கில் அன்னதானம் எனும் திட்டத்தின்மூலம் உணவில்லாதோர்க்கு பசியாற்றி வருகிறார். கொரோனா பெருந்தொற்று அதிகரித்துக்கொண்டே இருந்த காலத்தில் மருத்துவமனைகளில் இடமின்றி நோயால் பாதிக்கப்பட்ட மக்கள்

மிகுந்த சிரமத்திற்கு ஆளானார்கள். சேலம் மாவட்ட அரசு, சூழ்நிலையைச் சமாளிக்க போராடிக் கொண்டிருந்தது. அந்த நேரத்தில் வள்ளியப்பா சோனா கல்வி நிறுவனத்தில் 500 நோயாளிகள் தங்குவதற்கான உள்படுக்கை வசதி செய்து கொடுத்து சிகிச்சை மையமாக மாற்றிக் காட்டினார்.

மேலும் சிகிச்சை பெற்ற நோயாளிகளுக்கு ஒரு கோடி மதிப்பில் வள்ளியப்பா தினமும் ஐந்து வேளை உணவு வழங்கி அவர்களை அக்கறையுடன் பார்த்துக் கொண்டார். சோனா கல்விக் குடும்பத்தின் இத்தகு பெரும் பணியைத் தமிழக அரசே பாராட்டி ஊக்கப்படுத்திப் புகழ்ந்துரைத்தது. உதவி செய்வதற்கு பணம் இருந்தால் மட்டும் போதாது அதைச் செய்வதற்கான மனமும் உணர்வும் வேண்டும் என செய்து காட்டினார் வள்ளியப்பா.

எல்லா நல்ல செயல்களும் அறம்தான். செய்யும் நல்ல செயல்களே, சமூகத்தில் நம்மை முழுமையான நம்பகத்தன்மையுடைய சிறந்த மனிதர்களாக மாற்றும்.

அமைதியாகச் சிந்திக்கவும் அமைதியாகப் பேசவும் அமைதியாகச் செயல்படவும் ஆண்டவன் எனக்கு அருள் புரிந்திருக்கிறான். அதற்காகவே அவனுக்கு நான் நன்றி செலுத்திக் கொண்டிருக்கிறேன். அதிலே அளவில்லாத ஆனந்தம் எனக்கு எனச் சொல்லி சொல்லி மகிழும் ஆன்மீகப் பரிணாமம் கொண்டவர் வள்ளியப்பா.

**மருத்துவ உபகரணங்கள் வழங்கல்**

இந்தியாவின் உயர்தரக்கல்வி வாய்ப்புகளைத் தன்னகத்தே கொண்டு இயங்கும் சோனா கல்விக் குழுமம் கல்விப் பணியில் சிறப்பாகச் செயல்படுவதுடன் சமுதாய நலனிலும் அக்கறை கொண்டு பல்வேறு நலத்திட்ட உதவிகளைச் சமுதாயத்திற்கு வழங்கி வருகின்றது.

கொரோனா வைரஸைக் கட்டுப்படுத்தும் மூன்று லட்சம் மதிப்புள்ள 50 தெர்மல் ஸ்கேனர், சோனா கல்விக் குழுமத்தின் மாணவர்களால் கண்டுபிடிக்கப்பட்ட காலால் இயக்கப்படும் சானிடைசர், பிற

மருத்துவ உபகரணங்கள், நிவாரணப்பொருட்கள் ஆகியவற்றைச் சேலம் மாவட்ட ஆட்சியர் எஸ் ராமன் அவர்களிடம் ஒப்படைத்துச் சிறந்த மருத்துவப் பணியாற்றினார் வள்ளியப்பா.

அதுமட்டுமல்லாமல் சோனா கல்லூரிக் குழுவின் சார்பிலும், புதுக்கோட்டை மாவட்டம் பொன்னமராவதி வலையப்பட்டி நகரத்தார் சங்கம் சார்பிலும் பல்வேறு பகுதிகளில் உள்ள அரசு மருத்துவ மனைகளுக்கு மருத்துவ உபகரணங்கள் வழங்கப்பட்டன. வலையப்பட்டி பாப்பாயி அரசு மருத்துவமனை, மேலைச்சிவபுரி அரசு ஆரம்ப சுகாதார நிலையம், காரையூர் அரசு மேம்படுத்தப்பட்ட சுகாதார நிலையம், திருமயம் நச்சாந்துப்பட்டி மருத்துவமனை உள்ளிட்ட மருத்துவமனை களுக்கு ஆக்சிஜன் செறிவூட்டிகள் வழங்கப்பட்டுள்ளன. வலையபட்டி பாப்பாயி ஆச்சி மருத்துவமனைக்கு ECG கருவிகளும் மருத்துவ உபகரணங்களும் வழங்கப்பட்டுள்ளன.

வள்ளியப்பா மேற்கொள்ளும் சமூகப் பணி யாவுமே இல்லாதவருக்கு உதவுவதாகவும் ஆதரவற்றோரைக் காப்பதாகவுமே அமைகின்றது. தன்னுடைய நிறுவனத்தில் பணியாற்றும் பணியாளர்கள் அனைவருக்கும் இந்தக் கொரோனா நோய்த் தொற்றுக் காலத்தில் ஊதியத்தை முழுமையாகக் கொடுத்த கருணை உள்ளத்திற்குச் சோனா கல்விக் குழுமத்தின் பணியாளர்களும் அவர்தம் குடும்பங்களும் என்றென்றும் நன்றிக்கடன் பட்டுள்ளனர். ஏனெனில் உழைத்தவர்களுக்குச் சில இடங்களில் முறையான ஊதியம் கிடைக்கப் பெறுவதில்லை. அத்தகு வாழ்வியல் சூழலில் இவரது செயல் வணங்குவதற்குரியது.

உழைத்தவரின் வியர்வை உலர்வதற்குள் ஊதியம் தந்துவிட வேண்டும் என்பார் நபிகள். பெருந்தொற்றுக் காலத்தில் விடுப்பில் இருந்தவர்க்கு முழுஊதியம் கொடுத்த கருணை உள்ளம் கொண்டவர் வள்ளியப்பா.

பொய்யுடன் உருவாக்கப்படும் எந்த மாற்றமும் நிலைத்து நிற்பதில்லை. தனக்காக மட்டுமே வாழும் மனிதர்களையும், தன்னைப் பற்றியே எப்போதும் சிந்தித்துக் கொண்டிருக்கும் தன்னலவிரும்பிகளையும்

காலம் சக்கை என துப்பி விடுகிறது. தூர எறிந்து விடுகிறது. அப்படிப் பட்டவர்கள் வாழ்க்கைப் பயணம் பதிவுகளும் சுவடுகளும் இல்லாத பாலைவனம் ஆகிவிடுகிறது என்பதைப் புரிந்தவர் வள்ளியப்பா.

வள்ளியப்பாவின் கருணை உள்ளமானது இன்றோ, நேற்றோ உதயமானது அல்ல. சிறுவயதிலிருந்தே உடன் வளர்வது. மனித வாழ்க்கையின் முக்கியக் கடமையாக நான் கருதுவது என்னை நானே மீண்டும் மீண்டும் புதுப்பித்துக் கொள்வதுதான் என்று உரைக்கும் வள்ளியப்பா, சேலம் மாவட்ட ஆட்சியருடன் ஆலோசனை பெற்று சேலம் மாவட்ட வேலைவாய்ப்பு மைய அலுவலருடன் மிகப்பெரிய வேலை வாய்ப்பு முகாம் ஒன்றை நடத்தி இளைஞர் சமுதாயம் நல்வேலை வாய்ப்பினைப் பெற வழிவகை செய்தார். மாற்றம் என்பது தன்னிலிருந்து உருவாக வேண்டும். தான் உருவாக்கிய மாற்றங்கள் சமூகத்தின் துயர் துடைக்க வேண்டும் என்று இப்போதும் சிந்தித்துக் கொண்டிருக்கிறார் வள்ளியப்பா.

**பிரம்மாண்ட தேசியக்கொடி**

இறைவனது படைப்பில் மனிதன் தனக்கான நிலப்பரப்பின் எல்லைகளைத் தானே வகுத்துக் கொண்டான். அதனைக் காப்பாற்ற பெரும் போராட்டங்களைச் சந்திக்க வேண்டியிருந்தது. அத்தனையையும் முறியடித்துச் சுதந்திரக் காற்றைச் சுவாசித்த தருணம் என்றென்றும் நினைவில் நிறுத்த வேண்டிய ஒன்று.

வள்ளியப்பா தன் முன்னோர்கள் போன்றே தேசத்தின் மீது அளவில்லாப் பற்றுக் கொண்டவர். பல தேசத் தலைவர்களுடன் பயணித்தவர். சோனா கல்விக் குழுமத்தில் அந்தச் சுதந்திர தினக் கொண்டாட்டம் முன்பு போல் வழக்கமான ஒன்றாக இல்லாமல் வரலாற்றின் பக்கங்களில் இடம்பிடிக்கும் வகையில் அமைந்திருந்தது. 75 வருட சுதந்திரத்தின் மகிழ்ச்சியைக் கொண்டாடும் வகையிலும் மாணவர்களுக்குத் தேசப்பற்றினை விதைக்கும் பொருட்டும் அமைந்திருந்தது அந்தத் திருநாள்.

சேலத்தின் மிக உயரமான கட்டிடம் சோனா கல்லுரியில் உள்ள வள்ளியப்பா கட்டிடம். அங்கு தான் அந்தப் பிரம்மாண்ட நிகழ்வு நடந்தேறியது. பற்றற்றோரும் போற்றி வணங்கும் மூவர்ணக்கொடி தேசத்தின் மீதான தனது பக்தியைக் காட்டும் விதமாக 75-க்கு 50 அடி தேசிய கொடியை ஏற்றிச் சிறப்பித்தது சோனா கல்விக் குழுமம்.

இவ்விழாவிற்குத் தலைமை விருந்தினராக மாண்புமிகு அமைச்சர் திரு.கே.என்.நேரு மற்றும் எம்.எல்.ஏ திரு.இராஜேந்திரன் அவர்களும் கலந்து கொண்டனர். சோனா காலேஜ் ஆஃப் டெக்னாலஜி, ஃபேஷன் டெக்னாலஜி துறை மற்றும் தியாகராஜர் பாலிடெக்னிக் கல்லூரியின் ஜவுளித்துறை மாணவர்கள், ஆசிரியர்கள் மற்றும் பணியாளர்கள் இணைந்து இந்தக் கொடியை உருவாக்கி இருந்தனர். தேசமே 75-வது சுதந்திர தினத்தைக் கொண்டாடத் திட்டமிட்டிருந்த வேளையில் வள்ளியப்பா வரலாற்றின் பக்கங்களில் முத்திரை பதித்துக் கொண்டிருந்தார். மனிதம் காத்து நாட்டுப்பற்றையும் பேணிப் பாதுகாக்கும் சமூகச் செம்மல் வள்ளியப்பா.

ஒரு நாட்டைப் படைகளைக் கொண்டு ஆளக் கூடாது. அறத்தால் ஆள வேண்டும் என்று திருக்குறளில் தெரிவிக்கப்பட்டுள்ள கருத்தைப் பின்பற்றும் வள்ளியப்பாவின் வழிகாட்டுதலில் வளரும் மாணவ சமுதாயம் நிச்சயம் வெற்றியின் உச்சம்தொட்டு வாழ்வில் வெற்றி பெறும் என்பதில் ஐயமில்லை.



# கருமுத்து தியாகராாசரும், சோனா வள்ளியப்பாவும்

கருமுத்து தியாகராாசன் செட்டியார் பல்துறை அறிவின் ஆற்றல் மிக்கவராகவும் தன்னகத்தே ஒரு பல்கலைக்கழகமாகவும் விளங்கினார். கலைகள் மற்றும் துல்லியமான அறிவியல் ஆகிய இரண்டிலும் தேர்ச்சிபெற்றவர். ஒரு தொழில் முனைவோராக அவர் தனது ஆலைகள் முழுவதற்கும் உயர்தரம், நிலைத் தன்மை மற்றும் செயல்திறன் ஆகியவற்றிற்கு பெரும் மதிப்பளித்தார். கல்வியிலும் அதற்கான பாதையை வகுத்தார். இதற்காக நாம் தியாகராாசரை வளர்த்தெடுத்த அண்ணன் அருணாசலம் செட்டியாரைத் தான் போற்ற வேண்டும்.

கல்வி, ஆராய்ச்சி மற்றும் நல்வாழ்வுக்கான திறன்களை வளர்ப்பதே தியாகராாசரின் முதன்மைக்

குறிக்கோளாக இருந்திருக்கிறது என்பதனை அவரது வாழ்வியலையும், அவரது உரைக் கோவைகளையும் படிக்கிறபோது நம்மால் உணர்ந்து கொள்ள முடிகிறது.

நம் சோனா வள்ளியப்பாவினுடைய பெருஞ்சிறப்பு என்னவென்றால் அவர் தியாகராாசரைத் தனது முன்மாதிரியாகக் கொண்டு அவரை அப்படியே உள்வாங்கிக் கொள்ள முயற்சித்திருக்கிறார் என்பதுதான்.

கருமுத்து தியாகராாசர் எடுத்த செயல்களை முடிப்பதில் கண்ணும் கருத்துமாக இருந்தார். முடிவுகளை எடுக்கும் சுதந்திரத்தைத் தனது குழுவினருக்கு அளித்துச் செயல்பாட்டின் ஒவ்வொரு அம்சத்தையும் கூர்ந்து கவனிப்பவராக விளங்கினார் என்பதே அவரது மாபெரும் வெற்றிக்கு வழியாக அமைந்திருந்ததைப் பார்க்கிறோம். இந்த நெறிகளையே பேரன் சோனா வள்ளியப்பாவும் பின்பற்றினார் என்பதுதான் நாம் உணர வேண்டிய செய்தியாக இருக்கிறது.

தியாகராாசர் தொழிலுக்காக எவ்வளவு நேரத்தைச் செலவிட்டாலும் மாலையின் பிற்பகுதியை இலக்கிய நோக்கங்களுக்காகவே அர்ப்பணித்தார். தியாகராாசர் கலைக் கல்லூரி புகழ்பெற்ற அறிஞர்களின் இல்லமாக இருந்தது. தமிழ்ப் பேராசிரியர்கள் தமிழ் இலக்கியம் பற்றிய உரையாடல்களில் ஈடுபடுவதற்காக அழைக்கப்பட்டார்கள். அப்படித்தான் சோனா வள்ளியப்பாவும் சோனா கலை அறிவியல் கல்லூரியின் தமிழ்ப் பேராசிரியர்களை அடிக்கடி அழைத்துத் தமிழ் இலக்கிய உரையாடல்களில் ஈடுபட்டு மனம் மகிழ்பவராக இருக்கிறார்.

ஒரு முறை தியாகராாசர் கல்லூரி விடுதி மாணவர்கள் வாரத்திற்கு ஒரு முறையாவது எங்களுக்கு அசைவ உணவு தர ஏற்பாடு செய்யுங்கள் என்று விண்ணப்பித்த போது தியாகராாசர் அந்தக் கோரிக்கையை ஏற்க மறுத்துவிட்டார். மாணவர்கள் தங்கள் கோரிக்கையை மீண்டும் வலியுறுத்தியபோது கருமுத்து தியாகராாசர் சொன்ன செய்தி நம் சிந்தனைக்குரியது. அவர் சொன்னார் ‘நீங்கள் படியுங்கள், நான் மிகச் சிறப்பான முறையில் சத்தான சைவ உணவுக்கு ஏற்பாடு செய்கிறேன். நீங்கள் பிடிவாதம் பிடித்தால் நான் கல்லூரியை இழுத்து மூடினாலும்

மூடுவேனே தவிர அசைவ உணவு போட மாட்டேன்!' என்பதுதான். அப்படித்தான் நம் சோனா வள்ளியப்பாவும் ஐயா தியாகராசரின் சொல்லையே கடைப்பிடிக்கிறார். தன் சோனா கல்விக் குழுமத்தில் மாணவர்களுக்கு மிகச் சிறப்பான சைவ உணவையே அளிக்கிறார்.

'ஐயாவிடம் கற்றுக் கொள்ளவேண்டிய வணிகப் பாடங்கள் நிறையவே இருந்தன. ஐயாவிடம் இருந்துதான் வணிகப் பாடங்களை எங்கள் தந்தையார் கற்றுக் கொண்டார். நானும் ஐயாவிடம் இருந்து நிறையக் கற்றுக் கொண்டேன். சிறப்பான வணிகக் கல்லூரிகளில் கூட அப்படிப் பட்ட மேலாண்மைப் பாடங்களை யாரும் கற்றுக் கொள்ளமுடியாது. ஐயாவோடு இணைந்து சென்ற பயணங்கள் எந்தக் காலத்திலும் மறக்க முடியாத பசுமை நிறைந்த நினைவுகள்' என்கிறார் வள்ளியப்பா.

ஐயா எங்கே போனாலும் விடுதிகளில் தான் தங்குவார்கள். யார் வீட்டிலும் தங்க மாட்டார்கள். ஆனால் பெங்களூர் வந்தால் என் வீட்டில் தான் தங்குவார்கள். எந்தப் பெரிய மனிதர்களைச் சந்திக்கச் சென்றாலும் என்னையும் அழைத்துப் போய் அவர்களுக்கு அறிமுகப்படுத்தி வைப்பார்கள். இதெல்லாம் எனக்கு மிகுந்த பெருமைக்குரிய விசயங்களாக இருக்கும்.

பெரிய பெரிய வங்கிகளின், பொது மேலாளர்களையெல்லாம் நான் பழகி வைத்திருந்தேன். 'என்னோடு பேசத் தயங்குகிறவர்கள் கூட, உன்னோடு நன்றாகப் பழகுகிறார்களே அது எப்படியப்பா வள்ளியப்பா? என்று கேட்பார்கள். நான் சிரித்துக் கொள்வேன்.

வங்கிகளிலிருந்து வாங்கியிருக்கிற கடன் தொகைகளை இந்த இந்த மாதத்திற்கு இவ்வளவு இவ்வளவு கட்ட வேண்டும் என்று முடிவெடுத்துக் கட்டி விடுவேன். அதை ஐயா அவர்கள் மிகவும் பெருமையாகப் பேசுவார்கள். 'வள்ளியப்பன் தானே சொந்தமாக முடிவெடுத்து கடன்களைச் சரியான நேரத்தில் வங்கிக்குக் கட்டி விடுகிறான். அவன் நன்றாக வருவான்' என்று பிறரிடத்துச் சொல்லிப் பெருமைப்படுவதை நான் பலமுறை கேட்டு மகிழ்ந்திருக்கிறேன்.

என் ஐயா கருமுத்து தியாகராாசன் செட்டியாருக்கு மிகப் பெரிய இலட்சியங்கள் இருந்தன. உலகத்திலேயே மிகப் பெரிய நூற்பாலை நிறுவனர் ஆக வேண்டும் என்ற எண்ணம் இருந்தது. வெள்ளைக்கார மில் முதலாளிகளோடு போட்டி போட்டு ஐந்து இலட்சம் Spindles-ஐ இயக்கக்கூடிய நூற்பாலை அதிபராகி 1964லேயே அந்த இலக்கை எட்டித் தனது எண்ணத்தை நிறைவேற்றிச் சாதித்துக் காட்டினார்.

எனது ஐயா அவருடைய வாழ்க்கையை எப்படி வழி நடத்தினார்கள் என்பதையே நான் முன்மாதிரியாகக் கொண்டுள்ளேன். அவர் வகுத்தளித்த வாழ்க்கைப் பாதைதான் எனது தந்தையார் நடந்து சென்ற பாதை. அந்தப் பாதையிலேயே நானும் பயணிக்கிறேன். அந்தப் பாதையில் நடந்து சென்றுதான் என் வாழ்நாளில் நான் அடைய வேண்டிய யாவற்றையும் அடைந்தேன். எனது ஐயாவின் கீழும், எனது தந்தையின் கீழும் தொடர்ந்து கற்கும் வாய்ப்பைப் பெற்றதற்காக நான் எப்போதும் உண்மையிலேயே நன்றியுள்ளவனாக இருப்பேன் என்று கண்களில் நீர் கசியச் சொல்லுகிறார் வள்ளியப்பா. ஐயா கருமுத்து தியாகராாசரின் அறிவு வழிகாட்டுதல்களை மறக்கவே முடியாது என்கிறார்.

''பல்கலைக்கழகம் நிறுவி யாரும் பெறாத பொன்றாப் புகழ்பெற்று விளங்கிய டாக்டர் ராஜா சர். அண்ணாமலைச் செட்டியார் அவர்களும், ''பிறர்க்கென முயலும் பெற்றிமையால்'' தம் செல்வம் முழுதையும் வாரி வழங்கிக் காரைக்குடியில் கல்விக் கோவில்களை எழுப்பிய வள்ளல் அழகப்ப செட்டியார் அவர்களும், பிற நகரத்தார்களும் செய்திருக்கும் கல்விப் பணிகளாலேயே தமிழ்நாட்டில் கல்வி சிறந்து விளங்குகிறது. நம்மவர் போல் ஈட்டிய பொருளில் பெரும்பகுதியைச் சமயம் கல்வி முதலிய அறங்களுக்கு வாரி வழங்கியவர்களை நிலவுலகில் வேறு எங்கும் காண்பதரிது என்றெல்லாம் ஐயா அடிக்கடி சொல்வது என் நெஞ்சை விட்டு நீங்காது நிறைந்திருக்கிறது'' என்கிறார் வள்ளியப்பா.

'சங்க நூல்கள் 'நகர்' எனக் குறிக்கும் பெருமனைகளை எழுப்பி நயத்தக்க நாகரித்தோடும் பண்போடும் வாழ்ந்த சிறப்பால் நாம் ''நகரத்தார்'' என அழைக்கப்பட்டோம் என்று ஐயா சொல்லுவார்கள்.

செல்வர்கள் விழாக் காலத்தில் வீண் பெருமைக்காகவும் வெற்று ஆரவாரத்திற்காகவும் செய்யும் பெருஞ் செலவில் ஒரு சிறு பாகத்தை ஒதுக்கினால், அது நம் இனத்து மக்களை உய்விக்க வல்லதாகும்' என்று ஐயா சொன்ன சொற்கள் இன்னும் என் செவிகளில் ஒலித்துக் கொண்டே இருக்கின்றன என்கிறார் சோனா வள்ளியப்பா.

'பர்மா, செய்கோன், இலங்கை ஆகிய நாடுகளில் பெருகிப் பயனின்றிக் குவிந்து கிடக்கும் தரும நிதிகளையும், பொது நிதிகளையும், இந்தியப் பேரரசின் துணை நாடி, கொண்டு வருவதற்கு உரிய முயற்சிகளை இனியும் காலம் தாழ்த்தாது மேற்கொள்ளவேண்டும் என்றும், மலேசிய நாட்டிலுள்ள தருமநிதி, பெரு நிதிகளையும் நிலைமை மாறுதற்கு முன்னரே கொண்டு வர ஏற்பாடு செய்வது நன்று என்றும் கூறி நகரத்தார் குலம் மேன்மை யடைய வேண்டும் என்றும் அயராது பாடுபட்ட மேதை ஐயா கருமுத்து தியாகராசர்' என்று சொல்லுகிற வள்ளியப்பா, நான் சென்னை நகரத்தார் மாணவர் சங்கத் தலைவராக வருவதற்கு எனக்கு ஆதார மையமாக இருந்தது ஐயாவின் கருத்துரைகள்தான் என்றால் அது ஒரு சிறிதும் புகழ்ச்சியில்லை என்கிறார்.

'நான் சென்னை நகரத்தார் மாணவர் சங்கத் தலைவராக இருந்த போதுதான் சென்னை பச்சையப்பர் கல்லூரி மாணவர் தலைவராகவும் செயலாற்றினேன். எனது அன்பு அழைப்பை ஏற்று ஐயா அவர்கள் இரு இடங்களுக்குமே சிறப்புரை ஆற்றுவதற்கு வருகை தந்து என்னைப் பெருமைப்படுத்தினார்கள், என்னைப் பற்றியும் அம்மேடையில் புகழ்ந்துரைத்தார்கள், அதற்கு நான் கொடுத்து வைத்திருக்க வேண்டும்' என்கிறார் வள்ளியப்பா.

**'அளவறிந்து வாழாதான் வாழ்க்கை உளபோல**
**இல்லாகித் தோன்றாக் கெடும்'**

என்ற பாடலும், தன் பொருளின் அளவை அறிந்து வாழாதவனுடைய வாழ்க்கை அழித்துவிடும்' என்ற அந்தப் பாடலின் பொருளும் ஐயா மேடையில் சொல்லிச் சொல்லியே எனக்கு மனப்பாடமாகிவிட்டது.

அந்தக் குறள் எனக்கு இன்றுவரை பயன் அளித்துக் கொண்டிருக்கிறது. எல்லோருக்குமே இந்தக் குறள் மிகுந்த பயன் அளிக்கும் என்பது என் கருத்து.

'வள்ளுவர் தம்மைச் சான்றாகக் காட்டிய இடங்கள் குறளில் இரண்டுள்ளன. வாய்மையையும், அறிவுடை மக்கட் பேற்றையும் கூறுங்கால் தம்மைச் சான்று காட்டியுள்ளார் வள்ளுவர்' என்பார் ஐயா.

**யாமெய்யாக் கண்டவற்று ளில்லை எனைத்தொன்றும்**
**வாய்மையின் அல்ல பிற** என்பதும்

**பெறுமவற்றில் யாமறிவ தில்லை அறிவறிந்த**
**மக்கட் பேறல்ல பிற'**

என்பதும் அந்தக் குறள்களாகும் என்றும் ஐயா சொல்லிக் கொடுத்திருக்கிறார்.

''சித்தர்கள் மருத்துவத் துறைக்கு முதல்வர்கள் ஆவர். அவர்கள் மலை, காடுகளில் இருந்தனர். மரம், செடி, கொடிகளின் வேர், கிழங்கு, தண்டு, இலை, பூ, காய், கனி முதலியவற்றை உண்டு வாழ்ந்தனர். தாவர, தாதுப் பொருள்களின் இயல்புகளை அறிந்து, மருந்தாக்கி அருந்தி, அழியா அழகும், மாறா இளமையும் காத்து ஓம்பினர். மேலும், யோகநெறியை மேற்கொண்டு, நில்லா உடம்பை நிலைபெறச் செய்யும் சித்தி வல்லுநராகவும் விளங்கினர்.

நம் முன்னோர் இயற்கை நிலையை நன்கறிந்து நிலவுலகை குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல், பாலை என ஐந்து திணைகளாகப் பகுத்துள்ளனர். இப்பாகுபாடு வேறு எந்நாட்டவராலும் கண்டறிந்து கூறப்படாதத் தனிச்சிறப்பு வாய்ந்தது. இந்த ஐந்து நிலங்களில் வாழும் மக்கள் உடலுக்கு இயல்பாக எற்படும் நலந்தீங்குகளைச் சித்தர்கள் முறைப் படுத்தி நயமாகக் கூறியிருப்பது வியக்கத்தக்கது'' என்ற கருமுத்து ஐயாவின் சிந்தனைகள் என் மகன் தியாகு வள்ளியப்பாவிற்கு பிடித்தமானது. அந்த ஆர்வத்தின் பெருக்காலேயே அவன் இயற்கை மருத்துவக் கல்லூரியை உருவாக்குவதற்கு பெரு முயற்சிகள் எடுத்தான் என்று சொல்லலாம்.

‘வணிகப் பாடத்தை மட்டுமல்ல வாழ்க்கைப் பாடத்தையும் அவரிடமிருந்து நான் கற்றுக் கொண்டது நான் பெற்றபேறு’ என்கிறார் பேரன் சோனா வள்ளியப்பா.

மேல் உலகில் வீடு இல்லெனினும், இவ்வுலக வாழ்க்கைக்கு வீடு இன்றியமையாததாகும். பறவைகளுங் கூடத் தமக்கென ஓர் உறைவிடத்தை அமைத்துக் கொள்ளும் இயற்கையையும் இயல்பையும் கண்கூடாகக் காண்கிறோம். அவ்வுறைவிடங்களும், அருமையும், அழகும் எளிமையும் பொருந்த அமைந்திருப்பதற்குத் தூக்கணாங் குருவியின் கூடு ஒன்றே வியக்கத்தக்க சான்றாகும்.

ஆனால் மக்கள் பலர் தமக்கென ஒரு வீடின்றி, வெயிலிலும், மழையிலும் வருந்தி, பனியிலும், குளிரிலும் நடுங்கித் துன்புறுத்துகின்றனர். நோய்கு உறைவிடமாகிய பாழுஞ் சிறு கூரைக் குடிசைகளில் குடியிருந்து மடிகின்றனர்.

நாற்பது கோடி மக்கள் குடியிருக்கப் போதிய வீடுகள் கட்டுவதென்பது நாட்டின் பெருஞ் சிக்கல்களுள் ஒன்றாகும். ஆயினும், எளிய மக்கள் அனைவர்க்கும் உணவு, உடை, கல்வி ஆகியவற்றைப் போன்று தக்க உறைவிடம் உதவுவது அரசியல் அறமும் கடமையுமாகும்.

இலங்கையில் தொழிலாளர் இயக்கத்தில் ஈடுபட்டிருந்த என் இளமைப் பருவத்தே தொழில் முதல்வர்கள் தொழிலாளர்கட்கு ஏற்புடைய நல்ல வீடுகள் கட்டித்தர வேண்டும் என்ற எண்ணம் என் உள்ளத்தில் வேரூன்றியது. பின்னர், நூற்பாலைத் தொழிலை மேற்கொண்டது முதல் அக்குறிக்கோளை நிறைவேற்ற முயன்றும், பல இன்னல்களால் அது கைகூடவில்லை. இறுதியில் அந்நாள் புதுக்கோட்டை அரசின் உதவியால் மணப்பாறையில் ஏற்ற இடங்கிடைக்கவே, அக்கனவு ஓரளவு நனவாகியது. பின்னர், பசுமலையில் அரிதின் முயன்று, இடம்பெற்று, நூற்றறுபது வீடுகள் கட்டப்பெற்றன. இவை தொழிலாளர் சிறு மாளிகைகள் என்று கண்டோர் பலராலும் பாராட்டப் பெறுகின்றன.

பரந்த இடத்தில் மிகுந்த செலவில் மாளிகைகளை அமைப்பது எளிது. ஆனால், குறுகிய இடத்தில் குறைந்த செலவில் எல்லா நலங்களும் கொண்ட சிறு வீடுகளை அழகுற அமைப்பது அரிது.

‘அமெரிக்காவில் உள்ள சில தொழிற்சாலைகளில் வரவு செலவுகளைச் சிறிது கருதுவோம். அமெரிக்காவில் ‘‘நியூயார்க் டைம்ஸ்’’ என்ற ஒரு நாளிதழின் வரவு செலவு நம் நாட்டில் ஒரு மாகாண அரசின் வரவு செலவை ஒத்திருக்கிறது. ‘போர்ட்’ மோட்டார் கம்பெனியின் வருமானம் இந்தியப் பேரரசின் வருமானத்தின் அளவு இருக்கிறது. ‘ஜெனரல் மோட்டார்ஸ்’ என்ற இன்னொரு கம்பெனியின் வருமானம், இந்தியப் பேரரசு, அதன் மாகாணங்கள் ஆகிய இவற்றின் மொத்த வருமானத்தை அடுத்திருக்கிறது. இவைகளைக் கேட்கும்போது எவர்தாம் வியப்படைய மாட்டார்கள்? இப்படிப் பல தொழிற்சாலைகள் அங்கே இருக்கின்றன. இவ்வாறு தொழிற்சாலைகள் மிகுந்திருப்பதனாலன்றோ பொருள் வளம் பெருகி அமெரிக்கா ‘குபேர பட்டணமாக’ விளங்குகின்றது’ என்ற ஐயாவின் பேச்சே என்னைத் தொழில்களைப் பெரிதும் நேசிக்க வைத்தது.

‘நம் மாகாணத்தில் உள்ள ஐந்து கோடி மக்கள் அனைவருக்கும் வேண்டிய துணியை உற்பத்தி பண்ணிக் கொள்ள நமக்கு நாற்பதினாயிரம் விசைத்தறிகள் வேண்டும். இப்பொழுது எண்ணாயிரம் விசைத்தறிகளே இருக்கின்றன. மேற்கொண்டு வேண்டிய தறிகளை வைப்பதற்கு நம் அரசு துணைபுரிய வேண்டும். சென்னை மாகாணத்தில் புதிதாகக் கதிர்களோ, தறிகளோ நிறுவ அனுமதி கொடுக்கப்படாதென்று முன் நம் சென்னை முதல் அமைச்சராக இருந்த திரு.பிரகாசம் தொடுத்த பொல்லாப் போரினால் பல புது ஆலைகள் வளரமாட்டாமல் இறந்து ஒழிந்தன. இது தவிர, ஏற்கனவே இந்திய அரசாங்கத்திடம் அனுமதி பெற்று நிறுவப்பட்டுள்ள தறிகளுக்குப் போதிய நூலும் கொடுபடாமல் தடை செய்யப்படுகின்றது. இத்தகைய முரண்பாடான செய்கைகளை அரசு கைக்கொண்டால் துணிப் பஞ்சம் எவ்வாறு நீங்கும்?’ என்றெல்லாம் ஐயா பேசியது மக்கள் நலன் சார்ந்ததுதான். ஐயா மட்டும் கொஞ்சம் வளைந்து கொடுத்திருந்தால் அவர் பெயரால் அன்றே பல்கலைக்கழகம் வந்திருக்கும். விருதுகளும், பட்டங்களும் குவிந்திருக்கும்’ என்கிறார் வள்ளியப்பா.

மதிப்பிற்குரிய மகாத்மாவுக்கும், மேன்மை தங்கிய இராஜாஜிக்கும் ஐயா கருமுத்து தியாகராசர் எழுதிய கடிதங்கள் எல்லோரும் படிக்க வேண்டியவை. சமுதாயச் சிந்தனை மிக்கவை. எல்லாவற்றைக் காட்டிலும் உண்மையானவை. அவருடைய அஞ்சா நெஞ்சை நீங்கள் அந்தக் கடிதங்களில் பார்க்கலாம். நான் பரீட்சைக்குப் படிப்பதைபோல் அந்தக் கடிதங்களைப் படித்து என்னைத் தயார்படுத்திக் கொண்டேன். இப்படிப்பட்டவர் என் அன்னை மீனாட்சியைப் பெற்றவர் என்பதற்காக அந்த அங்கயற்கண்ணிக்கு என் நன்றியைச் சொன்னேன்' என்கிறார் சோனா வள்ளியப்பா.

'ஒரு நாடு அறிவாற்றலாலும், நாகரிகத்தாலும், செல்வத்தாலும், வளத்தாலும் புகழாலும் சிறந்தோங்கி விளங்குவதற்குக் கல்வியே ஒப்பற்ற கருவாகும்' என்ற ஐயாவின் பொன்மொழியை நெஞ்சில் பதித்துக் கொண்டு என் வாழ்க்கையைத் துவங்கினேன். அது வளரும் அறிவார்ந்த பயணமாக இருக்கிறது என்கிறார் வள்ளியப்பா.



# ஆன்மீகப் பயணம்

எல்லாம் வல்ல இறைவனை, படைப்பின் மூலத்தை அறிவதற்கான முயற்சி தான் ஒவ்வொரு மனிதனும் மேற்கொள்ள வேண்டிய பயணம். அதற்கான கருவிகள் உடலும் மனமும். உள்ளம் பெருங்கோயில் ஊனுடம்பே ஆலயம் என்றார் திருமூலர். அதன்வழி வாழ்க்கை எனும் பாதையில் உடல், மனம் ஆகிய கருவிகளைக் கொண்டு ஆன்மீகப் பயணம் செய்து இறைவனை அடைதல் வேண்டும். நதி எப்படி இறுதியில் கடலைச் சேர்கிறதோ அதுபோல் ஜீவாத்மாக்கள் பரமாத்மாவை அடைந்தே தீரும். இது இயற்கை வகுத்த நியதி.

உலக உயிர்கள் அனைத்தும் ஆன்மீகம் விதைக்கப்பட்டே பிறப்பெடுக்கின்றன. ஆனால் சில உயிர்கள்தான் தன்னுள் உள்ள தெய்வீகத் தன்மையை உணர்ந்து செயலாற்றுகின்றன.

பல வருடங்களுக்கு முன்பு இளவேனிற் கால மாலை நேரம். அமெரிக்காவில் மிச்சிகன் ரயில் நிலையத்திலிருந்து ஒரு இளம் அறிவியலாளன் ரயிலில் ஏறி அமர்ந்தான்.

ரயில் சிறிது தூரம் சென்ற பிறகுதான், எதிரில் அமர்ந்திருந்த ஒருவர் ஆன்மீக நூலைப் படித்துக் கொண்டிருப்பதைக் கண்டான். இது அவனுக்கு அவ்வளவாகப் பிடிக்கவில்லை.

அவன் அவரைப் பார்த்து, ‘‘நீங்கள் இதுபோன்ற நூல்களைப் படித்து நேரத்தை வீணாக்காதீர்கள். இவையெல்லாம் வெறும் ஏமாற்றுவேலை. என்னைப் பாருங்கள். நான் ஒரு அறிவியலாளன். அறிவுசார் முடிவுகளை ஆதாரமாகக் கொண்டு ஏற்றுக் கொள்ளும்படி தெளிவாகக் கூறினால் மட்டுமே ஒரு விசயத்தை நான் நம்புவேன். குருட்டு நம்பிக்கைகளுக்கு ஒருபோதும் இடம் அளிக்கமாட்டேன்’’ என்றான்.

இப்படியாக, வெகு நேரம் அவன் தனது கருத்துகளை எடுத்துரைத்தான். இருவரும் இறங்க வேண்டிய நேரம் வந்தது. பெருமிதத்துடன் அந்த அறிவியலாளன் தனது விசிட்டிங் கார்டை எடுத்து, எதிரிலிருந்த மனிதரிடம் கொடுத்து விட்டு ‘‘ஒரு செயல் செய்யுங்கள், நேரம் கிடைக்கும்போது என் அலுவலகத்திற்கு வாருங்கள். நான் உங்களுக்குப் புரியும்படி எடுத்துரைக்கிறேன். இத்தகு ஆன்மிக விசயங்களின் ஏமாற்றுத்தனம் பற்றி உங்களுக்குப் புரிய வைக்கிறேன்’’ என்றான்.

அப்போது அவரும் தனது விசிட்டிங் கார்டை இவரிடம் கொடுத்தார். அந்த கார்டை வாங்கிப் பார்த்தபோது, இளம் அறிவியலாளன் பேச்சிழந்து நின்றான். தான் இதுவரை யாரிடம் தனது பெருமை பற்றி மார்தட்டிக் கொண்டிருந்தோம் என்பதை அறிந்தபோது அவன் வெட்கித் தலைகுனிந்தான்.

புது நாகரிக அறிவியல் துறையில் காலடி எடுத்து வைத்திருக்கும் அவன், வாழ்வில் ஒருமுறையாவது பார்த்து விட முயன்ற ஒருவர்தான் அவன் முன்னால் ஆன்மீக நூலைப் படித்துக் கொண்டிருந்தார். அவர் தாமஸ் ஆல்வா எடிசன். உலகுக்கு ஆயிரக்கணக்கான அறிவியல் பரிசுகளை அளித்த பெரியார்.

அவ்வகையில் எண்ணற்ற சமயப் பெரியோர்களை நாம் கண்டிருக்கிறோம். இப்பெரியோர்கள் அனைவருமே மெய் உணர்ந்து தன்னிலை அறிந்தவர்கள். தன்னைக் கடந்து உள்சென்றவர்கள். அதன்வழி தன்னை அறிந்த மாமனிதர் வள்ளியப்பா. நம்மை நாம் உணர்தல் ஆன்மீகம், பிறர் யார் என நாம் உணர்தல் தெய்வீகம்.

வள்ளியப்பா ஆன்மீகம் அறிந்து தெய்வீகமும் உணர்ந்த பண்பாளர். உலகக் கடமைகள் செய்ய இறைவன் நம்மைப் பணித்திருக்கலாம். இறைப்பணிக்காக இறைவனே நியமிக்கும் மனிதர்கள் வரம் பெற்றவர்கள், புனிதம் அடைந்தவர்கள். தன் வாழ்நாள் முழுதும் அளப்பறிய அன்றாடப் பணிகள் பல இருக்கும்போதும் இடைவிடாது இறைப்பணி செய்வதை வாழ்வியல் ஒழுக்கமாகக் கடைப்பிடித்து வருபவர் வள்ளியப்பா.

இறைவன் நம்மை ஒருபோதும் கைவிட மாட்டான் என்ற எண்ணம் எவனை ஆட்கொள்கிறதோ அவன் இருளிலும் புயலிலும் ஒருபோதும் அமைதி குலைய மாட்டான்.

தன்னைச் சரியாக அறிந்து கொண்டு முன்னேற முயற்சிப்பவர்களுக்கு கடவுள் உதவிபுரிகிறார்.

இறை வழிபாட்டின் மூலம் நாம் தகர்க்க முடியாத கோட்டையைக் கட்ட முடியும். இறைவழிபாடு நமக்கு அடைக்கலம் தருகிறது. மனம் அலைபாயாமல் பார்த்துக் கொள்கிறது. நங்கூரம் போலச் செயல்பட்டு நம்மனம் இறைவனிடத்தில் ஒன்றியிருக்க உதவுகிறது என்ற கருத்துகளில் ஆழ்ந்த நம்பிக்கை உடையவர் வள்ளியப்பா.

அற்புதப் பணியாம் ஆலயப்பணியில் தன் தாயாரின் வேண்டுகோளுக் கிணங்க அவர்களது குலதெய்வமான துவார் சிவன் கோவிலுக்கு நந்தவனம் அமைத்துக் கொடுத்தார். நீண்ட நாள் நிலுவையில் இருந்த இப்பணி இவரால் துரிதம் பெற்றது. சேலத்தில் தங்கத்தால் விமானம் அமைத்த உலகின் முதல் ஆஞ்சநேயர் கோவிலுக்கு முன் பிரகாரத்தளம் அமைத்துக் கொடுத்துள்ளார். சேலத்தில் உள்ள ஐயப்பன் கோவிலுக்குப் பல வகையான திருப்பணிகளைச் செய்து வருகிறார்.

வள்ளியப்பா சேலத்தில் உள்ள ராஜகணபதி ஆலயத்திற்குச் சுற்றுப் பிரகாரத்தை தந்தையார் அமைத்துக் கொடுத்த நாள் முதலாகத் திருக்கோவிலின் பல திருப்பணிகளில் தன்னைத் தினந்தோறும் ஈடுபடுத்தி வருகிறார். தங்களது குலதெய்வக் கோவிலான துவார் வள்ளி லிங்கம் அடைகாத்தான் அம்மன் திருக்கோவில் திருப்பணிகளை இடைவிடாது செய்து வருவது அவர் இறைவன் மீது கொண்டுள்ள பக்தியின் திறத்தை நமக்கு உணர்த்துகிறது.

எல்லாம் வல்ல இறைவனுக்குத் திருமண வைபவம். அதுவும் அவன் நமக்குக் கொடுத்த இடத்தில் அத்திருப்பணியை நாம் ஏற்றுச் சேவை செய்தல் பல ஜென்ம புண்ணியத்தின் பலனாகும். ஈடில்லா வரமாகும். அவ்வரம் வள்ளியப்பாவிற்குக் கிடைத்தது. அச்சேவையைச் செய்தவர்களுக்கும் அக்காட்சியைக் கண்டு களித்தவர்க்கும் அது பேரானந்தத்தை நல்கியது.

இந்து சமயத்தில் இறைவன் இல்லறத்தில் வாழ்ந்து மனிதர்களுக்கு நல்லறம் அருளியிருப்பதைப் பக்தி இலக்கியங்கள் சொல்லியிருக்கின்றன. திருமலை திருப்பதி தெய்வ நிலையம் மற்றும் சீனிவாச திருக்கல்யாணத் திட்டத்தின் சார்பில் பற்பல முயற்சிகளை மேற்கொண்டு சரியான திட்டமிடலுடன் இறைவனின் திருக்கல்யாணக் கோலத்தை சேலம் மக்கள் யாவரும் கண்டு இன்புறும் வண்ணம் வள்ளியப்பா ஏற்பாடு செய்திருந்தார்.

இறைவனுடன் இணங்கி இருப்பதே உண்மையான வாழ்க்கை. அது பேரானந்தமும் மகிழ்ச்சியும் நிறைந்த வாழ்க்கை என்பார் வள்ளியப்பா.

சேலம் சோனா கல்லூரி மைதானத்தில் எல்லாம் வல்ல இறைவன் இறைவிக்குத் திருமண நிகழ்விற்கு அலங்கார மேடையில் மங்களகரமான விகாரி ஆண்டு தை மாதம் 24-ம் நாள் 9.2.2020 ஞாயிற்றுக்கிழமை மாலை சிறப்பாக நடைபெற ஏற்பாடுகள் செய்யப்பட்டிருந்தன.

சேலம் மாநகரமே காலை முதல் திருவிழாக்கோலம் பூண்டிருந்தது. சோனா வளாகம் திருப்பதி திருமலை போல் காட்சி தந்தது. கல்லூரி முழுவதும் அலங்கரிக்கப்பட்ட மின் ஒளிவிளக்குகள் கண்களைக்

கவர்ந்தன. மைதானத்தின் மறுபக்கத்தில் ஆயிரக் கணக்கில் வருகை தந்த மக்கள் கடலென காட்சியளித்தனர். எங்குப் பார்த்தாலும் மக்கள் வெள்ளம் கண்கொள்ளாக் காட்சியாக இருந்தது. மக்களின் பாதுகாப்பிற்காகத் தீயணைப்பு வாகனம், நடமாடும் மருத்துவமனைகள், காவல்துறையினர் அணிவகுப்பு என பாதுகாப்பு நடவடிக்கைகள் பல வகைகளிலும் மேற்கொள்ளப்பட்டிருந்தன.

காலை நிகழ்ச்சியில் தமிழக முதலமைச்சராக இருந்த மாண்புமிகு எடப்பாடி பழனிச்சாமி அவர்களும் மற்ற அமைச்சர்களும் கலந்து கொண்டனர். மாலை 4 மணி முதல் சோனா கல்லூரி மாணவ மாணவியர், பேராசிரியர்களின் சிறப்புச் சொற்பொழிவுகள் நடைபெற்றன.

ஸ்ரீனிவாசப் பெருமாளுக்கு ‘நித்திய கல்யாண உற்சவர்’ என்ற பெயர் உண்டு. நாள்தோறும் திருப்பதியில் திருக்கல்யாணம் நடைபெறும் அத்தகைய பெருமான் 9.2.2020 அன்று காலை 8 மணிக்கு மேல் 11:30 மணியளவில் சேலம் சுப்பிரமணியன் நகர் முருகன் திருக்கோவிலில் இருந்து திருவீதி உலா புறப்பட்டுச் சோனா கல்லூரி மைதான வளாகத்தில் உள்ள மணமேடைக்கு எழுந்தருளினார். சங்கு, சேகண்டி, மேள வாத்தியங்கள், இன்னிசை, ஆடல், பாடல் ஆகிய கலைநிகழ்ச்சிகளுடன் திருமண விழா தொடங்கியது. பொதுமக்களில் பெண்கள் திருமணத் திருநிகழ்விற்கு வகை வகையான சீர்வரிசைகளைக் கொண்டு வந்து சிறப்பித்தனர். பல்லாயிரக்கணக்கில் பக்தர்கள் கல்லூரித் திடல் முழுவதும் நிரம்பிக் காணப்பட்டனர்.

அனைவருக்கும் லட்டுப் பிரசாதம் வழங்கப்பட்டது. ஸ்ரீதேவி பூதேவி உடனாய சீனிவாச பெருமாள் சிறப்பு அலங்காரத்தில் மணமடையில் வீற்றிருந்தார். பட்டாச்சாரியார்கள் பாரம்பரிய சம்பிரதாயப்படி சடங்குகள் செய்தனர். சம்பிராயங்களைத் தொடர்ந்து மகா யாகம் வளர்க்கப்பட்டது அனைவரையும் மெய்சிலிர்க்க வைத்தது. ஸ்ரீதேவி பூதேவி தாயாருக்குப் பட்டுச்சேலை அணிவிக்கப்பட்டது. கெட்டிமேளம் முழங்க இலட்சக்கணக்கான பக்தர்களுக்கு முன்பாக ஸ்ரீதேவி பூதேவி தாயாருக்கு மங்கள நாண் சூட்டப்பட்டது.

பக்தர்கள் ஆனந்தக் கண்ணீர் மல்க ‘கோவிந்தா கோவிந்தா’ என்றும் ‘வெங்கட்ரமணா கோவிந்தா’ என்றும், ‘ஏழு குண்டலவாஸா’ என்றும் கோஷங்கள் முழங்க பஜனை பாடிக் கொண்டு ஏழுமலையான் ஸ்ரீனிவாசனின் திருக்கல்யாணக் கோலத்தைக் கண்டு மகிழ்ந்தனர்.

அதனைத் தொடர்ந்து பட்டாச்சாரியார்கள் ஸ்ரீதேவி, பூதேவி சமேத சீனிவாச பெருமாளுக்கு தீப தூப ஆராதனைகள் சேவித்தனர். எங்கும் மாலை நேரத்துத் தென்றல் காற்று வீச திறந்த வெளி எங்கும் துளசித் தீர்த்தம் காற்றில் மணக்க மக்கள் பரவசத்தில் மூழ்கினர். மாண்புமிகு தமிழக ஆளுநர் மேதகு பன்வாரிலால் புரோகித் பக்தி நிமித்தமாக மேடையின் தரையில் அமர்ந்து பெருமாளைத் தரிசித்து மகிழ்ந்தார். அனைவருக்கும் பிரசாதம் வழங்கி விருந்தோம்பல் செய்யப்பட்டது. திருக்கல்யாணத்தை ஒட்டி நடைபெற்ற கோலப்போட்டியில் 1500-க்கும் மேற்பட்ட மாணவர்களும் ஆசிரியர்களும் பங்கு கொண்டனர். தேர்ந்தெடுக்கப்பட்டோருக்குப் பரிசுகள் வழங்கப்பட்டன.

திருப்பதி தேவஸ்தானத்தின் AEO எஸ்.கிருஷ்ண ஐயர். திருக்கல்யாண திட்டக் கண்காணிப்பாளர் சி.சிவகுமார், பெரியார் பல்கலைக்கழகத்தின் முன்னாள் துணைவேந்தர் திரு. குழந்தை வேலு மற்றும் சேலம் மாநகரின் முக்கிய பிரமுகர்கள், தொழிலதிபர்கள், சீனிவாச திருக்கல்யாணத்தில் பங்கு பெற்றனர். திருக்கல்யாண நிகழ்வைத் திருப்பதி திருமலை தெய்வ நிலையப் பட்டாச்சாரியார் ஸ்ரீகிருஷ்ண சாய் பிரஸ்தன ஆச்சாரியார் குருராஜ் வேத மந்திரங்கள் ஓதிச் சிறப்பாக நடத்தி வைத்தார்கள். பெருந்திரளாக சேலம் நகரத்துப் பெருமக்களும் தாய்மார்களும் கலந்து கொண்டனர்.

நாம் அதிகாலையில் எழுந்து பெருமாளின் திருவுருவப் படத்தையோ கோபுரத்தையோ தரிசித்தால் நன்மைகள் பல பெருகும். அன்று அந்த மாலை வேளையில், சோனா குடும்பத்திற்கும் பொதுமக்களுக்கும் பெருமாள் தம்பதி சமேதராக எழுந்தருளிக் காட்சி தந்தார். இறைவனுக்கும் இறைவிக்கும் இனிதே திருமண கொண்டாட்டம் நிறைவடைந்தது. அன்னை மகாலட்சுமி அருளால் நாட்டு மக்கள் நலமுடன் வாழவும்

செல்வவளம் பெற்றுச் சிறக்கவும் இப்பெருந்திருநிகழ்வினை வள்ளியப்பா நன்முறையில் நடத்திக்காட்டினார். இதனால் பேரருள் அனுபவத்தை யாவரும் பெற்றனர்.

வேதகாலம் முதல் வழிபாட்டு முறைகளில் யாகங்கள் செய்வது வழக்கம். உலக மக்களின் நலனுக்காகவும் அவர்தம் வாழ்வு சிறக்கவும் எதிர்மறை விளைவுகள் ஏதும் ஏற்படாமல் இருக்கவும் யாகம் வளர்ப்பது நம் மரபு.

உலகத்து மக்கள் நலமுடனும் வளமுடனும் வாழ பெரும்பாலும் கோவில்களிலும் ஊர்ப்பொது இடங்களிலும் யாகங்கள் செய்வர். அத்தகு உயர்ந்த நோக்கில் வள்ளியப்பா உலகத்தவர் நலனுக்காக இரண்டு முறை தனது சோனா கல்லூரி வளாகத்தில் ஸ்ரீ சதசண்டி மகா யாகத்தினை பெருஞ்சிறப்பாக ஓதுவார்களைக் கொண்டு பிரம்மாண்டமாய் நடத்தினார். கடவுள் மாறாமல் இருக்கிறார். ஆனால் இந்த உலகில் மாற்றங்கள் ஏற்படத் தூண்டுகோலாக இருக்கிறார்.

ஆன்மீகத்தின் முக்கிய நோக்கமே மனிதன் பிற மனிதர்களுடன் இணக்கமாக வாழக் கற்றுக்கொடுப்பதுதான் என்கிறார் வள்ளியப்பா.

இறைவனுக்கு ஒப்புமை செய்வதற்கு உலகில் எந்தப் பொருளும் இல்லை. உள்ளத்தில் ஊற்றெடுக்கிற பேரன்பினை விரும்புகிறவன் இறைவன்.

தெய்வ சங்கல்பம் இருந்தால் மட்டுமே யாகங்களை நிறைவாக நடத்திட முடியும். அதற்கான ஏற்பாடுகளில் சோனா கல்விக் குழுமம் வள்ளியப்பா தலைமையில் இணைந்து செயலாற்றியது. பொதுமக்களும் கல்லூரி சார்ந்த பெரியோர்களும் கலந்து கொண்டு யாகத்தின் பெரும் பலனைப் பெற்று மகிழ்ந்தனர்.

மேலும் 2019-ல் ஒன்பது நாட்கள் நடைபெறும் நவசண்டி யாகத்தினையும் நடத்திக்காட்டினார். தன்னலத்தை முன்நிறுத்தாமல் உலக மக்களின் நலனைக் கருத்தில் கொண்டு வள்ளியப்பா சிந்தித்த விதம் அவரின் பக்தி மார்க்கத்தை வெளிப்படுத்துகிறது.

எல்லா நிலைகளிலும் மனிதனைக் காக்கும் மிகப்பெரிய சக்தி இறைசக்தி. அனுதினமும் மனதைப் பக்குவப்படுத்தி எதிர்மறை சிந்தனைகளிலிருந்தும் எதிர்மறை வினைகளில் இருந்தும் நம்மையும் நம்மைச் சார்ந்தவர்களையும் காப்பாற்றுவதும் இறைசக்தி.

பக்தி நிறைந்திருக்கும் தூயமனம் உடைய பக்தர்களை நாடி பகவான் ஓடிவருகிறான் என்ற நம்பிக்கை உடையவராக வள்ளியப்பா விளங்குகிறார்.

மனித அவதாரம் எடுத்து வாழ்வியலை வாழ்ந்து காட்டிச் சென்ற கிருஷ்ணின் பிறந்தநாளை வள்ளியப்பா வெகு விமரிசையாகக் கொண்டாடுவது வழக்கம். கல்லூரியின் அனைத்து மேடைகளிலும் தற்போது உள்ள சூழலில் வாழும் நோக்கத்தையம் வாழ வேண்டிய முறைகள் குறித்தும் மாணவர்களுக்குத் தொடர்ந்து அறிவுறுத்திக் கொண்டிருப்பவர் வள்ளியப்பா. அப்படியிருக்க கிருஷ்ண அவதாரம் எடுத்ததன் நோக்கத்தினைத் தான் உணர்ந்து மாணவர்களுக்குச் சொன்னது போல் மக்களும் அறிந்து கொள்ள வேண்டும் என விரும்பனார் வள்ளியப்பா.

ஒவ்வொரு வருடமும் ISCON (ஹரே ராம ஹரே கிருஷ்ணா) அமைப்பினர் சோனா கல்லூரி வளாகத்தில் ஏற்பாடு செய்யும் கிருஷ்ண ஜெயந்தி விழா மக்கள் அனைவரும் கலந்து கொள்ளும் மற்றும் ஓர் இறைவழிபாட்டு நிகழ்வு. அதற்கான தேவைகளையும் மனமுவந்து முன் நின்று செய்து கொடுக்கும் பண்பாளர் வள்ளியப்பா. இறையருள் தரும் புண்ணிய காரியங்கள் பல செய்யும் அருட்களமாக சோனா விளங்குவதால் அனைவராலும் ‘புண்ணிய பூமி’ என்று அழைக்கப்படுகிறது.

பூலாங்குறிச்சி அருகில் உள்ள இவர்களது குலதெய்வ தெய்வமான துவார் சிவன் கோவிலில் கட்டிடங்களை உருவாக்கிப் பல திருப்பணிகளைச் செய்து திருமுழுக்குடன் நன்னீராட்டு விழா நடத்தி இருக்கிறார்கள். இந்தத் தெய்வப் பெருந்தொண்டில் பெரும்பங்கு வள்ளியப்பாவையே சாரும். பிள்ளையார்பட்டி அருள்மிகு ஸ்ரீ கற்பக விநாயகர் கோவிலில் பல திருப்பணிகளை இன்றளவும் தொடர்ந்து செய்து வருகிறார்கள்.

இது மட்டுமின்றி பெங்களூரில் உள்ள ஸ்ரீ ராஜராஜேஸ்வரி தெய்வத் திருக்கோவிலில் தன்னை முழுமையாக ஆட்படுத்திக் கொண்டதோடு கோயில் திருப்பணிகளுக்குத் தேவையான உதவி களையும் நன்கொடைகளையும் வழங்கி வருவதில் வள்ளியப்பா முழுநிறைவு கொள்வதாகச் சொல்வார். திருக்கோவிலின் முக்கியப் பொறுப்புகளில் ஆலோசனை வழங்குவதிலும் தன்னைத் தனித்துவ மிக்கவராகக் காட்டி அதனைச் செயல்படுத்தியும் வருபவர் வள்ளியப்பா.

மனிதகுலத்தை எது ஒன்றுபடுத்துமோ அதுவே சிறந்த ஆன்மீகம் மேலான ஆன்மீகம், அழகான ஆன்மீகம் என்ற கருத்துக்குச் சொந்தக்காரர். தான் மட்டுமல்ல இந்தச் சமூகம் சிறந்த சமூகமாக விளங்க வேண்டும் என்பதில் அதீத அக்கறை கொண்டவர் வள்ளியப்பா. அதனை உருவாக்குவதில் மட்டுமல்ல உருவாக்கிக் காட்டுவதிலும் முனைப்புடன் செயல்படுபவர்.

மனதைத் தூய்மையாக வைத்திருக்கும் ஒவ்வொருவனும் நிம்மதியாக வாழ முடியும். இதுவே தெய்வீகம். இறைவழிபாடு பெருகப் பெருகச் சுதந்திர உணர்வும் இன்ப நிகழ்ச்சியும் பெருகும்.

ஆன்மீகம் மனித நேயத்தை வளர்க்க வேண்டும். ஆன்மீகம் சமத்துவ சமுதாயத்தை உருவாக்க வேண்டும். மனத்தூய்மையே இறைவழிபாட்டின் இலக்கணம் என்ற கோட்பாட்டு அறிவைக் கொண்டவர் வள்ளியப்பா.

வள்ளியப்பா தான் செய்து வரும் இறைச்சேவையைப் பரவலாகச் செய்ய மேலும் சில வாய்ப்புகள் அரசு அங்கீகாரத்துடன் கிடைத்தன. தமிழக அரசு அவரது இறைச்சேவை செயல்பாடுகளைக் கண்டு அவரைச் சேலம் சுகவனேஸ்வரர் திருக்கோவில், சேலத்தின் ஸ்ரீ ராஜகணபதி திருக்கோவில், சேலம் காசி விஸ்வநாதர் திருக்கோவில் ஆகியவற்றின் அறங்காவலர் குழுத் தலைவராக நியமித்துச் சிறப்புச் செய்தது.

சேலம் சுகவனேஸ்வரர் திருக்கோவிலில் மிக நீண்ட காலத்திற்குப் பிறகு 2023-ஆம் ஆண்டு திருக்குளப்பணி செய்யப்பட்டு இவரது தலைமையில் மகாகும்பாபிஷேகம் வெகு விமரிசையாக நடைப்பெற்றது.

இலட்சக்கணக்கான சிவபக்தர்கள் சூழ தேர்த்திருவிழா பிரம்மாண்டமாக நடைபெற்றது. சேலம் காசி விஸ்வநாதர் திருக்கோயிலின் குடமுழுக்குப் பணி தற்போது நடந்து வருகிறது.

சேலத்தின் ஸ்ரீ ராஜகணபதி திருக்கோவிலில் இதுவரை முழுமுதல் மூர்த்தியான ஸ்ரீ ராஜகணபதி வருடத்தில் ஒருமுறை மட்டுமே அதாவது விநாயகர் சதுரத்தியின் போது மட்டுமே தங்கக் கவசத்துடன் கூடிய சிறப்பு அலங்காரத்தில் காட்சியளிக்கும் வைபவம் நடைபெறுவது வழக்கம். இம்முறையில் மாற்றம் கொணர்ந்தார். அந்த மாற்றம் சேலம் மக்களை மட்டுமல்ல திருக்கோவில் இறைவனைத் தரிசிக்கும் பல்லாயிரக்கணக்கான பக்தர்களையும் மகிழ்ச்சியில் ஆழ்த்தியது. தக்காராய்ப் பொறுப்பேற்ற உடனே ஒவ்வொரு தமிழ் மாதத்தின் முதல் தேதி ஸ்ரீ ராஜ கணபதி திருக்கோவில் இறைவன் தங்கக் கவசத்தில் மக்களுக்கு அருள்பாலிப்பார் என அறிவித்தார். விக்னங்களைத் தீர்க்கும் விநாயகன் தன் கருணைத் திறத்தைப் பக்தர்களுக்கு அருள்பாலிக்க வள்ளியப்பாவைப் பணித்தார் என்றே சொல்லலாம்.

நாம் எல்லோருமே குழந்தைகளிடம் அன்பு காட்டுகிறோம். அவர்கள் செய்யும் குறும்புகளையும் தவறுகளையும் மன்னித்து மீண்டும் மீண்டும் அவர்களிடம் அன்பு செலுத்துகிறோம். அதுபோலவே இந்த உலகத்தில் இருக்கும் ஒவ்வொருவரிடமும் நாம் அன்பும் கருணையும் காட்டினால் நம்மிடம் கோபமோ வெறுப்போ ஏற்படாது. இப்படி ஒரு உன்னத நிலையை அடைவது எளிதான செயலில்லை. அதற்கு தளர்வில்லாத இடைவிடாத முயற்சி வேண்டும். இதனை நான் கொண்ட ஆன்மீக ஈடுபாடே எனக்கு அளித்தது என்கிறார் வள்ளியப்பா.

‘உழைப்பு எப்போதும் உண்டு. தெய்வமே சரண் என்றிருப்போர் உள்ளத்திலே தாபமில்லாமல் உழைப்பார்கள். ஆனபடியால் அவர்களுடைய செய்கைக்கு வலிமை அதிகம். வேகம் அதிகம். உயர்வு அதிகம். அழகு அதிகம். பயன் அதிகம் என்பது சொல்லாமலே விளங்கும்.

உழைப்பு எப்போதும் உண்டு. இதிலே நான் என்ற பாரத்தை நீக்கிவிட்டு உழைத்தால், வேலை கிறுகிறுவென்று வேகமாகவும் பிழை யில்லாமலும் நடக்கும். தன்னைத் தூக்கித் தலையிலே வைத்துக் கொண்டு வேலை செய்தால் குழப்பும்.

உண்மையான பக்தியே அமிர்தம். விதியின் முடிவுகளைத் தெய்வ பக்தி வெல்லும்' என்ற மகாகவி பாரதியின் கருத்துகளை அப்படியே தன் வாழ்க்கை வழியாகக் கொண்டிருப்பவர் வள்ளியப்பா.

இத்தகு பக்திமார்க்கம் சார்ந்த உயர்ந்த சிந்தனைகளைக் கொண்டு, மக்களின் இறைதரிசன எதிர்பார்ப்புகளை நிறைவேற்றி வரும் புண்ணியச் செயல்களைச் செய்து வருகிறார். மேலும் பல ஆண்டுகள் பக்தி உலகம் பரவசத்தில் திளைக்க வழிவகைகளையும் செய்து கொண்டே இருக்கிறார் வள்ளியப்பா.

வரலாற்றுச் சிறப்புமிக்கதும் பாண்டிய நாட்டின் முதல் குடைவரைத் திருக்கோவிலுமான பிள்ளையார்ப்பட்டி ஸ்ரீ கற்பக பிள்ளையார் திருக்கோவிலுக்கு அறங்காவலர் குழுத்தலைவராய்ப் பொறுப்பேற்றிருந்தார். அச்சமயத்தில் கோவிலுக்கான எண்ணற்ற திருப்பணிகளை மனமுவந்து செய்து வந்தார்.

இவரது தலைமையில் சிறப்புமிக்க அத்திருக்கோவிலுக்கு பி.க.நக.டிரஸ்ட்-ஆல் சகஸ்திர கலசாபிஷேகமும் அதிருத்ர மஹா யாகமும் நடத்தப்பட்டது. மேலும் அத்திருக்கோவிலில் ஸ்ரீ சோப கிருது வருடம் தை மாதம் 28-ஆம் நாள் தொடங்கி வைகாசி 10-ஆம் நாள் வரை தினமும் காலை மாலை உலகத்தின் அனைத்துப் பகுதிகளிலிருந்தும் அருள்மிகு கற்பக மூர்த்தியாம் விநாயகரை வணங்கி வரும் பக்த கோடி பெருமக்களின் நலன் வேண்டியும் நாட்டு மக்கள் அனைவருக்கும் நன்மை பயக்கவும் அருள்மிகு கற்பக பிள்ளையாருக்குச் சிறப்பான முறையில் கோடி அர்ச்சனைப் பெருவிழா நிகழ்த்தப்பட்டது.

மனிதனுக்கு வளம் பெருக்கவும் நலம் சேர்க்கவும் தன் அருள் திறத்தைக் காட்ட சில நேரங்களில் சில மனிதர்களை இயற்கையும்

இறைவனுமே தேர்ந்தெடுப்பார்கள். இது இயற்கையின் நியதி. அதன் வழியில் எல்லாம் வல்ல ஈசன் தன் பக்தர்களின் உள்ள விருப்பத்தை அவர்கள் மூலமே வெளிக்கொணரச் செய்த நெகிழ்ச்சிமிகு சம்பவம்..

புதுக்கோட்டை மாவட்டத்திற்கும் சிவகங்கை மாவட்டத்திற்கும் இடையில் அமைந்துள்ள காஞ்சாத்து மலையில் ஆயிரம் வருடங் களுக்கும் மேற்பட்ட பழமை வாய்ந்த ஸ்ரீ சுப்பிரமணிய சுவாமி திருக்கோவில் உள்ளது. அங்கு ஸ்ரீ காசி விசாலாட்சி சமேத ஸ்ரீ காசி விஸ்வநாதர் கோவில் கொண்டிருக்கிறார். அது மட்டுமின்றி அவ்விடத்தில் ‘சக்கர சுனை’ அமைந்துள்ளது. வெயில் படாத மற்றும் எக்காலத்தும் வற்றாத இச்சுனை நீர் காசித்தீர்த்தத்திற்கு நிகரானது. காசிக்குச் செல்ல இயலாத பக்தர்கள் இச்சுனை நீரைப் பருகினாலே அப்பிராப்தத்தை எய்துவர் என்பது நம்பிக்கை. அக்கோவில் சரியான பராமரிப்பு இல்லாமல் சிதிலமடைந்த நிலையில் காணப்பட்டது. அதன் காரணமாக அவ்வூர் மக்கள் பெருவருத்தம் கொண்டிருந்தனர். அந்நிலையில் ஊரின் முக்கிய பிரமுகர்களிடம் சென்று தொடர்ந்து முறையிட்டனர். எக்காரணம் கொண்டோ அப்பணி பதினைந்து வருடங்களாகக் காலதாமதமாகி வந்தது. மக்கள் அனைவரும் நம்பிக்கையற்றுப் போயினர். செய்வதறியாது தவித்த நிலையில் கோவிலைச் சீரமைக்க வேண்டி இறுதி முயற்சியாக வள்ளியப்பாவின் துணையை நாடினர்.

இறைப்பணியைத் தலையாய பணியாகக் கொண்டு செயல்பட்டு வரும் இவர் அவ்வூரின் முக்கிய பிரமுகர்களைச் சந்தித்துப் பேசினார். தலைமை குறித்த விவாதம் தொடர்ந்த போது முக்கிய பிரமுகர்கள் ஒரு தலைபட்சமாக நடந்து கொண்டனர். இந்தக் காரணங்களால் கோவில் திருப்பணி தள்ளிக்கொண்டு போவதை மக்கள் விரும்பவில்லை. அதே சமயத்தில் திருப்பணிகள் அனைத்தும் வள்ளியப்பாவின் தலைமையிலேயே நடைபெற வேண்டும் என மக்கள் விரும்பினர். அவ்விருப்பத்தை ஊரார் ஒன்று கூடி முடிவு செய்தனர். எவர் தலையீடும் இன்றி தாங்கள் மட்டுமே அனைத்துப் பணிகளுக்கும் தலைமையேற்று நடத்தித் தரவேண்டும் என்று வள்ளியப்பாவிடம் மக்கள் கேட்டுக் கொண்டனர். அவர்களின் அன்பான வேண்டுகோளுக்கிணங்க திருப்பணிகளைச் செய்யத் தொடங்கினார் வள்ளியப்பா.

அதன் முதற்கட்டமாக நெடுங்காலமாக மின்சார வசதியின்றி இருந்த கோவிலுக்கு மின்சார வசதியை ஏற்படுத்திக் கொடுத்தார். பின்பு பக்தர்கள் தடையின்றி மலையேறி வர படிக்கட்டுகளை அமைக்கும் பணியைத் துரிதத்தில் முடிக்கச் செய்தார். கோவிலுக்கு வழிகாட்டுவதே புண்ணியம் என்றால் படியமைத்துக் கொடுத்த பக்குவப்பணி மகத்தானது. இம்மகத்தான பணியில் அன்றைய நிதி அமைச்சர் ப.சிதம்பரம்அவர்களின் பங்கும் குறிப்பிடத்தக்கது. மேலும் அவரது மகன் திரு. கார்த்திக் சிதம்பரம் இன்றளவும் கோவில் திருப்பணிகளில் தன்னை ஈடுபடுத்திக் கொண்டு வருகின்றார். பக்தர்களின் நீண்ட நாள் தவம் பூரணத்துவம் அடையும் நேரம் வந்தது. அத்திருக்கோவிலுக்கு 21.08.2023 திங்களன்று அருள்மிகு ஸ்ரீ சுப்பிரமணிய சுவாமி திருக்கோவில், காசி விசாலாட்சி சமேத ஸ்ரீ காசி விஸ்வநாதர் மற்றுமுள்ள பரிவார தெய்வங்களுக்கு பாலாலயம் அமைக்கும் பணியினை நடத்தி முடித்தார். அன்றைய தினம் மக்களின் அன்பினால் உருவான வேண்டுகோள் இறைவனின் அன்பினால் முழுமை அடைந்தது. எந்த ஒரு யுகத்திலும் இறைவன் தனக்கான திருப்பணிகளைத் தான் படைத்த தனக்கான மனிதன் மூலமே நிறைவேற்றிக் கொள்கிறார் என்பது மெய்வாக்கு.



# சோனா கல்லூரி வளாக நூலகம்

**சே**லம் சோனா கல்விக்குழுமத்தில் வள்ளியப்பாவால் உருவாக்கப்பட்டிருக்கும் நூலகம் அங்கே பயின்று வருகின்ற மாணவ மாணாக்கியர் மட்டுமல்ல, மக்கள் எல்லோருமே ஒருமுறையாவது சென்று கண்டு வர வேண்டிய மாபெரும் நூலகம்.

அந்த நூலகத்திற்குள் சென்று வந்த பிறகு மனிதர்களின் கண்டுபிடிப்பில் மகத்தானது புத்தகங்கள் என்ற முடிவுக்கே நாம் வந்து விடுவோம்.

சோனா கல்லூரி வளாக நூலகத்தைப் பார்க்கிற போது ஒருவருக்கு என்ன ஆசை உண்டாகு மென்றால் நாமும் இந்தக் கல்லூரி மாணவனாகி இந்த நூலாகத்திற்கு வந்து இங்கேயுள்ள நூல்களை யெல்லாம் படிக்க மாட்டோமா? மின்னூலகத்தை முழுமையாகப் பயன்படுத்தும் வாய்ப்பைப் பெற

மாட்டோமா? என்ற ஆசையே உண்டாகும். அது இயல்புதான். அங்கேயுள்ள சில புத்தங்களைப் பார்க்கும்போது இதை ஏன் இருபது வயதில் படிக்காமல் போனோம் என்ற ஆதங்கம் உண்டாவது தவிர்க்க இயலாததுதான்.

புத்தகங்களைப் படிப்பதன் மூலம் உடம்பிலிருக்கும் அறிவு மையம் தூண்டப்படுகிறது என்பது உண்மைதான் போலும்! காரணம் இந்தச் சோனா குழும புத்தக சாலைக்குள் உள்ளே நுழைகிற போதே நமக்குள் உண்டாகிற புளங்காகித உணர்ச்சியைச் சொல்லிப் புரிய வைக்க முடியாது.

புத்தகங்கள் உட்கார்ந்து படிக்கிற நாற்காலிகள் மேசைகள் நம்மை எதிர் கொண்டழைக்கும் தேக்குமரப் படிக்கட்டுகள், ‘அதைப் படிக்கட்டுகள் என்பதா, மேடைகள் என்பதா, ஆசனங்கள் என்பதா! அப்படியோர் அழகு’ அந்தத் தேக்குமரங்கள் சோனா கல்லூரி வளாகத்திலேயே வளர்ந்து உருவானவை என்பதுதான் கூடுதல் சிறப்பு.

இவையெல்லாம் எதற்காக? மாணவ சமுதாயம் படிக்க வேண்டும் என்பதற்காக. அவர்கள் எங்கே அமர்ந்தும் படிக்கலாம் சுதந்திரப் பறவைகளாய்.... ஆனால், அவர்கள் படிக்க வேண்டும். அவர்கள் அறிவு பெற வேண்டும், ஆற்றல் பெற வேண்டும், ஒவ்வொரு கருத்தும் படிப்பவர் நெஞ்சங்களில் உட்புகுந்து ஊக்கமூட்டி உயிர்ப்பூட்டி மன எழுச்சியை உண்டாக்கி அவர்களுக்குள் புதிய முன்முயற்சி நம்பிக்கைகளை உண்டாக்கி வளமான நிலையான மகிழ்ச்சியைத் தர வேண்டும் என்பதே வள்ளியப்பா அவர்களின் முதன்மை நோக்கமாக இருக்கிறது. அதற்காகவே அவருக்குப் போற்றுதலுக்குரிய சிறப்பு வணக்கத்தை நாம் அளிக்கலாம்.

படித்து உணர்ந்ததை, உச்சபட்சமான செறிவான கருத்தியல்களை அடுத்த கட்டத்திற்கு எடுத்துப்போக உரையாடல்களும், கருத்தொருமித்த அணுகுமுறைகளும், பரிமாற்றங்களும் முதன்மையானது என்பதை உணர்ந்த வள்ளியப்பா, கருத்தியல் பரிமாற்ற அரங்கத்தை குளிரூட்டப்

பட்ட அரங்கம், பயிற்சி உபகரணங்கள், ஒலிஒளி அமைப்பு சாதனங்கள், இணையதள வசதி என உலகத்தரத்திற்கு உறுதியான உட்கட்டமைப்பு களோடு உருவாக்கிக் கொடுத்திருப்பது அவரது கலாச்சார பன்முகத் தன்மையையே காட்டுகிறது.

புத்தகங்களின் எண்ணிக்கை இலட்சத்தைத் தொடப் போகிறது என்கிறார் நூலகர். உலகத்திலே உள்ள அனைத்து விதமான அறிவு நூல்களையும், உலகத்தின் அனைத்துப் பகுதிகளிலிருந்தும் அந்தந்த மாதங்களில், அந்தந்த வாரங்களில் வரும் நூல்களையெல்லாம் அப்போதைக்கு அப்போதே படிக்கிற வசதி மின்னூலகங்களில் இருப்பதாகவும் மின்னூலகத்திற்கு மட்டுமே ஒரு வருடத்திற்கு 37 இலட்சங்கள் செலவிடப்படுவதாகவும் நூலகர் மிகுந்த ஆர்வத்தோடு சொல்கிறார்.

நோபல் பரிசு உட்பட உலகத்தின் சிறந்த விருதுகளைப் பெற்றிருக்கிற புத்தகங்கள் யாவும் எங்கள் நூலகத்திற்கு உடனுக்குடன் தருவிக்கப்பட்டு மாணவர்களுக்கு அறிமுகப்படுத்துகின்றன என்று பெருமை பொங்கச் சொல்கிறார் நூலகர்.

மாணவர்கள் தமது இலக்கு எதுவென அடையலாம் கண்டு கொண்டால் போதும்! அவர்களுக்கான வழிகாட்டுதல்களைத் தருவதற்காக ஆயிரக்கணக்கான புத்தகங்கள் ஒளிவீசும் விளக்குகளாக வெளிச்சம் தந்து கொண்டிருக்கின்றன சோனா நூலகம் என்ற ஆலயத்திற்குள்....

இன்று சமூக வலைப்பின்னல்கள் ஒவ்வொருவரையும் பிடித்து இழுப்பவையாகத் திகழ்கின்றன. ஒரே சிந்தனைப் பின்னலில் அனைவரையும் திணித்து விடுகின்றன. காலையில் எழுந்ததும் அத்தனைப் பேருமே ஒரே கருத்தையே பேசிக் கொண்டிருக்கிறார்கள். ஒரு மனிதன் தனக்கு விருப்பமான ஒன்றில் மூழ்கி அதைப் புரிந்து உணர்ந்து கடந்து செல்வதன் வழியாகவே தன் ஆளுமையின் முழுமையை அடைகிறான்.

புத்தகங்களை வெறும் தகவல்களின் வரிசையாக அறிந்திருப்பதால் எந்தப் பயனும் இல்லை. புத்தகங்களிலிருந்து அறிவு கிளைத்து வளரும்

விதத்தைப் புரிந்து கொள்வதற்கான உணர்ச்சி முனைப்புடைய முயற்சிகளில் உள்ளார்ந்த ஆர்வம் வேண்டும் என்ற எண்ணமுடையவராகத் திகழ்கிறார் வள்ளியப்பா.

‘சீனத்தில் ஒருவர் வாழ்நாளுக்குள் பத்தாயிரம் மைல் பயணம் செய்ய வேண்டும். பத்தாயிரம் நூல்கள் படிக்க வேண்டும்’ என்று பழமொழி உண்டு. புத்தகங்களைப் படிப்பது என்பது ஒரு தனித்துவமான வாழ்க்கை. அறிவைப் பெருக்கும் வாழ்க்கை. சாதாரண வாழ்க்கையை விட எழுச்சி உணர்வான வாழ்க்கை. அந்த வாழ்க்கையில் சிறந்த உயிர்ப்பூட்டல்கள் உண்டு. அவை வாழ்க்கையில் பெரும் விடுதலை உணர்வைத் தருவதாகவே இருக்கும். அந்த விடுதலை உணர்வு புத்தாக்கங்களை உண்டாக்கும் என்ற நம்பிக்கை வள்ளியப்பாவிற்கு அளவு கடந்து இருப்பதாலேயே அவர் நூலகத்திற்கு ஒதுக்கியிருக்கும் தொகை அளப்பரியதாக இருக்கிறது.

உலகின் மிக அற்புதமான கண்டுபிடிப்புகள் அறிவியலாளர்கள் ஓய்வாக இருந்தபோதுதான் நிகழ்ந்திருக்கின்றன. எனவே உங்கள் ஓய்வுநாளைச் சிறப்பாக கொண்டாடுங்கள் என்று வள்ளியப்பா சொல்லும்போது அவருள் உருவாகும் கனிவையும் நேயத்தையும் சோனா கல்லூரி மாணவர்கள் வெகுவாகவே ரசிக்கிறார்கள்.

இந்தியாவின் தற்போதைய கல்வித்திட்டத்தை அறிமுகம் செய்த மெக்காலே தனது சிறுவயதில் பெற்றோரின் கண்டிப்புக்கு எதிராக மறைத்து வைத்து நாவல் வாசித்ததாகக் குறிப்பிடுகிறார். தனது பள்ளிப் பருவத்தில் ஹெகலை வாசித்தவர் கார்ல் மார்க்ஸ். திருக்குறளின் அறக்கருத்துகளால் ஈர்க்கப்பட்டவர் லியோ டால்ஸ்டாய். கார்வைலின் புவியமைப்பு நூலால் புரட்டிப்போடப்போட்டவர் சார்லஸ் டார்வின். ஜான் ரஸ்கினின் ‘அன் டூ திஸ் லாஸ்ட்’ வாசிக்கத் துவங்கிய பிறகு வைக்க முடியவில்லை என்றவர் மகாத்மா காந்தி. ஜேம்ஸ் ஆலன் எழுதிய ‘மனம்போல வாழ்வு’ (As a Man Thinketh) என்ற நூலை, அந்நூல் வெளிவந்த 1912ஆம் ஆண்டிலேயே நான் படித்து உள்ளக்கிளர்ச்சி அடைந்தேன் என்கிறார் கப்பலோட்டிய தமிழர்

வ.உ.சிதம்பரனார். தன் ஆசிரியர் மாக்ஸல் மோல்ட் என்பவர் அறியச் செய்த காண்ட் எழுதிய ‘தி க்ரிட்டிக் ஆஃக் ப்யூர் ரீசன்’’ நூல் ஒன்று ஐன்ஸ்டீனின் குழந்தை மனதில் அறிவு மாண்பை விதைத்தது என்கிறது வரலாறு.

இந்நிலையில் இப்படியோர் அறிவொளி பொங்கும் நூலகத்தை அமைத்துக் கொடுத்திருக்கிற வள்ளியப்பாவை, ‘தங்களுக்குப் பிடித்த நூலாசிரியர் யார்?’ என்று கேட்டால், எனக்குப் பிடித்த முக்கிய நூல்களென்றால் அவை ‘‘கண்ணதாசனுடைய நூல்கள்தான்’’ என்கிறார். பெரும்பாலும் கண்ணதாசனுடைய மேற்கோள்களைத் தான் நான் பேசும்போதெல்லாம் குறிப்பிடுவேன் என்கிறார். கண்ணதாசனுடைய நூல்களிலேயே தங்களுக்கு எந்த நூல் விருப்பமானது என்று கேட்டால், ‘அர்த்தமுள்ள இந்துமதம்’ தான் என்கிறார். பெருமைக்காக எனக்கு அது பிடிக்கும் இதுபிடிக்கும் என்று மேல்நாட்டு அறிஞர்கள் பெயர்களைக் குறிப்பிடாமல் உள்ளத்தில் உண்மை ஒளியோடு தனக்கு விருப்பமானதை உரைத்த வள்ளியப்பா உண்மையிலேயே பெரியமனிதர் தான். எனவேதான் அவர் பெரிய நூலகத்தை உருவாக்கித் தந்து மகிழ்ந்து கொண்டிருக்கிறார்.



# பன்முகப் பண்பாளர்

இறைவன் படைப்பில் உயிர்கள் அனைத்தும் பரிணாம வளர்ச்சியினால் நன்னிலை அடைகின்றன. மனிதனின் வளர்ச்சி நிலையைச் சக உயிர்களில் இருந்து சற்றே வேறுபடுத்திக் காட்டலாம். மனித இனம் பன்முகத் திறன்களைத் தன்னகத்தே கொண்டு படைக்கப்பட்டுள்ளது. அதனைச் சரியான முறையில் இனம் கண்டு முறையாக வளர்த்து வந்தால் அவன் உயர் பண்புகளின் உச்சம் தொடுவான். அத்தகு முறையில் தன்னுள் இருந்த திறன்களைக் கண்டறிந்து தன் வாழ்வியலில் அவற்றைச் செயல்படுத்தி வெற்றி கண்டவர் வள்ளியப்பா.

அதேபோல் சமுதாயத்தில் குறிப்பிடத்தக்க மனிதனாக வாழ நற்பண்புகளே படிக்கட்டுகள். தனக்குள் இருக்கும் நற்பண்புகளைப் படிக்கட்டு களாக்கித் தான் முன்னேறியதோடு மட்டுமல்லாமல் தன்னைச் சார்ந்தோரையும் வாழ்வில் உயர்த்திக் காட்டினார்.

**கலை நிபுணர்**

திட்டமிடுதலே செயல்பாட்டின் ஆதாரம் என்ற எண்ணமுள்ள வள்ளியப்பா புதிய பரிமாணத்தில் கட்டிடங்கள் உருவாக்குவதில் பிரியம் உடையவர். ஒரு கட்டிடம் எக்காலத்திற்கும் எவ்விடத்திற்கும் பொருத்தமானதாக இருக்க வேண்டும் என நினைப்பார். இவரின் நுணுக்கமான சிந்தனைகள் பல இவரது வெற்றியைத் தீர்மானித்து விடுகின்றன. கட்டிட நுணுக்கங்கள் ஒரு கட்டிடத்தை உயர்த்திக் காட்டும் என வள்ளியப்பா நம்பினார். மேலாண்மைப் பண்புகளுடன் விடாப்பிடியான இடையறாமல் செயலாற்றும் உறுதியும் கலைவிழிப்புணர்வும் கொண்ட அவர் நிர்மாணித்த ஒவ்வொரு கட்டிடமும் மிகச்சிறந்த ஆலோசனைகளுக்குப் பிறகு உருவாக்கம் பெற்றது.

கட்டிடங்கள் கட்டுவதில் ஆர்வம் மிகுந்த வள்ளியப்பா அது எவ்வாறு வடிவமைக்கப்பட வேண்டும் என்பதிலும் இயற்கைக்கு உகந்ததாக இருக்க வேண்டும் என்பதிலும் தொழிலுக்கும் தொழில் செய்பவருக்கும் ஏற்புடையதாக இருக்க வேண்டும் என்பதிலும் உறுதியுடன் இருந்தார்.

ஓவியர் மணியம் வண்ணம் தீட்டுவது போலவும், காருக்குறிச்சி அருணாசலம் நாதசுரம் வாசிப்பது போலவும், எம்.எஸ். சுப்புலெட்சுமி பாடுவது போலவும் கண்ணதாசன் பாடல் எழுதுவது போலவும் யார் செய்கிறார்களோ அவர்களே தங்கள் செயலுக்கு மகுடத்தைத் தருபவர்கள் என்ற எண்ணம் கொண்டவர் வள்ளியப்பா.

கர்நாடக மாநிலத்தில் கட்டிடக்கலை வல்லுநராக வள்ளியப்பா அடையாளப்படுத்தத் தொடங்கிய காலகட்டம். அப்போது கர்நாடகாவில் கட்டிட வல்லுநர் ஒருவரின் கட்டிடத்தில் ஏற்பட்ட விபத்தால் (கங்காரம் பில்டிங்) பெரும் நட்டத்தையும் பெரும் பொருட்செலவையும் எதிர் கொண்டது. ஆதலால் கர்நாடக மாநில அரசு கட்டிடம் கட்டும் தொழிலை நடத்த இரண்டு மாத காலத் தடை விதித்தது. இந்த நிகழ்வு வள்ளியப்பா மனதில் ஒரு பெரும் விழிப்புணர்வை ஏற்படுத்தியது. தனது தந்தையுடன் பல நாட்கள் ஆலோசித்தார்.

இந்தியாவின் தலைசிறந்த கட்டிடக்கலை வல்லுநரான திரு.ஐ.எம்.காத்ரி அவர்களைத் தனது கட்டிட பணி தொடர்பாக நியமித்தார். கங்கராம் பில்டிங் கட்டப்படுவதற்கு ஏற்பட்ட பொருட்செலவை விட ஒன்றரை மடங்கு முதலீடு செய்தார். கட்டிடப் பணி அவருக்குப் பல தொழில் நுணுக்கங்களைக் கற்றுக் கொடுத்தது. தொழில் சார்ந்த பல நண்பர்களை ஈட்டித் தந்தது. பல்வேறுபட்ட அனுபவங்களைப் பாடமாய்க் கொடுத்தது.

அதன் பிறகு சோனா டவர்ஸ் கட்டிடம் 1982-களில் வானளாவி நின்றது. சிறந்த தொழில்நுட்பத்துடன் கூடிய காற்றோட்டமான கட்டிடத்தைத் தனது தொழிலகங்களாக வைத்துக் கொள்ள விரும்பி எண்ணற்ற தொழில் அதிபர்களும் வெளிநாட்டு நிறுவனங்களும் போட்டி போட்டுக் கொண்டு வள்ளியப்பாவை நாடினர். திரு. ராஜீவ் காந்தி அவர்கள் பாரத பிரதமராக இருந்த காலகட்டம். அப்போது அமெரிக்கா உள்ளிட்ட வெளிநாடுகள் போல இந்தியா டிஜிட்டல் மயமான காலகட்டம். இந்தியாவை டிஜிட்டல் இந்தியாவாக மாற்ற எண்ணியே அவர் அதற்கான செயல்பாடுகளில் இறங்கினார். அப்போது 1982-களில் இந்தியாவில் முதல் தொழில்நுட்ப நிறுவனமான டெக்சாஸ் இன்ஸ்ட்ருமென்ட் சோனா டவர்ஸில் துவங்கப்பட்டது.

இதன் மூலம் வள்ளியப்பா தனது தந்தையுடன் இணைந்து உருவாக்கிய சோனா டவர்ஸில் 1984ஆம் ஆண்டு டெக்சாஸ் இணைய சேவை நிறுவனம் துவக்கப்பட்டு இந்தியாவை உலகளாவிய தொழில் நுட்ப வரைபடத்தில் இணைத்து வெற்றி கண்டது. வள்ளியப்பா அப்போதைய தகவல் தொழில்நுட்பத் தூதுவருடன் இணைந்து வணிக நிறுவனங்களை நிறுவுவதற்குத் துடிப்புடன் செயல்பட்டார். அதன் விளைவாகச் சோனா டவர்ஸ் தகவல் தொழில்நுட்பத் துறைக்கு மிகவும் சாதகமாக அமைந்தது. இந்தியத் தகவல் தொழில் நுட்பத்தின் தந்தை என்று வர்ணிக்கப்படும் அதிகாரி என்.விட்டல் சோனா டவர்ஸிற்கு அடிக்கடி வருபவர்.

சோனா குழுமத்திற்குக் கட்டுமானம் ஒரு புதிய பொருளைத் தருகிறது. 1980களில் தொடங்கப்பட்ட இந்தக் கட்டுமான நிறுவனம் பல குடியிருப்பு மற்றும் வணிக வளாகங்களின் கட்டுமானத்தை வெற்றிகரமாக முடித்துள்ளது. சோனா குழும கட்டுமானத் திட்டங்களின் மதிப்புமிக்க மூன்று அமைப்புகள் சோனா ஹைட்ஸ், சோனா விஸ்டாஸ், சோனா ஹோம் ஆகும்.

சோனா ஹைட்ஸ் என்பது சோனா வள்ளியப்பா குழுமத்தின் ரியல் எஸ்டேட் வணிகப் பிரிவாகும். சோனா ஹைட்ஸ் வணிக மற்றும் குடியிருப்புப் பகுதியில் பல முக்கியத் திட்டங்களை முடித்து வெற்றி கண்டுள்ளது. சோனா ஹைட்ஸின் தலைமையகம் பெங்களூரில் உள்ளது.

**அனுபவ அறிவு**

சோனா வளாகத்தில் பல்கலைக்கழக கட்டிடத்தில் கார் போன்ற வாகனங்கள் மேலே சுற்றி கீழே இறங்கும் வகையில் ரேம்ப் போடும் பணி நடந்து கொண்டிருந்தது. அந்த ரேம்ப்பைத் தீயணைப்பான் வண்டிகள் வரும் வகையில் 7mm பரப்பளவில் அமைக்க வேண்டும். அதற்கேற்ற வகையில் எத்தனைக் கம்பிகள் வரவேண்டும் என ஆர்கிடெக்ட் கணக்கிட்டுக் கொண்டிருந்தார். பாதி வளைவு அவர் கொடுத்த கணக்கின்படி உருவாகிக் கொண்டிருந்தது. இடைப்பட்ட நாட்களில் வள்ளியப்பா வந்து பார்வையிட்டார். இங்கு என்னென்ன வரப்போகிறது என்று கேட்டார். மண் வைத்து மெத்தி உள்ளீர்கள் கம்பிகளைக் குறைத்து கொண்டு மேலும் மண்ணைக் கொட்டி நிரப்பி ரோலர் வைத்து சமன் செய்தால் கம்பி போட்டுக் கட்டும்போது எவ்வளவு உறுதி கிடைக்குமோ அவ்வளவு உறுதியோடு கட்டிடம் நிற்கும். மேலும் செலவும் குறைவு என்று ஆலோசனை கூறினார்.

எனவே கட்டி முடிக்கப்படாத எஞ்சிய பகுதிகள், அவரது ஆலோசனையின்படி கட்டி முடிக்கப்பட்டது. தூண்களில் துளையிட வேண்டி இருந்தால் அதிகமாகக் கணக்கிடுவோம். அதில் வள்ளியப்பா மேலும் ஒரு நுணுக்கத்தைக் கற்றுக் கொடுத்தார். தூண்களின் கீழ்ப்புறத்திலும் மேல்புறத்திலும் கம்பிகள் போகும். நடுவில் மட்டும்

தான் கம்பிகள் இருக்காது. எனவே தூண்களில் துளைகள் போட வேண்டும் என்றால் நடுவில் இருந்து தான் போட வேண்டும் என்று அவர் அனுபவம் எங்களுக்குக் கற்றுக் கொடுத்தது என பணியாளர்கள் பகிர்ந்து கொண்டனர்.

2022 ஆம் ஆண்டில் சோனா காலேஜ் ஆஃப் டெக்னாலஜி ஒரு புதிய கட்டிடத்திற்கு மாற்றப்பட்டது. சேலத்திற்குப் பெருமை சேர்க்கும் 7 அடுக்குக் கட்டிடம். தற்போது சேலத்தின் மிக உயரமான கட்டிடம் இதுதான்.

இந்த எழில்மிகு கட்டிடம் கட்டடக் கலையில் ஆழ்ந்த பேரார்வம் கொண்ட, ஒவ்வொரு செங்கல்லிலும் ஒவ்வொரு பலகையிலும் தனது கருத்தையும் கவனத்தையும் கொண்டு விளங்குகிற வள்ளியப்பாவின் கனவுத் திட்டாகும். பொறியில் கல்லூரி முதல்வர் திரு.செந்தில்குமார் கூறுகையில், ‘எங்கள் தலைவர் வள்ளியப்பா ஒரு பயிற்சி பெற்ற பொறியியலாளரோ அல்லது கட்டிடக் கலைஞரோ அல்ல. இருந்த போதிலும் எந்தவொரு தகுதி வாய்ந்த கட்டமைப்புப் பொறியாளர்களிடத்தும் காண முடியாத விசயங்களை அவரிடம் பார்க்க முடியும்’ என்று கூறுகிறார்.

இலகு ரகப் பொருட்களைப் பயன்படுத்தி மிக மிக நேர்த்தியாக கட்டப்பட்ட இந்த 142 அடி உயரக்கட்டிடம், வள்ளியப்பாவுடன் நீண்ட கால உறவைக் கொண்டு விளங்கி வருகிற திரு.ராகுல் காத்ரி மற்றும் அவருடைய குழுவினரால் வடிவமைக்கப்பட்டது. தனித்துவமான இயற்கை ரசனையையும் அழகியலையும் மேம்படுத்தி, 62 வகையான தாவரங்களுடன் அப்பகுதியையே குளிர்விக்கும் நீருற்றுடன் விளங்கும் இக்கட்டிடம் வள்ளியப்பா எப்பேர்ப்பட்ட அழகியல்வாதியாக விளங்குகிறார் என்பதை நமக்குக் காட்டி நிற்கிறது.

வகுப்பறைகள் இயற்கையான காற்றுச் சுழற்சியை வழங்கும் வகையில் பெரிய ஜன்னல்களுடன் விசாலமான முறையில் கட்டப் பட்டுள்ளன. சிவில் மற்றும் கட்டடக் கலைப் பொறியியல் படிக்கும் மாணவர்களுக்கு கட்டிடமே ஒரு குறிப்பிடத்தக்க ஆய்வுப் புள்ளியாக உள்ளது.

புதிய கட்டிடம் மத்திய நூலகம், 1200க்கும் மேற்பட்ட மாணவர்கள் அமரக்கூடிய மாபெரும் அரங்கம், 500 இருக்கைகள் கொண்ட திறந்த வெளி அரங்கம், ஆசிரியர்களுக்கான பெரிய பயிற்சி மையம் மற்றும் மாநாட்டு அரங்கம், நிர்வாக அலுவலகம் ஆகியவற்றுடன் அழகுற விளங்கி வள்ளியப்பாவின் பரந்த மனதைப் பிரதிபலித்து நிற்கிறது.

**சமயோசித அறிவு**

சோனா வளாகத்தை அழகுபடுத்திக் கொண்டிருக்கும் பல்கலைக்கழகக் கட்டிடத்தில் அமைந்துள்ள சோனா வள்ளியப்பா ஆடிட்டோரியம் உருவான கதை சுவாரஸ்யம் நிறைந்தது. 400 பேர் அமரத்தக்க இரண்டு கருத்தரங்கக் கூடங்களாக இருந்த அந்தப் பகுதியை வள்ளியப்பா 1400 பேர் அமரத்தக்க கலைக்கூடமாக மாற்றிய விதம் அனைவருக்கும் ஆச்சரியத்தை அளித்தது. ஏற்கனவே இரண்டு கருத்தரங்கக் கூடங்களாக இருந்த அந்தக் கட்டிடத்தின் பலத்தை ஆராய்ந்து தான் பல்கலைக்கழகக் கட்டிடத்தின் இரண்டு அடுக்குகள் கட்டப்பட்டிருந்தன.

இத்தகைய சூழலில் அதன் அமைப்பை மாற்றுவது சாத்தியமா என்று கட்டிடக்கலை வல்லுநர்கள் திகைத்துக் கொண்டிருந்த நேரத்தில் வள்ளியப்பா தன் சமயோசிதப் புத்தியால் அதனைச் சாத்தியப்படுத்திக் காட்டினார். ஐந்து நிமிடங்கள் மட்டுமே பார்வையிட்ட அவர் இரண்டு கருத்தரங்க கூடத்தைப் பிரித்துக் கொண்டிருந்த சுவரை எடுக்கச் சொல்லி அறிவுறுத்தினார் இருபது மீட்டர் உள்ளே சென்று அந்த இடத்தில் மேடையை உருவாக்கவும் இடத்தை ஆடிட்டோரியமாக மாற்றவும் வழி காட்டினார். இவ்வாறு செய்தால் ஆயிரம் பேர் அமரும் வகையில் மிக பிரம்மாண்டமான கலையரங்கம் உருவாகும் எனக் கணக்கிட்டுச் சென்றார்.

மூன்று மாதங்களுக்குப் பிறகு அதற்கான வரைவை எடுத்துக் கொண்டு அவரிடம் சென்றபோது ஆயிரம் பேர் அமர்வதற்கான அழகிய கலையரங்கத்தின் வடிவமைப்பு தெரிய வந்தது. ஏறக்குறைய 1200 மாணவர்கள் அமர்ந்து நிகழ்வுகளைக் கண்டுகளிக்கும் கலையரங்கக் கூடம் உருவாகியது. காலத்திற்கு ஏற்ப சிந்திக்கும் சிந்தனையாளர் வள்ளியப்பா. கால நிலை அறிந்து செயல்படக்கூடிய ஆற்றல் மிக்கவர்.

தினந்தோறும் மாறும் விலை, கம்பியின் தரம், செங்கல் வியாபாரம் போன்ற தகவல்கள் அனைத்தும் விரல் நுனியில் வைத்து வழிகாட்டும் சிறந்த வழிகாட்டி. அன்றைய நிலவரம் மட்டுமல்லாது மூன்று மாதங்களுக்கு முன்பு வரை இருந்த நிலையோடு ஒப்பீட்டு நோக்குவதில் கை தேர்ந்தவர். அதேபோல் ஒரு பொருள் இன்று பெங்களூரில் என்ன விலை, தர்மபுரியில் என்ன விலை, எந்த நிறுவனம் தரத்தில் சிறந்தது போன்ற தகவல்களை அறிந்து வைத்திருப்பவர்.

**நினைவாற்றல்**

அவரிடத்தில் செய்திகள் எண்களில் இருந்தாலும் வார்த்தை அளவில் இருந்தாலும் எத்தனை காலம் கழித்துக் கேட்டாலும் நினைவில் வைத்துக் கூறும் அளவிற்கு நல்ல நினைவாற்றல் மிக்கவர். நாம் எல்லாம் செல்லிடப் பேசியில் பெயர்களை வைத்து எண்களைக் கண்டறிவோம், ஆனால் அவர் நினைவில் உள்ள எண்களைக் கொண்டு பெயரைத் தேடித் தொடர்பு கொள்வார். அந்த அளவிற்கு நினைவாற்றல் மிக்கவர். தற்காலத்திய மனிதர்களுக்கு எல்லாம் ஒரு வாழ்வியல் உதாரணமாக வாழ்ந்து கொண்டிருப்பவர்.

**செயல்முறைப் பயிற்சி**

புதிய தொழில்நுட்பங்களைக் கையாள விரும்புபவர். புதிய தொழில்நுட்பங்களைக் கையாள்வதிலும் அதனைத் தமது சுற்றத்தார் கல்லூரி உறுப்பினர்கள் முதலானவரைப் பயன்கொள்ளச் செய்வதிலும் விருப்பம் கொண்டவர். சமீப காலத்தில் பெங்களூரில் நடந்த ஒரு விசேஷத்தில் தண்ணீர் சூடாக்கும் ஒரு பம்ப்பை கண்டுள்ளார். உடனடியாக அதனால் தனது கல்லூரி மாணவர்கள் பயனடைய வேண்டும் என்ற நோக்கத்திலும் அதன் தொழில்நுட்ப அறிவியலை மின்னியல்துறைப் பேராசிரியர்கள் மாணவர்கள் பெற வேண்டும் என்ற எண்ணத்திலும் கல்லூரியில் நிறுவ விரும்பினார்.

அதன் தொழில்நுட்ப வல்லுநர்களை உடனடியாகச் சேலத்திற்கு அனுப்பி ரூபாய் 6 லட்சம் வரை செலவு செய்து அந்த ஹீட் பம்ப்பை

நிறுவிவிட்டார். இவ்வாறு எந்த ஒரு தொழில் சார்ந்த பயணமாக இருந்தாலும் அதன் பயனை அடையச் செய்து தொழில்நுட்பத்தை அறியச் செய்யும் மேம்பட்ட சிந்தனையைப் பல இடங்களில் அவரிடம் பார்க்க முடியும்.

சோனா கல்லூரி மாணவர்கள் அறிவியல் ஆராய்ச்சிகளில் மட்டுமல்ல, மேலாண்மை மற்றும் தொழில் முனைவோர் துறையிலும் ஆழமான தாக்கத்தை ஏற்படுத்தி வருகின்றார்கள்.

கர்நாடகத் தொழில் மற்றும் வணிகக் கூட்டமைப்பின் முன்னாள் தலைவர் திரு.சிவசண்முகம் கூறுகிறார் ‘‘இளைஞர் தொழில் முனைவோருக்கான போட்டி பெங்களூருவில் ‘மந்தன்’ மூலமாக நடத்தப்பட்டது. தென்னிந்தியா முழுவதிலிமிருந்து மாணவர்கள் தங்கள் அறிவுத்திறன்களை வெளியிட அழைக்கப்பட்டிருந்தனர். பரிசுத்தொகை இருபத்தைந்து இலட்சங்கள். I.A.S. அதிகாரிகள் நீதிபதிகளாக அழைக்கப்பட்டிருந்தனர். இதில் என்னை ஆச்சரியப்படுத்தியது என்னவென்றால், சேலம் சோனா கல்லூரி மாணவர்கள் இரண்டாம், நான்காம் மற்றும் ஐந்தாவது இடங்களைப் பெற்றனர் என்பதுதான். சேலம் ஒரு சிறிய நகரம். சென்னை, பெங்களூரு, ஐதரபாத் மாணவர்களையும் விஞ்சி சேலம் சோனா மாணவர்கள் மூன்று பரிசுகளை வென்றிருப்பதே பெரிய சிறப்பு. அவர்களின் தொழில்முறைச் சிந்தனைகள் அற்புத மானவையாக இருந்தன. அதன் பெருமை வள்ளியப்பாவிற்கே உரித்தானது.’’

நீண்டகால சிந்தனையில் மிகுந்த நம்பிக்கை கொண்ட வள்ளியப்பா, சோனா தொழில்நுட்பக் கல்லூரி அதிநவீனத் தொழில்நுட்ப படிப்புகளை வழங்க வேண்டும் என்று ஆரம்பகாலத்திலிருந்தே வலியுறுத்தி வருகிறவர். சோனாவின் தொழில்நுட்பம் இன்று ஆகாயத்திலும் இருக்கிறது ஆழ்கடலிலும் இருக்கிறது என்று நாம் பெருமைப்பட்டுக் கொள்ளலாம்.

அட்லாண்டிக் பயணத்தில் 5 கி.மீ. ஆழத்தில் ரோபோக்கள் கடலுக்கடியில் செயல்படுகிறபோது இயங்கக் கூடிய ஆற்றலைக் கட்டுப்படுத்தக்கூடிய அமைப்புமுறை (Power Control System) சோனா

கல்லூரி உறுப்பினர்களால் வடிவமைக்கப்பட்டது. அதேபோல் சந்திராயனன் திட்டத்தில் செயல்படும் படிநிலை இயக்கி (Stepper Motor) சோனா கல்லூரி ஆராய்ச்சிக்குழுவின் பங்களிப்பைக் கொண்டுள்ளது.

டைட்டான் இண்டஸ்ட்ரீஸ் தயாரித்த உலகின் மிக மெல்லிய கடிகாரத்திற்கு நானோ பூச்சு (Nano coating) கொடுத்திருக்கிறது சோனா கல்லூரி ஆராய்ச்சிக்குழு. 2019 மற்றும் 2024 ஆம் ஆண்டுகளுக்கு இடையில் சோனா கல்லூரி 150 காப்புரிமைகளைத் தாக்கல் செய்து 33 காப்புரிமைகளை இதுவரை பெற்றிருக்கிறது என்பது சோனாவின் ஆராய்ச்சிப் பயணத்திற்குக் கிடைத்திருக்கக் கூடிய வெற்றி.

கற்றல் கற்பித்தல் செயல்பாட்டால் கற்றல் மென்பொருளை அறிமுகப்படுத்திய இந்தியாவின் முதல் பொறியியல் நிறுவனம் சோனா ஆகும். கரும்பலகை 9.1 என்பது சோனா குழும நிறுவனத்தில் பயன் படுத்தப்படும் மெய்நிகர் கற்றல் சூழல் ஆகும்.

வகுப்பறை விரிவுரைகளை வீடியோக்களாகப் பதிவு செய்து வகுப்பிற்குப் பிறகும் மாணவர்களை மதிப்பாய்வு செய்யும் வகையில் விரிவுரைப் பாடமெடுக்கும் முறையும் சோனாவிடம் உள்ளது. வீடியோ வகுப்பறை மூலம் மாணவர்கள் கற்றுக் கொள்ளலாம். இதன்மூலம் மாணவர்கள் 24 மணிநேரமும் உலகம் முழுவதிலிருந்தும் கற்க முடிகிறது.

இயங்கலை (online) ஒரு முக்கியமான பயிற்றுவிக்கும் ஊடகமாக மாறியதால் சோனா தொழில்நுட்பக் கல்லூரி சோனா வலையொளி அலை வரிசையை (Sona voutitle channel) இயக்கிவருகிறது. இது இப்போது 6400 மாணவர் சந்தாதாரர்களுடன் 361 வீடியோக்களைக் கொண்டுள்ளது.

**பசுமைக் கட்டிடம்**

சோனா பொறியியல் கல்லூரியில் உள்ள கிரீன் பில்டிங் என்று அழைக்கப்படும் கட்டிடம் அதன் பசுமை சூழ்நிலைக்காகத் தேசிய அளவில் விருது பெற்ற கட்டிடம். சுற்றுப்புறச் சூழலுக்கு ஊறு விளைவிக்காத கட்டுமானப் பொருட்கள் கொண்டு அக்கட்டிடம் கட்டப்பட்டுள்ளது. அக்கட்டிடத்தில் வெளியில் இருக்கும் வெப்பத்தை விட மூன்றிலிருந்து ஐந்து டிகிரி வெப்பம் குறைவாகவே பதிவாகின்றது.

வள்ளியப்பா பசுமைக் கட்டிடத்தைத் தொடர்ந்து கவனமாகப் பாதுகாத்து வர சிறப்புப் பணியாட்களைப் பணித்திருக்கிறார். கட்டிடம் கட்டுவதற்கான உபகரணங்கள் ஏற்றப்பட்ட வாகனங்கள் உள்ளே வருவதற்கு முன்னும் பின்னும் அதன் டயர்கள் கழுவி சுத்தம் செய்யப்பட்ட பிறகு உள்ளே அனுமதிக்கப்படுகின்றன.

கட்டிடத்தின் தரைக் பகுதிக்குக் கூட ‘ஆத்தங்குடி டைல்ஸ்’ எனப்படும் பூக்கல் பயன்படுத்தப்பட்டு உள்ளது. இன்று வரையிலும் அதன் சுவர் பகுதியில் உள்ள வண்ணங்களோ தரையில் பதிக்கப் பட்டுள்ள கற்களின் மெருகோ சற்றும் குறைவுபடவில்லை. அந்த அளவிற்கு அதைப் பாதுகாப்பதிலும் புனரமைப்பு செய்வதிலும் தனிக்கவனம் செலுத்தி வருகின்றார். இந்தப் பொருளை என்ன செய்தால் பாதுகாப்பாக இருக்கும் என்ற நுணுக்கங்களை அறிந்து அதைப் பின்பற்றி நடப்பவர்.

**லக்ஷ்மி விலாஸ்**

வள்ளியப்பா குடும்பத்தின் பாரம்பரிய வேருக்கு அடையாளமாய் நிற்கும் லக்ஷ்மி விலாஸ் 1923-ஆம் ஆண்டு கட்டப்பட்டது. பிரம்மாண்டம் நிறைந்த ஓர் இல்லத்தை வள்ளியப்பாவின் முன்னோர்கள் உருவாக்கியிருந்தனர். இதன் நூற்றாண்டு விழா பூலாங்குறிச்சி நகரமே ஜொலிக்கும் வண்ணம் நவம்பர் 13, 2022 அன்று வெகு விமரிசையாக நடைபெற்றது.

கல்வி, தொழில்நுட்பம், சேவை, விவசாயம், ரியல் எஸ்டேட் மற்றும் டெக்ஸ்டைல்ஸ் வரையில் தனது ஆர்வத்தாலும் விடாமுயற்சியாலும் பெரு வளர்ச்சியும் வெற்றியும் கண்ட வள்ளியப்பா நூற்றாண்டுகளுக்கு முன் தனது முன்னோர்கள் வாழ்ந்து சிறந்த முறையை நினைவூட்டும் வகையில் தங்களது உயர்வுக்கு உரமிட்டு வளர்த்த பூலாங்குறிச்சியைச் சிறப்பிக்கும் வகையிலும் தனது இல்ல நிகழ்வை ஏற்பாடு செய்திருந்தார்.

மேலும் தனது இல்லத்தின் 100-ஆவது நிறைவு ஆண்டு விழாவிற்குப் பலரை அழைத்து ஒன்று கூட்டித் தங்களது சமுதாய பாரம்பரியத்தைப் பகிர்ந்து கொண்டார். சிறப்பு விருந்தினர்களின் வருகையால் இல்லத்தில் நூற்றாண்டு விழா மேலும் சிறப்புற்றது. தமிழ்நாடு மாநிலத்தின்

தொழில்நுட்பத்துறை மற்றும் டிஜிட்டல் சேவைகள் துறை அமைச்சர் திரு.டி.தங்கராஜ், சிவகங்கை மாவட்ட ஆட்சியர் திரு.பி.மதுசூதனன் ரெட்டி, தமிழ்நாட்டின் சட்டத்துறை அமைச்சர் திரு.ரகுபதி என பலரும் கலந்து கொண்டு விழாவைச் சிறப்பித்தனர். லட்சுமி விலாஸ் என்னும் அந்தப் பழமையான இல்லத்தின் அழகு அனைவரையும் பிரமிக்க வைக்கிறது.

புதுப்பிக்கப்பட்ட அதன் தரைகளில் செக்கர்டு டைல்ஸ் பதிக்கப் பட்டுள்ளது. வீட்டின் கூரைகளில் இறைவனை அழகிய ஓவியங்களால் வரைந்துள்ளமை கண்களைக் கவரும் காட்சி ஆகும். மேலும் சுவர்களில் அழகான ஓவியங்கள் மற்றும் ஆடம்பரமான பெல்ஜியம் சர விளக்குகளின் அலங்காரம், பர்மாவிலிருந்து இறக்குமதி செய்யப்பட்ட தேக்கு மரங்களாலும் இத்தாலியிலிருந்து இறக்குமதி செய்யப்பட்ட டைல்ஸ் கற்களாலும் கட்டப்பட்டு உள்ளது.

இயல்பிலேயே கம்பீரத்தையும் அழகையும் பிரம்மாண்டத்தையும் கொண்டிருக்கும் அந்தப் பாரம்பரிய அடையாளத்திற்கு வியட்நாம் மற்றும் கம்போடியாவிலிருந்து இறக்குமதி செய்யப்பட்ட கலைப் பொருட்கள் மேலும் அழகு சேர்க்கின்றன. நாதஸ்வரம் மேளதாளம் பூப்பழ தாம்பூலத்தோடு விருந்தினர்கள் பாரம்பரிய முறைப்படி வரவேற்கப்பட்டனர்.

சோனா கல்விக்குழுமம், ஐ.டி ஊழியர்கள், அமெரிக்க அலுவலகத்தின் வீ டெக்னாலஜி உறுப்பினர்கள், சேலம் சோனா கல்விக் குழும உறுப்பினர்கள் கலந்து கொண்டு பாரம்பரியத்தின் அடையாளமாய் நிற்கும் 100 வயது நிறைந்த அந்தப் பிரம்மாண்ட இல்லத்தின் அழகினை ரசித்து மகிழ்ந்தனர்.

1922-ஆம் ஆண்டு வள்ளியப்பாவின் ஐயா திரு. சுப்பிரமணியன் செட்டியாரால் இரண்டு தளங்கள் கொண்ட 50 அறைகளோடு அமைத்துக் கட்டப்பட்ட வீடு பெங்களூரைச் சேர்ந்த கட்டிட கலைஞர் விக்ரம் பொன்னப்பால் அதன் பழமை மாறாத பாரம்பரியத்தை அப்படியே மீட்டெடுத்துள்ளார். பழமையைப் போற்றிப் பாதுகாக்கும் வள்ளியப்பாவின் பன்முகத் திறத்தை இவ்விழா எடுத்துக்காட்டுகிறது.

## நேர்மைத் திறம்

வள்ளியப்பா நேர்மைக்கு அடையாளமாய் வாழ்ந்து கொண்டிருப்பவர். அதேபோல் தன்னிடம் பணியாற்றுபவர்களும் நேர்மையானவராக இருக்க வேண்டும் என்பதில் உறுதியாக இருப்பார். தெரியாத செய்திகளைத் தெரிந்தாற் போல வெளிப்படுத்திக் காட்டுவதை அவர் என்றுமே விரும்புவதில்லை. தெரியாததை அறிந்து கொள்கிறேன் என்பவருக்கு உடனிருந்து வழி காட்டுவார், அறிந்து கொள்கிறேன் என்று கூறி சென்றவரை நினைவில் வைத்துக் கொண்டு அடுத்தமுறை பார்க்கும் போது நினைவில் வைத்து விசாரிக்கும் நினைவாற்றலும் அவருக்கு உண்டு.

தொலைநோக்குச் சிந்தனையுடன் தனக்குத் தெரிந்த செய்திகளைத் தன்னைச் சார்ந்தவரும் தெரிந்து வைத்திருக்க வேண்டும் என்பதற்காகத் தேடிச் சென்று தகவல்களைப் பகிர்வார். சமீபத்தில் ‘பாஸ்’ என்ற நிறுவனத்தார் ஓர் அருங்காட்சியகம் அமைத்திருக்கின்றனர். அங்கு தான் பெற்ற அனுபவத்தை மாணவர்களும் பெற வேண்டும் என்று விரும்பினார். அதன்படி பொறியியல் கல்லூரி சார்ந்த ஐந்து பேராசிரியர்களிடம் அந்த அருங்காட்சியகத்தைப் பார்வையிட்டு வர அவரே முன்அனுமதியும் பெற்றுத் தந்தார். அருங்காட்சியகத்தைக் கண்டு வந்த பேராசிரியர்களிடம் அங்குப் பயன்படுத்தப்பட்டுள்ள தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தி நமது கல்லூரி மாணவர்களுக்கு ஏதேனும் பயனளிக்க முடியுமா என்று விசாரித்துச் செயல்படுத்தச் சொன்னார்.

## தனக்கென தனிக்கொள்கை

ஒவ்வொரு மனிதனும் தனக்கென வாழும் பாதையைச் சீராக்க தனித்துவமான கொள்கைகளை வகுத்துக்கொள்வான். வாழ்வாங்கு வாழக்கூடிய வாழ்விற்கு உன்னதக் கொள்கைகள் அவசியம். அறம் சார்ந்த வாழ்விற்கு அறவழியில் ஈட்டிய செல்வம் மட்டுமே துணைசெய்யும். இந்த வாழ்வியல் மாற்றத்தை மனதில் நிறுத்தி வாழ்ந்து வருபவர் வள்ளியப்பா. எப்படியும் செல்வத்தினை சேர்த்து விடலாம் என்று சுயநல உலகில் உதாரணமாய் வாழும் உன்னத மனிதரைப் பற்றி இந்தச் சமூகத்திற்குச் சொல்ல வேண்டி உள்ளது.

இவர் நிர்வாகத்தில் வந்த சோனா டவர்சில் ஒருமுறை டெல்லி தர்பார் என்ற சிக்கன் தொழில் முனைவோர் தங்களுடைய தொழிலை அங்கு ஸ்தாபிக்க அனுமதி கேட்டனர். அதற்கு வள்ளியப்பா மறுத்து விட்டார். அசைவம் சம்பந்தப்பட்ட தொழில் என்பதால் மறுத்துவிட்டார் என்ற மேம்போக்கான மனநிலை நமக்குத் தோன்றலாம். அப்படியே எடுத்துக் கொண்டாலும் அத்தொழில் செய்ய அனுமதி மறுத்த பின்னணி நாம் அறிய வேண்டிய ஒன்று. அன்று அதனை அவர் மறுத்ததற்கான காரண விளக்கம் அவரது ஜீவகாருண்யம் போற்றும் குணம் மட்டுமல்லாது அவர்கள் சிந்தனையின் உன்னதம் நாம் உணரப்பட வேண்டிய ஒன்று.

ஓர் உயிர்ப்பலியினால் வரக்கூடிய வருமானத்தில் எனக்கான வருமானம் தேவையில்லை. இங்குச் சோனா டவர்ஸில் ஆக்கபூர்வமான பணிகளுக்கு மட்டுமே இடம் வழங்கப்படும் என உறுதிபட அவர் கூறியது அற்புத வரிகள். செல்வம் ஒன்றே குறிக்கோளாகக் கொள்ளாமல் தான் கொண்ட உள்ள உறுதியைக் கொள்கை தவறாமல் காத்து வாழ்பவர் இவர்.

சோனா டவர்சில் உலகின் பெரிய தொழில் நிறுவனங்கள் தங்களை நிலை நிறுத்திக் கொண்ட காலகட்டம் அது. தொழில் செய்ய அனுமதி மறுப்பு மீண்டும் அரங்கேறியது. முன்னது உயிர்ப்பலி கூடாது என்பதற்காக. தற்போது கலாச்சாரப்பலி தன்னிடத்தில் நடந்து விடக்கூடாது என்பதற்காக. மனிதன் மகிழ்வு எப்படித் தனக்குள் ஏற்படுகிறது என்பதை அறிந்திருக்க மாட்டான். கொண்டாட்டங்களில் மட்டும் மகிழ்ச்சி இல்லை. அதனை மறுப்பதிலும் இல்லை. எந்த ஒரு கொண்டாட்டமும் சுயநல நோக்கம் இன்றி பொதுநல மேம்பாட்டிற்காக ஒருங்கிணைந்து இயற்கையாக மனங்களில் மகிழ்வோடு தோன்றி குதூகலிக்கப்படுகின்றதோ அதுவே கொண்டாட்டமாக மாறுகிறது. அதை விடுத்துச் சுயநல நோக்கில் தற்காலிக இன்பம் தரக்கூடிய சில நிகழ்வுகளைச் செயற்கையாக மனிதன் ஏற்படுத்திக் கொள்கிறான். அப்போது நிகழக்கூடிய கொண்டாட்டங்கள் அர்த்தமற்றவை. அவ்வாறு ஒன்றைச் சோனா டவர்ஸில் நிகழ்த்த வேண்டிக் கேட்ட அனுமதியை வள்ளியப்பா திடமாக மறுத்துவிட்டார்.

வள்ளியப்பா நிறுவனத்தில் டிஸ்க்கொத்தே கிளப் நடத்திக் கொள்ள அனுமதி கேட்டபோது கலாச்சாரம் மற்றும் பண்பாட்டை வேரறுக்கும் எந்த ஒரு செயலைச் செய்யவும் அது நடைபெற அனுமதியும் நிச்சயமாக வழங்க மாட்டேன் எனக் கூறி மீண்டும் வள்ளியப்பா தன் கொள்கை, குணம் எனும் குன்றேறி நிமிர்ந்து நின்றார்.

**அன்புவழி**

வள்ளியப்பா பணியாளர் நலனில் காட்டும் அக்கறை அலாதியானது. தனக்குக் கீழ் பணியாற்றும் பேராசிரியர்களும் மாணவர்களும் பணியாளர்களும் கற்றுக் கொள்ளும் வகையில் ஏதேனும் பயணத்திற்கு அவர் ஏற்பாடு செய்திருந்தால் அந்த பயணத்தின் நிறைவுப் பகுதி வரை அக்கறையோடு கவனித்துக் கொண்டும் விசாரித்துக் கொண்டும் இருப்பார்.

**காலம் தவறாமை**

வள்ளியப்பா காலத்தைக் கையாளும் விதம் நாம் பின்பற்ற வேண்டிய ஒன்றாகும். வள்ளியப்பா அவர்கள் நேரம் தவறாமையை பின்பற்றுவார். அவர் குறித்த நேரத்தில் ஒருவர் வரவில்லை என்றால் தொலைபேசியில் அழைத்து விடுவார். அது மட்டுமின்றி நிகழ்வுகள் கூட்டங்கள் விழாக்களுக்குக் குறிப்பிட்ட நேரத்திற்கு முன்பாகவே சென்று விடுவார்.

விழாவிற்கான ஏற்பாடுகளைப் பார்வையிட்டுக் கொண்டே சம்பந்தப்பட்டவர்களைப் பாராட்டியும் வேறு சில யோசனைகளையும் கூறுவார். இறுக்கமாக நடந்து கொள்ளாமல் இலகுவாக அவர்களுடன் உரையாடிக் கொண்டே இருப்பார். இப்படிப்பட்ட தலைவரைப் பார்க்கும் அனைவரின் மனதிலும் மரியாதை கலந்த அன்பு இயல்பாகவே பதிவாகிவிடும். எந்த ஒரு செயலையும் அவசர அவசரமாகச் செய்வது வள்ளியப்பாவிற்குப் பிடிக்காது நிதானமாகச் சிந்தித்துப் பொறுமையாகச் செய்வதைத்தான் விரும்புவார். தான் சம்பந்தப்பட்ட விஷயத்தில் கூட அவ்வாறு தான் நடந்து கொள்வார்.

விமானத்தைக் கண்டுபிடித்த ரைட் சகோதரர்கள், ஒரு கூட்டத்தில் பல அறிஞர்கள் முன்னிலையில் சிறப்பிக்கப்பட அழைக்கப்பட்டு

இருந்தனர். அவர்கள் பேசுவதற்காக அழைக்கப்பட்டபோது மூத்தவரான வில்பர் ரைட் மைக் பிடித்து ‘என் தம்பி மிக அருமையாக சொற்பொழிவுகள் ஆற்றுவார். இங்கே அவர் பேசுவதே பொருத்தமாக இருக்கும்’ என்று கூறி அமர்ந்து விட்டார். அடுத்து வந்த ஆர்வில் ரைட் என்ன பேசினார் தெரியுமா? ‘‘என் சகோதரர் மிக மிக அருமையாகப் பேசி முடித்து விட்டார். இனி நான் பேச ஒன்றும் இல்லை’’ என்றார். இப்படித்தான் வள்ளியப்பாவும் பேச்சுக்கு முக்கியத்துவம் கொடுக்க மாட்டார். செயலுக்கே முக்கியத்துவம் கொடுப்பார். கால நேரத்தைக் கையாளுவது ஒரு மாபெரும் கலை என்பார்.

அவ்வாறு கால நேரத்தைக் கையாளுவதில் அவருக்கென்று ஒரு தனித்த பாணியைப் பார்க்க முடியும். தொழில் சார்ந்த ஆலோசனை பெற வேண்டும் என்றாலும் சரி, ஒப்புதல் பெற வேண்டிய சூழ்நிலையில் அவரது பொன்னான நேரத்தைப் பெற்று எதிர்கால திட்டம் குறித்து கலந்தாலோசித்தாலும் சரி நேரம் தவறாமையைப் பின்பற்றியிருந்தால் மட்டும் தான் முடியும். அந்த அளவிற்கு நேரத்தைச் செலவிடுவதில் மிகுந்த விழிப்புணர்வு கொண்டவர்.

உழைப்பு, விடாமுயற்சி, தனிச்சிந்தனை, ஆற்றல், நல்லெண்ணம், தொலைநோக்குப் பார்வை, தன்னம்பிக்கை ஆகிய தலைமைப் பண்புகள் ஒட்டுமொத்தமாக அவரிடம் காணப்படும். மனித விழிப்புணர்வு என்பது சாமான்யமானது அல்ல. போதுமான கவனம் கொடுத்தால் மொத்த பிரபஞ்சமும் பலன் கொடுத்துதான் ஆகவேண்டும் என்பது வள்ளியப்பா வாழ்க்கையில் சாத்தியமானது.

**எளிமைக்கான அடையாளம்**

வள்ளியப்பா வெற்றி வந்தால் பணிவு கொள்பவர். தோல்வி வந்தால் பொறுமை கொள்பவர். எதிர்ப்பு வந்தால் துணிவு கொள்பவர். எளிமைக் குணத்தில் பார்ப்பவரின் மனதில் இடம்பிடிப்பவர். பயன் படுத்தும் பேனா கூட பயன்படுத்தியதும் தூக்கி வீசத்தக்க ஒரு ரூபாய் இரண்டு ரூபாய் பேனாக்கள் தான் வைத்திருப்பார் என்பது நம்ப முடியாத செயல். அந்த அளவிற்கு எளிமையை ஏற்பவர். சேலத்தில்

அவர் தங்கும் அறையில் அவருக்கான படுக்கை மாணவர் விடுதியில் மாணவர்களுக்கு ஒதுக்கப்படும் படுக்கையைப் போல் எளிமையானதாக இருக்கும். அவர் பூலாங்குறிச்சியில் தலையில் துண்டை கட்டிக்கொண்டு இலகுவாக உலாவி வருவார்.

சேலத்திலும் பெங்களூரிலும் மிகப்பெரிய சாம்ராஜ்யத்தை உருவாக்கிப் பலருக்கும் வேலைவாய்ப்பளித்த மனிதர் சமுதாயத்திற்குக் கற்றுத்தரும் வாழ்வியல் பாடம் எளிமை. வள்ளியப்பாவிற்கு ஆன்மீகத்தில் ஈடுபாடு அதிகம். கல்லூரி வளாகத்தில் அடிக்கடி யாகங்கள் நடத்துவது வழக்கமான ஒன்று. யாகம் நடத்தும் ஒவ்வொரு முறையும் 30 நாட்களுக்குள் மழை பெய்து விடும். அது கூட சோனா வளாகத்தில் மட்டுமே பெய்த அதிசயமும் பலமுறை நடந்தேறி இருக்கின்றது. அனைத்துச் செயல்களையும் அவர் முழுமனதோடு நிறைவாகச் செய்யும் இயல்புடையவர்.

ஆன்மீகப் பணியில் ஈடுபட்டுப் பொதுநலத்தால் செய்யப்படும் அறச்செயல்களுக்கு ஒவ்வொரு முறையும் இயற்கை நன்மையைச் செய்து தனது அன்பினை நிரூபித்துச் செல்கின்றது. இறைவனும் இயற்கையும் அரவணைத்து இருப்பதால் சோனா கல்வி வளாகத்தைப் பொதுவாக அனைவரும் புண்ணிய பூமி என்றே அழைப்பர்.

**நேர்மறைச் சிந்தனையாளர்**

கட்டிடக்கலையில் அவர் பெற்ற வெற்றி பிரம்மாண்டமானது. கட்டிடம் கட்டுவது என்பது மாபெரும் சவால் இதை அனுபவப்பட்டோர் பலரும் உணர்ந்திருப்பார். அதிலும் பெரிய உயரிய பிரம்மாண்டமான கட்டிடங்களைக் கட்டுவோர் பல சிக்கல்களையும் சவால்களையும் எதிர்கொண்டிருப்பர். பெரும்பாலும் கட்டிடப் பணியாற்றுவோர் காயப்படும் நிலை நேரிடும்.

இது போன்ற விபத்துகளைத் தடுக்க கோழி, ஆடு போன்ற சிறிய உயிரினங்களைப் பலி கொடுப்பது வழக்கம். ஆனால் வள்ளியப்பா உயிர்ப்பலியை ஏற்கமாட்டார். எனவே அவரது கட்டிடப் பணியில் பலி நிகழ்வு என்றுமே நடந்தது இல்லை.

தூய்மையான மனமும் தெளிவான சிந்தனையும் இரக்ககுணமும் கொண்ட ஒரு மாமனிதருக்கு இறைத்தன்மை இயல்பாகவே அமைந்திருக்கும். கல்வியை வியாபாரமாக என்னால் செய்ய முடியாது என்று அடுத்தவருக்குச் செய்யும் சேவையாகவும் உதவியாகவும் எண்ணிச் செயல்படுவார். ஆர்வத்துடன் கல்வி பெற விரும்புவோரைக் கண்டால் வள்ளியப்பா உருகி விடுவார்.

ஒருமுறை சோனா பொறியியல் கல்லூரியில் ஆய்வக உதவியாளர் ஒருவர் அங்கு பொறியியல் மேற்படிப்பு படிக்க விரும்பினார். அலுவலக மேலாளர் அதனை வள்ளியப்பாவிற்கு தெரியப்படுத்தினார். அவர் சம்பந்தப்பட்ட நபரின் குடும்ப விவரம் உள்ளிட்ட அனைத்தையும் விசாரித்தார். குழந்தைகள், குடும்பம் என்று வாழ்பவர்களின்மொத்த ஊதியத்தையும் நாமே எடுத்துக்கொண்டோம் என்றால் அவர் எப்படிப் பிழைப்பு நடத்துவார்? என்று கேட்டார் வள்ளியப்பா.

**தனிக்கவனம்**

அதுமட்டுமின்றி அந்தப் பணியாளரின் மேற்படிப்பு நல்ல முறையில் நிறைவடைய உதவினார். இவ்வாறு கல்விக்காக முயல்பவருக்குத் தானும் ஒரு கை கொடுத்து உதவும் குணம் கொண்டவர் வள்ளியப்பா. மாணவர்களுக்கான வகுப்பறை தயாராவதில் இருந்து இருக்கைகள் தயாராவது வரை நன்கு சிந்தித்து முடிவெடுப்பார். வகுப்பறை எந்தத் திசையைப் பார்த்திருந்தால் சூரிய வெப்பம் குறைவாக இருக்கும், வாஸ்து முறையில் மாணவர் எந்த திசை பார்த்து அமர்ந்தால் சிறப்பாக இருக்கும், சம்பந்தப்பட்ட துறை எங்கு அமைய வேண்டும் என்பதையெல்லாம் நிதானமாய்ச் சிந்தித்த பிறகு முடிவெடுப்பார்.

ஒருவரின் தனிச்சிறப்பை நன்கு அறிந்து அதற்கு ஏற்ற வழிகாட்டுதலில் கைதேர்ந்தவர் வள்ளியப்பா. ‘‘எனக்கும் வள்ளியப்பாவுக்கும் நீண்ட கால நட்பு. கல்லூரியில் அவருக்கும் சீனியர் நான் என்றால், பிறரிடம் பழகுவதிலும் அவரிடத்தில் அன்பு காட்டுவதிலும் சூழல்களைச் சரியாகப் புரிந்து கொண்டு முடிவுகளைத் தீர்மானிப்பதிலும் அவர்தான் சீனியர்’’ என்று சொல்கிறார் குழந்தைக் கவிஞர் செல்ல கணபதி.

வகுப்பறைகளுக்கு அருகில் மாணவர்கள் நிழல் பெறும் வகையில் வேர் அதிகம் போகாத குட்டையாக வளரும் மர வகைகளைச் சுற்றிலும் அமைக்கச் செய்திருக்கிறார். அதற்கிடையில் இருக்கைகள் அமைத்து மாணவர்கள் இயற்கைச் சூழலில் அமர்ந்து சுத்தமான சுகாதாரமான காற்றைச் சுவாசிக்க வேண்டும், இயற்கையின் தன்மை என்ன என்பதை மாணவர்கள் உணர்ந்து அதைப் பாதுகாக்கும் உணர்வு பெற வேண்டும் என்றும் எதிர்பார்ப்பார். இருக்கைகளில் அமர்ந்தும் வகுப்பறைகளில் நடந்தும் சோதித்துப் பார்த்த பிறகுதான் நிறைவடைவார். இப்படி மாணவர்கள் சார்ந்த செயல் முடிவு என்றால் அதில் வள்ளியப்பா காட்டும் அக்கறையே தனி.

**வாசிப்பு பழக்கம்**

வள்ளியப்பா புத்தகம் வாசிக்கும் வாசகர்கள் மீது மதிப்பு கொண்டவர். வாழ்க்கை சார்ந்த நல்ல கருத்துக்களை அதன் மூலமாகப் பெறுவதில் அலாதி பிரியம் அவருக்கு உண்டு.

இந்தத் துறை சார்ந்த புத்தகம் என்று இல்லை. வரலாற்று நூல்கள், அறம் சார்ந்த புத்தகங்கள், கதைகள், புராணங்கள் என அனைத்து நூல்களையும் கற்கும் ஆர்வம் உடையவர். வள்ளியப்பாவிற்கு அவரது நூல் சார்ந்த அனுபவ அறிவைப் பகிர்வது பிடிக்கும். புத்தகம் வாசிப்பது தியானத்திற்குச் சமமான செயல். அதனைத் தானும் செய்து பிறரையும் செய்யக் களம் விரித்துக் கொடுப்பவர் வள்ளியப்பா. தனது சம்மந்தி பி.எல்.எஸ். புத்தகங்கள் படிப்பதை பெருமையோடு எல்லா இடங்களிலும் சொல்வார். புத்தகம் பற்றிப் பேச்சு வரும்போதெல்லாம் பி.எல்.எஸ்-ஐ சொல்லத் தவறுவதே இல்லை. கோவையில் தனது வீடு முழுவதையும் அறிவூட்டும் அரிய புத்தகங்களால் நிரப்பி வைத்திருக்கும் பெருமகனார் பி.எல்.எஸ் என்பது போற்றத்தக்கச் செய்தி.

ஒரு சமயம் திரு.வள்ளியப்பா அவர்களுக்குத் தொண்டையில் சிறுபாதிப்பு ஏற்பட்டு அதன் காரணமாக குரல்வளம் குன்றிச் சிரமத்திற்கு உள்ளானவர்கள். எவ்வளவோ மருத்துவமனையில் சிகிச்சை எடுத்தும்

சரிவராமல் போனது. பின் சொக்கு வள்ளியப்பா அமெரிக்காவில் பாஸ்டன் நகரில் உள்ள மாஸ் ஜெனரல் பிரிகாம் மருத்துமனையைத் தேர்ந்தெடுக்க வள்ளியப்பாவுக்கு அங்குச் சிகிச்சை மேற்கொள்ளப்பட்டது.

தொடர்ந்து அங்குள்ள மருத்துவர்களால் குரல்வளையில் அறுவை சிகிச்சையும் வெற்றிகரமாக முடிக்கப்பட்டது. வள்ளியப்பா குடும்பமே பிரார்த்தனையில் ஈடுபட்டிருந்த வேளையில் மருத்துவர்கள் வள்ளியப்பாவைப் பார்த்து, ''அறுவைசிகிச்சை வெற்றிகரமாக முடிந்து விட்டது. உங்கள் தொண்டை சரியாகிவிட்டது. நீங்கள் நன்றாகப் பேசலாம் பாடலாம். உங்கள் தாய்மொழியில் உங்களுக்குப் பிடித்த பாடல் ஒன்றைப் பாடுங்கள்' என்றார்கள்.

உடனே வள்ளியப்பா பாடிய பாடல் என்ன தெரியுமா? அவ்வளவு பரபரப்பான சூழலிலும் அவர் அமைதியாக மெல்ல பாடிய பாடல் ஔவையார் பாடல். ''பாலும் தெளிதேனும் பாகும் பருப்புமிவை'' என்று அவர் ஆத்மார்த்தமாகப் பாடிய பாடலின் பொருளறிந்து மருத்துவர்கள் அவர் கரங்களைப் பற்றி தங்கள் மகிழ்ச்சியை வெளிப்படுத்தினார்கள்.

''உங்கள் மொழியில் பாடி விட்டீர்கள். இனி ஆங்கிலத்தில் ஒரு பாடல்'' என்றவுடன் வள்ளியப்பா ஒரு நிமிடம் கூட தயங்காமல் Ting Dong Bell என்று குழந்தைகள் பாடலைப் பாடியவுடன் அந்த இடமே கலகலப்பாகி மகிழ்ச்சி அலை பரவிப் பெருகியது. மருத்துவர்கள் எல்லாம் மகிழ்ந்து போனார்கள். அதுதான் வள்ளியப்பா.

**நலம் நாடும் நட்பு**

புராணங்களில் நட்பின் சிறப்பைப் பற்றிய கதைகளை நாம் கேட்டிருப்போம். வள்ளியப்பா தன் நட்பு வட்டாரத்தைப் பேணும் முறை அளப்பரியது. நட்பைத் தக்க வைக்க அன்பு வழியை மேற்கொள்பவர் வள்ளியப்பா. அவருடைய நட்பு, ''தான்'' எனும் அகங்காரம் இல்லாத தூய்மையான நட்பு. பொதுவாக நம் எண்ணங்களுடன் ஒத்துப்போகக் கூடியவரை நாம் நட்புறவாகக் கொள்வது வழக்கம். சில நட்புகள்

எண்ணங்களில் மாறுபட்டிருந்தாலும் நட்புறவில் மாறுபட்டதில்லை. எள்ளளவிலும் வேறுபாடு இருப்பதில்லை. சிந்தனைகளைக் கொண்டு அன்பினால் இணைந்தவர்களாக இருப்பர். அத்தகு நட்புதான் வள்ளியப்பா - செல்வராஜ் அவர்களுடையது.

அதை நிரூபிக்குமாறு இனிய சம்பவம் ஒன்று நடந்தது. அயராது உழைத்து வந்த வள்ளியப்பாவிற்கு ஓய்வின்மை காரணமாகச் சிறிய உடல் நலக் குறைவு ஏற்பட்ட நேரம் அது. அதனால் நண்பர் செல்வராஜ் அவர்கள் தனது பிறந்தநாள் விழாவிற்கு வள்ளியப்பாவிற்கு அழைப்பு விடுக்கவில்லை. வள்ளியப்பாவின் உடல்நலத்தைக் கருத்தில் கொண்டு அவர் எடுத்த முடிவுதான் அது. ஆனால் வள்ளியப்பாவின் தூய நட்புள்ளம் வென்று காட்டியது. அழைப்பு விடுக்காத இடத்திற்குத் தானாகவே சென்று நண்பருக்கு இன்ப அதிர்ச்சி கொடுத்தார். இந்தச் செல்வராஜ் வள்ளியப்பாவின் பெரிய சம்மந்தி PLS அவர்களின் ஆருயிர்த் தோழர். அவருடனேயே வாழ்ந்து வரும் அப்பழுக்கில்லாத நண்பர்.

இவர் எப்படி நண்பர்கள் மீது அக்கறை கொண்டிருந்தாரோ அதுபோல இவர் மீது தாயுள்ளம் கொண்ட அக்கறையை வழங்கியவர் இசையரசி அவர்கள். கல்லூரிப் பருவத்தில் வள்ளியப்பாவிற்கு முகத்தில் சில பருக்கள் இருந்த போது புனுகு மருந்தினைக் கொடுத்து மருத்துவ அறிவுரையும் வழங்கினார் பாரத ரத்னா திருமதி.எம்.எஸ்.சுப்புலட்சுமி அவர்கள்.

வள்ளியப்பாவின் நட்பு வட்டாரத்தில் பல தமிழ் ஆளுமைகளும், அரசியல் தலைவர்களும், பல்துறை வித்தகர்களும், சமூகப் பண்பாளர்களும், ஆன்மீகப் பெரியோர்களும் என பட்டியல் நீண்டு கொண்டே செல்கிறது. நட்பு வட்டத்தைப் பலமாகக் கொண்ட இந்த விருட்சம் மேலும் தன்னை மெருகேற்றிக் கொண்டே சென்றது.

**மரபினைப் போற்றும் மாண்பு**

கல்வித்தந்தை தனது தந்தை புதிய தொழில்நுட்பங்கள் கொண்ட பல வகையான மகிழுந்துகளைப் (Car) பயன்படுத்தி வந்த விதம் குறித்து எப்போதும் சிலாகித்துச் சொல்லுவார். மகிழுந்தைப் பாதுகாப்பாகவும் அதே

சமயத்தில் விரைந்து செலுத்தும் வல்லமையை வியந்து கூறுவார் வள்ளியப்பா. அதில் அவருக்குள்ள பெருவிருப்பம் தன்னை வியக்கச் செய்வதாக உளம் மகிழ்வார். அவர் நினைவாக அவர் பயன்படுத்தி வந்த மகிழுந்தை இன்றும் தான் பராமரித்துப் பாதுகாத்து வரும் மரபினை உடையவர்.

தியாகராஜர் பல்தொழில்நுட்ப கல்லூரியில் டெக்ஸ்டைல்ஸ் துறை தொடங்கப்பட்டது. கலைத்தந்தை காலத்தில் அத்துறை தொடர்பாக வாங்கப்பட்ட இயந்திரங்களுள் பலவற்றை இன்றளவும் பாதுகாத்து வருகின்றார். அவற்றுள் அச்சுப்பதிப்பு முறை கொண்ட Drawing Machine-ம் ஒன்று. அதைப் போன்று பல தொழில்நுட்பங்களுடன் கூடிய எண்ணற்ற இயந்திரங்கள் சந்தைக்கு வந்துவிட்ட போதிலும் அதனை இன்றளவும் பயன்படுத்தியும் பராமரித்தும் வருகின்றார். இவ்வாறு பழமையைப் பாதுகாக்கும் இவரின் மரபு போற்றுதலுக்குரியது.

**இயற்கை விவசாயம்**

இயற்கையைப் போற்றும் விதமாக மற்றொரு பணியை முன்னெடுக்கிறார் வள்ளியப்பா. இயற்கை தரும் அற்புதங்களே ஆயிரம் நோய்களுக்கு நிவாரணி என்பர். இயற்கை சார்ந்த படைப்புகள் அனைத்தும் மனிதனின் பயன்பாட்டிற்கு என்பது எவ்வளவு உண்மையோ அத்தகு நலம் தரும் இயற்கையைப் போற்றிப் பேணிப் பாதுகாப்பதையும் தனது கடமையாக உணர்ந்தவர்.

சோனா குழுமத்தின் புதிய உயிரி தொழில்நுட்ப முயற்சியாக Mycelium Sona Biotech, என்ற முதல் ஆய்வகத்தை 21 ஏப்ரல் 2022 அன்று இயற்கையின் ஆசியோடு, சோனா குழுமத்தின் தலைவர் வள்ளியப்பா துவங்கி வைத்தார்.

மருத்துவ குணம் கொண்ட 16 வகையான காளான்களைப் பயிரிடும் பணியோடு தொடங்கியது இந்நிறுவனம். ‘இந்தக் காளான்கள் உடல் சார்ந்த நோய்களைக் குணப்படுத்தும் நோக்கங்களுக்காக உருவாக்கப்பட்டுள்ளன. ‘கட்டுப்படுத்தப்பட்ட சூழலில் காளான்கள்

வளர்க்கப்பட்டாலும், இவை முற்றிலும் இயற்கையாகவே சாகுபடி செய்யப்படுகிறது. இங்குப் பயிராகும் காளான்களை ஆஸ்திரேலியா, அமெரிக்கா மற்றும் ஐரோப்பிய நாடுகளுக்கு நேரடியாக ஏற்றுமதி செய்யப்பட்டு வருகிறது. மேலும் தன்னுடைய எஸ்டேட்டில் 500-க்கும் மேற்பட்ட தேன் கூடுகளை விவசாயத்திற்காகவும் மருத்துவத்திற்காகவும் பராமரித்து வருகிறது சோனா குழுமம்.

வாழ்வியலுக்காக தான் தேர்ந்தெடுத்த துறை **கல்வி**, மனமுவந்து ஈடுபடும் துறை **கட்டிடத் துறை**, ஆழ்ந்திருப்பது **ஆன்மீகம்**, தாகத்தைத் தணிக்க **தமிழ் இலக்கியம்**, நல வாழ்விற்காக **இயற்கை வேளாண்மை**, சமரசம் போற்ற **சமுதாயப் பணி** என பன்முகம் கொண்டு வளர்ந்து தன் அறிவார்ந்த பயணத்தைத் தொடர்ந்து வருகிறார் நம் வள்ளியப்பா.

# விருதுகள்

வணிகம் மற்றும் தொழில் துறையில் வள்ளியப்பா பெற்ற சாதனை விருதுகள்:

- கல்வியாளர் விருது,
  பொறியியல் கண்காணிப்பகம்.
- சுவிசேஷகர் விருது
  திறனறிக் கூட்டமைப்பு, உயர் கல்வி.
- இம்பேக்ட் விருது
  சி.எஸ்.ஆர் அமைப்பு.
- சமூக சேவகர் விருது
  சேலம் மாவட்ட ஆட்சியகம்.
- தொலைநோக்குத் தலைவர்
  தொழில் மற்றும் வர்த்தக சபை.

சோனா கல்விக் குழுமத்தின் தலைவராக வள்ளியப்பா பொறுப்பேற்றவுடன் கல்வி நிறுவனங்கள் பெற்ற விருதுகள்:

- பாரதிய வித்யா தேசிய விருது
  AICTE & CIID

- சிறந்த தலைவர் விருது
  ISTE கலைக்கூடம்.
- சிறந்த பொறியியல் கல்லூரி விருது
  உலகளாவிய மனித ஆராய்ச்சி மையம்.
- தொழிலதிபர் விருது
  MURD அமைப்பு, புது தில்லி.

# சோனா வள்ளியப்பாவின் எதிர்கால இலக்குகள்

- சோனா கல்விக் குழுமத்தை சோனா பல்கலைக்கழகமாக்குதல்.
- மருத்துவம் சார்ந்த கல்விச் சாலைகளை உருவாக்குதல்.
- பல்நோக்கு மருத்துவமனையைச் சேலத்தில் உருவாக்கிட முயற்சிகள் மேற்கொள்ளல்.
- தற்போது சோனா குழுமத்தில் பயின்று வரும் மாணாக்க மாணாக்கியர்களின் எண்ணிக்கையை 12000-த்திலிருந்து 25000-க்கு அதிகப்படுத்துதல்.
- அடுக்குமாடிக் குடியிருப்புகள் கட்டும் தொழிலை இன்னும் இன்னும் விரிவாக்குதல்.
- அறப்பணிகளுக்கு முழுவதுமாக அர்ப்பணித்துக் கொள்ளல்.